உ

சிவமயம்.

கைகண்ட வனுபோக

# வைத்தியப் பெருங்குறள்

மூலமும் - உரையும்.

இரண்டு பாகங்களும் அடங்கியது.

இஃது

ககோள சித்தாந்தக் கணித சாஸ்திரக்ஞர்

சதாவதானம் செழுமணவை - சித்திரக்கவி

தேவேந்திரநாத பண்டிதர் அவர்களால்,

நூதனமாய் இயற்றப்பட்டது.

முதற் பதிப்பு.

சென்னை - சூளை

K. S. கனகசபை முதலியார் அவர்களால்

சென்னை சூளை

எவரெடி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1938.

ரிஜிஸ்டர் காபிரைட்]

[விலை ரூபா 1 0 0

# சாற்றுக்கவி.

இஃது
சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ அ. சிவக்கியான தீட்சதரவர்கள்
இயற்றியது.

வெண்பா.

வள்ளுவர் குறடனக்கும் வைத்தியப் பெருங்குறளாய்
கொள்ளுதற் குரையுடனே கூறியதும்—உள்ளபடித்
தீதல்லச் செழுமணவைச் சித்திரகவி தேவேந்திர
நாதனு மறைந்தன னிவ்வார்.

# முகவுரை.

இம் மகிபான்கண் சர்வான்ம கோடிகளிற் சிரேஷ்டமாகிய இம்மானிடப் பிறவிகட்குச் சம்பவிக்கும் கொடிய வியாதிகளை பரவச் செய்யாது உடனுக்குடனே நிவர்த்தி செய்யுமாறு எளிதில் தங்களிற் றாங்களே செய்து முடிக்கச் சிட்காவில் சிகிற்சா சாராம்சத்தைத் தெளிவாய், கைகண்ட வனுபோக வைத்தியப் பெருங்குறள் எனப் பெயர் வகித்து சுமார் 1000 முறைகளைத் தற்சமயம் அச்சியற்றிப் பிரசுரப் படுத்தியதில், அனைவர்க்கும் பேரானந்தத்தைப் பிறப்பிக்கச் செய்யுமென்பது திண்ணம். இப் பெருங்குறளில் பலர்காணு நாடி நடைகளும், மூலிகைப் பிரயோகங்களும், அவிழ்த முறைகளும், இன்னும் பற்பல பாகங்களையும் மூலமும் உரையுடன் அமோகமா யமைத்து சுமார் 30 வகுப்புகளுள்ளதாய்த் திரட்டி யாவும் வெளிவிடுத்தமையால், இவைகள் பளிங்குபோற் பிரகாசமாய் விளங்குமென்பதில், முக்கியம் 7200 நாடிகளில், 4448 வியாதிகள் ஜ்வனித்து அவயவாதி 32-லும் பரவி, ஆங்காங்கு துர்விஷ நீர் வெப்பக்கொதிப்பால் விரண முதலிய வாதைகளுண்டாகி நாளுக்குநாள் அதிகரித்து நலிந்து மெலிந்து பாயும் படுகேடாய், அன்னபானுதிகள் அருந்துவதற்று அந்தகனூரிற் சொந்த காணியாக்ஷியாய் செல்கின்றனர். ஆயினும், அததற்குத் தக்க வைத்திய பத்திய பரிகார மின்மையாலன்றோ? இக் கொடிய நோய்கள் அதிகரிக்காமுன் நகத்தினுற் கிள்ளி யெறிவதை விட்டு கோடாரியால் வெட்ட எத்தனிப்பது என்ன மதியீனம். இதிற் பணமென்றுற் பிணமு மெழுந்திருக்கு மென்பதைப் பாராட்டாது பலர் வதறும் பண்படாச் சிகிற்சைகளைப் பச்குவமென்றியற்றியும், அது பலிதப்படாமல் பாழாக்குவதை நாம் பார்த்திருக்கிறேமல்லவா? அப்படிப் பயன்படா விஷயத்தில் விதியை நொந்தென்ன? விதி யென்பதும் மதியீனமே. மதி யிருக்கின், வல்வினை வேறற இந் நூலிலுரைத்த பாகங்களைச் செய்து வருவாராயின், நஷ்டமில்லையே! நஷ்டமென்பதும் தனது அஜாக்கிரதையே யன்றி வேறல்ல. "ரேபுண்டேருபுலேது", "நாளை யென்பது நமனது நாள்" என்பதுணர்ந்து அப்பப்போதே அத்துகளைக் கண்டிப்பது சகஜம்.

அன்றியும், சித்தர் நூல்களிற் பார்த்துச் செய்வது கடினமாயினும், இவை குறளடிச் சீராய் உரையுடனிருப்பதால், யாவுஞ் சுலப நடையில் முடிக்க முயலுங்கால், சிலர் இம் முறைகளாற் றீருமோ வென்பாரு முளர். திருஷ்டாந்தம்—சிற்றுளி கைவுளி செய்வது,

பேருளி இழைப்புளி செய்யாதல்லவா ? ஆதலால், எவ்வித நோய்கட்கும் ஒவ்வொரு மருந்துகளை தனித்தனி செய்து ஒன்றின்பின் ஒன்றைப் பிரயோகிப்பதில், வெகு நன்மையைத் தரும். இதினும் ஒன்றிற்குப் பத்தாய் செய்வதுதான் காரியம். அப்படிச் செய்யாவிடின், யாவுங் கெடுதியாகவே விளையுமென்பது ஸ்பஷ்டம்.

இச் சிகிற்சைகளில் வைத்தியர்க்குப் புலப்படாத சில விஷயங்களுண்டு. அவை யாதெனில், விழுந்த நாடி கிளம்பவும், சிலிர்த்த தேகம் சூடெழவும், ஒடிந்த இடுப்பு உறுதிப்படவும், பஞ்சடைந்த கண் துலங்கவும், விழுந்த நாவு யெழும்பவும், கிட்டிய பற்கள் திறக்கவும், மலசலக்கட் குடைக்கவும், வைசூரியை மட்டாக்கவும், வாந்திபேதியை மாற்றிடவும், விஷந் தீண்டியவர் மீண்டெழுந்திருக்கவும், நீரிலிறந்தவர் நேரில் நடக்கவும், சேத்துமங் கட்டியவர் நன்று பேசவும், மரண காலத்தில் நன்று பேசவும், ஒருவேளை இவர்களைப் பிழைக்கச் செய்யவும், மற்ற நோய்களை மெஸ்மெரிஸத்திலும், ஹிப்னாடிஸத்திலும் உடனுக்குடனே நிவர்த்தி செய்யவு மாத்திரம் காணு மருந்தா யிருக்கின்றது.

ஆயினும், யான் சொல்வதை யாரும் நம்பார் ! என் சொல்லும் பொய்யல்ல ! இதிலுள்ளது சமஸ்தான வைத்தியர்க்கு மாத்திரம் தெரியும். ஈதன்றி, நாடி நடையைப்பற்றிய நோய்கட்கும் விவரமாய்ச் செப்பி யிருப்பதோடு மற்ற அருமையான விஷயங்களையும் ஏற்கெனவே காட்டி யிருக்கின்றன. இவை சில்லாண்டிற்கு முந்தி திரிகணக்கர் செப்பியவாறன்று. யாவுங் கண்டது பேசு, கேட்டது பேசு என்னும் தன்மையாகவே யுரைத்த பான்மையாதலால், இவ்வரிய பெரிய விஷயங்களை யாவரும் மனப்பூர்த்தியாய்க் கையாண்டு உபயோகிப்பரெனக் கருதுகின்றனன்.

ஈதல்லாது சுமார் 50, 60 வருஷத்திற்கு முந்தி திருவேற்காடு சுப்பராய முதலியார் என்பவர் திருவள்ளுவர் குறளுக்கு (கிறள்) என்பதாய் முழுதுஞ் செய்தனர். அதில் ஒன்று,

திருவள்ளுவர்—“ சிறப்பொடு பூசனை செய்யாது வானம்
வரக்குமேல் வானோர்க்கு மீண்டு ”

சுப்பராய முதலி-“ சிறப்பொடு பூனைப் பிறப்பினி லிருந்தாற்
பிறப்பட மாட்டா தெலி ”

என்பது போலல்ல. இக் குறளுக்குத் திரளாய் யான் பல பாகங்களையும் புகட்டியதில் சர்வ பிணிகளையும் கண்டிப்பதென்ப துண்மை.

இங்ஙனம் :

சதாவதானம் செ. சி. தேவேந்திரநாத பண்டிட்.

உ

சிவமயம்.

கைகண்ட வனுபோக

# வைத்தியப் பெருங்குறள்

மூலமும் - உரையும்.

காப்பு-வெண்பா.

மகிதலத்திற் சிகிற்சைசெய் வைத்தியப் பெருங்குறளைச்
சகிதமுட னெவர்கட்குஞ் சாற்றவே—விகிதமொடு
ஓரானைக் கன்றானை யொத்தானைக் கொம்பானைக்
காரானை யென்றானைக் காப்பு.

சாரதாம்பாள் துதி.

பூவாணிச்சியும் போதப் புத்தகத்தி நால்வேத
நாவாணிச்சியு முரைக்கு நாயகியை—பாவாணிச்
சுரலலித சுதிக்கியான சுந்தரி வீணைக்கரத்தி
பரத நயனியைப் பஜிப்பாம்.

சற்குரு ஸ்துதி.

மோனத் துயர்பொருளை முன்னின் றெனக்கருளி
ஞானத் தெழுஞ்சுடரை நாட்டினன்—தானத்துட்
பரவத்து ரெங்குறவன் பதிதகுரு சுவாமிபதங்
கிரமத்துடன் பணிகு.

அவை யடக்கம்.

தங்கத்திற் கிணையாய்த் தம்பாக்குச் செய்தல்போல்
சங்கத்திற் கவிவாணர் தான்காண—அங்கத்தில்
ஏது வழுக்க ளிருந்திடினு மன்னிப்பர்
தீது புரியார் பெரியோர் செயல்.

மாய் தச நாடிகளை எடுத்துக் கூறியும், அதில் அவசியம் உழன்று திரிவது மூன்று நாடிகளாகையால், அவைகள் வாத பித்த சேத்துமப் பகுப்பை யுரைப்பதில் அது எச்சுதக்காய் எறியும், கிழிந்தும், சுழன்றும், திரிந்து செல்வதில் அதற்குரிய செயல்களை ஒவ்வொரு நோய்களும் முறையே காணக் குறிப்பிக்கும் கைநாடியாயிருப்பதால், அவைகளை முன்னம் விவரமுடன் இங்கெடுத்துரைப்பது வெகு நன்மைத் தரும்படியானதென் றுணர்க. எ-று. 2

## 1. நாடிப்படலம் *

### வாத முதித்தநாடி.

அண்டிடவிளநீ ரங்கிரைச்சி நெய்கனிபா
லுண்டிட வதிவாதமாம்.

(இ-ள்) வாதமுதிப்பதற்குக் காரணமாவது:--இளநீர், இறைச்சி, நெய், பால், கனிவர்க்கங்களை மிகுதியாய்ப் புசிப்பதினாலும், அந்நாடியுதிக்கும்படியான கரி பதார்த்தங்களை அபரிமிதமாய்த் தின்பதினாலுமே வாய்வானதுதித்து கொடூரத்தை விளைவிக்கும் எ-று. 3

### பித்தமுதித்த நாடி †

தினமுதித்திடும் புணர்ச்சிக் கோழிமாமிசமுஞ்
சினமகுத்திடு மதிற் பித்தம்.

---

* வாதநாடிக்குணம்.

ஓங்கியே வாதமீறிடின் வாய்வா மூணெலாங் குத்தியே கால்கை, வீங்கியே யகந்தோர் பக்கமாய் முடங்கு மென்றுமே வுளைத்திடுங் குளியார், தேங்கியே நிமிரவொட்டாது திமிராய்ச்சேர் ருடல்புறட்டி யூண் பொருமும், ஏங்கியே யன்னஞ் சுருங்கிடும் வயர்மந்தித்திடு மலசலக்கட்டே.

† பித்தநாடிக்குணம்.

கட்டிடும்பானஞ் சுருங்கிடுங்கழிச்சற் கனதாதுனஷ்டம் நாபுளிக்கும்
நெட்டிடும்பித்தமீறி லூன்காந்தல் நேர்ந்திடும் ரோசகம்வரட்சிக்
கொட்டிடுந்தாகம் வாந்தியாம்விக்கல் கூட்டிடுமூர்ச்சைகாதடைப்புங்
கிட்டிடுமயர்வுசோபம் நெஞ்செரிவு கேலிவயர்காந்தலுமாமே.

நூலாசிரியன் பெயர்.

இன்னிலங்கண் தொண்டமண்டலங் காஞ்சிநாட்டில் மணவூரின் கோட்டம், தன்னிற் ககோளச் சித்தாந்தக் கணிதசாஸ்திரக்ஞன் சதாவதானம், என்னுஞ் செழுமணவை சித்திரக்கவி தேவேந்திரநாதனின்பமுற்று, நன்னயமாய்ச் சிகிற்சைசெயும் வைத்தியப் பெருங்குறளை நவின்றதாமே.

இந்நூலியற்கை.

ஓரடியிலீரடியில் மூவடியில் நாலடியி லுயர்த்திடாது
ஈரடியிலேற்க வொவ்வொரு முறையை யின்பமிக வியற்றிமேவ
நேரடியிற் பலர்காண மூலமுறையுட னனைத்தும் நிசமதாகச்
சீரடியிற் பெருங்குறளாய்ச் சிகிற்சாசார மினிக்கச் செய்தவாறே.

# நூலாரம்பம்.

நூலின் மகிமை.

அல்லற் படுவினையை யண்டா தகற்றிவைக்கும்
நல்ல குறட் பாவினடை.

(இதன்பொருள்) இவ்வுலகின்கண் சகலர்க்குமுதிக்கும் பலவித நோய்களினாலும் மெலிந்து வாதைப்படும் எல்லாப் பிணிகளையும் அவுஷதப் பிரயோகஞ்செய்து அனைத்தையும் அகற்றிவைக்கும் சிகிற்சாசாரமாகிய கைகண்ட வனுபோக வைத்தியப் பெருங்குறளை யாவர்க்கும் உபயோகப்படும்படியாய் எடுத்துரைக்க ஆரம்பித்ததில், இவை வெகு நன்மையைத் தருமென்பதாய் அனைவருங் கருதல் வேண்டும் என்றவாறு. 1

நாடிகளின் நிலைமை.

நாடி நரம்பெழுபத் தீராயிரமுனி
வோடித்திரிந் துழலல் மூன்று.

(இ-ள்) இம்மானிடர்க்குரிய நாடிநரம்பானது எழுபத்தீராயிரமும் அவரவர் தேகத்தினிற் சென்று ஓடிப்பரவிய நாடிகளில், முக்கிய

(இ-ள்) பித்தமுதிப்பதற்குக் காரணமாவது:—தினசாரி புணர்ச்சிச் செய்வதினுலும், கோழிமாமிசம் விசேஷந் தின்பதினுலும், கோபமானவை அடுத்தடுத்து வரச் செய்வதினுலும், அங்நாடி யுதிக்கச் செய்யும்படியான கரிபதார்த்தங்களை மேலுமேலுந் தின்பதினுலுமே பித்தமான துதித்து விகாரகுணத்தை விளைவிக்கும் எ-று. 4

---

ஆமதிலக்கினிமந்தமுங் குளிர்சுர மஸ்தியின் சுரம்விடாச்சுரமும்
நேமமாய்ப் பாண்டுசோகை காமாலை நோமயக்கமும் பித்தவெட்டை
தாமதப்பிரமேகம் விழிசுழன்று தான்குழிவிழுந்துமே யிருண்டு
போமது நீர்மஞ்சள் சிவப்பாகும் புகலும்நாகசந்திடும் போக்கே.

ஐயநாடிக்குணம்.

போக்கதாமையமீறி லூன்காய்தல்போல் வற்றும் வெளுத்திடுங் குளிறும், ஆக்கமு நடுக்கமன்னமுஞ் செல்லாததில் விக்கல் சர்த்தியுமிருமல், தாக்குமேல் மூச்சுதிகைப்புடன் வியர்வை க்ஷயமீளநெஞ்சுவிலாநோய், தேக்கமாயுதிரங் கக்கிடும் வழுவழுத்தினிக்கும் வாய்நீருகிடுமே.

அருகிடுநீர்சிவத்திறங்கிடுநாவு மதுவினித் திடுமுடல்வுலரும்
பெருகிடும் வாதமொன்றதாம்பித்தம் பேசிடிலரைவய்யங்காலாம்
உருகிடும்பங்கு வுள்ளதுமாத்திரை யோடிடி லூணில்நோயில்லை
மருகிடுமானுக்கது வலக்கையில் மாதர்கட்கிடதுகை பாரே.

வாதத்தில் பித்தம் ஐயநாடி.

பார்த்திடும் வாதத்தினிற் பித்தமோடிற் பருஞ்சுமைதலையினிற் சுமந்து, வேர்த்திடவோடி நடப்பதுபோல விளங்கிடும் நடையது யங்கே, சேர்த்திடும்வாதத்தையமே யோடிற்றிரிதோஷச்சன்னியா மயக்கம், ஏர்த்திடுஞ்சோபமூர்ச்சை காமாலை யிரைப்புடன் சோகை பாண்டுவுமே.

பித்தத்தில் வாதம் ஐயநாடி.

உவப்புடன்பித்தத்தினில் வாதமோடி லுருகும்பீநசம் பவுத்திரமுங்
குவியவுமண்டைக்குத்தரையாப்புங் கொடுவலிமூலமொன்பதுவாம்
புவியினிற் பித்தத்தையமேயோடிற் புகல்மகோதரமு நீராம்பல்
கவிகையும்வெப்பும்பாண்டு காமாலைக்கண்டிடுசோகையுந்தானே.

### ஐயமுதித்தநாடி

அதிவிஷநீறுகோணை வைப்பாண்டு கட்குமே
கதிதிரிநாடி சேத்துமமாம்.

(இ-ள்) ஐயமுதிப்பதற்குக் காரணமாவது:—சோகை, காமாலை, பாண்டு, நீர்ப்பாண்டு, விஷப்பாண்டு, நீர்க்கோவைமுதலிய நோய்கள் ஜனிப்பதினாலும், அந்நாடியை யுதிக்கச்செய்யும்படியான பலவித கரி பதார்த்தங்களை அண்ணுடம் தின்பதினாலும் ஐயமாகிய சேத்துமமானது உபரியாய் ஓடுங்கச்செய்யுங் குணத்தை விளைவிக்கும் எ-று. 5

---

### ஐயத்தில்வாதம் பித்தநாடி.

தானமையத்தில்வாதமுமோடிற் றலையிடிப்பித்தசீதளமாம்
மோனமுன்மத்தமுடம்பினில்நீறு முள்ளதாய்த்தாளதைக்கிட்டும்
ஆனவையத்திற்பித்தமுமோடி லங்஗னேவாயில் நீர்சுரக்கும்
ஊனமாய்ச்சுரமும் பேதியும்வாந்தி யுதிக்குங்கைகாலெரிச்சலுமே.

### வாதத்தில் பித்ததோந்தநாடி

கண்டிடும்வாதத்திரண்டினிற்பித்தங் கதித்தொருபங்குமேயோடில்
கொண்டிடும்வாய்வுமிகுத்திடின்விம்முங்குறுதியும்பொருமியேவலிக்கு
அண்டிடுமாதர்புணர்ச்சியைக்கருது மகமகிழ்சிந்தைபூரித்து [ம்
உண்டிடுஞ்சாதஞ்சீரணமாகா துடல்கைகால்சந்துநொந்திடுமே.

### வாதத்தில் வைய தோந்தநாடி.

நொந்திடும்வாதத்திரண்டினிலையம் நோக்கியோர்பங்குமோடிடிலே
சந்ததம்பசியில்லாதவர்வாடிச் சற்றுமேதேகமுமிளைக்கும்
மந்தமாய்வயரும் பொருமியுமுப்பும்வயரது கழியும்வாந்தியுமாம்
முந்தியேவியர்வைமுற்றிலும் பெருகுமுதிரத்தில் நீறும்வற்றிடுமே.

### பித்தத்தில் வாத தோந்தநாடி

வற்றிடும்பித்தத்திரண்டினில் வாதமருவியோர் பங்குமோடிடிலே
வெற்றியாயுஷ்ணமிகுத்திடுங் கைக்கால்விழியுட லெரிந்திடுப்விம்மி
பற்றியேபசியுந்தாக முண்டாகும் பருகிடுப்வாயது கசக்கும்
உற்றதோருதிரம் வற்றிடுப்பலமுமொடுங்கிடு முண்மையிதாமே.

வாய்வுமந்தநாடி

அலர்ந்துவாய்வது மந்தத்தில்மூனுடியு
மலர்ந்துதான் றளர்வதாயோடும்.

(இ-ள்) வாய்வுமந்தநாடியாவது:—அவ்வாய்வானது மந்தப்பட்டிருக்கும்போது தேகத்தில் வாதபித்த சிலேத்தும நாடிகளாகிய மூன்றுமே வலுவுகுறைந்து அவைகள் தளர்ந்து வோடுமாகில் அந்நாடிகள் மலர்ந்ததென்பதாய்ச் சொல்லப்படும் எ-று. 6

---

பித்தத்தில் ஐய தோந்தநாடி.

உண்மையாய்ப் பித்தமிரண்டி லையமொன்றதா யோடிடுமாகில்
கண்ணுடன் றலையும் வரண்டுமேபிடரி காதுநோய் கண்டிடுமங்கே
எண்ணுமேவுடம்பெல்லாந் தினவெடுக்கு மெரியுமே வயாதுவிம்மி
குண்ணுமேவூனுங் குமட்டிடும்வாய்வுங் குளுமையாய்ச் சிலிர்த்திடுங் கூறே.

ஐயத்தில் வாத தோந்தநாடி.

கூறிடுமையத்திரண்டினில்வாதங் கொண்டொரு பங்குமேயோடில்
மீறிடுஞ்சன்னிவிகாரமுங்காட்டு மெத்தெனத்தலையது நோகும்
சீறிடுஞ்சிலிர்க்குந்தித்திக்கும்வாயுஞ் செவியதுமந்தமுமாகும்
நீறிடுந்தேகம்நித்திரைவிரோதம் நெடியகைகாலசந்திடுமே.

ஐயத்தில் பித்ததோந்தநாடி.

அசந்திடுமையத்திரண்டினிற்பித்த மங்கொருபங்குமேயோடின்
நிசமதாய்த்தேகங்குளிர்ந்திடுங்கூசும் நெட்டியே தாகமுமெடுக்கும்
புசமுதற்சிலிர்த்துப்போட்டகைகாலாய்ப் போகுமேபுசிப்புமேற்காது
வசமதாய்த்தொந்தநாடியினேர்மை வழுத்தவுமீதறிவாயே.

வாதபித்த தோந்தரோகநாடி.

அறிந்திடும்வாதபித்தத்திற் றொந்தமதுசெயும் நோயினைக்கேளும்
செறிந்திடுமுதிரம்விம்மியே வலிக்குந்தீபனஞ் சென்றிடாதாகம்
எறிந்திடும்பித்தத்திரண்டையமொன்று ஏகிடும்பிள்ளைதொட்டிலினில்
முறிந்திடநடுவிலசைவதுபோல வோடுமின்னுடியினடையே.

பசிமிகுந்தநாடி.

பசித்துமேவிருக்கிற் பதுங்கிமூணடியும்
வகித்திடுந் தூங்கல்போலாம்.

(இ-ள்) பசிமிகுந்த நாடியாவது:—அவரவர்கள் பசியால்வருந்தி தேகமானதிளைத்து வாடியிருந்திடுங் காலத்தில் வாதபித்த சேத்தும நாடிகளாகிய மூன்றுமே அததின் இயற்கைகள் தப்பிபதுங்கி அவைகள் தூங்குதல்போ லிருக்குமாகில் அந்நாடிகள் சோர்ந்திருப்ப தென்பதாய் அதனைச் சொல்லப்படும் எ-று. 7

---

வாதவைய தொந்தரோகநாடி

ஓடிடும்வாதச்சேத்துமத் தொந்தத்துதித்திடும் நோயினைக்கேளும்
வாடிடுந்தேகம் வலித்திடுங்கைகால் வருந்திமிர் வயர்பொருமிக்கும்
நாடிடும்பித்தமீரண்டினில்வாதம் நடந்தொன்றுவேகிடவிணை
கூடிடவடிக்குந்தன்மைபோலொடுங்கிக் குதிக்குமிந்நாடியினடையே.

பித்தவாத தொந்தரோகநாடி

குதித்திட்டப்பித்த வாதத்திற்றொந்தங் குறித்திடும்நோயினைக் கேளும், மதித்திடவூன்வலித்தெரியும் நெஞ்சதுநாவரண்டுநீர்சிறுத்து மேயிறங்குந், துதித்திடவையத்திரண்டினிற்பித்தஞ் சொல்லொன்று வேகிடில்வண்டி, கதித்திடுஞ்சக்கிரம்போ லதுவோடுங்கழறுமிந் நாடியினடையே.

பித்தவைய தொந்தரோகநாடி

கழலுநற்பித்தத்தையத்திற்றொந்தங் கவர்ந்திடும்நோயினைக்கேளும்
இழையவும்பசியாற்பினத்திடுமுதிர மிறங்குக்கண் மஞ்சளாமெரியும்
பழகவுமையமிரண்டினில்வாதம் பங்கொன்றுவோடிடிற்புணர்ச்சி
கழக்கறச்செய்யும்போதங்குவோடுஞ் சாக்ஷியிந்நாடியினடையே.

ஐயவாத தொந்தரோகநாடி.

சாட்சியாயையவாதத்திற்றொந்தஞ் சார்ந்திடும்நோயினைக்கேளும்
காட்சியாயினிப்பைக்கருதிடுங்கபமே கட்டுந்தாகம்பசிமிகுக்கும்
ஆட்சியாய்வாதத்திரண்டினிலைய மங்கொன்றுயேகிலானையின்வால்
சூட்சியாய்த்துடிக்கும்வாறுபோலோடுஞ் சொல்லுமிந்நாடியினடையே

பாம்புகடித்தநாடி.

அடங்கியே பாம்புகடிக்கின் மூணடியு
மடங்கியே தூங்கிவிடலாம்

(இ-ள்) பாம்புகடித்த நாடியாவது,—ஒருவனைப் பாம்பானது கடித்து விஷமானது தலைமண்டைக்கேறியபின் வாதபித்த சேத்தும நாடிகள் மூன்றுமே அடங்கி ஓடுதலற்று அசைவறத் தூங்குவதுபோ லிருக்கும் அப்போ தவ்வுயிரானது மண்டையில் ஓர் மயிரினிடமி ருந்து அசைந்தாடிக்கொண்டே யிருக்கும் இன்னும் பிறம்பாலடிக்க கூடெழும் எ-று. 8

---

ஐயபித்ததொந்தரோகநாடி

சொல்லிடுமையம்பித்தத்தின்றொந்தஞ் சூழ்ந்திடும்நோயினைக்கேளும்
நெல்லிடுஞ்சன்னித்தலையிடிசெவிடாங் கிளறுநாவினிக்குமந்திக்கும்
செல்லிடும்வாதத்திரண்டினிற்பித்தஞ்சேர்ந்தொன்றுலேகிடில்வீட்டில்
மல்லிடுங்காற்றிலூசல்போலோடும் வகுக்கவிந்நாடியினடையே,

வாததேக மரணக்குறி

பெருகியதேகங்குளிர்ச்சியாய்நிற்கும் பின்விழிமலசலங்கறுக்கும்
இருவிழியதனில்நீர்துவடிப்பு மிசையுநாகறுத்ததுவாளும்
மருவவூன்முள்ளுமுள்ளதாஞ் சிறுநீர்வடிந்திடும்பொருமியுங்கருத்து
கருகவுஞ்சிறுநீரிறங்கும்விம்முங் கண்டுகொள்வாததேகத்தே.

பித்ததேக மரணக்குறி.

கண்டிடச்சூடாய்முகம்விழிநாவுங் கருமலஞ்சலமஞ்சளாகும்
விண்டிடநிறமுமஞ்சளுஞ் சிவப்பாமேனியும் வெளுத்திடுமெங்கும்
அண்டிடவழலாயாக்கையுஞ் சுருங்குமதிர்ந்திடத்தேகமுநடுக்கும்
கொண்டிடவாயும்பினத்திடுமெலியுங் குறியதுபித்ததேகத்தே.

ஐயதேக மரணக்குறி

குறியதுவியர்க்குமுகமதுவிழியுங் கூறிடப்பல்லதுநாவும்
நெறியிநீர்மலமும்நின்றிடும்வெளுக்கும் நேரிருகண்ணினீர்வடியும்
முறியவேபீளைகட்டிடும்வெம்பு மிருமலின்வாதையாற்றவிக்கும்
அறியவுஞ்சேட்மங்கட்டிடுமிரைக்கு மங்ஙனேவையதேகத்தே.

### வயர்வலிக்குள்ளநாடி.

வயர்வலிதனக்கு வருக்குமூணுடிசேர்ந்
தயர்வுறவது வடங்கும்.

(இ-ள்) வயர்வலிக்குள்ள நாடியாவது:—அவரவர்கட்கு வயர்வலியுள்ளபோது வாதபித்தவைய நாடிகளாகிய மூன்றும் அவைகள் சோர்ந்து அயர்வுற ஓடுதலற்று அது உள்ளடங்கியிருக்கும் அம்மூன்று நாடிகளும் சரியாய் நடக்குமாகில் அந்நோயானதிராது எ-று. 9

### கிரந்திக்குள்ளநாடி.

கிரந்திக்குக்கரையுடைந் தருவியும்பாய்தல்போல்
பரந்துமூணுடியோடும்

(இ-ள்) கிரந்திக்குள்ள நாடியாவது:—ஒரு மனிதர்க்கு கிரந்தியுதித்திருக்கையில் ஓர் ஏரியானது கரையுடைந்து அருவியானது புரண்டோடிவருதல்போல வாதபித்த வையநாடிகளாகிய மூன்றுமே பரந்தோடும் வண்ணமாயிருக்கும் எ-று. 10

---

### புணர்ச்சிக்கு பித்தசன்னிக்குநாடி

நாடியும்புணர்ச்சிச்செய்திடும்போது நற்புழுப்போல்கிமிர்ந்தோங்கிக், கூடியேதிரிந்து வலித்துமேநின்றுங் கொப்பெனவாங்கிடு மெளிதில், வாடியேபித்தசன்னிக்கு வாதமையமுமமர்ந்துமேபித்தஞ், சூடியேவெகுமெவடுத்துள்ளா துமீறிச் சொல்லவும் நின்றிடுமென்னே.

### மரணசன்னியின்நாடி.

அன்றதுமரணச்சன்னிக்குட் குத்துக்கப்புறவீச்சிசுவதற்கு
நின்றதுவாதமையமுமமுழ்ந்திரே ரினிவெதிர்த்திடுமுறையே
சென்றதுமந்தத்தீவிரநாடியுஞ் சீவனும்பூதமென்ணுடி [தே
வென்றதிற்ருளிக்குறிவிரற்கடைநூற்கயர் விள்ளவுமதுமிகப் பெரி

### சாத்தியாசாத்தியநாடி

கையதிற்பெருவிரற் கடியிற்பள்ளத்திற் கதித்ததிறறடித்துமோர்நாடி
மையதிற்போயிடிற்றேகத்துரைப்பதில் மாறுயமொன்றிலாசாத்தியம்
மெய்யதிற்சங்கிடிற்செல்வதிற்புகல்வதில்வேண்டுவதிலையசாத்தியமாம்
வையதிற்றெருவதிற்போவதிற்குளர்வதில் மாணிகரந்தூக்கிற்சாவே.

### புணர்ச்சிக்கெழும்பும்நாடி

புணர்ச்சிக்கெழும்பும் புகலும்வாதத்திற்
குளிர்ச்சியாய்ப் பித்தமோடும்

(இ-ள்) புணர்ச்சிக் கெழும்பும் நாடியாவது:—தான் புணர்ச்சி செய்யும்போது அச்சமயம் வாதமானதிற் பித்தமுஞ் சேர்ந்தோடும் அப்படி ஓடுகையில் காமமானது அதிகரித்துக் கலவியில் மனதைச் செலுத்திவைக்கச் செய்யும் அதினல் சிலநோய்களையு முண்டாக்கித் தேகத்தையுங்கெடுத்து துற்பலமாக்குவிக்கும் எ-று. 11

### பீநசத்திற்குள்ளநாடி

பீநசத்தேகிடும் பித்தமுமையமுந்
தானதிற் றெந்தமதாம்

(இ-ள்) பீநசத்திற்குள்ள நாடியாவது:—பீநசமானது நாசியிலு திருக்கையில் பித்தமும் ஐயமும் தொந்தமாய்ச் சேர்ந்தோடும். அதுவோ நாசிவழியிற்சென்று அந்நாசிகளையே இன்று எந்நாளும் தீராப்பெருநோயாய்ப் பீடிக்கச்செய்யும் எ-று. 12

### சூலையிற்குள்ளநாடி

சூலையிற்கையமுந் துள்ளவேபித்தமும்
மூலையிற்சுழன்று வோடும்

(இ-ள்) சூலையிற்குள்ள நாடியாவது:—சூலையானது தோன்றி யிருக்கையில் சேத்துமமானதும் பித்தமானதும் சுழன்று ஒன்றாய்ச் சேர்ந்தோடும் அச்சூலையானது பலவிடங்களில் ஜனிப்பதால் அங்கங் கே அதிகநோயை யுண்டாக்கி வதைக்கும் எ-று. 13

---

### சூட்சுமநாடி விவரம்

கையினில்மூன்றுநாடியையழுத்திக் கனிந்தொருவிநாடியே பொறுத்து
மெய்யினிற்றளர்த்திவிட்டுமேபார்க்கவிரைந்துமுன் னுளதந்ததுவோட
உய்யவேபிழைப்பரொருகுறைவில்லை யொடுங்கியுமபின் னுதைந்தோட
பையவேமாள்வர்பட்சமொன்றிரண்டிற் பண்டிதரறியுமிக்குறியே.

### பூதநாடி தேவநாடி

பாணியின்மூன்றுநாடிமேலோடும் பருவிரற்கடியிற்பள்ளத்தில்
நாணியேபட்டடென்றுமே நரம்புநடித்திடப்பூதநாடியதாம்
ஊணியேசீரார்ரான்சென்றேங்கியுமோட வுரைத்திடுந்தேவநாடியதாம்
காணிடவெவர்க்குங்கட்டுரையாகக் கழறிடும்பாகமிவ்வியல்பே.

### கர்ப்பக்குறிக்குள்ளநாடி

குலந்தனிற் கர்ப்பக்குறியும் வாதத்திற்
கலந்துநற் பித்தமோடும்

(இ-ள்) கர்ப்பக்குறிக்குள்ள நாடியாவது:—ஓர் ஸ்திரீக்குக் கர்ப்பந்தரித்திருக்கையில் வாதமானதிற் பித்தமுங் கலந்து ஓடும். அவ்வாதத்திற் பித்தங்கலக்காதோடிடில் அது மலட்டுக்குறி என்பதாம். அம்மலட்டுக்குறியோ என்னுளுங் கர்ப்பமில்லாமை எ-று. 14

### அதிசாரம் கிராணிக்குள்ளநாடி

அதிசாரங்கிராணிக் கதில்வாதபித்தந்
ததியாயங்கிளைக்குந்தான்.

(இ-ள்) அதிசாரம் கிராணிக்குள்ள நாடியாவது:—அதிசாரம், கிராணி, மூலக்கிராணி, ரத்தக்கிராணி முதலிய பேதிக ளுதித்திருக்கையில், வாதமானதிற் பித்தங்கலந்து இளைத்தோடும்.வாந்திபேதிக்கு மாத்திரம் இந்நாடிகள் முன்னம் ஓடாமல்விழுந்து நீங்கிவிடுவது பலர்க்குந்தெரிந்த விஷயம் எ-று. 15

### மேகத்தெழுந்துள்ளநாடி.

ஓடுமேகத்திற்குள் வாதமும் பித்தம்
கூடியேபன்னிடுங்கூடி,

(இ-ள்) மேகத்தெழுந்துள்ள நாடியாவது:—தன்தேகத்தில் மேகமானது சூழ்ந்திருக்கையில் வாதமானதிற் பித்தமும் பன்னித்துடித்தோடும். அம்மேகமானது 21-விதமா யிருக்கிறது பலநோய்களையும் கிளைக்கும்படியாய்ச்செய்து வதைக்கின்றனவாம் எ-று. 16

### விக்கலிற்குள்ளநாடி

வயமாகவிக்கலிற் கையமும்வாதமும்
நயமாக வோடிடுங்காண்.

(இ-ள்) விக்கலிற்குள்ள நாடியாவது:—விக்கலானது அடிக்கடி விடாமல் வந்துகொண்டிருக்கையில் சேத்துமத்தோடு வாதமுஞ் சேர்ந்து ஓடும். அவ்விக்கல் பித்தக்குறைவினு லுண்டாகின்றன. அப்பித்தம் சரியாய் நடந்தேறுமாகில் விக்கலங்குதிக்காது எ-று. 17

ஜன்னிக்குள்ளநாடி

அடைவுடன்ஜன்னிக் கயர்நாடிமூன்றெகிரிப்
படபடத் தோடிடும்பார்.

(இ-ள்) ஜன்னிக்குள்ளநாடியாவது:—ஜன்னியானது பிறந்திருக்கையில் வாதபித்தவையமாகிய மூன்றுநாடிகளும் ஏகோபித்து எகிரித் துடித்து படபடத்து ஓடுமாகில் அவர்களைப் பலவிதவிகாரகுணத்தில் வதைத்து பேச்சுமூச்சற்று பல்லைக்கிட்டிப் பரதவிர்க்கச் செய்யும். அச்சன்னி 13-விதமாம் எ-று. 18

சுரத்திற்குள்ளநாடி

கூடுமேசுரத்திற் குள்ள துவா தத்தி
லோடுமே பித்தமோங்கி

(இ-ள்) சுரத்திற்குள்ள நாடியாவது:—சுரம் வருகையில் வாதமானதிற் பித்தங்கதித்தோங்கி துள்ளித்துடித்தோடும். அச்சுரம் 64 விதமாம். ஈதன்றி இன்னும் சிலசுரங்களு முண்டாம். அவைகளிற் கொடியசுரங்களானது பிளேக்சுரமென்றும் மலேரியாசுர மென்றும் பெயர் எ-று. 19

கணக்காச்சலிற்குள்ளநாடி

கணக்காச்சலிற்பித்தங் கனவாதமுங்கூடிப்
பிணக்காகக் கலங்கியோடும்

(இ-ள்) கணக்காச்சலிற்குள்ள நாடியாவது;—கணக்காச்சல் வந்திருக்கையில் பித்தத்தோடு வாதமுங்கூடி இரண்டுங் கலங்கியோடும் அக்கணம் 18-விதமாய் அவைகள் எவ்விதகுழந்தைகளையும் அலங்கோலஞ்செய்து 12-வயதுவரையில் மெலியச் செய்வதாம் எ-று. 20

க்ஷயரோகத்துள்ளநாடி

க்ஷயரோகத்திற் பித்தந்தங்கிக்கலங்கியே
பயமாகச் சொற்பிக்கும்பார்.

(இ-ள்) க்ஷயரோகத்துள்ள நாடியாவது:—க்ஷயரோகம் வந்திருக்கையில் பித்தமானது கலங்கியோடுவதில் அதைப்பயமாகச் சொல்லும்படியாய் நோயைவிளைவித்து நாளுக்குநாள் தேகத்தை மெலியச் செய்வதாம் அது மெத்தவும் கொடியதாம் எ-று. 21

சீதருட்சைக்குள்ளநாடி

சீதருட்சைக்குச் செல்லும்பித்தத்தையும்
போதவே நிற்குமோடி

(இ-ள்) சீதருட்சைக்குள்ள நாடியாவது:—சீதருட்சை யுதித்திடுங்கால் அவைபித்தமானதில் ஐயமுங்கலந்து ஓடும். அச்சீதருட்சை மனிதர்களைப் பலஹீனப்படுத்தி ஒடுக்கி வதையச்செய்விக்கும் அவை இன்னநோயென்று கண்டுபிடிக்க முடியாதிருக்கும் எ-று. 22

சுரதோஷத்துள்ளநாடி

சுரதோஷத்திற்பித்தஞ் சொக்கியும்வாதத்துள்
ளூறவாகிச் சள்ளுமங்கே

(இ-ள்) சுரதோஷத்துள்ள நாடியாவது:—சுரந்தோன்றி யிருக்குங்காலத்தில் அது தொப்புளில் தோஷித்திருக்க பித்தமானது சொக்கி வாதத்துடன் உறவாகிச்சேர்ந்துவோடும் அதினுல்மனிதர்க்கு அபாயத்தையும் உண்டுபண்ணவுங்கூடும் எ-று. 23

தலைநோய்க்குள்ளநாடி

விடுத்திடுங்கணைபோல் மிகவையந்தலைநோய்
அடுத்திடுங் குணமானதே

(இ-ள்) தலைநோய்க்குள்ள நாடியாவது:—தலைநோய் அதிகரித்திருக்கையில், சேத்துமமானது கணைபோலப்பாய்ந்து துள்ளித் துடித்து ஓடுவதினுல் அத்தலையிடி காண்பனவாம். இதில் ஒற்றைத் தலைநோய் என்பதாகவும் ஒன்றுண்டு எ-று. 24

நீர்மேகத்துள்ளநாடி

நீர்மேகத்தினிலேறி னிற்கறைபுறள்புழுபோல்
நேர்போகும் நிலைநாடியே

(இ-ள்) நீர்மேகத்துள்ள நாடியாவது:—நீர்மேகந்தோன்றியிருக்கையில் ஐயமானதுதித்து ஏரியிலுள்ள கறையானதுடைந்து புறண்டோடும் தண்ணீரிற் புழுப்போல ஓடும் நாடியாம் அதிற்றேருவதுங் கடினமாம் எ-று. 25

பலஹீனமுள்ளநாடி

குருநாடிச்சீறிக் குத்திப்புறட்டுங்கால்
பருநாடிப்பலஹீனம்பார்

(இ-ள்) பலஹீனமுள்ள நாடியாவது:—தேகமானது பலஹீனமாயிருக்கையில் குருநாடியானது சினந்து சீறிக்குதித்துப் புறளுங் காலத்தில் வலுவாகிய மற்றநாடிகளெல்லாம் கதிகுறைந்து பலஹீனப் படும். அவை அசௌக்கியத்தினாலே ஜனிப்பனவாம் எ-று. 26

1 - நாடிப்படலம்

முற்றிற்று.

## 2 சுத்திப்படலம் 20.

பாஷாணச்சுத்தி

சுன்னங்கரைத்துமதிற் றோரைந்திரங்கட்டி
முன்னமிருசாமமெரி

(இ-ள்)பாஷாணச் சுத்தியாவது:—கற்சுண்ணும்பைத்தாளித்துத் தண்ணீரிற்கரைத்து ஒரு பல்லாவில் விடுத்து, அதில்வெள்ளைப்பாஷாணமாவது சங்குபாஷாணமாவது போலாந்திரம்கட்டி இரண்டு சாமம் வரையில் எரிக்கவும். சுத்தியாம். இதற்கு முறிப்பு மிளகு கத்திரிப் பிஞ்சுதான் எ-று. 27

கௌரி பாஷாணச்சுத்தி

முலைப்பால்கரண்டியிட்டு முற்கௌரிவைத்தெரிக்க
நிலைப்பால் சுரண்டியெடு

(இ-ள்) கௌரிபாஷாணச் சுத்தியாவது:—கரண்டியில் கௌரி பாஷாணக்கட்டியை பொடிசெய்துவைத்து முலைப்பால் விட்டு விட்டு இரண்டுஜாமம் சுருக்கேற்றவும் சுத்தியாம். இதைப்பலவிதமருந்துகளிலுஞ் சேர்க்க யாதொருகொடூரத்தையுஞ் செய்யமாட்டாது எ-று. 28

### சவ்வீரச்சுத்தி

வாழைத்தண்டுள்வைத்து மட்டெரிக்கவீரமதை
ஆடிச்சுண்டக்காச்சிடு

(இ-ள்) சவ்வீரச்சுத்தியாவது:—இளம்வாழைத்தண்டை பில்லை பில்லையாய் அச்சமாயறுத்து ஒரு குடுவையிற் பாதிபோட்டு அதின் மேல் சவ்விரக்கட்டியைவைத்து மேலினும்பாதி பில்லைகளைப்போட்டு இரண்டொரு ஆவிதீயெரிக்கவும் சுத்தியாம் அதில் இடை குறையா திருக்கும் எ-று. 29

### ஜாதிலிங்கசுத்தி

மாதர்முலைப்பாலதனில் வைத்தூரச்சாதிலிங்கம்
ஏதமுறநாற்சாமமே

(இ-ள்) ஜாதிலிங்கச் சுத்தியாவது:—சாதிலிங்கத்தை மாதர்க ளின் முலைப்பாலில்போட்டு முப்பதுமணிநேரம் ஊறவைத் தெடுக்க வும் சுத்தியாம் இதைப் பலமருந்துகளிலுஞ் சேர்க்க யாதொரு துன் பத்தையும் விளைவிக்கமாட்டாது எ-று. 30

### இரசகற்பூரசுத்தி

முன்போல்முலைப்பாலில் முற்றிரசக்கற்பூரங்
கண்போல விலக்காமல்வை

(இ-ள்) இரசக்கற்பூரச்சுத்தியாவது:—முற்கூறியபடி முலைப்பா லில் இரசக்கற்பூரத்தைப்போட்டு முப்பதுநாழிகை ஊறவைத்ததன் பின்னெடுக்கவும் சுத்தியாம். இதைப் பலமருந்துகளிலும் சேர்க்க யா தொரு கெடுதியையும் செய்விக்கமாட்டாது எ-று. 31

### நாபிசுத்தி

வெறுநாபிமேதிதயிர்விட்டூறவைத்தெடுப்
பாருநாபியே சுத்திபார்

(இ-ள்) நாபிசுத்தியாவது:—எருமைத் தயிரில் நாபியை ஊற வைத்து வேவித்தவிக்கச்சுத்தியாம். இந்நாபியாகிய வசப்பை 12 வரு டம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் பெயர்த்து நட்டுவைத்து முளைப்பதில் அதற்கு நஞ்சுண்டாகிற தென்பதாம் எ-று. 32

## கருநாபி சுத்தி.

மேதிசிறுநீரதனில் விட்டூறமுக்கடிகை
ஆதிகருநாபி சுத்தியாம்.

(இ-ள்) கருநாபி சுத்தியாவது:—எருமைமூத்திரத்தில் கருநாபியானதை மூன்றுமணிநேரம் ஆவிகாட்டி எரிக்கவும் சுத்தியாம் இக்கருநாபியாகிய வசம்பைமுன்போல 12-வருடம் 12 இடத்தில் சேராங்கொட்டையைத் துணித்து மண்ணிற்கலந்து பாத்திகட்டி அதுகளில் நட்டுவிளைவதுதான் கருநாபி. எ-று. 33

## இருவிஷம் நிறுவிஷசுத்தி.

இருவிஷங்கோ மூத்திரத்தி னிருவிஷமாய்பாலினிலுந்
துருவிஷமே யவிக்கத்தோடு.

(இ-ள்) இருவிஷம் நிறுவிஷசுத்தியாவது:—இருவிஷமானதைக் கோமயத்திலும், நிறுவிஷமானதைப் பசுப்பாலிலும் அவித்தெடுக்கவும் சுத்தியாம். இதிரண்டையும் தனித்தனியாவது அல்லது ஒன்றுயாவது சேர்த்து பலமருந்துகளிலும் கூட்டவும் அது வேறொரு இடையூறினையும் விளைவிக்கமாட்டாது. எ-று. 34

## தாளகஞ் சுத்தி.

தாளகத்தைக் கள்ளிமரந்தன்னிற் றுளைத்து வைத்து
நாளகத்தில் மண்டலஞ்சென்றெடு.

(இ-ள்) தாளகசுத்தியாவது:—சதுரக்கள்ளி மரத்தில் துளைசெய்து அதின்மத்தியில் தாளகத்தைவைத்து அத்துளால் அதின் வாயையடைத்து சாணிப்பொதிந்து ஒரு மண்டலம் 40-நாள் பொறுத்து எடுக்கவும் சுத்தியாம். இதன்றிவேறு ஈணுக்கிடாரி சாணத்தில் ஒருநாள் ஊறவைத்தெடுக்கவும் சுத்தியாம். 35

## நேர்வாளச் சுத்தி.

வாளம்புளியிலையில் வைத்தவித்து நஞ்சோடு
மீளப்பொடி முளையுமெடு.

(இ-ள்) நேர்வாளச்சுத்தியாவது:—நேர்வாளத்தைத் துணியில் முடிந்து புளியிலையிற்போட்டு தண்ணீர்விட்டு இரண்டுகொதி வரும்

படியாயெரித்து உள்முனைஞ்சு ஓடுகளைப்போக்கி அப்பருப்பை விளக்கெண்ணெ அல்லது நெய்விட்டு வறுத்துவிடச் சுத்தியாம். இதன்றி, வேறு எருமைச்சாணியில் இவ்வாறு செய்யவும் சுத்தியாம். எ-று.

கெந்தகச் சுத்தி.

கெந்தி விளக்கெண்ணெயினிற் கிண்டுருக்கி முந்திறஞ்சாய்ந்
துந் திறளவங் கெடுக்கச் சுத்தி.

(இ-ள்.) அமரிசிலை கெந்தகச் சுத்தியாவது:—இந்த கெந்தகத்தை உருக்கி விளக்கெண்ணெயில் மூன்றுதிறஞ் சாய்க்கவும் சுத்தியாம். இதன்றி, வேறு-பசும்பாலில் ஒருநாள் ஊரவைத்தெடுக்கவும். சுத்தியாம். இதை யாதொரு கொடூரமான மருந்துகளிலும் கொஞ்சம் அதிகமாய்ச் சேர்க்க வேறொரு துன்பத்தையும் விளைவிக்காவாம். எ-று.

படிகி-காரம்-இரசஞ்சுத்தி.

படிகாரம் வெண்காரம் பற்று நெருப்பிற் பொரிக்கத்
துடிகாரஞ் சூதஞ்செங்கல்.

(இ-ள்) படிகாரம்-வெண்காரம்-இரசஞ் சுத்தியாவது:—இதில் படிகாரத்தையாவது அல்லது வெண்காரத்தையாவது பொரித்து எடுக்கவும் சுத்தியாம். இரசத்தை செங்கல்மாவு அல்லது சர்க்கரை, உப்பு ஏதாவதொன்றில் மையவரைக்கவும், வங்கவாடையற்று நல்ல சுத்தியாம். எ-று. 38

நாகம்-மனேசிலை சுத்தி.

வெள்ளெருக்கன் பாலினிலேவிட்டு மனேசிலைமூனு
ளுள்ளருக்க நாகமேன்நெய்.

(இ-ள்,) நாகம் - மனேசிலை சுத்தியாவது :—வெள்ளெருக்கன் பாலில் மனேசிலையை மூன்றுநாளூறவிட்டு வைத்தெடுக்கவும் சுத்தியாம். நாகமானதை பன்றியினெய்யில் மூன்றுதினம் அல்லது இலுப்பை நெய்யில் 21-தினம் உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாம். எ-று.

அபிரேகம்-கிருஷ்ணபிரேகஞ் சுத்தி.

அபிரேகங் காடியில் மூன்றந்நாளூறவை கிருஷ்ண
வபிரேகங் காடியிற் காச்சித்தோய்.

(இ-ள்.) அபிரேகம்-கிருஷ்ணபிரேகஞ் சுத்தியாவது:—வெள்ளையபிரேகத்தை காடியில் மூன்றுநாளூறவைக்கவுஞ் சுத்தியாம். கிருஷ்ணபிரேகத்தைக் காடியில் மூன்றுதினங் காச்சித் தோய்க்கவும் சுத்தியாம். இதில் வெண்மை நிறத்தை பஸ்மத்துக்கும், கறுமை நிறத்தைச் செந்தூரத்திற்கும் சேர்ப்பதில் விசேஷ நன்மையைத் தரும். எ-று. 40

வங்கம்-கருவங்கஞ் சுத்தி.

வங்கம் புன்னைக்கா நெய்யில் மட்டுருக்கிச்சாய்க்க கரு
வங்கம் எண்ணையிற் காச்சித்தோய்.

(இ-ள்) வங்கம் கருவங்கஞ் சுத்தியாவது:—வெள்வங்கத்தைப் புன்னைக்கொட்டை எண்ணையில் மூன்றுதினம் உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாம். கருவங்கத்தை விளக்கெண்ணையில் மூன்றுதினம் உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாம். இவைகளை மூலிகையின் சாறுகளில் உருக்கித் தெரியாமல் சாய்த்திடின் அது சீறிவெடித்து அபாயத்தை விளைவிக்கும் எ-று. 41

தாம்பிரம் நீரிடிமுத்து சுத்தி.

தாம்பிரம் நீர்மேனெருப்புத்தன் சாற்றிலுருக்கிச்சாய்
காம்பிரம்நீர்முத்து தயிர்சாய்

(இ-ள்) தாம்பரம் நீரிடிமுத்து சுத்தியாவது:—தாம்பிரத்தைநீர்மேல் நெருப்புச்சாற்றில் உருக்கி மூன்றுதிறம்சாய்க்கவும் சுத்தியாம். நீரிடிமுத்தானதைப் புளித்தயிரில் ஊறவைக்கவும் சுத்தியாம். அதில் எண்ணை யெடுப்பது இந்தநீரிடிமுத்தினை ஆமணக்குமுத்தில் எண்ணை யெடுப்பதுபோலவே இதிலும் எண்ணையெடுப்பது வழக்கம் எ-று. ()

துருசு-மிருதார்சிங்கி சுத்தி.

துருசுபழச் சாற்றூரச் சுத்தியாம் நார்த்தன்பழத்
திரசமதிற் சிங்கியைவை.

(இ-ள்) துருசு மிருதார் சிங்கிசுத்தியாவது:—துருசை எலுமிச்சன் பழச்சாற்றில் 3-நாள் ஊறவைக்கச் சுத்தியாம். மிருதார்சிங்கியை நாரத்தன் பழச்சாற்றில் 3-நாள் ஊரவைக்கவும் சுத்தியாம். ஈதொவ்வொன்றையும் மும்மூன்று நாள் சரியாய் வைக்கவும். கரையுமாகில் அதை நிழலுலர்த்தலாயுலர்த்தி உபயோகப்படுத்தவும். எ-று. 43

சிவதைவேர் சேங்கொட்டைச் சுத்தி.

சிவதைவே ராப்பாலிற் சேங்கொட்டைப் புளியிலையிற்
கவிதைபோலாய்க் காச்சிடு.

(இ-ள்) சிவதைவேர் சேங்கொட்டைச் சுத்தியாவது:—அச்சிவதைவேரானதை பசும்பாலிற் போட்டு வேவிக்கவும் சுத்தியாம். சேராங்கொட்டையானதை ஓர் பாண்டத்திற் புளியிலையிற் போட்டு தண்ணீர்விட்டு இரண்டொரு ஆவி வேவிக்கவும் சுத்தியாம். அப்போது அதின் விஷமாறிவிடும். எ-று. 44

கற்பூர சிலாசித்து சுத்தி.

கற்பூரச்சிலையிற் கற்சுண்ணங்கவசித்த
திற்பூர முலர்த்தியெடு.

(இ-ள்.) கற்பூர சிலாசித்து சுத்தியாவது:—கற்பூரசிலாகித்தைக் கட்டியாயெடுத்து கற்சுண்ணம் நீற்றிய சுண்ணும்பிற்குள் வைத்து அல்லது மேலே குழம்பாய்த் தளும்பப்பூசி வெய்யலிலுலர்த்தி அதை மறுபடியுமெடுத்து சுண்ணத்தை யுதிர்த்து அதை உபயோகிக்கவும் சுத்தியாம் எ-று. 45

சூரணங்களின் சுத்தி.

பொடித்ததூளாய்பாலிற் புட்டாவிக்கட்டித்தீ
வடித்தபோ திறக்கியும்வை.

(இ-ள்) சூரணங்களின் சுத்தியாவது:—கடை மருந்துகளைப் பொடித்துச் சூரணஞ்செய்து அதிற் பசும்பால்விட்டுப் பிசைந்து ஓர் சட்டியிற் புட்டாவிகட்டி அதின்மேல்வைத்து மேல்சட்டி யொன்று மூடி அடுப்பேற்றி யெரித்து எடுத்து அதையுலர்த்தி அதோடுசேர்க்க வேண்டியதைச்சேர்த்து அனுபானங்களிலிடவும் சுத்தியாம் எ-று. 46

2-சுத்திப்படலம்-20.

முற்றிற்று.

## 3. நஞ்சறு படலம் 16.

### எட்டி கற்பூரத்திற்கு முறிவு

எட்டியுடன்கற்பூரத்திற் காட்டிநாவற்பட்டை
தட்டிபிழிந்துட் சாரைத்தா.

(இ-ள்) எட்டி கற்பூரத்திற்குமுறிவாவது:—நாவற்பட்டையைக் காடிவிட்டிடித்துப் பிசைந்துப் பிழிந்தசாற்றை உள்ளேற்றவும். எட்டி கற்பூரத்தைத்தின்ற நஞ்சானது முறிந்துவிடும். அதிலுந்தீராவிடின் நீலிவேர் கியாழமிட்டுப் புகட்டவும். முறியும் எ-று. 47

### பேய்ச்சுரைக்கு முறிவு.

பேய்ச்சுரைக்குக் காடியிற்பின் கோரைக்கிழங்கிடித்து
தாய்ப்பிசைந்தச் சாற்றையளி,

(இ-ள்) பேய்ச்சுரைக்கு முறியாவது:—அப்பேய்ச் சுரையைத் தின்றவர்க்கு கோரைக்கிழங்கினைக் காடிவிட்டிடித்துப் பிசைந்து பிழிந்த அச்சாற்றினை உட்புகட்டவும் முறிந்துவிடும். அதிலுந்தீராவிடின் கத்திரிப்பிஞ்சின்சாற்றை உட்புகட்டவும் முறியும் எ-று. 48

### அலரிவேறுக்கு முறிவு.

அலரிவேறுண்பதற்கதிற் கடுக்காய்ச்சுட்டகரி
யுலறக்காடிச் சலத்தேற்றிடு

(இ-ள்) அலரிவேறுக்கு முறிவாவது:—அவ்வலரிவேரையரைத் துண்டவர்க்கு கடுக்காயைச் சுட்டுக் கரியாக்கி அதைக்காடியில்விட்டுக் கலக்கி உட்புகட்டவும் அதில் மலம் சலம் வெளிப்படப்பேதியாகி அம் மருந்து அதின்மூலமாகவந்து விழுந்துவிடும் எ-று. 49

### எருக்கன்பாலெண்ணைக்கு முறிவு

எருக்கன்பாலெண்ணையுண்பதில் மொச்சைக்கொட்டைதுவைத்
திருக்கக்காட்டியிற் புகட்டிடு

(இ-ள்) எருக்கன்பாலெண்ணைக்கு முறிவாவது:—எருக்கன் பாலும் எண்ணையுங்கலந்து குடித்தவர்க்கு மொச்சைக் கொட்டையைத்

துவைத்த விழுதைக் காடியிற்கரைத்து உட்புகட்டவும் அதை முறித்துவிடும் உடனே பச்சைப்பயர் பச்சரிசிபொங்கி உள்ளுக்கேற்றவும். எ-று. 50

நாபிக்கு முறிவு.

நாபியைத் தின்றவர்க்கு நற்சிறுநீர் நாவற்கொழுந்
தாபியுமுள்ளரைத்துக்கொடு.

(இ-ள்) நாபிக்கு முறிவாவது:–நாபியைத்தின்றவர்க்கு நாவற்கொழுந்தை சிறுநீர்விட்டரைத்து உட்புகட்டவும். முறியும். அப்படி முறியாவிடின், மிளகு கால்பலத்தை தண்ணீர்விட்டரைத்துப் புகட்டவும் அதைமுறித்துவிடும். எ-று. 51

ஊமத்தை அவுரிக்கு முறிவு

ஊமத்தங்காயவு ரியுண்பவருக்கரிதகிவித்
தாமத்தை யீவெந்நீரில்.

(இ-ள்) ஊமத்தை அவரிக்குமுறிவாவது:—ஊமத்தங்காய் அல்லது அவுரியைத்தின்றவர்க்குக் கடுக்காய்ப்பருப்பையரைத்து இளவெந்நீரிற் குழப்பி உட்புகட்டிடவும் முறியும் அவுரிக்குமாத்திரம்முன்னுரைத்ததியாவுமே முறியும். எ-று. 52

கற்பூரம் எண்ணைக்கு முறிவு

கற்பூரயெண்ணையுண்ணுங் கண்மஞ்சளரைத்ததைநீ
ரிற்சேர வுள்ளேற்றிடு.

(இ-ள்) கற்பூரம் எண்ணைக்கு முறிவாவது:—கற்பூரமும் எண்ணையுங்கலந்தாவது அல்லது கற்பூரத்தையாவது குடித்தவர்க்கு மஞ்சளையரைத்துத் தண்ணீரிற்கலக்கி உட்புகட்டவும். முறியும். அல்லது பாதிரிவேரையரைத்துத் தேனிற்குழைத்துஉட் புகட்டவும். முறியும். அதிலுமீறிடின், மறுபடியும் உள்ளேற்றவும் முறியும்.எ-று. 53

நேர்வாளத்திற்கு முறிவு

வாளத்தைத்தின்ன வாவாரைவேர்ப் பட்டையைமோர்
நீளத்தை மத்தித்தேவார்.

(இ-ள்) நேர்வாளத்திற்கு முறிவாவது:—நேர்வாளப்பருப்பைத் தின்றவர்க்கு ஆவாரைவேர்ப்பட்டையை யரைத்து மோரிற் கலக்கி

உட்புகட்டவும். முறியும். ஈதன்றி வேறு, செம்பை சுட்டுக் கரிக்கி வெந்நீரில் உட்புகட்டவும். முறியும். அதினுமீறிடின், வரட்டித்தூளைக் கியாழங் காச்சிக்குடிப்பாட்டவும் உடனே முறியும் எ-று. 54

## பாஷாணத்திற்கு முறிவு

நவபாஷாணந்தின்ன நற்பருத்திப்பிஞ்சிலையைச்
சுவைபாலானதிலூட்டிடு.

(இ-ள்) நவபாஷாணத்திற்கு முறிவாவது:—பாஷாணங்கள் 9-ல் ஏதாவதொன்றைத் தின்றவர்க்குப் பருத்திப்பிஞ்சி இலையையரைத்துப் பசும்பாலிற் கலக்கி உட்புகட்டவும் முறியும். இதன்றி, வேறு கத்திரிப்பிஞ்சைத் துவைத்து அந்தச் சாற்றில் ஆழாக்கு வீதம் உட்புகட்டவும். முறியும். எ-று. 55

## கள்ளிப்பாலுக்கு முறிவு.

கள்ளிப்பாலுண்டவர்க்குக் கண்டுமொச்சைக்கொட்டைவிழு
துள்ளிற் காடியிலுட்கொடு.

(இ-ள்) கள்ளிப்பாலுக்கு முறிவாவது:—கள்ளிப்பாலுண்டவர்க்கு மொச்சைக்கொட்டையை யரைத்து விழுதைக் காடியிற் கலக்கி உட்புகட்டவும் முறியும். உடனே பச்சரிசி பச்சைப்பயர் ஜாகைகாச்சித் தண்ணாரலாயாற்றி உட்புகட்டிடவும். அதுமுறிந்து விடும். எ-று.

## சிவனார் வேம்பிற்கு முறிவு.

சிவனார்வேம்புண்ண காலத்திற் சுக்குச்சேர்த்தரைத்து
நலமாயாங்குள்ளனத்திடு.

(இ-ள்) சிவனார் வேம்பிற்கு முறிவாவது:—சிவனாற் வேம்பைத் தின்றவர்க்கு ஒருபலம் சுக்கானதை காடியிலரைத்து அக்காடியிலேயே குழப்பி உட்புகட்டிடவும். முறியும். அதினும் மீறிடின், மிளகைக் கியாழமிட்டு அடிக்கடி உட்புகட்டிவரவும் முறியும். எ-று. 57

## எருக்கன் பாலிற்கு முறிவு.

எருக்கன்பாலுண்ண மணித்தக்காளி நீலியிலை
யரைக்கக் காடியிற் புகட்டும்.

(இ-ள்) எருக்கன்பாலிற்கு முறிவாவது:—எருக்கன்பாலை யுண்டவர்க்கு மணித்தக்காளியிலையும் அவுரியிலையும் சேர்த்தரைத்துக் காடியிற் குழப்பி உட்புகட்டவும் முறியும். அதிலுமீறிடின், வேறு-பூனைக் காஞ்சோரியிலையை யரைத்துக் காடியிற் புகட்டவும் முறியும். எ-று.

சேராங்கோட்டைக்கு முறிவு.

பொல்லாச் சேராங்கொட்டைக்குப் புரசம்பூபட்டையரைத்
தெல்லாங் காடியிற் புகட்டும்.

(இ-ள்) சேராங்கொட்டைக்கு முறிவாவது:—அச்சேராங்கொட்டைப் பால்பட்டாலும், அதின் புகையானது மேற்பட்டாலும், உடம் பூதுவதற்கு புரசமரத்துப்பூவும், அதின் பட்டையும் அரைத்துக் காடியிற் குழப்பி உட்புகட்டிடவும் முறியும். இதன்றி புளியமரத்தைக் கட்டித்தழுவிடினும் முறியும். எ-று. 59

கற்பூரத்தைலத்திற்கு முறிவு.

கற்பூரத் தைலமுண்ணக் கையானதைச் சிறுநீ
ரிற்வூரவரைத்ததை யோற்று.

(இ-ள்) கற்பூரத்தைலத்திற்கு முறிவாவது:—கற்பூரத்தைலத்தைக் குடித்தவர்க்கு கரிசலாங்கண்ணியை யரைத்துச் சிறுநீரிற் கலக்கி உட்புகட்டிடவும் முறியும். அல்லது அவ்விழுதை கோமயத்திற் கலக்கி அடிக்கடி புகட்டிக்கொண்டே வரவும். முறியும். எ-று. 60

நெய் தேனிற்கு முறிவு.

ஆச்சரியம் நெய்தேனை யங்கருந்தச்சமனுக
மாச்சரியங் கரிகாடியில்வார்.

(இ-ள்) நெய்தேனிற்கு முறிவாவது:—நெய்தேனை நாமுண்பது வழக்கமாயிருந்தபோதினும், அந்த நெய்யில் 1-பலம், தேனில் 1-பலம் சமனுய்ச்சாரித்து குடிக்க அவர் மரணமடைவர் அதற்கு அடுப்புக்கரியைப் பொடித்துக் காடியிற் கலக்கிவார்க்க முறியும். அவ்விரண்டும் எச்சுதக்கா யிருந்திட ஒன்றுஞ்செய்யாது. இது மகா ஆச்சரியமானவை. எ-று. 61

### நல்லெண்ணை வெற்றிலைச்சாருக்கு முறிவு

நல்லெண்ணை வெற்றிலைச்சார் நத்திகுடிக்கச் சமனைய்
நல்லெண்ண பாவருந்தச் சாற்று.

(இ-ள்) நல்லெண்ணை-வெற்றிலைச்சாருக்கு முறிவாவது;—நல்லெண்ணையை வெற்றிலையை நாமுட்கொள்வது வழக்கமாயிருந்திடினும், அந்த நல்லெண்ணை 1-பலம், வெற்றிலைச்சார் 1-பலம் சமனுய்ச் சேர்த்துக் கலந்து குடிக்கவும். அவர் இறப்பர். அதற்கு தேங்காய்ப் பாலைப் புகட்டவும் முறியும். இல்லாவிடின் மரணமடைவர். எ-று. ()

3. நஞ்சறுபடலம் - 16.

முற்றிற்று.

## 4 காச்சுபதப் படலம் 13.

### நெய்காச்சும் பதம்.

நெய்காச்சினுரை சப்தம் நிற்ககர்க்கம் நெருப்பின்மேல்
வைதாக்கி போன சயிலாதெடு.

(இ-ள்) நெய்காச்சும் பதமாவது:—அடுப்பில் நெய்யைவிட்டுக் காச்சுகையில் அதில் நுரை சப்தங்கிளம்ப அந்நெய்யிற் கொஞ்சங் கர்க்கமெடுத்து நெருப்பின்மேல் வைக்கவும் அச்சப்தமடங்கி சுரசுரப்பில்லாதிருக்க அது சரியானபதமென்று இறக்கி வைத்திறுத்துக் கொள்ளவும். அது பொங்குமானுல் அடுப்பின்றீயை அடக்கிவிட அக்கொதிப்படங்கிவிடும். எ-று. 63

### தைலங்காச்சும் பதம்.

தைலங்காச்சிட வேரையுந் தங்ககர்க்கம் நசுக்கின
தைலங்கரகரெனக்காண்.

(இ-ள்.) தைலங்காச்சும் பதமாவது,—அடுப்பில் தைலம்விட்டுக் காச்சுகையில், அதில் நுரைகட்டவேண்டும். அப்பொழுது உள்கர்க்கத்திற் கொஞ்சமெடுத்து கைவிரலால் நசுக்கிப்பார்க்கவும். அது நர

நரோனவென்று யிருக்கும்பொழுது அது சரியானபதமென்று இறக்கி வைத்திருத்துக் கொள்ளவும், அப்படிக்கில்லாவிடின் பின்னுங்கொஞ் சநேர மெரிக்கவும். எ-று. 64

நசியத்தைலங் காச்சும் பதம்.

தைலத்தினுட் கர்க்கந்தன்னை யுண்டையாய்த் தட்டிக்
தைலத்திற் கிண்ணென்றொட்டாதெடு.

(இ-ள்) நசியத்தைலங் காச்சும்பதமாவது:—அடுப்பில் தைலங் காச்சுகையில், அதினுட்கர்க்கத்தில் கொஞ்சமெடுத்து உருண்டை யாய்த்தட்டிக் கலத்திற்போடுகையில் அது கிண்ணென்ற சப்தத்து டன் ஒட்டாமலிருக்கவும் அதை எடுத்து விட்டிறக்கி இருத்துக்கொள் ளவும். ஒட்டுமாகில் பதம் வருமளவும் எரித்திடவும். எ-று. 65

உட்குடி தலைக்கிடுந் தைலம்காச்சும் பதம்.

உள்கர்க்கம் நசுக்கில் மெழுகுண்டை மெதுவாயிருக்கிற்
கொள்தற்கு தலைக்குமுட்குடி.

(இ-ள்) உள்குடிக்கத் தலைக்கிடுந்தைலங்காச்சும் பதமாவது:— அடுப்பில் காச்சிடுந்தைலத்தின் உள் கர்க்கத்திற் கொஞ்ச மெடுத்து நசுக்கிப்பார்க்கில் அது மெதுவாயும் மெழுகாயும் உருண்டையாயு மிருக்குமாகில் அவை உள்ளுக்குக் குடிக்கவும், தலைக்குத் தேய்த்து முழுகவும் பதமென இறக்கி இருத்து வைத்துக்கொண்டு உபயோ கிக்கவும். எ-று. 66

லேகியங் காச்சும் பதம்.

கியாழத்தில் வெல்லமிட்டுக் கிண்டதுகுப்பால்பாகு
கியாயம்வெல்லம் நார்பிசுக்கிட்டிட

(இ-ள்) லேகியங்காச்சும் பதமாவது:—அடுப்பிற்காச்சிய கியா ழத்தில் வெல்லத்தைப்போட்டு துடுப்பால் கிளறிக்கிண்ட அவ்வெல் லம் பற்றுபாகாய்த்திரள அதை விரலாற்றொட்டுப் பார்க்கவும் அது நார்நாராய்ப் பிசுக்கிட்டு நீண்டுவரவும். அது லேகியபதமல்ல வென் றறிந்து இறக்கிவைத்துக் கொள்ளாமற் காச்சவும்:எ-று. 67

இதுவுமது.

இழையவுமே குடுகுடென்று குமிளெழும்பாதேல்
பழையகலநீரோர் துட்டிடவொட்டா.

(இ-ள்) முன்னம் அடுப்பில் இழையக்காய்வது குடுகுடென்று சப்தங்கிளம்பி குமிளானது எழும்பாது அடங்கிடில் அதில் ஓர் துட்டிடையெடுத்து வெண்கலக்கிண்ணியில் சலத்தைவிட்டு அதில் போடவும் அந்தப்பாகானது அதில் ஒட்டாமலிருக்குமாகில் அவைலேகியப் பதமென்று இறக்கிவைத்துக்கொண்டு உபயோகப் படுத்தவும். எ-று.

வேர்களின் கியாழங்காச்சும் பதம்.

வேர்கியாழம்வையேழ்நாள் வெந்திடவும்வடித்ததிலே
பாக்கியாழம் மூலிகைவேர் பாச்சு.

(இ-ள்) வேர்களின் கியாழங்காச்சும் பதமாவது:—எவ்விதவேர்களையும் கியாழம்வைக்குதல் ஏழுநாள் அல்லது எட்டுநாள் காச்சி வடித்து இறுத்து வைத்துக்கொண்டு உபயோகப்படுத்தவும். இப்படியேபலவிதமாகிய பசுமூலிகைகளின் வேர் வகையாக்களைக் கியாழங்கள் வைத்திடும் பதமெனவறிக. இதில் இன்னும் கடைச்சரக்குகளையும் சேர்த்துக் காச்சினுலுங் காச்சலாம். எ-று. 69

கியாழங் காச்சும் பதம்.

சங்குகியாழமேழ்நாளல்ல தீரார்தினமெரித்து
தங்கவடிகட்டிடவுந் தகும்.

(இ-ள்) கியாழங்காச்சும் பதமாவது:—சங்குகியாழம் வைத்திடின் ஏழுநாள் அல்லது பனிரெண்டுநாள் எரித்ததின்பின் அதை எடுத்து இறக்கி இறுத்து வடிகட்டிக்கொண்டு உபயோகப்படுத்துவது தான் உசிதம். அப்படிக்கில்லாவிடின் அவையாவும் வியர்த்தமாய்க் கெட்டுவிடுமென்றறியவும். 70

கோடிகளின் கியாழங்காச்சும் பதம்

கொடிக்கியாழம் பதினோர்நாள் கொதிக்கவீரார்நாளும்
வடிக்கியாழ மிருத்திடவாம்.

(இ-ள்) கொடிகளின் கியாழங்காச்சும் பதமாவது:—எவ்வித கொடிசெடிகளையும் பதினோர்நாள் காச்சி அதைப் பனிரண்டாநாளெடுத்து இறக்கி இறுத்து வடிகட்டி உபயோகப்படுத்திடவும். அவை கொடிகளின் கியாழப்பதமெனவறிக. அதில் இன்னும் கடைச்சரக்கில் எதேது சேர்த்துக்காச்சினுலும் காச்சலாம். அப்படிக்கில்லாவிடின் கியாழம்கெடும். எ-று. 71

தானியமிலேக்கியாழம் காச்சும் பதம்.

தானியமிலேக்கியாழந் தண்ணீரிற் பகல்நிசிவைத்
தூணிட வெரித்து மெடு.

(இ-ள்) தானியமிலேக் கியாழங்காச்சும் பதமாவது;—நெல்லு முதலிய பலவிததானியங்கள் அல்லது பச்சிலேத்தழைகளேக் கியாழம் வைப்பதில் ஒருநாள் பகலிரவு முழுதும்வைத்து மறுநாளெடுத்து அதை நன்ருய்க்காச்சி நற்பதத்தில் இறக்கிவைத்திறுத்து வடிகட்டிக் கொள்ளவும். பிறகதை உபயோகப்படுத்திட நலந்தரும். எ-று 72

பால்கலக்குந்தைலங் கிருதங்காச்சும் பதம்.

இருநாட்பகலிரவு மெரித்துப்பால் சேர்தைலம்
வருநாட் கிருதமவ்வார் வை.

(இ-ள்) பால்கலக்குந் தைலக்கிருதங்காச்சும் பதமாவது:— இரண்டுநாட் பகலிரவு விடாமலெரித்து இறக்கி வைத்துக்கொண்டு அதில் பால்சேர்த்திடவும். அது தைலப்பதமெனவறிக. கிறுதப்பத மாவது. அதையும் முன்போலவே காச்சியிறக்கி இறுத்து அதிற் சேர்க்கவேண்டியதைச் சேர்த்து எரித்து வடிகட்டிக்கொண்டு உபயோ கிக்கவும். எ-று. 73

சுத்தச்சார்விட்டுக் காச்சும்பதம்.

சுத்தச்சார்மூனுள்வைத்திட் டெரித்துயெண்ணேவிட்டு
மத்தியிர் நாளாயெரித்து வடி.

(இ-ள்) சுத்தச்சார்விட்டு காச்சும்பதமாவது:—எவ்விதசாறுகளே யுங் கியாழம்வைத்து மூன்றுநாள் எரித்து வடித்து அதில் வேண்டிய எண்ணேயைவிட்டு இரண்டுநாள் காச்சியபின் னிறுத்து எடுத்துக் கொண்டு உபயோகிப்பது சுத்தச்சார்விட்டுக் காச்சும் பதமெனவறிக. இப்படிச்செய்யாவிடின் அவைகெட்டுவிடுமென்பது திண்ணம். எ-று.

மோர்விட்டுச் காச்சும்பதம்.

ஒருபகலு மளிசிகாச்சி யுட்கலிக்கம் நய்யமெண்ணே
கிறுத்தைலங் கியாழத்தேற்று.

(இ-ள்) மோர்விட்டுக் காச்சும் பதமாவது ;—ஒருபகலும் இராத்திரியும் மோர்விட்டுக் காச்சிய கியாழத்தை வடித்துக் கொண்டு அதைக்கிறுதங்களுக்கும் கலிக்கங்களுக்கும், எண்ணைகளுக்கும், லேகியங்களுக்கும் இக்கியாழத்தை தைலங்களுக்கும் உபயோகப்படுத்திடவும், வெகு நன்மையைத்தரும் இப்படிக்கில்லாவிடின் அவைகள் யாவுங் கெட்டுவிடும். எ-று. 75

4-காச்சுபதப் படலம் 13

முற்றிற்று.

## 5 மாதர்வினைப்படலம் 34.

குன்மத்துக்கு.

நீச்சத்தண்ணியிலுப்புநிற்க காலாழாக்கை
தோச்சத்தண்ணீர் கரைத்திடு.

(இ-ள்) குன்மநோய்தீருவதற்கு:—நீராகாரத் தண்ணீரில் காலாழாக்கு உப்புபோட்டுக் கரைத்துக் கலக்கியதை மூன்றுநாள் காலையில் உட்கொண்டுவரவும். குன்மம் வயர்வலிகரைந்து நின்றுவிடும். இதற்குப்பத்தியப்பரிகாரமா யிருத்தல் வேண்டும். எ-று. 76

குலையைத் தூக்கினதற்கு.

ஒருதலைபூண்டிரு பலமுரித்ததையே வேகவைத்து
மறுதலைமத்தினுற் கடைந்திடு

(இ-ள்) குலையைத்தூக்கினது தீருவதற்கு— ஒருதலையாயுள்ள வெள்ளைப்பூண்டில் இரண்டு பலந்தோலுத்து அதை வேகவைத்து மத்தினுல் நன்றாய்க்கடைந்து காலையில் மூன்றுநாள் உட்கொள்ளக் கோடுக்கவும். குலையை அல்லது அள்ளைத்தூக்குவது அடங்கி விடும். இதற்குப்பத்தியஞ் சொராயுண்டுவரவும் வேண்டும். எ-று. 77

சூதகவாய்வுக்கு.

கரும்போளங் காயந்தேன் கண்டிடித்தீரார் குளிகை
வரு நாங்காலைமாலை மாட்டு.

(இ-ள்) சூதகவாய்வு தீருவதற்கு:—கரியபோளமும், பெருங்காயம்பொரித்ததும் வகைக்கு முப்பது கிரேயின்வீதம் ஒவ்வொன்றுஞ் சேர்த்திடித்து 12-குளிகைசெய்து அதை காலைமாலைகளில் 1-குளிகை வீதம் 6-நாள் தேனிலருந்தவும்; வாராதசூதகம் வரும். பத்தியமாக இருக்கவும். எ-று. 78

தூரம்வரவயர் நோதலுக்கு.

சுண்டையளவிற் காயத்துட்கழற்சிப் பருப்பொன்று
கொண்டுநுணுக்கி மூணுட்கொடு.

(இ-ள்) தூரம்வரவயர்நோதல் தீருவதற்கு:—பெருங்காயத்தைப் பொரித்துச் சுண்டைக்காயளவிலும், கெச்சைக்காய் பருப்பொன்று தூள்செய்ததுங்கலந்து கொஞ்சஞ் சர்க்கரைசேர்த்து 3-நாட் கொடுத்துண்டு, இச்சாபத்தியமாயிருக்கவும். வயற்றிலுள்ள பூச்சிகள்செத்து விழுந்து வயர்வலி நீங்கி சூதகக்கட்டகன்று கர்ப்பமுந்தரிக்கும். எ-று.

மார்பு குத்தலுக்கு.

ஈருள்ளிச்சாருடனமே னிச்சார்கள்சாரித்து
மாருள்ளின்மேற் பூசிவா.

(இ-ள்) மார்புகுத்தல் தீருவதற்கு:....வெங்காயச் சாறும், குப்பைமேனிச்சாறும், ஒன்றாய்க்கலந்து மார்பின்மேற் பூசிவரவும் இதன்றி, வேறு நாயுருவியைத் தண்ணீரிலரைத்து மார்பின்மீது பூசிவரவும் மார்புகுத்தலானது உடனே நின்றுவிடும். எ-று. 80

கர்ப்பப் புழுவிற்கு.

முதியார்கூந்தலின்வேரை முன்னரைத்துச்சார்காஞ்சிப்
பதிவாய்த்தா னுண்புழுவறும்.

(இ-ள்) கர்ப்பப்புழு நசிவதற்கு;—முதியார் கூந்தலின் வேரையரைத்து அதை மிளகுநீர்காச்சி அதிற்கலந்து மூன்று அல்லது ஐந்துநாள் காலைமாலை குடித்துவரவும் வயற்றிலுள்ள புழுக்களியாவும் வழிந்து மடிந்து வெளியில்விழும். இதோடு குளிர்சுர முதலியதுந் தீரும். எ-று. 81

மத்தித்த பிள்ளைவிழ.

நிலக்குமிளன்வேரரைத்து நெட்டியுண்ணச் சேய்கரைந்து
மரக்கவிழும் பூமிவழி.

(இ-ள்) மத்தித்தபிள்ளை விழுதலுக்கு:—நிலக்குமிளன் வேரை நன்றுயரைத்து அதிற்புன்னைக்காயளவு விழுதை உட்கொண்டிடவும் கர்ப்பஸ்திரீ வயற்றில் மத்தித்த பிள்ளையானது கரைந்து வெளியில் வந்து விழுந்துவிடும். உடனே அவளுக்குத்தக்க காயமுதலியதை யளிப்பது அளிக்கவும் நன்மையாம். எ-று. 82

## மலடாகுதலுக்கு

பூவரசன்பட்டையிந்துப் புங்காசுகட்டிசமன்
நாவுறப்பெண்ணுண்ண மலடாம்.

(இ-ள்) மலடாகுதலுக்கு:—மேற்பரணிபோக்கிய பூவரசன்பட்டையும், இந்துப்பும், காசுகட்டியும், சமனிடையாய்ச் சேர்த்துப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வெறுகடிப் பிரமாணம் நாலு கொண்டது முழுகின நாள்முதல் ஐந்துநாள் வரையிலு முட்கொண்டுவரவும். அது முதல் சந்தானமற்று மலடாயிருப்பாள். எ-று. 83

## மலட்டுப்பூச்சி விழ.

பிரண்டைச் சார்பிழிந்துழக்குப் பிண்ணிருபோதுண்
சதுர்நாள் திரண்டப் பூச்சிகள் சிதறும்.

(இ-ள்.) மலட்டுப் பூச்சிகள் விழுவதற்கு,—பிரண்டைச் சார் பிழிந்து காலையிலும், மாலையிலும் ஆழாக்குவீதம் நாலுநாள் குடித்து வரவும். அதன்பின் பசுமோர் சோறுண்டு பத்தியமாயிருக்கையில், வயிற்றிலுள்ள மலட்டுப்பூச்சிகள் சிறுநீரோடு சிதறி வெளியில் இழிந்து வந்துவிடும். எ-று. 84

## பிரசவித் துதிரங்கட்டலுக்கு.

பழச்சார துராவினசார்பக ரெண்ணைக்காச்சியதில்
விழச்சாராழாக கேற்றிடு.

(இ-ள்.) பிரசவித்துதிரங்கட்டல்தீர:--துராயிலையைத்துவைத்தி குறுணிச்சார்விட்டுக் கொதிக்கவைத்து ஒருபடியாய்க் காச்சிவடித்து நல்லெண்ணை ஆழாக்குவூற்றி எலுமிச்சம்பழச்சாறுங்கூட்டி யெரித்து வேளைக்குஆழாக்கு குடித்திடவும். வயற்றில்உதிரம்கட்டியதுகரைந்து விடும். கார்ப்புப்புளிப்பு நீக்கியுண்ணவும். பசியெடுக்கும் சன்னியற்றிடும். எ-று. 85

### சரீர புஷ்டிக்கு.

தூதுவளையின்பழங்காய் தொட்டுலர்த்தித் தேங்காய்ப்பால்
மீதுவரைத்துள் விழுங்கு.

(இ-ள்.) சரீர புஷ்டியாவதற்கு:—தூதுவேளையினது பழம், காய் இவைகளை யுலர்த்தி, தேங்காய்ப் பாலிலரைத்து மூன்றுநாட் காலையிலுட்கொண்டு வரவும் சரீரபுஷ்டியை யுண்டாக்குவிக்கும். இவ்வாறு ஒருமண்டல முண்டுவரவும் காயமவலுத்து தேஜசுண்டாய்த் துலங்கும். எ-று. 86

### தெருளாதாருக்கு.

நாஸர்தசானிப்பூவை நற்பசும்பாலிலரைத்து
ஈயுமேழ்நாள் பழச்சாற்றினில்.

(இ-ள்) தெருளாதாருக்கு:—ஞாயிற்றுக்கிழமையில் தாசானிப் பூவை பசுப்பாலிலரைத்து எலுமிச்சம் பழச்சாற்றிற் கலக்கி ஏழுநாட் காலையிலுட்கொண்டு வரவும். திறளுவள். இதன்றி, வேறு-சத்திச்சார் வேளைக்கிழங்கைப் பசும்பாலிலரைத்து இரண்டுவாரம் கார்ப்புப் புளிப்பு நீக்கி இதையுண்டுவரவும் உடனே திறளுவள். எ-று, 87

### திரளாப் பெண்ணுக்கு.

புளிகருணைக்கிழங்கதை நீர் புகவரைத்தாய் பாலிற்கரைத்
தளிதிரிநாள் பெண்திறளுவள்.

(இ-ள்) திரளாப்பெண் திரள:—புளிகருணைக்கிழங்கைக் கொட்டைப்பாக்களவு தண்ணீரிலரைத்துப் பசும்பாலிற் கரைத்து மூன்று நாள் காலை நேரத்தில் உட்கொடுத்துவரவும் அக்காரிகையானவள் தேஞ்சி மூஞ்சூராயிருந்தபோதிலும் உடனே திரளுவள். எ-று. 88

### பெண் ருதுவாகிடுவதற்கு.

வெட்டிவேர் வில்வயிலை மென்னுகயிலைக்கியாழம்
விட்டுண்ணங் பெண் ருதுவாவள்.

(இ-ள்) பெண் ருதுவாகிடுவதற்கு:—வெட்டிவேர், வில்வயிலை, நாகயிலை இம்மூன்றுஞ் சமனுய்ச்சேர்த்துக் கியாழமிட்டு ஆளாகாப் பெண்கள் குடித்துவரவும் உடனே ருதுவாவர். இதைச் சூதகவாய்வுக்கும் குடித்துவரச் சூதகமுடையும். இப்படி 2-அல்லது 3-நாள் குடிக்

கவும் பத்திபமாயிருக்கவும். இன்னுஞ் சில நோய்களேயுங் கேட்கும். எ-று. 89

பெண்கள் தோயாப்பூவிற்கு.

தூதுளேக்கொட்டைப்பாசி தொட்டரைத்துப் புன்னேக்காய்
விதமே சர்க்கரையிலேற்று.

(இ-ள்.) பெண்கள் தோயாப்பூவுக்கு:—தூதுவேளேயும் கொட்டைப்பாசியும் புன்னேக்காயள வரைத்துச் சர்க்கரையில் மூன்றுநாட் காலேயில் உட்கொண்டு வரவும் அப்பெண்கள் தோயாப்பூவற்று ரஜஸ்வலேயாகுவர் இதன்றி, வேறு- உத்தாமணிச்சாற்றைப் புகட்டிவரவும். இக்குணஞ் செய்விக்கும். இவைகட்குப் பத்தியமாயிருக்கவும். எ-று.

வாழாத பெண்ணுக்கு.

சிறுநீரி லமுக்குருவேர் சேர்த்துப்பிட் டுறவவ்வேர்
அறசோரி லுப்பிட்டளி.

(இ-ள்.) வாழாதபெண் வாழ்வதற்கு:—புருஷனது சிறுநீரில் அமுக்குருவேர்போட்டு அதினேடு சரியான உப்பும்போட்டு அது மூன்று அல்லது ஐந்துநாளூறியபின் அவ்வேரை யகற்றிவிட்டு அவ்வுப்பை அப்பெண்ணுக்கு சோற்றிற்போட் டவளுண்ணவும் அவள் மருபடியும் புருஷனிடம் ஒத்து வாழ்வாள். எ-று. 91

பெண் புத்தியறிய.

கொள்ளவித்துக் காயமுரைத்துட்கொடுக்க மூனுட்பெண்
பிள்ளேபுத்தித் தானறிவள்பின்.

(இ-ள்) பெண்புத்தி யறிவதற்கு:—கொள்ளேவேவித்து அதிற் கொஞ்சம் பெருங்காயத்தை யுரைத்துச்சேர்த்து மூன்றுநாள் காலேயில் இவ்வாறு செய்து கொடுத்துக்கொண்டு வரவும். புத்தியறியாத பெண்ணனவள் உடனே ருதுவாகுவள்-இதற்குப் பத்தியமொன்றுமில்லே. எ-று. 92

சூப்பியமார் சுருங்க.

நத்தைக்கரி நெருப்பில் நன்னெரித்தரைத்தலைதச்சார்
சுத்தித்தடவிற் சுருங்கும்.

(இ-ள்) சூப்பிய மார்சுருங்கலுக்கு:—ஓடகற்றிய நத்தைக்கரியை நெருப்பிற்போட்டு காச்சி வெதுப்பி அதையரைத்து இருமார்பிலும் பூசிவரவும் தொங்கியுள்ளமார்புகள் சுருங்கி பிகிவுபடும். இதையே உள்ளுக்கேற்றி வருவதில், வெகு நன்மையைத்தரும் எ-று. 93

மார் யெழும்பிடற்கு.

ஆனைதிப்லிகோட்டம் முசுருலாவசங்கிசிநீர்
தானிறசிலுயா வெண்ணையிற்று.

(இ-ள்) மார்பெழும்பிடற்கு:—ஆனைதிப்பிலி, கோட்டம், அமுக் குறுங்கிழங்கு, வசம்பு. இந்நான்கும் நீச்சத்தண்ணீரிலரைத்து வெள்ளையிற் சாரித்து காலையில் மாலையில் ஒருமண்டிலம் இருவேளை கொங்கைகளின்மேற் பூசியும், கொஞ்சம் உட்கொண்டும்வர மார்பெழும்பும். எ-று. 94

முலைப்பால் சுரக்க.

வெள்ளரிவிரையாவது வெண்ணிலவாகையரைத்து
உள்ளதுகொங்கையிற் பூசிடு

(இ-ள்) முலைப்பால் சுரக்கலுக்கு:—வெள்ளரிவிரை அல்லது நிலவாகைச்சமூலம் அரைத்து இருகொங்கைகளின்மேற் பூசிவரவும். முலைப்பாலானது உடனேசுரக்கும். இதையே மாறாது ஒருவாரம் தடவிவரவும் அதிகமாய்ப் பால்சுரக்கும். எ-று. 95

கரு தரிப்பதற்கு,

ஆலின்விழுதி ளசையங்காய்பாலினிலரைத்துக்
கோலின்முழுது மூணுட்கொள்.

(இ-ள்) கருதரிப்பதற்கு:—ஆலின்விழுது இளசா யிருப்பதை யறுத்து அதைத்தண்ணீரில் அலம்பி பசுப்பாலிலரைத்து தலைமுழுக்குவந்த மூன்றுநாளுந் தவிராதுட்கொண்டு வரவும், அப்பொழுது கருதரித்துச் சந்தானமுதிக்கும் இல்லாவிடின் மறுமுழுக்கிற்கும் இவ்வாறேவுண்டுவரவும் அவசியம் கருதரிக்கும். எ-று. 96

கர்ப்பந் தரிப்பதற்கு.

துத்தியிலைவாய்பேசா துண்ணெல்லி விடித்தெண்ணே
மத்தித்துண்ணு னெய்யிற் பெண்.

(இ-ள்) கர்ப்பந் தரிப்பதற்கு:—துத்தியிலையை வாய்பேசாமற் கொய்துவந்து அதை நெல்லிற்போட்டிடித்து நல்லெண்ணெயிற்பிசறி மத்தித்து உண்ணவும் ஆண்குழந்தையானது ஜனிக்கும். நெய்யில் மத்தித்து வுண்ணவும் பெண்குழந்தையைப் பிரசவிப்பள். எ-று. ()

கர்ப்ப முண்டாவதற்கு.

கோமயத்திற் கழல்வேரைக் கொண்டரைத்துண் பிரசவிப்போ
ராமுகத்திற் படுங்குறிதான்.

(இ-ள்) கர்ப்ப முண்டாவதற்கு;—கெச்சைக்காய் வேரை ஜலத்திலரைத்து ஒருகொட்டைப்பாக்களவு விழுதை கோமயத்திற் கலக்கி முழுகியநாள்முதல் மூன்றுநாளும் அண்ணடங் குடித்துவரவும். கர்ப்பந்தரிக்கும். அப்பொழுது அவள் முகக்குறியானது பிள்ளை பெற்றவள்முகம்போலிருக்கும் அதுதான் திருஷ்டாந்தம். எ-று. 98

பிள்ளை யுண்டாவதற்கு.

பாலினுணப் பூவரைத்துப் பட்டினிநாலுளரிசி
மேலினுணப்போ துதிக்கவுண்.

(இ-ள்) பிள்ளை யுண்டாவதற்கு:—நுணப்பூவைப் பசும்பாலிலரைத்து தீட்டமாகிய நாலாம்நாள் இரவில் சோறுண்ணாதிருந்து ஐந்தாம்நாள் வெடிகாலையில் சூரிய னெதிர்முகமாய் நின்று நமஸ்கரித்து இதைப்பாலிற் கலக்கிக்குடித்துவரவும் பிள்ளையைப் பெற்றிடுவள். எ-று. 99

முலைப்பால் சுரப்பதற்கு.

தலையிற் பிடித்தபேனிற் றசந்தான்மூணுள்வெற்
றிலையுள் மடித்து மேற்று.

(இ-ள்) முலைப்பால் சுரப்பதற்கு:—தலையில்மேயும் பேன்களில் 10-பிடித்து அவைகளைப் பந்தோபஸ்தாய் வெற்றிலையுள் வைத்து மடித்து அம்மாதர்கையிற் கொடுக்காமல் நாமே அவள்வாயிற்போட்டு மூன்றுநாள் தின்னச்சொல்லவும். அவர்கட்கு கெங்கையாய் சோனையருவிபோல் முலைப்பால்சுரந்து தேனைப்போல் மதுரமா யிருக்கும். எ-று. 100

## பாலில்லார்க்குச் சூரணம்.

ஏலந்திப்பிலி மதுரமிஞ்சி சர்க்கரைச்சூர்ண
மூலந்தின் பசும்பாலி னுள்.

(இ-ள்) பாலில்லார்க்குச் சூரணமாவது:—ஏலமானது மூன்றிடை, திப்பிலியானது நான்கிடை, அதிமதுரமானது ஆறிடை, இம்மூன்றையும் இடித்துச் சூரணஞ்செய்து சர்க்கரையானது பனிரெண்டிடை கலந்து இஞ்சி மேற்பரணிசீவி யுலர்த்தியதூள் ஒருபிடை சேர்த்துக் கலந்து பசும்பாலிற்கரைத்து உட்கொண்டுவரவும் அம் மாதர்க்குப் பாலானததிகஞ் சுரக்கும். எ-று. 101

## மார்புச்சளி கோழை கட்டுக்கு.

பிரண்டைரசமைந்துநாட் பிளேந்திருவேளேப் புகட்ட
திரண்டுவருஞ் சளி கோழைத்தான்.

(இ-ள்) மார்புச்சளி கோழைக்கட்டுக்கு:—பிரண்டையை நறுக்கிச் சார்பிழிந்து அதை ஐந்துநாள் அந்திசந்தி இருவேளேயும் ஒவ்வொரு சங்களவாய் குழந்தைகட்கும் பெரியவர்க்கும் புகட்டி வரவும் மார்புச்சளி கோழைக்கட்டியாவும் வெளிப்பட்டு வந்து விழுந்துவிடும். அவர்களும் சுதாரித்துக் குணப்படுவர். எ-று. 102

## வாந்தியாகச் சூரணம்.

சுட்டகலங் கொம்புடன்றிப் பிலிடையம்பொடிதேன்
விட்டுமிழைத் துட்புகட்டுமேல்.

(இ-ள்) வாந்தியாகச் சூரணமாவது:—கலைமான் கொம்பைச் சுட்டச்சுன்னமும், திப்பிலி, அதிவிடையம் இம்மூன்றும் இடித்துப் பொடித்துச் சூரணஞ்செய்து அதில் வெறுகடித்தூள் கொஞ்சந் தேனில் இழைத்துப் புகட்டிவாவும். வாந்தியானது உடனே நின்றுவிடும். வெள்ளோக்காளமுந் தீரும். எ-று. 103

வாந்திதாக மடங்கலுக்கு.

விடையங் திப்பிலிக் கிராம்பு மென்மயிற் பீலிகைச்சாம்பற்
கடையும்புத்துத் தேனிழைத்துண்.

(இ-ள்) வாந்திதாக மடங்கலுக்கு:—அதிவிடையம், திப்பிலி, லவங்கப்பூ, மயிலிறகு சுட்டசாம்பல் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து புதியதேனில் வெறுகடித்தூளைப் பிசறி உட்கொடுத்துவரவும் வாந்தியாகுதலடங்கி தாகமானது நின்றுவிடும். எ-று. 104

மாதர் வினைப் படலம் 34

முற்றிற்று.

## 6 பாலர்வினைப்படலம் 16.

வயருப்பசந் தீருவதற்கு.

உப்பை விளக்கெண்ணெயினுள்ளிட்டுத் தான்வார்க்க
வட்டபொழுதிற் பேதியாகும்.

(இ-ள்) வயிருப்பசந் தீருவதற்கு—விளக்கெண்ணெயில் கொஞ்சம் உப்பைப்போட்டுக்குலுக்கி அதை உள்ளுக்கு வார்க்கவும் பேதியாகும் பாஷாணவீறுந் தணியும். வயருப்பசமுந்தீரும். பல நோய்களுமகலும். இராத்திரிக்கு சுக்குமிளகு கியாழமிட்டுக்கொடுக்கவும். எ-று

கக்குவான் றீருதலுக்கு.

எள்ளெண்ணெயிற் றிரிஞ்சலின் மலங்காச்சிச்சேய்க
ளுள்ளுண்ணக் கக்குவான்போம்.

(இ-ள்) கக்குவான் றீருதலுக்கு:—கூரைவீட்டில் அல்லது பாழடைந்தவீட்டில் பின்னுங்கோயில்களில் உலாவும் திரிஞ்சல்களின் மலத்திற் கொஞ்சமெடுத்து அதை நல்லெண்ணெயிற் போட்டுக் காச்சி சிறுகுழந்தைகளுக்கு மூன்றுவேளைப் புகட்டிவரவும் கக்குவானாகிய இருமலகலும். எ-று. 106

குழந்தைகள் கிசுருக்கு.

பூண்டிரசம் புகையூறற்புத் தெண்ணெத்தலைதேய்த்து
மீண்டிடச்சேய்க்கு ஸ்நானஞ்செய்வி.

(இ-ள்) கக்குவான்றீருதலுக்கு :—வெள்ளைப் பூண்டினிரசமும், ஓட்டரையும் நல்லெண்ணெயிற்கலந்து குழந்தைகளின் தலைகால் கைக ளிற் றேய்த்து அதற்கு ஸ்நானஞ் செய்து வைக்கவும். அக்கிசுரு சாவு புருண்டு முதலாகிய கசருள்ள நோய்களை நீக்குவிக்கும் எ-று. 107

பாலுண்ணப் பிள்ளைக்கு.

அதிமதுரமல்லது செப்பன்னெருஞ்சிவேர் முலைப்பா
லதிலுரைத்து மார்தடவிடு.

(இ-ள்) பாலுண்ணப்பிள்ளைக்கு:—அதிமதுரத்தையாவது அல் லது செப்புநெருஞ்சி வேரையாவது முலைப்பாலிலுரைத்து தன்மார் பிற் றளறத் தடவிடின், பிறகு அக்குழந்தையை அணைத்துப் பால் கொடுக்கவும். அம்மதுரத்தினால் நன்றாய்ப் பாலுண்ணும். குழந்தை யுந் தேறிவிடும். எ-று. 108

பிள்ளைகட்குப் பிணிவருதிருக்க.

நாய்த்தலையண்டோடுரைத்து நன்றாய்மார்பிற்றடவிச்
சேய்த்தழுவிப்பால் குடிக்கச்செய்.

(இ-ள்.) பிள்ளைகட்குப் பிணிவாராதிருக்க :—நாய்த்தலையின் மண்டையோட்டை தண்ணீரில் அலம்பி முலைப்பாலிலுரைத்து தாயா னவள் இரண்டுமார்பிலும் நன்றாய்த்தடவிப் பிள்ளையைப் பெற்ற வுடனே முதற்பால் அதைக் குடிக்கச்செய்ய அச்சிசுவுக்கு எக்காலத் திலும் நோய்யணுகாது. அணுகிடினும் அது பீடிக்காது. எ-று. 109

பிள்ளை மலசலக்கட்டுக்கு.

நெய்மதுரம் வேப்பங்கொழுந்தில் வெல்லஞ்சேர்த்தரைத்
துய்திடவுஞ் சேய்க்குட் கொடும்.

(இ-ள்.) பிள்ளைமலசலக்கட்டுக்கு:—வேப்பங்கொழுந்து, அதி மதுரம், நல்லவெல்லம் இம்மூன்றையுஞ் சேர்த்தரைத்து நெய்யிற் கலக்கிக் குழந்தைகட்கு உள்ளுக்குக் கொடுக்கவும். அக்குழந்தைக்கு மலசலங்கட்டியது உடனே இளகிப் பேதியாகும். எ-று. 110

குழந்தை பேதியைக்கட்ட.

உப்புமிளகு பலமொன்றாய் வறுத்தரைத்து முன்
செப்புருண்டையது மூன்றிடு.

(இ-ள்) குழந்தைப் பேதியைக் கட்ட:—உப்பும், மிளகும் வகைக்கு 1-பலமாகச் சேர்த்து வறுத்து அரைத்து அதை மூன்று உருண்டைகளாய்ச் செய்து காலை, மத்தி மாலைவேளைகளில் ஒவ்வொருருண்டைகளைத் தின்னக் கொடுத்துவரவும். அப்பேதியை உடனே கட்டிவிடும். எ-று. 111

வாந்தியானது நிற்க.

மயிலிறகு சாம்பல் மஞ்சளின்றாள் தேனிலிழைத்தேற்
றெயிலறவும் வாந்திநிற்கும்.

(இ-ள்) வாந்தியானது நிற்க—மயிலிறகு பொரிந்த சாம்பலும், மஞ்சள் கொம்பின்றாளும் இவ்விரண்டுந் தேனிலிழைத்துண்பிக்கவும் அவ்வாந்தியானது நின்றுவிடும். அது நிற்காது மீறிடின், திப்பிலி தாளும் மயிலிறகுச் சாம்பலும் தேனிற் குழைத்தேற்றவும் நிற்கும். அதிலும் நிற்காவிடின் வெற்றிலையும் மிளகுங் கியாழமிட்டுப் புகட்டிடவும் வாந்தி நிற்கும். எ-று. 112

வாந்திபேதியா யிருப்பதற்கு.

பூரஞ்சாதிக்காய் கற்பூரம் பின்சேர்த்தரைத்தன்
னேரம்வாந்திபேதிக் கேறது.

(இ-ள்) வாந்திபேதியா யிருப்பதற்கு:—இரசகற்பூரம், சாதிக்காய் வகைக்கு கால் இடை, ஆலாத்திக்கற்பூரம் ஒண்ணேகா லிடை அபினி ஒன்னறை இடை யாவும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து குன்றி விதங் குளிகைசெய்து அந்திசந்தி உட்கொடுத்துவரவும் வாந்திபேதி நின்றுவிடும். பத்தியம் நெய்கஞ்சி துவரம்பருப்பு சேர்த்துக் கொள்ளவும். எ-று. 113

வாந்தி தாகம் நிற்பதற்கு.

ஒழுகரைவெண்காரம் வேர்க்கொம் பெரித்தல் காசிடையே
வழுவற வெந்நீரில் மாட்டு.

(இ-ள்) வாந்தி தாகம் நிற்பதற்கு:—பலகரையைக் கொளுத்தியதும், வெண்காரம் பொரித்ததுவும் வசம்பு சுட்டுக்கருக்கியதும் இம்மூன்றும் வகைக்கு காசிடைசேர்த்து வெந்நீரிற் கலக்கிப் புகட்டவும். பத்தியம், உப்பு, புளி, மாமிசம்நீக்கிடவும் வாந்தியுந்தாகமும் உடனே நின்றுவிடும். எ-று. 114

### விக்க லடங்குவதற்கு.

பாலிற்றாமரைப் பருப்புபத்து நஞ்சறவரைத்து
கோவிந்தா வகலும் விக்கல்.

(இ-ள்) விக்கலடங்குவதற்கு:—பத்து தாமரைக் கொட்டைகளி லிருக்கும் பருப்புகளை நஞ்சனைத்தும்நீக்கி ஆழாக்குப் பசும்பாலி லரைத்து ஒருவிசை யுட்கொள்ளுகையில் அவ்விக்கலானது உடனே நின்றுவிடும். அப்படி நிற்காவிடின் இதினோடு மயிலிறகு சுட்டசாம்ப லும், திப்பிலி, சீரகம் கொஞ்சஞ் சேர்த்துக் கொடுக்கவும் மாறிவிடும். எ-று. 115

### பிள்ளை மலசலக் கட்டகல

வெள்ளரிவித் தெலிப்புழுக்கை விட்டரைத்துக் கீழ்வயிற்றில்
மெள்ளவும் பூசமலம் விடும்.

(இ-ள்) பிள்ளை மலசலக்கட்டகல:—வெள்ளரி விரைகளை ஒடு நீக்கியதும், எலிப்புழுக்கைகளையுஞ் சேர்த்து முலைப்பால் அல்வது தண்ணீரிலரைத்து குழந்தையின் கீழ்வயிற்றிற்றடவிடவும் வயர் சன்னி மலசலக்கட்டறும். நோய்களுந்தீரும். பத்தியமொன்றுமில்லை. எ-று. 116

### நாய் முள்ளானதகல.

கடுக்காய்சீரகங் குமரிகலந்து சங்களவார்க்க
முடுக்காய் நாய்முள்ளு முறியும்.

(இ-ள்) நாய்முள்ளான தகல:—கடுக்காய், சீரகம், கற்றாழஞ் சோறும் சமனுய்க்கலந்து ஒருசங்களவு வார்க்கவும் இப்படி மூன்று நாள் புகட்டிவருவதில் இந்தநாய்முள் தோஷமானது நிவர்த்தியாய் விடும். குழந்தைகட்குள்ள வாதைகளும் அகன்றுவிடும். எ-று. 117

### குழந்தை சிருவாய் கட்டுக்கு.

நேரத்திப்பிலி கடுக்காய் நெய்யிலிழைத் திருமார்பி
லேரத் தடவிப்பா லளி.

(இ-ள்.) குழந்தை சிருவாய்கட்டுக்கு:—திப்பிலியும், கடுக்காயும், நெய்யிலிழைத்துஇருமார்பிலுந்தடவிக் குழந்தைகளுக்குப்பால்கொடுக் கவும். அதில் மலசலம் பிரவர்த்தியாகும். நீரடைக்கின், குன்றிமணி யைநெகிழவரைத்து உள்ளங்கையிற் றடவிடவும், நீரிறங்கும். எ-று.

சேவ்வாப்பு மாற.

தவசுமுருங்கிலேயிற் றன்வசம்பு சேர்த்தரைத்து
அவயமிடப்பது சுழுணுள்.

(இ-ள்) செவ்வாப்பு மாற:—தவசு முருங்கையிலேயும், வசம்புஞ் சமனுய்ச் சேர்த்தரைத்து மூன்றுநாள் பூசிவரவும் செவ்வாப்பானது மாறும். அது அப்படிமாருவிடின், சிறுவர்களில் ஆணுக்குப்பெண், பெண்ணுக்கு வாண் பிள்ளேகளின் சிறுநீரைக்கொஞ்சம் அதில்விட்டுக் கலக்கிப்பூசவுமாறும். எ-று. 119

பிள்ளேகட் குருண்டை.

முழுமஞ்சட் கோமயத்தில் முன்னேழ்நா ளூறவைத்தப்
பொழுதுங் கண்டரைத் துருண்டை வூட்டு

(இ-ள்) பிள்ளேகட் குருண்டையாவது:—முழுமஞ்சளேக் கோமயத்துட்போட்டு ஏழுநாளூறவைத்து அரைத்து உருண்டைகள்செய்து உலர்த்தி அதைதேனிலுரைத்துப் புகட்டவும். மாந்தமகலும் புளித்தக்கண்ணுக்கு வெந்நீரிலுரைத்துப் புகட்டவும் நீங்கும. எ-று. 120

6-பாலர் விணப் படலம் 16

முற்றிற்று.

## 7. பாலதோஷப் படலம் 31.

பாலதோஷக் குளிசம்.

துத்திவேர் தூபமிட்டுத் துய்யகுளிசங்கட்டி
வொந்திப்போந் தோஷமோடி.

(இ-ள்) பாலதோஷக் குளிசமாவது:—மஞ்சள் துத்திவேரை தூபதீப நைவேத்தியம் வைத்து அதை மஞ்சள் நூலிற் குளிசமாடி குழந்தைகள் கழுத்திற்கட்டவும். சகலமான பாலதோஷங்களும் அகன்றுவிடும். வேப்பிலேத்தண்ணீர் மூன்றுவேளே ஓதியிரைக்கவும். எ-று. 121

### பட்சிதோஷக் குளிசங் கியாழம்.

ஆலின் றுளிர்குளிச மங்குகட்டீருளிச்சீர
மூலிவரப்பூலா கியாழமூட்டு.

(இ-ள்) பட்சிதோஷக் குளிசங்கியாழமாவது:—ஆலின் றுளிரை ஆதிவார நாள் குளிசமாடி குழந்தையின் கழுத்திற்கட்டி சீரகம், ஈருள்ளி, வாய்ப்பூலா இவைகளைக் கியாழங் காச்சி அக்குழந்தைக்குப் புகட்டவும். பட்சிதோஷம் விட்டு நிவர்த்தியாய்விடும். அதினோடு மற்றநோய்களும் அகன்றுவிடும். எ-று. 122

### எட்சிதோஷக் குளிசம்.

அமுக்குரா காப்பு வெள்ளியத்தினஞ்செய (மநசிவய)
நமக்கு வடவேர் குளிசம் நாட்டு.

(இ-ள்) எட்சிதோஷக் குளிசமாவது;—அமுக்குராவை வெள்ளிக்கிழமைதினம் காப்புகட்டி தேவியைநிறுத்தி வடை, வாழைக்கனி, பூசைவைத்து (மநசிவய) என்று 108-உருசெபித்து அதின் வாடவேரைக் குளிசமாடிக் கட்டவும். பின்பு தண்ணீரோதியும் இரைக்கவும். எ-று. 123

### வீங்குப்புள் தோஷக்குளிகை.

மதுரந்துத்தந் தேவதார மஞ்சள் கடுவசபொடுதல்
பொதுகுறிஞ்சி குளிகைசெய்து புகட்டு.

(இ-ள்) வீங்குப்புள் தோஷக்குளிகையாவது :—அதிமதுரம், மயில்துத்தம், தேவதாரம், மஞ்சள், கடுக்காய், வசம்பு, பொடுதலை, இவைகளைக் குறிஞ்சிச்சாற்று லாட்டியரைத்துக் குளிகைசெய்து முலைப்பாலில் ஒருகுளிகை வேளைக்குப் புகட்டவும். வீங்குப்புள் தோஷம் நிவர்த்தியாம். எ-று. 124

### தூங்குப்புள் தோஷநிவர்த்தி.

வசம்பேலமோமம் விளாமஞ்சள் கோரோசினை வேப்பீர்க்
கிசுர்போகவே முழுக்காட்டிடு.

(இ-ள்) தூங்குப்புள் தோஷநிவர்த்தியாவது:—வசம்பு, ஏலம், ஓமம், விளா, மஞ்சள், கோரோசினை, வேப்பீர்க்கு, யாவுமரைத்து தலையிற்றேய்த்து முழுக்காட்டவும். அக்கிசுரானது நீங்கி வீங்குப்புள்

தோஷமென்பது அகன்றுவிடும். இப்படிக்கு இரண்டொரு முழுக் காட்டவும். எ-று. 125

வெண்கண்புள் தோஷநிவர்த்தி.

குமரிச்சோர் கடுக்காய்த்தூள் கொண்டு திப்பிலித்தூளை
அமரநீரதில் விடுக்காய.

(இ-ள்) வெங்கண்புள்தோஷ நிவர்த்தியாவது:--கற்றுழஞ்சோறு, கடுக்காய்த்தூள், திப்பிலித்தூள்கலந்து தண்ணீரிற்கரைத்து குழந்தை கட்குப் புகட்டிவரவும் வெங்கண்புள்தோஷ நிவர்த்தியாய் நீங்கிவிடும். இதை இரண்டொருவேளை மாறுமற் புகட்டிவரவும். நன்மையைத் தரும். எ-று. 126

கருடக்கண்புள் தோஷநிவர்த்தி.

திப்பிலி கோரோசினைபிற் செம்மதுரதூள் முலைப்பா
லொப்பிலியோர் சங்களவாயூட்டு.

(இ-ள்) கருடக்கண்புள் தோஷ நிவர்த்தியாவது:—கோரோசினை திப்பிலி, அதிமதுரம், இம்மூன்றையும் பொடிசெய்து முலைப்பாலிற் கலந்து குழந்தைகட்குப் புகட்டிடவும் கருடக்கண்புள் தோஷநிவர்த் தியாம். இதில் எவ்வினைகளு மகன்றுவிடும். எ-று. 127

வரட்புள் தோஷக்குளிசம்.

நரிவிரட்டிக் குருநாளில் நற்காப்பிட்டவ்வேரைப்
பரிவுடன் கட்டிடக் குளிசம்பார்.

(இ-ள்.) வரட்புள் தோஷக் குளிசமாவது:—நரிவிரட்டி அதாவது வட்டக்கிலுகிலுப்பை வேரை குருவாரநாள் காப்புக்கட்டிச் சாவல் பலி கொடுத்து அதைப்பிடுங்கிக் குளிசமாடி குழந்தைகட்குக் கட்டிடவும். பிறகு மஞ்சள் நீர் ஒதியிரைத்து வரவும். வரட்புள் தோஷ நிவர்த்தியாய். எ-று. 128

அந்திப்புள் தோஷத்துக்குத் துவாலை.

சீந்தில் விளாவுள்ளி நொச்சில் சின்னி வேம்பு வசம்பிடித்து
போந்துவாலையிட்டு கழல்கட்டு.

(இ-ள்) அந்திப்புள் தோஷத்துக்குத் துவாலையாவது:—சீந்தில், விளா, உள்ளி, நொச்சில், சின்னி, வேம்பு, வசம்பு, இவைகளை இடித்

துச் சார்பிழிந்து குழந்தைக்கு உடம்பெங்குந் தவாலையிட்டு, கொஞ் சந்துணியில் முடிந்து காலில் கட்டவும். அந்திப்புள் தோஷமான தகன்றுவிடும். எ-று. 129

விளக்கொளிக்கண்புள்தோஷ நிவர்த்தி.

சிறுவிளா வசம்புள்ளி சின்னிதுணியில் முடிந்து
உறுகமார்பிற் கட்டிடும்.

(இ-ள்) விளக்கொளிக்கண்புள் தோஷநிவர்த்தியாவது;—சிறு விளா, உள்ளி, வசம்பு, சின்னி, இந்நான்கையும் கருக்கித் துணியில் முடிந்து குழந்தையின் மார்பிற் கட்டிவிடவும். விளக்கொளிக்கண்புள் தோஷ நிவர்த்தியாம். பின்பு சல்லடையில் சலகமாய்த் தலைக்கு வார்க்கவும். எ-று. 130

நீர்ப்புள் தோஷநிவர்த்தி.

சந்திரகாந்திச் சீரகங்கியாழமிட்டேற்றீ
யெந்திரமான துகட்டவேகும்.

(இ-ள்.) நீர்ப்புள் தோஷ நிவர்த்தியாவது:—சந்திரகாந்தியாகிய விஷ்ணுகாந்தியைச் சீரகங்கியாழமிட்டுக் குழந்தைகட்குப் புகட்டி வரவும். பிறகு பச்சோந்தியை ஸ்ரீங்காரஞ்சொல்லி அதின் வால் முனையை மஞ்சள்நூலிற் சுற்றிக் குளிசமாடிக்கட்டி ஏழுநாள் தண் ணீரோதி யிரைக்கவும். நீர்ப்புள் தோஷமானது நிவர்த்தியாய் விடும். எ-று. 131

புள்ளின்தோஷ நிவர்த்தி.

விடத்தேறரவிகாந்தி வெந்தயமூங்குடிநீரிட்
டிடத்தேறுங் குழந்தையெளிதில்.

(இ-ள்) புள்ளின்தோஷ நிவர்த்தியாவது:—விடத்தேறு, ஓரிலைத் தாமரை, வெந்தயம், இது மூன்றுங் குடிநீராய்க்காச்சி குழந்தைகட்கு வார்த்துவரவும் ஈதன்றி சிறுபுள்ளடிவேருக்கு பூசைநைவேத்தியம் வைத்து தூபதீபங்காட்டி வேரறுமற் பிடுங்கிக் குளிசமாடிக் கட்டிட வும் புள்ளின்தோஷந்தீரும். எ-று. 132

### புருஷதோஷ நிவர்த்தி.

ஆணுகும்பிநக்கை யெருக்கன்னாரிற் குளிசஞ்செய்
தே (நயவசிம) வெனச் செபி.

(இ-ள்) புருஷதோஷ நிவர்த்திசெய்யவாவது:—ஆணுகும்பி நாக் கையறுத்து எருக்கன்னார் சுற்றிக்குளிசமாடி [நயவசிம] என்று 108-உருசெபித்து ஒரு ஓணானைப்பலிகொடுத்து அக்குழந்தைக்குக் கட்டட வும். பின்பு வேப்பிலைத்தண்ணீரோதி யிரைக்கவும். புருஷதோஷமா னது நீங்கிவிடும். எ.று. 133

### பெண்தோஷ நிவர்த்தி.

பஞ்சவர்ணச்சோறுடன் பூபற்றவைந்துபணம்வைத்து
மிஞ்சநெய் தீபச்சாந்தி செய்.

(இ-ள்) பெண்தோஷ நிவர்த்தி செய்யவாவது:—பஞ்சவர்ணச் சோறும். பஞ்சவர்ணப் பூவும்வைத்து அதில் வெள்ளிப்பணம் ஐந்து அமைத்து நெய்தீபமேற்றி சாந்திசெய்யவும். பிறகு ஒரு வாழையிலை யில் உருவொன்றெழுதி வரைகள்தோறும் கந்த பரிமளாதிகள் பூசி சாம்பிராணிவத்தி கொளுத்தி கழிப்புசுற்றி முச்சந்தியில் வைக்கவும். பெண்தோஷக் கிரகசேஷ்டைகளகலும். எ-று. 134

### பெண்கண்ட தோஷசாந்தி.

சிறுவிளாவசம்புள்ளிசின்னி முடிந்துக்கைகால்
மருவமார் பதிற்கட்டிவை.

(இ-ள்) பெண்கண்ட தோஷசாந்தியாவது:—சிறுவிளா, சின்னி, வசம்பு, உள்ளி இந்நான்கும் கசக்கித் துணியில்முடிந்து கைகால் மார் பிற்கட்டிவைப்பதன்றி, பருத்திவேர் குளிசமாடிக்கட்டியும் பின்பு கஞ் சாங்கோரையைத் தண்ணீரிற்காச்சிப் புகட்டிவரவும் பெண்கண்ட தோஷம் நிவர்த்தியாம். எ-று. 135

### முட்டுத்தோஷ நிவர்த்தி.

முன்மந்திரத்தால் நீர்முற்றுஞ் சேய்தாய்முகத்திற்
றன்மந்திரத்தாற் றெளி.

(இ-ள்) முட்டுதோஷம் நிவர்த்தியாவது:—முன் மந்திரமாகிய [நயவசிம] என்று 108-உரு செபித்து தண்ணீரோதி மூன்றுநாள்

அந்திசந்தி தாய் குழந்தை இறுவர்முகத்திலும் ஒதித்தெளித்துச் சாந்திசெய்யவும். பலவுபாதிகளகன்று முட்டுதீதோஷக்குணமும் நிவர்த்தியாம். எ-று. 136

குளிதோஷ நிவர்த்தி.

சோம்புதழுதாழை மஞ்சள்சுக்கு விளாவசம்பரைத்து
வேம்புநில்வாகை முழுக்காட்டு.

(இ-ள்) குளிதோஷம்நிவர்த்தியாவது:—சோம்பு, சுக்கு,மஞ்சள், வசம்பு, தழுதாழை, விளா, நிலவாகை, வேம்பு இவை யனைத்து மரைத்து தண்ணீரிற்போட்டுக்காச்சி தாய்க்கும் அக்குழந்தைக்கும் முழுக்காட்டுவதின்றில்,மூன்று கிணற்றுஜலத்தில் மஞ்சளரைத்துக்கரைத்து [மங்-ஸ்ரீயும்-ஐயும்-சவ்வும்] என்று 108-உருசெபித்து வலதுவிலாவின்மேற் றெளிக்கவும். குளிதோஷமானவை நிவர்த்தியாம். எ-று.

குளித்தபெண் கண்டதோஷ மகல.

அந்திசந்தியாறெழுத்தை யங்கோதிசெய்முகநீர்
முந்தியந்தியாய்த் தெளியுமுன்.

(இ-ள்) குளித்தபெண் கண்டதோஷ மகலவாவது:—சடாக்ஷரமாகிய [சரவணபவ] வென்னும் ஆறெழுத்தை 108-உரு செபித்து தண்ணீரோதி முகத்திற்றெளித்து பதினைந்துநாள் விட்டுவரவும். குளித்தபெண் கண்டதோஷமானது விலகிநீங்கிவிடும். இந்த ஆறெழுத்தையே வறைந்து குளிசமாடிக் கட்டிடவும் சகலவினையும் பற்றறும். எ-று. 138

குளித்தவ ளேடுத்த தோஷ நிவர்த்தி.

திருகுகள்ளி வடவேரைச் சென்றுகாப்பிட்டுக் குளிசம்
பெருகமுன் னருக்கனுளிற் பிணே.

(இ-ள்) குளித்தவ ளெடுத்ததோஷம் நிவர்த்தியாவது:—திருகுகள்ளியின் வடவேரை அருக்கனுளில் பூசை நைவேத்தியம் வைத்து தூபதீபங்காட்டி உச்சியின் வேரறுமற் பிடுங்கி அதைக் குளிசமாடி அக்குழந்தைக்குக்கட்டி மூன்றுநாள் தண்ணீரோதி முகத்திலிரைத்து வரவும் குளித்தவளெடுத்த தோஷமானவை நீங்கிவிடும். எ-று. 139

### கர்ப்பமழிந்த தோஷ நிவர்த்தி.

பருத்தியின்வேரரைத்துப் பனைவெல்லந் தண்ணீரில்
உருத்தவுண் ணோயற்றிடும்.

(இ-ள்) கர்ப்பமழிந்ததோஷம் நிவர்த்தியாவது:—பருத்தியின் வேரையரைத்து தண்ணீரிற்கரைத்து அதிற்றெளிவு தண்ணீரிறுத்துப் பனைவெல்லஞ்சேர்த்து கொடுத்திடவும். ஈதன்றி காட்டாத்தியின்வேரைக் குளிசமாடிக்கட்டிடவும் கர்ப்பமழிந்ததோஷம் நிவர்த்தியாம். எ-று. 140

### சகல தோஷ நிவர்த்தி.

மந்திரமும் [வநசிமய] வங்சிங் சிவயநம
வெந்திரமுங் கட்டவேகும்.

(இ-ள்.) சகலதோஷங்களும் நிவர்த்தியாவது :—6-வறைகள் நெடுக்கிலும், 6-வறைகள் குறுக்கிலும் கீறிட 25-அறைகளாகின்றது. அதில் வநசிமய-நசிமயவ-சிமயவந-மயவநசி-யவநசிம-வென்றெழுதி புகைநைவேத்தியம் வைத்து, தூபதீபங்காட்டி மூலமந்திரம்-வங்-சிங் சிவயநமவென்று 1008-உருசெபித்துக் குளிசமாடிக் கட்டவும். சகல தோஷங்களும் நிவர்த்தியாம். எ-று. 141

### முடிசாய்ந்து போனதற்கு.

செவ்வலரிவடவேரைச் செய்குளிசம் பெண்ணிடக்கை
யில் வலக்கையா ணுக்கமை.

(இ-ள்) முடிசாய்ந்து போனதற்காவது:—செவ்வலரிவடவேரை குருவாரத்தில் பூசை நைவேத்தியம் வைத்து தூபதீபங்காட்டிக் குளிசமாடி ஆணுக்கு வலதுகையிலும், பெண்ணுக்கு இடதுகையிலும் கட்டிவைக்கவும். இதன்றி. கரிசலாங்கண்ணிச்சாறும், நல்லெண்ணேயுஞ் சாரித்து ஒருசங்கு வார்க்கவும். முடிசாய்ந்துபோன தோஷமானவை அகன்றுவிடும். எ-று. 142

### குழிதோஷ சாந்தி..

சேய்புதைத்த சிரம்பக்கத்திற் குடுவையிற் சலம்வைத்
தேயதிகாலை முகத்திற்றெளி.

(இ-ள்) குழிதோஷந்தீர சாந்தியாவது:—சுடலையிற் புதைத்திருக்கும் சிறுகுழந்தையின் தலைமாட்டில் அந்திநேரத்தில் ஒருசிறு குடுவையில் நிறையத் தண்ணீரூற்றிக் கொண்டுபோய் அங்குவைத்து அதை வெடிகாலையில் எடுத்துவந்து ஒருவர்முகத்தில் விழிக்காமல் தெருவாசற்படியிற் குழந்தைமுகத்தில் 3-தினந்தெளித்து அக்குடுவையை நடுத்தெருவிலுடைத்திடவும். இவ்வாறு 3-நாள் செய்யவும் குழிதோஷமானவை யகன்றுவிடும். எ-று. 143

## தேரைத்தோஷந்தீரச் சாந்தி.

சேய்தலைமாட்டிற் றேங்காய் சென்றிரவைத்தெடுவெடிய
வாய்துளைசெய்து வைகுளத்தில்.

(இ-ள்.) தேரைதோஷந்தீர சாந்தியாவது:—ஒருதேங்காயை இரவிற் குழந்தையின் தலைமாட்டில்வைத்து அதை வெடிகாலையிலெடுத்து அதின்றலையை முங்காலுஞ்சுற்றி அதிற் கண்ணொன்றைக் குத்தி கொஞ்சம் அரிசியைப்போட்டு அவ்வாயையடைத்து குளத்திற் சேற்றிலமுத்திப் புதைத்துவிடவும். இப்படி 3-நாட்செய்ய தேரைதோஷமானவை நீங்கிவிடும். எ-று. 144

## நாய்முள்ளு மாற.

குமரிச்சோர் சீரகங் கடுக்காய்த்தூளிற் கலந்து
அமரச்சேயோர் சங்களவார்.

(இ-ள்.) நாய்முள்ளுமாறுவதற்காவது:—கற்றாழஞ் சோற்றில் கடுக்காய் சீரகமிரண்டும் பொடிசெய்து சேர்த்து 3-நாள் வேளைக்கு ஒருசங்களவாய்ப் புகட்டிவரவும் நாய்முள்ளு தோஷமானது அகன்றுவிடும். பெரியவர்க்கு சிறுநீர் அல்லது உமிழ்நீரில் குழைத்துத்தடவிவரவும் மாறும். எ-று. 145

## உண்ணாக்கு வளர்தல்தீர.

எவாச்சாரஞ்சுன்னமெனு மிச்சன்பழச் சாற்றினிலே
அவாச்சாரத் துண்ணாக்குவை.

(இ-ள்) உண்ணாக்கு வளர்தல்தீர:—எவாச்சாரமாகிய சுண்ணம் புச்சோப்பையும், கற்சுண்ணமுஞ்சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து உண்ணாக்கிற் றடவிவைக்கவும் அவ்வுண்ணாக்கானதுவளர்ந்

திருப்பது உடனேகரைந்துவிடும், அவவிரணமும் அப்போதே யாறி விடும். அதை அண்ணுக்கிற்றட்டாது தடவிடவும் வேண்டும். எ-று.

கக்குவானுக்குக் குடிநீர்.

தூதுவேளைப் படிச்சாற்றுட்கோட்டம் நெய்கூட்டிப்
போது மூணுட் கொடுக்கப்போம்.

(இ-ள்) கக்குவானுக்குக் குடிநீரானது:—தூதுவேளை வரைத்து வைத்துச் சார்பிழிந்து ஒருபடிச்சாற்றில் கோட்டம் பொடித்துப் போட்டு நெய்யுஞ்சேர்த்துச் சாரித்து மூன்றுநாள் புகட்டிவரவும். கக்குவானுகிய மாந்த விருமல் உடனே நின்றுவிடும். எ-று. 147

மாந்துவானுக்குக் குடிநீர்.

எருக்கன்பூவை யரைத்ததிற் காடியிற் குழப்பிக்
கருக்கின்வா ருள்ளுக்கதை.

(இ-ள்) மாந்துவானுக்குக் குடிநீரானது:—எருக்கின் பூவை யரைத்து காடிநீரிற் குழப்பிக் கொதிக்கவைத்துக் குழந்தைகட்கு உட்புகட்டிவரவும். மாந்துவானனது நின்றுவிடும். அப்படி நிற்கா விடின், அந்நோயானது நீங்கும்வரையில் வார்த்துக்கொண்டே வரவும் நீங்கும். எ-று. 148

அமரத்திற்கு.

ஆமணக்கெண்ணைத் தூதுளைக் கடுக்காய்குழப்பி சிலை
பூமணக்கண்ணிற் பிழியப்போம்.

(இ-ள்) அமரத்திற்குச் சிகிற்சையாவது:—ஆமணக்கெண்ணெயில் தூதுவேளையரைத்த விழுதும், கடுக்காய்த்தூளும் மத்தித்துக் குழப்பி சீலையிலிட்டு கண்களிற் பிழியவும் அமரமாகிய கண்ணோயானதகன்றுவிடும். இவ்வாறு மூன்றுவேளை மாருமற் பிழியவும் கண் சிவப்புமுதல் யாவுமே உடனே தீர்ந்துவிடும் எ-று. 149

கண்ணோயானது தீர.

புளிமாதளை ரசத்திற் பொடிகற்கண்டிட்டுவிழி
நெளியாத்திற்பிழியும் நேர்.

(இ-ள்) கண்ணோய் தீரவாவது:—புளிமாதளைப்பழச் சாற்றில் சீனுகற்கண்டு தூளைப்போட்டு மத்தித்துக் குழப்பி கண்விழிகளிற்

பிழிந்துவரவும் கண்ணோயானது நீங்கிவிடும். அப்போது அக்கண்க ளிலுள்ள கசடனைத்துமகன்று நற்பிரகாசத்தை தரும். எ-று. 150

விக்கலிற்குக் குடிநீர்.

தேற்றான்சந்தனமிளகு சிங்கிவெல்லங் காரமுலைப்
பாற்றான் றண்ணியிலேற்றிடு.

(இ-ள்) விக்கலிற்குக் குடிநீரானது:—தேற்றான் கொட்டை, சந்தனக்கட்டை, கலைமான் கொம்பு, இம்மூன்றையும் பொடிசெய்து வஸ்திரகாயம்பண்ணி அதில் பொரித்த வெண்காரம், மிளகுதூள்சேர்த்து முலைப்பாலிற் ஊரவைத்து அரைத்துக் கொட்டைப்பாக்களவு நல்ல வெல்லஞ்சேர்த்து தண்ணீரிற்கரைத்துக் குடிப்பிக்கவும் விக்கலானது விட்டுநீங்கிவிடும். எ-று. 151

7-பாலதோஷப் படலம் 31

முற்றிற்று.

## 8 சூரணப்படலம் 44.

அஜீரணத்திற்குச் சூரணம்.

இந்துப்பரித்தி திப்பிலிக்கொடிவேலிச் சமன்சூர்
ணந்துட்டிடை தேனிலுண்.

(இ-ள்) அஜீர்ணத்திற்குச் சூரணமாவது:—இந்துப்பு, திப்பிலி, கடுக்காய், சித்திரமூலவேர், இந்நான்குஞ் சமனுய்ச்சேர்த்துச் சூரணஞ்செய்து தேனிலிழைத் துட்கொள்ளவும் வாய்வும், வெள்ளையுந் தீரும். சர்க்கரையிலும் கொள்ளவும். பித்தமகலும், குளிர்ந்த ஜலத்திலுட்கொள்ளவும் சூடறும். வெந்நீரிலுட்கொள்ளவும் பசிதீபனமுண்டாகும். முக்கியம் பித்தமயக்கம், சோர்வுமுழுது மொழியும். எ-று.

அஜீரணபேதிக்குச் சூரணம்.

ஓமத்தூள்தேனி லுள்ளிழைத்துப் புன்னைக்காய்
நேமமூ வேளையதையுண்.

(இ-ள்) அஜீரணபேதிக்குச் சூரணமாவது:—ஓமத்தைப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து தேன்விட்டு மத்தித்து புன்னைக்காயளவு

மூன்றுவேளையுண்டுவரவும் வயர் கடுப்பானது நிற்கும். அஜீரணபேதி யுந்தீரும். இதிற் சர்க்கரைசேர்த்தாலுஞ் சேர்க்கலாம். எ-று. 153

மந்தபேதிக்குச் சூரணம்.

பொடிமிளகாய்வெல்லஞ் சமன்கலந்து சுண்டையளவ
வடிவுளதா யிருபோதுமுண்.

(இ-ள்) மந்தபேதிக்குச் சூரணமாவது:—மிளகாயைப்பொடித்துச் சூரணஞ்செய்து அதில் நல்லவெல்லம் சமனைச்சேர்த்து ரேகித்து சுண்டைக்காயளவுள்ளதாய் இரண்டுநாள் இருவேளையு முண்டுவரவும் மந்தபேதி, அசீரணபேதி, உஷ்ணபேதிமுதலிய தியாவுந்தீரும் எ-று.

க்ஷயத்துக்குச் சூரணம்.

அரிசிதிப்பிலித்தூளதிற் பஞ்சதாரையுஞ்சேர்த்
துருசித்தேனதி லுண்டிடு.

(இ-ள்) க்ஷயத்துக்குச் சூரணமானது:—அரிசிதிப்பிலியை இளவறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணஞ்செய்து சரிசர்க்கரைசேர்த்து வெறுகடிப்பிரமாணம் தேனிலிழைத்து உட்கொண்டுவரவும் க்ஷயம், குன்மம், சத்திகுன்மம், இருமல், வாந்தி, வயர்வலி, யாவுந்தீரும்எ-று.

சீழ்மூலந்தீரச் சூரணம்.

அரசன்பட்டைச்சூரணம் பனைவெல்லத்திடித்து
தரசுண்டை வீதமதாய்தா.

(இ-ள்) சீழ்மூலந்தீரச் சூரணமானது:—நாட்பட்ட அரசன்மரத்துப்பட்டைகளை மேற்புரணிநீக்கி அதைநன்றாயிடித்துச் சூரணஞ்செய்து அதிற்பனைவெல்லம் சேர்த்து இடித்துப்பிசைந்து சுண்டைக்காய்வீதம் அந்திசந்தி மூன்றல்லது ஐந்துநாள் உண்டுவரவும். சீழ்மூலம், இரத்தமூலம், பவுத்திர முதலியதுந்தீரும். பத்தியம் பால் தயிர்சேர்க்கவும். வாய்வாகும் பதார்த்தங்களை நீக்கியிருக்கவும். எ-று

கபங்காசத்துக்குச் சூரணம்.

செருப்படைச்சூரணத்தைத் தின்னச்சர்க்கரைசேர்த்துப்
பொருப்புடன் காசமும்போம்.

(இ-ள்) கபங்காசத்துக்குச் சூரணமாவது:—செருப்படையை யுலர்த்திப் பொடித்துச் சூரணஞ்செய்து அதிற் சர்க்கரை சேர்த்துக் கலந்து அரை யல்லது ஒருமண்டலம் உண்டுவரவும், கபம், காசம், இருமல், ஈளை, மேகமுதலியதுந்தீரும். தேகபுஷ்டியையுந்தரும். இச் சாபத்தியமாக யிருக்கவும் மெத்தநன்மையைத் தரும். எ-று. 157

சைத்தியத்திற்குச் சூரணம்.

காயமொன்று வசம்புமூன்றப் பொடியிற்றேன்பத்து
தோயவிட்டுக் குழைத்து மேற்று.

(இ-ள்) சைத்தியத்திற்குச் சூரணமானது:—பெருங்காயம் 1, வசம்பு 3, இரண்டும் பொடித்துச் சூரணஞ்செய்து தேன் 10 இடை சேர்த்துக் குழைத்து மூன்றல்லது ஐந்துநாள் காலைமாலை உண்டுவரவும் சைத்திம், சலுப்பு, முதலிய தொண்டைக்கட்டு, கம்மல் தீரும். எ-று. 158

சோகை காமாலைக்குச் சூரணம்.

தும்பைச்சூரணந்தேனிற் சொற்பாண்டு சோகைக்குண்
நம்பத்தேகமும் வலுக்கும்.

(இ-ள்) சோகை காமாலைக்குச்சூரணமானது;—தும்பைச்செடி சமூலமிடித்துச் சூரணஞ்செய்து அதில் வெருகடிப் பிரமாணம் தேனிற்கொள்ளவும் சோகை, காமாலை, பாண்டுமுதலியதுந் தீரும். ஐந் தல்லது ஏழுநாள் உண்டுவரவும். கடும்பத்தியமா யிருக்கவும். எ-று.

பேதியைக்கட்ட நரைமாறச் சூரணம்.

கடுக்காயின்பிஞ்சதின்றாள் கண்டுநெய்யில் வறுத்துண்
விடுக்காதங் கட்டுமலம்

(இ-ள்) பேதியைக்கட்ட நரைமாறச் சூரணமானது:—கடுக்காய்ப்பிஞ்சைமுன்னம் நெய்யில்வறுத்துபின்பு இடித்துச்சூரணஞ்செய்து மறுபடியும் நெய்யிலிழைத் துண்டுவரவும் பேதியை நிறுத்தி விடும். மலத்தையுங்கட்டிவிடும். இதனைத்தினசாரி யுண்டுவருவதினால் நரைமயிரானதும் கறுத்துவிடும். எ-று. 160

நவமூலத்திற்கும் சூரணம்.

வெள்ளறுகுச்சூரணத்தில் வெண்சர்க்கரை சேர்த்துக்
கொள்ளவு மண்டல மூலத்திற்கு.

(இ-ள்.) நவமூலத்திற்குஞ் சூரணமானது:—வெள்ளறுகைப்பொடிசெய்து சூரணமாக்கி அதற்குச் சரிசர்க்கரை சேர்த்து ஒரு மண்டலம் மாறுமலுண்டுவரவும். மூலங்கள் 9-விதமும் நீங்கிவிடும். இச்சாபத்தியமாயிருக்கவும். இதோடு வெள்ளையும் நீங்கிவிடும். எ-று. 161

நீரிழிவுக்குச் சூரணம்.

அத்திவேர்பட்டையின்றா ளந்திசந்தி தசநாளுண்
துத்திநீர் மட்டடங்குந் தான்.

(இ-ள்) நீரிழிவுக்குச் சூரணமானது:—அத்திவேர் பட்டையையுலர்த்திப் பொடிசெய்து சூரணமாக்கி 10 நாள் அந்திசந்திவேளைக்கு ஒவ்வொரு விராகனிடையா யுண்டுவரவும் நீரிழிவுநின்றுவிடும். அரைமண்டல முண்டுவரவும் அதிகநன்மையைத்தரும். எ-று. 162

ஜீரணசக்தியில்லாமைக்குச் சூரணம்.

இந்துப்புச்சீரக மோமந்திப்பிலிக்கடுக்காய்
ஐந்துஞ்சூரணஞ் செய்தளி.

(இ-ள்) ஜீரணசக்தியில்லாமைக்கு சூரணமானது;—இந்துப்பு 1· சீரகம் 2, ஓமம் 3, திப்பிலி 4, கடுக்காய் 5, இதில் இந்துப்புத் தவிர மற்றதை இளவறுப்பாய்வறுத்து யாவும் சேர்த்திடித்து சூரணஞ் செய்து வெறுகடிவீதம் வெந்நீரிலுட் கொண்டுவரவும் மந்தம், உஷ்ணம், அன்னத்துவேஷம், செரியாமையற்றுச் சீரணசக்தியைத்தரும். எ-று. 163

பல்துலக்கிவருஞ் சூரணம்.

சீந்திற்பொடிபடிகிச் சென்றிடித்துச்சூரணித்து
ஈந்திற்பொடி துலக்கிடு.

(இ-ள்.) பல்துலக்கிவருஞ் சூரணமானது:—சீந்திற் கொடியையுலர்த்தி இடித்துச்சூரணித்து அதிற் படிகாரத்தைப் பொடித்துக் கலந்து தினசாரி பல்துலக்கிவரவும்பல்லிலுள்ள விரணமுதல் உதிரம், சீழ், நோயற்று, பூச்சிகளுதிர்ந்து அந்த தந்தங்களாடா தழுந்திவிடும். எ-று. 164

பவுத்திரத்திற்குச் சூரணம்.

சீவிகருணைக்கிழங்கைச் சென்றிடித்துப்பொடியாக்கித்
தாவிவெறு கடிதேனிற்று

(இ-ள்) பவுத்திரத்திற்குச் சூரணமானது:—கருணைக்கிழங்கைச் சீவியுலர்த்தி இடித்துச்சூரணஞ்செய்து அதில் வெருகடிவீதம் தேனிலிழைத்து அந்திசந்தி ஒருவாரம் உட்கொண்டு வரவும். அப்பவுத்திரத்திலுள்ள கிருமிகளானது ஐந்துநாளில்விழுந்து சுகுணப்படும். அதையே பின்னும் ஒருவாரம் உண்ணவும் மெத்தவும் நன்மையாம். எ-று. 165

பித்தத்துக்குச் சூரணம்.

ஏலந்திப்பிலி மதுரமிஞ்சி லவங்கங்கற்கண்
டாலுஞ் சூரணஞ்செய்தளி.

(இ-ள்) பித்தத்துக்குச் சூரணமாவது:—ஏலம் 1, திப்பிலி 2, அதிமதுரம் 4 மேல்பரணிசீவிய இஞ்சி 8, லவங்கம் 1, யாவும் இளவறுப்பாய்வறுத்து இடித்துச்சூரணஞ்செய்து கற்கண்டு 10-பொடித்துபோட்டுக் கலந்து வெருகடிவீதம் அந்திசந்தி அரைமண்டல முண்டுவர பித்தத்தினுலுண்டாகிய கொடூரமனைத்தும் நீங்கிவிடும். எ-று.

பீநசம் தலைநோவிற்குச் சூரணம்.

இலுப்பைப்புண்ணாக்கின் றாளிருநாசிநசியமிட
சலுப்புப்பீநசந் தலைநோயறும்.

(இ-ள்.) பீநசத் தலைநோவிற்குச் சூரணம்:—இலுப்பைப் புண்ணாக்கை இடித்துச்சூரணஞ்செய்து இரண்டுநாசிகளிலும் நசியமிட்டு வரவும் சலுப்பு, தலைநோய், பீநசமியாவுந்தீரும். சன்னிக்கு இதில் கொஞ்சம் மாசக்காய்தூள்சேர்த்து நசியமிடவும் பல்கிட்டியது முதல் தீரும் எ-று. 167

பலநோய்க்கு மேனிச் சூரணம்.

மேனிச்சூரணஞ் சீனிவிட்டரைத்துண் குன்மமெட்டும்
காணிற் பீநசமேகுங்காண்.

(இ-ள்) பலநோய்க்கும் மேனிச் சூரணமானது:—குப்பை மேனியைபுலர்த்தி பொடித்துச் சூரணஞ்செய்து சரிசர்க்கரை சேர்த்து வெருகடிவீத முண்டுவர குன்மம் 8, பீநசம் 8, அதிசாரம் 7 மண்டைகுடைச்சல், குட்டம், சூலைவலி, வயற்றுநோய், மேகத்தின் தடிப் பியாவுந்தீரும். சிலவிஷங்களும் அகலும். இன்னும்பல நோய்களுந்தீரும். இதற்கு இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 168

### வாந்தியுண்டாகச் சூரணம்.

ஓமத்தூளெருக்கன்பாலுட் பிசைந்துலர்த்திபொடித்
தாமத்தூளருந்த வெந்நீர்

(இ-ள்) வாந்தியுண்டாகச் சூரணமாவது:—ஓமத்தூளை எருக்கன்பாலிற் பிசைந்து நன்றாயுலர்த்தி இடித்துத் தூள்செய்து சூரணமாக்கி ஒருவிராகனிடை வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். வாந்தியுண்டாகும். அவ்வாந்தி யதிகப்படின், நெய்யை வெந்நீரில்விட்டுக் கலக்கிக் குடித்திடவும். நின்றுவிடும். பத்தியம், பச்சைப்பயறும் பச்சரிசியும் பொங்கி நெய்விட்டுண்ணவும் நின்றுவிடும். எ-று. 169

### வாந்தியை வருவிக்கச் சூரணம்.

பொட்டுலுப்பரைபலமாய்ப் புகல்கண்டர்பலமரைக்கால்
தொட்டிடத் தரிசியிடையுண்.

(இ-ள்.) வாந்தியை வருவிக்கச் சூரணமானது:—பொட்டுலுப்பு பலம் அரை, துருசு பலம் அரிக்கால், இரண்டும் பொடித்துச் சூரணஞ் செய்து அரிசியிடையுண்டு சலங்குடித்திடவும் வாந்தியுண்டாகும். அவ்வாந்தி யதிகப்படின், எலுமிச்சன் பழச்சார், நெய், மிளகுதூள் வகைக்கு 1-காசிடை கலந்துண்ணவும் நிற்கும். பின்னும் நிற்காவிடின், கிராம்பு 50, அரைபடி சலத்தில் காச்சி கால்படி குடிப்பிக்கவும். வாந்தி நின்றுவிடும். எ-று. 170

### வெள்ளைப்புடைக்குச் சூரணம்.

கருஞ்சீரகங் கொட்டைக் கரந்தைகாட்டுச்சீரகமும்
அருஞ்சூரணங் கண்டிற்று.

(இ-ள்) வெள்ளைப்புடைகளுக்குச் சூரணமானது:—கருஞ்சீரகம் காட்டுச் சீரகம், கொட்டைக்கரந்தை இம்மூன்றையுஞ் சூரணஞ் செய்து சர்க்கரையில் வெறுகடிவீதம் அரை மண்டலமுண்டு வரவும். வெள்ளைப்புடைகளை யகற்றிவைக்கும். பத்தியப்பரிகாரமாயிருந்து தலைக்குவார்த்துக் கொள்ளவும். எ-று. 171

### நன்னாரிவேர் சூரணம்.

நன்னாரிவேர்ச்சூரணம் நத்திவெறுபடியுண்ண
வங்காளிற் பேதியாகும்.

(இ-ள்) நன்னாரிவேர்ச் சூரணமானது:—நன்னாரிவேரை இடித்துச் சூரணஞ்செய்து மருந்தீடேற்றியவர்கட்கு வெறுகடிப்பிரமாணம் உட்கொள்ளக் கொடுக்கவும். அவர்களுங் காலையிற்றின்னப் பேதியாகும். அப்பொழுது மருந்தேறி யிருக்கிறதென்றும் 5-நாள் விடாமற் றின்றுவரவும். அப்படிப் பேதியாகாவிடின், மருந்தேறியது மலத்தில் வெளிப்பட்டதென்று நிறுத்திவிடவும். முதலிற் பேதியாகாவிடின், மருந்தில்லையெனத் தெரிந்துகொள்ளவும். இது திருஷ்டாந்தமாகக் காண்க. எ-று. 172

ஆனந்தவுஷ்ணவாய்வுக்குச் சூரணம்.

ஈனுக்கிடாரியினீற் சுக்கிட்டுலர்த்தியதூள்
வீனுக்கிடா வாய்விற்கிடு.

(இ-ள்) ஆனந்தவுஷ்ண வாய்விற்குச் சூரணமானது:—ஈனுக்கிடாரி கோமயத்தில் 1-பலம் சுக்கைப்போட்டு ஊறியபின் உலர்த்தி இடித்துச் சூரணித்து வெறுகடிப்பிரமாணம் அந்திசந்தி 15 நாள் உண்டுவரவும். ஆனந்தவுஷ்ண வாய்வானது தீரும். எ-று. 173

இரத்தப்பிரமியத்திற்குச் சூரணம்.

மிளகுதூ லெண்ணெயினில் விட்டிளகமூணுண்
வமைதாய்ப் பிரமியம்போம்.

(இ-ள்) இரத்தப்பிரமியத்திற்குச் சூரணமானது:—மிளகு விராகனிடை 2, பொடித்துச் சூரணஞ்செய்து அதை நல்லெண்ணெயிற் குழப்பி மூன்றுநாள் அந்திசந்தி யுண்டுவரவும். இரத்தப்பிரமியந் தீரும். பத்தியந் தக்கபடி ஆளறிந்து வைக்கவும் எ-று.

இரத்தப்பீநசத்திற்குச் சூரணம்.

இருநாசிமாசிக்கா யின்றூள்நசியமிட
வருமாசி பீநசமறும்.

(இ-ள்) இரத்தப் பீநசத்திற்குச் சூரணமானது:—மாசிக்காயைச் சூரணஞ்செய்து அதில் ஒரு சிட்டிகைத்தூள் இரண்டு நாசிகளிலும் நசியமேற்றிடவும் குனிந்தால் மூக்கில் உதிரம் புரண்டு

வரும் இரத்தப்பிரமியமானது நின்றுவிடும், இப்படியே 2-3-விசை செய்யவும் நன்மையாம். எ-று. 175

## சூலை வெள்ளைவாய்வுக்குச் சூரணம்.

புல்நங்கை யிலைச்சூதம் புட்டரைத்துரவியுலர்த்தி
நல்மங்கைக்கிடுங் கற்கண்டில்.

(இ-ள்.) சூலைவெள்ளை வாய்வுக்குச் சூரணமானது:—புல்நங்கை யிலையும், பாதரசமுஞ் சேர்த்தரைக்க மடிந்துவிடும். அதை ரவியில் வைத்து வுலர்த்தி மறுபடியும் ஆர்க்கப்பொடித்து மூன்றல்லது ஐந்து நாள் காலை மாலை சர்க்கரை அல்லது கற்கண்டில் உட்கொண்டுவரவும். சூலை-வெள்ளை-வாய்வு முதலியது தீரும். இச்சாபத்தியம். எ-று. 176

## சர்வநோய்களுக்குஞ் சூரணம்.

சங்கம்பழச்சார்சூதஞ் சந்தித்திருசாமம்
பொங்கவரைக்க வவுலாம்.

(இ-ள்) சர்வநோய்களுக்குஞ் சூரணமானது:—சங்கம் பழச்சாறும், பாதரசமும் சமனுய்ச்சேர்த்து இரண்டுசாமமரைத்து யெடுக்கவும். அவுலாகும். அதில் 1-அல்லது 2-அரிசியிடை காலைமாலை 3-அல்லது 5-நாள் நெய், சர்க்கரை, வெண்ணை, கற்கண்டிலுண்டுவரவும். சர்வநோய்களுந்தீரும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 177

## இருமலிற்குச் சூரணம்.

திப்பிலிமிளகுசமன் சென்றிடித்தூள் சர்க்கரைசேர்த்
திப்படிவெறுகடி நெய்யிலுண்.

(இ-ள்) இருமலிற்குச் சூரணமானது:—திப்பிலியும் மிளகும் சமனுய்ச் சேர்த்துப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து அதிற் சரிசர்க்கரைகலந்து வெறுகடிப்பிரமாணம் 3-அல்லது 5-நாள் அந்தி சந்தி நெய்யிலிழைத்துண்டு வரவும். இன்னும் காச்சிய பசும் பாலிலும் உண்டுவரவும் இச்சாபத்தியம். எ-று. 178

## ஈளை இருமலுக்குச் சூரணம்.

இலுப்பைப்புண்ணுக்குங் கருஞ்சீரகச்சூர்ணம்
சலிப்பற வெறுகடித்தா.

(இ-ள்) ஈளை இருமலுக்குச் சூரணமானது:—இலுப்பைப் புண்ணாக்கும் கருஞ்சீரகமும் சமனாய்ச்சேர்த்து பொடித்து வஸ்திரகாயஞ் செய்து வெருகடிவீதம் மூன்றுநாள் அந்திசந்தி இருவேளையுண்டுவரவும். வாந்தியுமாம், இதில்,ஈளை, இருமல், இரைப்பு, காசமுதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 179

உளைமாந்தைக்குச் சூரணம்.

தேமாங்கனிவிதை மாவிற்குந்திரிக்கத்தூள்
ஆமாங்கு வெந்நீரி லுண்.

(இ-ள்) உளைமாந்தைக்குச் சூரணமானது:—தேத்தான் விதையைவெந்நீர் தெளித்திடித்து 20 பங்கு தூளாக்கி வெள்ளைக் குங்கிலியத்தையும் பொடித்து 3 பங்குசேர்த்து இரண்டுங் கலந்து சூரணமாக்கிவெருகடிவீதம் வெந்நீரிலுட்கொண்டுவரவும். உடனே உளைமாந்தையானது நீங்கிவிடும். இச்சாபத்தியம். எ-று. 180

கண்டாவிழ்தச் சூரணம்.

சோம்புதனியாமிளகு சொற்கார மதுரம்பட்டை
நாம்பொடித்தூள் தேனிலரைத்தேற்று

(இ-ள்) கண்டாவிழ்தச் சூரணமானது:—சோம்பு, கொத்துமல்லி, மிளகு, அக்கிராகாரம், அதிமதுரம், லவங்கப்பட்டை, இவ்வாறும் இடித்துச் சூரணஞ்செய்து தேன்விட்டரைத்து கொஞ்சங் கொஞ்சமாய் உள்ளுக்கேற்றிக்கொண்டுவரவும். இதோடு இன்னும் பொன்,வெள்ளி, பவழம், முத்து, உருத்திராட்சமுஞ்சேர்த்து நாக்கில் தடவிக்கொண்டுவரவும். தொப்புளில் தோஷித்ததும்நீங்கிவிடும்.எ-று.

ஜன்னி வியர்வைக்குச் சூரணம்.

கொள்ளுமஞ்சள் சூடன்கொண் டிடிதூள் வியர்வைவரின்
துள்ளவங்கங் கரக்கித்தேய்.

(இ-ள்) ஜன்னிவியர்வைக்குச் சூரணம்:—ஓமம், கொள்ளு, கரிமஞ்சள், சமன்சேர்த்து அதோடு கற்பூரமுங்கூட்டி கைகால்சிலிர்த்தும் வியர்வைவழிந்திடினும் இதை அந்தந்த இடங்களில் அரக்கித் தேய்த்

துவரவும் ஜன்னியாலுண்டாகிய வியர்வை நீரானது வரண்டு நின்று விடும். எ.று. 182

### தேற்றான் கொட்டைச் சூரணம்,

இளநீரிற்றேறத்தான் வித்திட்டு காசிடைநிசிவைத்
துளமேறக் காலையிலுண்.

(இ-ள்.) தேற்றான்கொட்டைச் சூரணமானது:--தேற்றான்கொட்டையைச் சூரணஞ்செய்து அதிற் றம்படியிடை இளநீரிற் போட்டு இராத்திரி ஊறவைத்து அதிகாலையிற் குடித்துவரவும். நீர்க்கட்டு, நீரிழிவு, 2-ம் தீரும். இவைகள் நிற்கும்வரையில் உட்கொண்டு வரவும் எ-று. 183

### பேதிக்குச் சூரணம்.

சுக்குடன் சர்க்கரைகால சுத்திவாளமரையாய்
பக்குவம்நற்பொடி சூர்ணம்பாச்சு.

(இ-ள்) பேதிக்குச் சூரணமானது:—சுக்கு சர்க்கரை வகைக்குப் பலம் கால் சுத்திவாளம் பலம் அரை சேர்த்திடித்துச் சூரணஞ் செய்து அதில் வெறுகடித்தூள் உட்கொள்ளவும். பேதியாகும். அதற்குமுன்னிராத்திரி சுக்குக்கியாழமும், அன்னிராத்திரி மிளகுகியாழமும் குடிக்க பலபிணிகளுந்தீரும். எ-று. 184

### சுகபேதிக்குச் சூரணம்.

வாளமொன்று கற்கண்டரை வஞ்சூடனகாலரைத்து
மீளகுன்றிடை கொண்டிடு.

(இ-ள்.) சுகபேதிக்குச் சூரணமானது:—சுத்திவாளம் 6 கற்கண்டு அரை கற்பூரம் கால் இம்மூன்றுஞ் சேர்த்தரைத்து வழித்தெடுத்து ஒருகுன்றிமணியளவு உட்கொள்ளவும் நன்றாய்ப் பேதியாகும். அப்பேதி அதிகப்படின், வசம்புகரிக்கி வெந்நீரிற்புகட்டவும் நிற்கும். எ-று. 185

### மேகவெள்ளைக்குச் சூரணம்.

மாசக்காய்ச்சூரணத்தை வைத்திரண்டுமூவேளை
லேசக்காய் மேகவெள்ளைக்கிடு.

(இ-ள்) மேகவெள்ளைக்குச் சூரணமானது;—மாசிக்காயைஇடித்துச் சூரணஞ்செய்து அதில் 20 கிரேயின்வரையில் மூன்றுநாள்காலை

மாலை 2 வேளையும் உட்கொண்டுவரவும் ஸ்திரீகளினாலுண்டாகிய மேக வெள்ளையானது தீரும் இச்சாபத்தியமா யிருக்கவும் எ-று. 186

சகலகிராணிக்குச் சூரணம்.

மாசிக்காய்மாஞ்சிவிடையங் கடுக்காய்ப்பூச்சூர்ணம்
தேசிக்காயாம் வெண்ணெயிலுண்.

(இ-ள்.) சகலகிராணிக்குச் சூரணமானது:—மாசிக்காய், சடா மாஞ்சி, அதிவிடையம், கடுக்காய்ப்பூ, இந்நான்கையும் இடித்துச் சூரணித்து வெருகடிப்பிரமாணம் காலை மாலை மூன்றுநாளும் வெண்ணெயிலுண்ணவும் சகலகிராணிகளுந்தீரும். பத்தியம் பார்த்து வைக்கவும். எ-று. 187

வெண்குட்டத்துக்குச் சூரணம்.

கார்போகரிசிவிதைக் கண்டிடித்துச் சர்க்கரைசேர்த்
தீர்போதிடுமண்டலம்.

(இ-ள்) வெண்குட்டத்துக்குச் சூரணமானது:—கார்போகரிசியை இடித்துச் சூரணஞ்செய்து கொஞ்சஞ் சர்க்கரைசேர்த்து ஒரு துட்டிடைத்தூள் 1-மண்டலம் 40-நாள் அந்திசந்தி யுண்டுவரவும் தேகத்திலுள்ள வேண்மைநிறங்குன்றி கறுப்புநிறமாகிவிடும். திருஷ்டாந்தம்-இச்சூரணத்தைத் தவிட்டோடு கலந்து வெள்ளைக்கோழிக்குப் போட்டு அது தின்னுகையில் அதின் வெண்ணிறமாறி கறுத்த நிறத்தைக்காட்டும். பத்தியம் அரைக்கீரைப் புளியுப்புங்கடைந் துண்ணவும். வேறொன்று மாகாது. எ-று. 188

ஜன்னிக் கார்கிராணச் சூரணம்.

சாரந்துருசிலுப்பைப் புண்ணாக்குச் சமன்சூர்ணமந்
நேரந்தனிற் சிட்டிகையேற்று.

(இ-ள்) ஜன்னிக் கார்க்கிராணச் சூரணமானது:—நவாச்சாரம், துருசு, இலுப்பைப் புண்ணாக்கு ஓரிடையாய்ச் சேர்த்து இடித்துச் சூரணித்து அதில் ஒரு சிட்டிகைத்தூளெடுத்து இருநாசிகளிலும் குழாய் வழியாயூதிடவும். தும்மல்மீறி சலஞ்சிந்திடுங்கால் பிழைப்பர். இல்லாவிடின் பிழைக்கார். எ-று. 189

### மதுமேகத்திற்குச் சூரணம்.

மலைவேம்புத்தூள் மூவேளைக்கு விராகனிடை
நிலையாயுண் தயிர்சாதமே.

(இ-ள்) மதுமேகத்துக்குச் சூரணமானது:—நிழலிற் காய்ந்த மலைவேப்பனிலையை இடித்துச் சூரணஞ்செய்து அதில் நாளொன்றுக்கு மூன்றுவேளை, ஒவ்வொரு விராகனிடை உட்கொடுத்து அப்பால் தயிர்சாதம் கருவேப்பிலைத்துவையில், பாலுண்ணவும். மற்றதெல்லாம் நீக்கிவிடவும். 2-நாளையில் மதுமேகமானது பற்றறுந்துவிடும். எ-று. 190

### மூலக்கிராணிக்குச் சூரணம்.

அரக்குகொடிசப்பாலை யவ்வித்துச்சூரணித்து
சரக்குயிடை சர்க்கரைசேர்த்தருந்து.

(இ-ள்) மூலக்கிராணிக்குச் சூரணமானது:—அரக்கானது 21-இடை, கொடிசப்பாலை விரை 1-இடை 2-ம் 22 விராகனிடைகளாய்ச் சேர்த்துச் சூரணஞ்செய்து அவ்விடைக்குச்சரி சர்க்கரை கூட்டிக் கலந்து காலைமாலை 3-அல்லது 5-நாளுண்டுவரவும் மூலக்கிராணி முதலியது தீரும். எ-று. 191

### எலும்புருக்கிக்குச் சூரணம்.

எள்ளோம நிலைப்பனைக்கிழங்கு பொடித்தந்திசந்தி
தள்ளாமற் பட்சமுண்ணத்தா.

(இ-ள்) எலும்புருக்கிக்குச் சூரணமானது:—நிலைப்பனைக்கிழங்கு எள்ளு, ஓமம், வகைக்குப் பலம் அரைக்காலாய்ப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து அந்திசந்தி இருவேளை பதினைந்துநாள் உட்கொண்டுவரவும். எலும்புருக்கி நோயானதகலும் இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 192

### மலடுநீங்கச் சூரணம்.

கண்டங்கத்திரியுழமண் கட்டொழுகளாய் பொடித்து
விண்டங்கு வெண்ணையிலிடு.

(இ-ள்) மலடுநீங்கச் சூரணமானது :—கண்டங்கத்திரி விரை, உழமண், ஒழுகரைச்சுன்னம் இம்மூன்றையும் பொடித்து வஸ்திர

காயஞ்செய்து வெறுகடிப்பிரமாணம் மூன்றுநாள் வெண்ணெயில் உட்கொண்டுவரவும். மலடானது நீங்கிக் கருத்தரிக்கும். எ-று. 193

வாந்திநிற்கச் சூரணம்.

வாழைச்சறுகினீர் வசம்பொழுகரைச் சுன்னம்
கோழைக்குறுக தூட்கொடு.

(இ-ள்.) வாந்திநிற்கச் சூரணமானது:—வாழையிலைச் சறுகைக் கருக்கிய சாம்பல், பலகரைச்சுட்ட சுன்னம், வசம்பு அல்லது வசம்பு சுட்டகரி இம்மூன்றையும் சமனாய்ச் சூரணஞ்செய்து ஒருசிட்டிகை இரண்டொருவேளை யுட்கொடுக்கவும். வாந்தியானது நிற்கும். இன்னும் எலுமிச்சன் பழத்தையறுத்து வாயிலிட்டுச் சப்பினாலும் நிற்கும். எ-று. 194

விடாவயற்வலிக்குச் சூரணம்.

வேசரியின் விட்டைத்தூள்விண்டு வஸ்திரகாயஞ்செய்
தேசரிபுத்துத் தேனிலீ.

(இ-ள்) விடாவயற்வலிக்குச் சூரணமானது:—கழுதையின் விட்டையைத் தூளாயிடித்து வஸ்திரகாயஞ்செய்து வெறுகடித் தூளானதை புதிய தேனிலிழைத்து 30-நாள் காலைமாலை 6-வேளையுண்டு வரவும் விடாதவயர் வலியானது நின்றுவிடும். பத்தியமில்லை. எ-று.

நாக்குப்பூச்சிவிழச் சூரணம்.

மாம்பருப்புத்தூள் வெல்லமல்லது தேனதிலீய
தேம்பருப்பிற் பூச்சிசிதறும்.

(இ-ள்) நாக்குப்பூச்சிவிழச் சூரணமானது :—மாம்பருப்பை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து அதில் 20-கிரேயின் முதல் 30 கிரேயின் வரையில் சிறியவர் பெரியவர்கட்குத் தக்கபடி நல்லவெல்லம் அல்லது தேனிலிட வயற்றிலுள்ள நாக்குப்பூச்சிகள் மலத்தில் விழும் இன்னும் மாதவிடாயதிகம், மூலச்சூடு, இரத்தமூலமுந் தீரும். எ-று.

நரைமாறச் சூரணம்.

பொடுதலை காக்கட்டான் பொற்றலை நீலிப்பிரமி
கொடுதலை வல்லாரை சூரணங்கொள்.

(இ-ள்) நரைமாறச் சூரணமானது:—பொடுதலை, கறுங்காக்கட்டான், பொற்றலைக்கையான், அவுரி, பிரமி, வல்லாரை 6-ம் உலர்த்திப் பொடித்துச் சூரணித்து 1-மண்டலம் 2-வேளைதேனில் வெறுகடி குழைத்துண்ண நரைதிரையானது மாறிவிடும். எ-று. 197

8 சூரணப் படலம் 46

முற்றிற்று.

## 9 கியாழப் படலம் 30.

அம்மை வார்க்காதிருக்கக் கியாழம்.

தாழைவேர் கியாழத்திற் சர்க்கரைசேர்சரபத்தாம்
ஆழவே காச்சியங்களி.

(இ-ள்) அம்மைவார்க்காதிருக்கக் கியாழமாவது:—தாழையின் வேரை 1 படிதண்ணீரிற்போட்டு ஆழாக்காய்க்காச்சி அதில் சீனிசர்க்கரைசேர்த்து மறுபடியுங்காச்சி குழந்தைகட்கு 3 வேளை புகட்டி வரவும் அதற்கு அம்மையென்னு மாரியாத்தாள் வார்க்காது. வார்த்திடினும் 4-5 கொப்பளந்தான் அல்லது முத்துகள்தான் எழும்பும். அது தெரியாது, வாதையும் படுத்தாது. எ-று. 198

உதிரக்கட்டிக்குக் கியாழம்.

மஞ்சளைக்கர்க்க மங்காக்கிக் கியாழமிட்டுக்
கொஞ்சமாய்ச் சர்க்கரையிற் கொடு.

(இ-ள்) உதிரக்கட்டிக்குக் கியாழமாவது;—மஞ்சளைக் கர்க்கமாகப்பொடித்து அதில் 1 படிதண்ணீர்விட்டு எட்டொன்ருய்க் காச்சி வடிகட்டி கொஞ்சஞ் சர்க்கரைசேர்த்துக்கலக்கி 3 வேளை உட்கொள்ளவும். அவ்வுதிரக்கட்டியானது கரைந்துவிடும். பத்தியமொன்றுமில்லை. எ-று. 199

வயர்வலிக்குக் கியாழம்.

அவுரிவேர் சாரணைவே ரம்முருங்கைப்பட்டையுங்காச்
சிவரிலுண் வயர்வலி விடும்.

(இ-ள்) வயர்வலிக்குக் கியாழமாவது:—அவுரிவேர், சாரணை வேர், முருங்கைப்பட்டை, 3-ம் தட்டிநறுக்கி சட்டியிற்போட்டு 1 படி சலம்விட்டு எட்டொன்ருய்க்காச்சி வடித்து அக்கியாழத்தை காலை மாலை இருவேளையும் 3 நாள் குடித்துவரவும் வயர்வலியானது தீரும். எ-று. 200

சூலைவலிக்குக் கியாழம்.

காயமக்கிராகார முருங்கைப் பட்டையுங்காச்சி
ஈயமூணூட் சூலைக்கிடு.

(இ-ள்) சூலைவலிக்குக் கியாழமாவது:—பெருங்காயம், அக்கிரா காரம், முருங்கைப்பட்டை, 3ஞ் சேர்த்து சட்டியிலிட்டு 1 படி சலம் விட்டு எட்டிலொன்ருய்க்காச்சி வடித்திருத்து 3 நாள் அந்தி சந்தி இக் கியாழத்தைக் குடித்துவரவும் எவ்வித சூலைகளுந்தீரும். எ-று. 201

வாய்பிடிப்புக்குக் கியாழம்.

கடுக்களிவேல் மாவெரிச்சற் காய்கட்டிக்கியாழம்
விடுக்களிவாய்க் கொப்பளிவிடும்.

(இ-ள்) வாய்ப்பிடிப்புக்குக் கியாழமாவது:—கடு-கடுக்காய், களி-களிப்பாக்கு, வேல்-வேலம்பட்டை, மா-மாம்பட்டை, எரிச்சல்-வெண் காரம், காஸ்-காசுகட்டி, இவைகளைக் கியாழங்காச்சி வாயிற் கொப்ப ளித்துமிழ்ந்துகொண்டேவரவும். தலைமுழுகி புளியைநீக்கிடவும், அவ் வாய்ப்பிடிப்புப் புண்ணனது ஆறிவிடும், போகமுங்கூடாது. எ-று.

இருமலிற்குக் கியாழம்.

துத்தியிலைக்கியாழத்துட் கற்கண்டுதூளிட்
டெட்த்திருடிக் கியாழத்தேகும்.

(இ-ள்) இருமலிற்குக் கியாழமாவது:—துத்தியிலையை வதக்கி ஒண்ணுபாதியாயறுத்து ஒருபடிதண்ணீரிற் போட்டு எட்டிலொன் ருய்க் காச்சி வடித்திறுத்து வெள்ளைக்கற்கண்டு சேர்த்து காலை, உச்சி, மாலை, 3-வேளையும் 3 நாட் குடித்துவரவும் இருமல், இரைப்புத்தீரும். பத்தியமென்பதில்லை. எ-று. 203

அஜிரணக் கழிச்சலிற்குக் கியாழம்.

வெட்பாலையரிசி மிளகிற்றண்ணீருழக் கெரித்து
உட்பாலிலருந்த நிற்கும்.

(இ-ள்) அஜீரணக் கழிச்சலிற்குக் கியாழமாவது:—வெட்பாலை யரிசியும், மிளகும் வகைக்கு விராகனிடை 2-ஆகச்சேர்த்து அவை களை உழக்குச்சலத்திற்போட்டுக்காச்சி உட்கொண்டுவரவும். அஜீரண பேதி, அஜீரணமந்தம், வயர்பொருமல் முதலியது தீரும். எ-று. 204

அஜீரணமந்தத்திற்குக் கியாழம்.

வெள்ளைக்காக்கணத்தின்வேர் விண்டுமிளகும்நீரிற்
கொள்ளப்போம் ஜீர்ணமந்தம்.

(இ-ள்) அஜீரணமந்தத்திற்குக் கியாழமாவது:—வெள்ளைக் காக் கணன்வேர்ப்பட்டையும், மிளகும் சேர்த்தரைத்தரைத்து உட்கொண் டுவரவும். அஜீரணமந்தந்தீரும். ஈதன்றி, சாரணையின்வேர் தட்டி நருக்கிக் கியாழமிட்டுக் குடிக்கவும். 4-5 வேளையில் அதுதீரும். எ-று.

கழிச்சலிற்குக் கியாழம்.

ஓதிகருவேப்பிலையீற்கோ மங்கடுகு சீரகமும்
விதியொடு காச்சிக்கியாழமீ.

(இ-ள்) கழிச்சலிற்குக் கியாழமாவது:—ஒதியனிலை யீர்க்கும், கருவேப்பிலையீர்க்கும், சேர்த்து ஓமம், கடுகு, சீரகம்யாவும் ஒக்கக் கூட்டிக் கியாழமிட்டுக் குடித்துவரவும், கிராணி, இரத்தக்கிராணி, மூலக்கிராணி, அஜீரணம், மந்தம், அதிசாரமியாவும் தீரும். எ-று.

கிராணிக்குக் கியாழம்.

மிளகிந்துப்போமங் திப்பிலி கருவேப்பிலைகடுகவ்
வளவுந்தப்பாக் கியாழம் வார்.

(இ-ள்) கிராணிக்குக் கியாழமாவது:—மிளகு. திப்பிலி, ஓமம், கடுகு, கருவேப்பிலை, இந்துப்பு, இவைகளைக்சமனாய்ச்சேர்த்து, 1 படி சலம்விட்டு எட்டிலொன்றாய்க்காச்சி வடித்திருத்து அதில் உவர் மண் ணுஞ் சேர்த்து காக்சியாகிலும், சும்மாவாகிலும் குடித்துவர கிராணி முதல் பலபேதிகளும் நிற்கும். எ-று. 207

நீர்க்கட்டுவாதத்திற்குக் கியாழம்.

ஆடாதோடையீர்க்குமச் சீந்திற் கொடிக்கியாழம்
போடாயோரை நாட்புகட்டு.

(இ-ள்) நீர்க்கட்டுவாதத்திற்குக் கியாழம்:-ஆடாதோடையீர்க்கும், சீந்திற்கொடியும், முன்போற் கியாழமிட்டு அதில் விளக்கெண்ணெயுஞ் சேர்த்து 5-நாட் காண்டிவீதம் வெடிகாலையிலுண்டுவரவும். நீர்கட்டு வாதம் நின்று சுகுணப்படுவர். பத்தியம் வறுத்தவுப்பு சுட்டபுளி சேர்க்கவும். எ-று. 208

விசர்ப்பச்சுரத்திற்குக் கியாழம்.

திரிகைலயுஞ் சிவதையின்வேர் திரளக்கியாழமிட்டுப்
பரிவொடு நெய்பாச்சிக்குடி.

(இ-ள்) விசர்ப்பச் சுரத்திற்குக் கியாழமாவது:—சிவதைவேர், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி இவைகளைத் தட்டி நருக்கி 1-படிசலத்திற் போட்டு எட்டிலொன்ருய்க் காச்சி வடித்திறுத்து அதிற்கொஞ்சம் நெய்விட்டுக் கலக்கி குடித்துவர விசர்ப்பசுரமானது விட்டு நீங்கிவிடும். எ-று. 209

விசர்ப்பத்திற்குக் கியாழம்.

மாயீர்க்குப் பேய்ப்புடல் மரக்கலாம் பழந்திப்லி
யாதீர்க்கக் கியாழமிட்டளி.

(இ-ள்.) விசர்ப்பத்திற்குக் கியாழமாவது:—மரக்கலாம் பழம், மாயிலையீர்க்கு, பேய்ப்புடல், திப்பிலி இவைகளைத் துணித்துப்போட்டுக் கியாழம்வைத்து இறுத்துண்ணவும். வாந்தியுமாகும். அதில் விசர்ப்பநோயுந்தீரும். இதற்கு ஆளறிந்து தக்கபடி பத்தியம் வைக்கவும். எ-று. 210

அந்திரவாய்விற்குக் கியாழம்.

புளியிலையின் கியாழத்திற் பொடிசீரகங்கலக்கி
அளியிலையையகற்றி யேற்று.

(இ-ள்). அந்திரவாய்விற்குக் கியாழமாவது :— புளியிலையை யரைத்து அதில் 3-படி சலம்விட்டுக் கியாழங்காச்சி இறக்கியிறுத்து அதில் சீரகத்தைப் பொடித்துப்போட்டுக் கலக்கி அதை உட்கொண்டு வரவும். அந்திரவாய்வானது நீங்கிவிடும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 211

சூசிகாவாயுவிற்குக் கியாழம்.

கூழ்பாண்டச் சாம்பிற்சதைகுப்பை சிறுதேக்குபொடி
யாழ்ப்பாண்டக் கியாழம் வைத்துண்.

(இ-ள்.) சூசிகாவாய்விற்குக் கியாழமாவது:—கலியாணப் பூசு ணைக்கொடியின் சாம்பல், சதைகுப்பை, சிறுதேக்கு, இவைகளைப் பொடித்து ஒன்ருய்ச்சேர்த்து ஓர் சட்டியிலிட்டு 1-படி ஜலம்விட்டு எட்டொன்ருய்க் காச்சி வடித்திறுத்து குடித்துவரவும் சூசிகாவாய்வு முதலிய பல வாய்வுகளுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 212

சூதகவாய்விற்குக் கியாழம்.

உத்தாமணி சிறுதேக்கும் மிளகு பாவட்டை
ஒத்தாதளைக் கியாழமுண்.

(இ-ள்) சூதகவாய்விற்குக் கியாழமாவது:—காட்டாமணக்குயிலை பாவட்டையிலை, சிறுதேக்கு, மிளகு இவைகளைச் சேர்த்து 1-படி தண்ணீரிற்போட்டு எட்டொன்ருய்க்காச்சிப் பதத்தில் வடித்திறுத்து உட்கொண்டுவரவும். சூதகவாய்வு, தீரும். இப்படி 5-அல்லது 7-நாள் குடிக்கவும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 213

சூலேநோவிற்குச் சிட்கா கியாழம்.

சுக்குநிலாவிரை யரிதகிக்கியாழத்துய்ய வுப்ப
துக்கரையாய்ப்பலஞ் சேர்த்தருந்து.

(இ-ள்) சூலேநோவிற்குச் சிட்கா கியாழமாவது:—சுக்கு, கடுக் காய், நிலாவிரை இம்மூன்றும் சேர்த்து 1-படி தண்ணீரிற்போட்டு எட்டொன்ருய்க் காச்சி வடித்திறுத்து அதில் அரைபலம் வெள்ளை யுப்பு சேர்த்துக் கலக்கிக் குடிக்கவும். முன் 3-நாள் பின்வாரத்தொரு நாள் சூலே. வயர், மார்நோய்தீரும். எ-று. 214

வயர்நோய்க்குக் கியாழம்.

இந்துப்புப் பொட்லுப்பிதிற் சோம்பு நெல்லிபருப்
புந் தப்பித்தட்டி யெரித்தெடு.

(இ-ள்) வயர் நோய்க்குக் கியாழமாவது:—இந்துப்பு, பொட்டு லுப்பு, சோம்பு, நெல்லிபருப்பு, இந்நான்கும் பொடித்து 1-படி தண்

ணீரிற்போட்டு எட்டொன்ருய்க் காச்சி வடித்திருத்து 10-நாள் அந்தி சந்தி குடித்துவரவும் வயர்நோய் தீரும். இச்சாபத்தியம். எ-று. 215

சலுப்புக்குக் கியாழம்.

சுக்குசன்னராஷ்டகத்துள் மதுரங்கியாழமிட்டு
தக்குமுன்னமாய்ச் சலுப்பிற்குண்.

(இ-ள்.) சலுப்பிற்குக் கியாழமாவது:—சுக்கு, சன்னராஷ்டகம், அதிமதுரம், இம்மூன்று வகைக்கு ஒவ்வொரு பலமாகச் சேர்த்துப்பொடித்து வெந்நீரிலூறவைத்து சாமம் 1-க்கு 2-சங்களவாய் 4-சாமமுங் குடித்துக்கொண்டுவர சலுப்பு சீதளமுதல் தீரும். எ-று.

பற்கோப்பளிக்குங் கியாழம்.

வெள்வேலம்பட்டை குமிளம்பட்டை காசுகட்டி
உள்ளியிற் கியாழஞ்செய்துமிழ்.

(இ-ள்) பற்கொப்பளிக்குங் கியாழமாவது:—வெள்ளைவேலம் பட்டை, குமிளம்பட்டை, காசுகட்டி, வெங்காயம் இந்நான்குங் கியாழஞ்செய்து அதைவாயில் வார்த்துக்கொண்டு கொப்பளித்து துப்பிக் கொண்டேவரவும், பல்லுகளானது உறுதியாய் இருகிடும். இதனை 1-அல்லது 2-மண்டலம் கொப்பளித்துவர நன்மையாம். எ-று. 217

மாந்தவுப்பசத்திற்குக் கியாழம்.

ஓமமுடன்மேனிவே ருட்பட்டைக் கியாழமிட்டு
நேமமுடன்வா ருட்சேய்க்கு.

(இ-ள்) மாந்தவுப்பசத்திற்குக் கியாழமாவது:—ஓமம் ஒரு காசிடை, குப்பைமேனிவேர்பட்டை 2-பலம் சேர்த்து அரைப்படி சலத்திற் றட்டி நறுக்கிப்போட்டு அந்நீர்வற்றக்காச்சிக் கியாழமிட்டுக் குழந்தைகட்கு வார்க்கவும். மாந்த வுப்பசம், வயர்பொருமல் யாவுந் தீரும். எ-று. 218

சோகைக்குக் கியாழம்.

பேய்ப்புடல்சாரணைவேர் வேம்பிற்சுக்கு சீந்திற்கடு
காயப்பு கட்டுரோகணியுங்காண்.

(இ-ள்.) சோகைக்குக் கியாழமாவது:—பேய்ப்புடல், சாரணை வேர், வேப்பீர்க்கு, சீந்திற்கொடி, கடுகு, கடுகுரோகணி இவைகளைத்

தட்டித்துணித்து நுணுக்கிக் கியாழமிட்டுக் குடித்துவரவும் சோகை வீக்கம் வற்றி சுவஸ்தமாய்விடும். கடும்பத்திய மிருக்கவும். எ-று.

பித்தத்திற்குக் கியாழம்.

சீரகங்கூவிளம்நெல்லி சித்தாமுட்டிசுக்குபொரி
நீரகங்கியாழ மிட்டிடு.

(இ-ள்.) பித்தத்திற்கு கியாழமாவது:—வில்வயிலை, நெல்லி முள்ளி, நெற்பொரி, சித்தாமுட்டி. சுக்கு இவைகளைத் துணித்து நுணுக்கி 1-படி தண்ணீரிற்போட்டு எட்டிலொன்றாய்க்காச்சி யிறுத்து காலைமாலை 3 நாள் குடித்துவரவும். பித்தத்தினாலுண்டாகிய பிணிகளைத்தவிர்க்கும். எ-று. 220

மேகத்திற்குக் கியாழம்.

பரங்கியின்சக்கையைத்தூள் பண்ணியாப்பாலினிலே
இரங்கவுண்ணிரு காசிடை.

(இ-ள்) மேகத்திற்குக் கியாழமாவது:—பரங்கிச் சக்கையைத் தூளாக்கி வஸ்திரகாயஞ்செய்து அதில் 2 காசிடை பசும்பாலில் காலை மாலை 10 நாள் அல்லது 20 நாள்குடித்துவரவும் மேகத்தினா லுண்டாகிய நோய்களனைத்தையும் அகற்றிவைக்கும் இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 221

இரத்தமூலத்திற்குக் கியாழம்.

விலாமிச்சன்வேர்கியாழமிட் டிருவேளைமூனாள்
உலாவிக்கொள் மூலமகல.

(இ-ள்) இரத்தமூலத்திற்குக் கியாழமாவது:—விலாமிச்சன் வேரைத்தட்டிநறுக்கி 1-படி தண்ணீர்போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சியிறக்கி அந்தி சந்தி 3 நாள் குடித்துவருவதுடன் விடத்தலைக் கொழுந்தை யிடித்துச்சார்பிழிந்து குடித்துக்கொண்டு வரவும். இரத்த மூலமானது தீரும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 222

மலட்டிற்குக் கியாழம்.

அதிமதுரந்திரிகடுக முக்குரா கியாழமுமிட்
டதுருதுகால மருந்தவும்.

(இ-ள்) மலட்டிற்குக் கியாழமாவது:—அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, அமுக்குறாங்கிழங்கு இவைகளை நறுக்கி 1-படி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க்காச்சி இறக்கியிறுத்து முழுச்சுவந்த 3-நாளுங் குடித்துவரவும். மலடுநீங்கி கர்ப்பத்தையுண்டாக்கும். எ-று.

குளுமைக்குக் கியாழம்.

கரிமஞ்சட்கியாழத்திற் கலந்துநல் வெல்லமதைப்
பிரியம்வைத்துக் குடிக்கப்பேண்.

(இ-ள்) குளுமைக்குக் கியாழமாவது:—கரிமஞ்சள் 2-3 துணுக்குகளை நறுக்கி அரைப்படித்தண்ணீர்போட்டு ஆழாக்காய்க்காச்சி வடிகட்டி அதிற்கொஞ்சம் நலலவெல்லம் போட்டுக் கரைத்துக்குடிக்கவும் இதிற்பால்விட்டாலும் விடலாம். இப்படி 2-3 விசைகுடிக்க குளுமை மாறும். இதை அதிகங்குடித்தால் வாய்மூக்கில் உதிரங்காணும். எ-று

உஷ்ணவாய்விற்குக் கியாழம்.

இளமாதளைக்கியாழமிட்டு பனங்கற்கண்டும்
வளமாய்நெய்யதி லிட்டுமுண்.

(இ ள்) உஷ்ணவாய்விற்குக் கியாழமாவது:—இளசாகிய மாதளங்காயை 1 படி தண்ணீரிற்போட்டு ஆழாக்காய்க்காச்சி வடித்திறுத்து அதில் பனங்கற்கண்டும் நெய்யுஞ்சேர்த்துக் கலக்கி 3 நாளுண்டுவரவும். உஷ்ணவாய்வு, அதினாலுண்டாகிய பல துன்பங்களும் நீங்கும். எ-று. 225

ஒக்காளத்திற்குக் கியாழம்.

கோட்டமேலரிசிசுக்கும் வில்வமுங்காச்சி
தேட்டமா யுண்ணற்றிடும்.

(இ-ள்) ஒக்காளத்திற்குக் கியாழமாவது:—கோட்டம், ஏலரிசி, சுக்கு, வில்வபத்திரி, இந்நான்கும் ஒருசட்டியிற்போட்டு 1 படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க்காச்சி வடித்திருத்து அதைக் குடிப்பிக்கவும். வாந்தி, வாய்குமட்டல், ஒக்காளிப்பதுந் தீரும். எறு. 226

இரும லிரைப்புக்குக் கியாழம்.

துத்தியிலைக்கியாழத்திற் றய்யகற்கண்டுத்தூள்சேர்த்
தத்தையருந்தபாலி ரிருமற்போம்.

(இ-ள்) இருமலிரைப்பிற்குக் கியாழமாவது:—துத்தி யிலையை வாய்பேசாமற் பரித்துவந்து அதையறிந்து ஒரு சட்டியிற் போட்டு ஒருபடி சலம்விட்டு எட்டொன்ருய்க் காய்ச்சிவடித்திறுத்து அதில் பாலும், பனங்கற்கண்டும், ஏலரிசித்தூளும் போட்டுக் கலக்கிக் குடிக் கவும். இருமல், இரைப்பு, சுவாசம், மேல்மூச்சுயாவுந் தீரும். எ-று.

9-கியாழப் படலம் 30

முற்றிற்று.

## 10. குளிகைப் படலம் 35.

### தம்பனக் குளிகை.

குங்குமப்பூ ஆபில்விரைக்குட் சாதிக்காயபின்றேன்
அங்கரைத்தே கடலையளவுண்.

(இ-ள்) தம்பலக் குளிகையானது:—ஆபில்விரை, குங்குமப்பூ, அபின், வகைக்கு 1 ரூபாயிடையாகவும், ஜாதிக்காய் ஒரு விராகனி டையாகவும், சேர்த்து தேன்விட்டரைத்து மெழுகுபதமா யானதன் பின் கடலையளவாய் குளிகைசெய்து மாலைநேரத்திலுண்டு பசும்பால் குடித்து புளிநீக்கி தாம்பூலந்தரித்து போகிக்க வீரியஸ்தம்பனமாம். எ-று. 228

### சுரத்துக்குக் குளிகை.

காரமரைப்பூரமொன்று கற்றந்தியைங்கால்பால்
நேரவரையயா குளிகை நீசெய்.

(இ-ள்) சுரத்துக்குக் குளிகையானது:—காரம், வெண்காரம் அரையிடை, பூரம், இரசகற்பூரம் ஒரு யிடை, தந்திவாளம் சுத்தி செய்தது ஒண்ணேகால் யிடையாவும் பசும்பால்விட்டரைத்து சிறு பயாளவாய்க் குளிகைசெய்து நிழலுலர்த்தி 1-அல்லது 2-குளிகை பொடித்துப் பனைவெல்லத்திலளிக்கவும். சுரம் சீதளமுதலியவை தீரும் பேதியுமாகும் இச்சாபத்திய மிருக்கவும். எ-று. 229

### அழுக்குதள்ள குளிகை.

சூடன்சாம்பிராணி தசத்துள்ளி லிங்கமொன்றரைத்துப்
போடுந்தான் பிரசவிக்கில்.

(இ-ள்) அழுக்குத்தள்ள குளிகையானது:—கற்பூரம்பத்திடை. சாம்பிராணி பத்திடைக்கு சாதிலிங்கம் ஓரிடைசேர்த்து அரைத்து மிளகளவு குளிகைசெய்து காலே மாலே ஒவ்வொருகுளிகை தேனிலி ழைத்துண்ணவும். குளிகுளித்தவர் வயற்றிலுள்ள அழுக்குகளே வெளிப்படுத்துவதல்லாமல் தேகத்துள்ள துர்நீரினேவாட்டும். உதிரவிர்த்தியைத்தரும். ஜீரணசக்தியும், மலசலம் பிரவர்த்தியாம். சூதகவாய்வுந்தீரும். பலநோயகலும். எ-று. 230

### விரோசனக் குளிகை.

காயந்திரிகடு சீரகம்பூண்டுங் கெந்தியரைத்
தீயுஞ்சுடுபுனலா னதில்.

(இ-ள்) விரோசனக் குளிகையானது:—சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், பூண்டு, பெருங்காயம், பருப்பு கெந்தகம் யாவும் சமனிடையாய்ச்சேர்த்து எலுமிச்சன் பழச்சாற்றில் நேகவரைத்து குன்றி வீதங்குளிகைசெய்து நிழலுலர்த்தி 1-அல்லது 2-குளிகை வெந்நீரில் பொடித்துக்கலக்கிக் குடிக்கவும். பேதியாகும் இராத்திரிக்கு சுக்கு மிளகு கியாழமுண்ணவும். எ-று. 231

### மேல்மூச்சு மாறக் குளிகை.

தேனிற்கோரோசினேயுந் திப்பிலிவெண் மிளகரைத்துத்
தானிட்டே வெந்நீரைத்தா.

(இ-ள்) மேல்மூச்சு மாறக் குளிகையாவது:—திப்பிலி, வெள்ளே மிளகு, கோரோசினே, இம்மூன்றையுந் தேனிலரைத்து கடலேயளவாயுருண்டைகள்செய்து அதில் 1-அல்லது 2-குளிகையைப் பொடித்து வாயிற்போட்டு வெந்நீர்குடிக்கவும். மேல்மூச்சு, மேல்சுவாசத்தையும் நிறுத்தும். அதையே 5-6-நாளுபயோகிக்க இருமல் இரைப்புந்தீரும். எ-று. 232

### கண்டமேற்பட்ட நோய்கட்குக் குளிகை.

தேனிலூர்கடுக்காயைச் சென்றரைத் துருண்டையதாய்த்
தேனிலோர் பலத்தேற்றிடு.

(இ-ள்) கண்டமேற்பட்ட நோய்கட்குக்குளிகையாவது:—தேனி லூறியகடுக்காயை விரைதள்ளி அதையரைத்து உருண்டைசெய்து 1-பலத்துள்ளதை மறுபடியும் தேனில் ஒருருண்டை இராத்திரியுண்ட பின்கொஞ்சமுலாவி வெந்நீர்குடித்து படுத்துறங்கவும். இப்படி 3-அல்லது 5-நாளிற் கண்டத்திற்குமேற்பட்ட வியாதிகள்தீரும். எ-று. 233

கண்ணோய் பூவிற்குக் குளிகை.

அரைத்துமே நந்திவேரதை யுருட்டியும்நிழ
லுரைத்துமே கண்ணிலேற்று.

(இ-ள்) கண்ணோய் பூவிற்குக் குளிகையாவது:—நந்தியாவர்த்த வேரை நேகவரைத்து ஒரே குளிகையாய்த்திரட்டி நிழலுலர்த்திமுலைப்பாலிலுரைத்து கண்ணிற்றீட்டிவர ஆணிப்பூதீரும். தேனிலுரைத்திட கண்படலந்தீரும். நீலிச்சாற்றிலுரைத்திட கண்திமிறு தீரும். கையான்சாற்றிலுரைத்திட கண் புகைச்சல் தீரும். அவரிச்சாற்றிலுரைத்திட கண்ணிற் புண்முதலியதுதீரும். 234

கலிக்கமிடுங் குளிகை.

மெந்தாலுமோரிடையே வெண்பிளாஸ்திரிமூன்றரைத்துச்
சிந்தாமற் கலிக்கமிடு.

(இ-ள்) கலிக்கமிடுங்குளிகையாவது:—மெந்தால் 1-பங்கும், வெள்ளைபிளாஸ்திரி 3-பங்குமாய்ச் சேர்த்தரைத்து முலைப்பாலிலுரைத்துக் கலிக்கமிடவும். முகசன்னி. சுகசன்னி. தலைவலி புறங்கழுத்திசுவு முதலியதுந்தீரும். இதோடு மூர்ச்சை, வலி, பேய், பிசாசுகளின் சோகந்தீரும். எ-று. 235

சந்திரோதயக் குளிகை.

படிகி மஞ்சட் பூரம் பழச்சாற்றினிலரைத்துக்
கடலையளவாய்க் குளிகைசெய்.

(இ-ள்) சந்திரோதயக் குளிகையாவது:—படிகாரம், பூரம், மஞ்சள், இம்மூன்றையுஞ்சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றரைத்து கடலையளவாய்க் குளிகைசெய்து 2-குளிகை தேனிலிழைத்துக் கொடுக்கவும். சுரமுதலிய பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 236

### மதனகாமேசுரக் குளிகை.

பூனைக்காலிச்சூதம் பொற்கெந்தி சாபத்திரி
ஆனைப்பாலிலரைத்தளி.

(இ-ள்) மதனகாமேசுரக் குளிகையாவது:—பூனைக்காலிவித்து, பாதரசம், நெல்லி, கெந்தி, சாபத்திரி, இந்நான்கும் அத்திப்பாலிலரைத்து உலர்த்தியபின் தேனைவிட்டரைத்து குன்றியளவாய்க் குளிகைசெய்து 1-குளிகை மாலை 5-மணிக்குத்தின்று உப்புபுளி காரமட்டாய் போஜனபதார்த்தமுண்டு பால்குடித்து போகிக்க கிருஷ்ண லீலையாம். எ-று. 237

### மூர்ச்சைவாய்வுக்குக் குளிகை.

கொமட்டிவேர் சாவல்ரத்தங் கொண்டரைத்து குளிகித்து
சிமிட்டுநேத்திரங் காடிற்றீட்டு.

(இ-ள்) மூர்ச்சைவாய்வுக்குக் குளிகையாவது:—சிறுகொமட்டி வேரை சிவந்தசாவலின் கொண்டையறுத்த வுதிரத்தாலரைத்து குளிகைகள் செய்து அதைக் காடியிலுரைத்து இருவிழிகளிலும் கலிக்கந் தீட்டிவர மூர்ச்சைவாய்வு போகாகண்வலி, சன்னிதோஷம் தலைநோய் தலைபாரம் தீரும். எ-று. 238

### மேகங்கட்குக் குளிகை.

பூரரசச்செந்தூரம் பொற்பங்கம் பின்னையரைத்
தேர குளிகையதினுற் செய்.

(இ-ள்) மேகங்கட்குக் குளிகையாவது:—இரசகற்பூரம் 2-இடை, கிரசசெந்தூரம் 1-இடை, ஆடுதின்னாப்பாளை 3-இடை இதைச் சுத்தி செய்து யாவுமொன்ருயரைத்து 14-குளிகைசெய்து அந்திசந்தி 7-நாளுண்ணவும். மேகம், மேகச்சூலை, வாய்வுரோகம், அரையாப்பு, இடுப்புவலி, புண்கிரந்தி முதலியதுந் தீரும். இச்சாபத்திய மிருக்கவும். எ-று. 239

### விஷ்ணுசக்கரக் குளிகை.

சத்திசிவன்றூரங்காந்தஞ் சிலைலிங்கங்கால்மல்
மத்திதிரிக்கு பழச்சாற்றரை.

(இ-ள்) விஷ்ணுசக்கரக்குளிகையாவது:—இரசம், கெந்தகம், தாளகம், லிங்கம், மனோசிலைகாந்தம், கால்மல் அதாவது இரசபஸ்பம், சுக்கு, மிளகு, திப்பிலியாவுஞ் சமனாய்ப்பொடித்து எலுமிச்சன் பழச்சாற்றில் 3-சாமமரைத்து பயரளவு குளிகைகள் செய்து தக்க அனுபானங்களில் 3-5-7-நாளளிக்கவும் பக்கசூலை, வாய்வு, சன்னி, 13, அழல், விக்கல், சர்த்திமுதலியது தீரும். பத்தியம் நோயறிந்துவைக்கவும். எ-று. 240

ஆனந்த பைரவக்குளிகை.

லிங்கமொடு மிளகு நாபிக்காரமயபுரத்தரைத்து
தங்குளிகை குன்றிடையேசெய்.

(இ-ள்) ஆனந்தபைரவக் குளிகையாவது:—லிங்கம், மிளகு, நாபி, வெண்காரம், யாவும் சுத்திசெய்து சமனாய்ச்சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்துக் குன்றியளவாய்க் குளிகைசெய்து இஞ்சிச்சாற்றிலிடவும். சுரம், மேகம், சன்னி, சீதளம், யாவுந்தீரும். பத்தியமாயிருக்கவும். எ-று. 241

கட்டுவாதிக் குளிகை.

சிங்கிவிடையம் பழரசத்தரைத்துக் குளிகித்துத்
த்ங்கியளியும் பேதிக்கே.

(இ-ள்) கட்டுவாதிக்குளிகையாவது—கற்கடக சிங்கியும், அதிவிடையமும் சமனாய்ச்சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் 2-சாமமரைத்து சின்னதும்பெரியதுமாய்க் குளிகைகள்செய்து நிழலுலர்த்தி வயதிற்குத் தக்கபடி அனுபானங்களி லிடவும். பேதியைக்கட்டும். எ-று. 242

கிரந்திக்குக் குளிகை.

மேனியிலையும்பூண்டு வெள்ளுள்ளியரைத்துருண்டை
யானதுவுண் மூன்றுதினமே.

(இ-ள்.) கிரந்திக்குக் குளிகையாவது:—குப்பைமேனியிலை, மிளகு, வெள்ளைப்பூண்டு இம்மூன்றுஞ் சமபாகமாயரைத்து தூதுளங்காயளவு குளிகைசெய்து 3-குளிகைவீதம் அந்திசந்தி 3-நாள் உட்கொண்டுவர கிரந்தியாணவை தீரும். கடும்பத்தியம் 3-நாள் மறுபத்தியம் 3-நாள் சென்றபின் 7-ம் நாள் தலைக்கு வார்க்கவும். எ-று. 243

பாம்புகடித்திறப்பவர்க்குக் குளிகை.

கீரிமூஞ்சு றுடும்பு கருடன் சாரையீரல் பிச்சு
நேரிலாட்டிக் குளிகை நீசெய்.

(இ-ள்) பாம்புகடித் திறப்பவர்க்குக் குளிகையாவது:—கீரிப் பிள்ளை, மூஞ்சூர், உடும்பு, கருடன், சாரைப்பாம்பு, இவைகளின் ஈரல்பிச்சுகளையெடுத்து யுலர்த்தி யாவும் சமனுப்சேர்த்து அதிநேடு முப்பூவானது கொஞ்சங்கூட்டி 4-சாமமரைத்து குன்றியளவாய்க் குளிகைசெய்து எந்தபாம்பு கடித்தபோதிலும் அவாள் கைகால் நகங்க ளிற்கீறி இம்மருந்தைவைத்தழுத்தி குளிர்ந்தசலம் 300-குடம்வார்த்து பின்துப்பட்டி 2 நனைத்து மேல்மூடியும் வைக்க 2-கடிகையான பின் வலதுபக்கமசைந்துவிட மீண்டெழுந்திருப்பான். எ-று. 244

நீரில்விழுந்திறப்பவர்க்குக் குளிகை.

முன்மருந்தைமார்புச்சி முக்கியம் நாவதித்கீறித்
தன்மருந்தைமே லழுத்திவை.

(இ-ள்) நீரில்விழுந்திறப்பவர்க்குக் குளிகையாவது:—தண்ணீ ரில்விழுந்து மடிந்தவர்க்கு அவாள்மார்பு உச்சி நாவு ஒன்றிற்கீறிமுன் மருந்தை அதின்மேல்வைத்து அழுத்தியிருக்கவும். அவர்கள் ஆக்கை வரண்டு நீர்கக்கி சற்றுநேரத்திற்கெல்லாம் யாவரும் பிரமிக்க எழுந் திருப்பர். எ.று. 245

பட்சகாசத்துக்குக் குளிகை.

நாபிமிளகுநீரில் நன்றரைத்துக்குன்றியிடை
தாபிகுளிகை நீரிற்றுக்கு.

(இ-ள்) பட்சகாசத்துக்குக் குளிகையாவது:—நாபியைச் சுத்தி செய்து அதற்குச்சமன் மிளகைப் பொடித்துச்சேர்த்து குன்றி அல் லது கடலையளவாகக் குளிகைகள்செய்து தண்ணீரிலுரைத்து உட் கொள்ளவும். வாய்வுமுதலிய பட்சகாசம்தீரும். நரமறகளு முருக்கு மேரும். எ-று. 246

வாந்திபேதிக்குக் குளிகை.

சூடனபின்வீரம்வசம்புச் சாம்பிராணிலிங்கத்
தோடரைத்துக் குளிகைசெய்தூட்டு.

(இ-ள்) வாந்திபேதிக்குக் குளிகையாவது:—சாதிலிங்கம், சவ்வீரம், அபின், கற்பூரம், சாம்பிராணி, வசம்புத்தூள்யாவுஞ் சேர்த்தரைத்து குன்றியளவு குளிகைதிரட்டிதேனிலிழைத்து உள்ளுக்களிக்கவும் வாந்திபேதியானது நிற்கும். நிற்காதாகில் 2-மணிக்கொருவிசையேற்றநிற்கும். எ-று. 247

கபாடக் குளிகை.

விடையமபினிசுக்குவெலு மிச்சைச்சாற்றரைத்துக்
கடலேயளவா யுள்ளுக்களி

(இ-ள்.) கபாடக் குளிகையாவது:—அதிவிடையம், அபினிவகைக்கு விராகனிடை 1, சுக்குத்தூள் விராகனிடை 2, இம் மூன்றையும் எலுமிச்சன் பழச்சாற்றரைத்து கடலேவீதங் குளிகைதிரட்டி ஒரு குளிகை வெந்நீரிலளிக்க உடனேபேதியைக் கட்டிவிடும். எ-று.

குழந்தைகட்கு கட்டுவாதிக் குளிகை

சாதிக்காயி லபினிதானடைத்து மஞ்சளப்பி
பேதிக்காய் புடமிட்டளி.

(இ-ள்) குழந்தைகட்கு கட்டுவாதி குளிகையாவது:—அபினி 1-பணவிடையை ஒரு சாதிக்காயினுளடைத்து அதின்மேல் மஞ்சளரைத்துக் கவசஞ்செய்து 2-3-விரட்டியிற் புடமிட்டெடுத்து அம்மஞ்சளை நீக்கி முலேப்பாலில் உளுந்திடை குழந்தைகளுக்குக் கொடுக்க பேதியைக்கட்டிடும். எ-று. 249

வாதசுர கெந்தி குளிகை.

கெந்திரசம்நாபிமிளகிற் பூசுணேவிரையு
முந்தியரைத்துக் குளிகைமூட்டு.

(இ-ள்) வாதசுரகெந்தி குளிகையாவது:—சுத்திகெந்தகம், பாதரசம், வசநாபி, மிளகு, பூசுனேவிரையும் சேர்த்தரைக்க இளகி மெழுகாயிருக்கும். அதிற் பயரளவு தக்கவனுபானங்களிலிடவும் வாதச்சுர முதலிய எவ்வகைச்சுரங்களும் நின்றுபோய்விடும். இதற்கு பத்தியமாயிருக்கவும். எ-று. 250

பழயச்சுரக் குளிகை.

வெள்ளெருக்கன் கொழுந்துமிளகுஞ்சன் மஞ்சட்கொஞ்சம்
உள்ளரைத்துக் கடலேயளவூட்டு.

(இ-ள்) பழையசுரக் குளிகையாவது:--வெள்ளெருக்கன் கொழுந்தும் மிளகும் சமனும், மஞ்சட்கொஞ்சமாயும் சேர்த்தரைத்து கடலை வீதங்குளிகைசெய்து அதில் ஒருகுளிகை அனுபானங்களிலேற்றவும். நாட்பட்ட பழையசுரமானது சலுதியில் நின்றுபோய்விடும். எ-று.

சகலநோய்க்குங் குளிகை.

திரிகடுகுமேனிச்சாற்றிட் டரைத்துக்குளிசித்து
பிரியபல நோய்க்கிடும்பின்,

(இ-ள்) சகலநோய்கட்குக் குளிகையாவது:—சுக்கு,மிளகு, திப்பிலி, இம்மூன்றையுஞ் சுத்திசெய்து குப்பைமேனிச்சார்விட்டரைத்து துவரையளவு குளிகைசெய்து நோய்களுக்குத்தக்க அனுபானங்களில் காலை மாலை 3-5 நாள் உட்கொடுக்க சகலநோய்களுந்தீரும். எ-று.

குளிர்சுரக் குளிகை.

நவமிளகுகழற்கொழுந்து நன்றரைத்துக் குளிகையுமூன்
ரவையனை வெல்லத்திடவறும்.

(இ-ள்.) குளிர்சுரக் குளிகையாவது:—மிளகு 9-க்குச் சமனுய்க் கெச்சைக்காய்க் கொழுந்தைச் சேர்த்தரைத்து 3-குளிகைகளாய்ச் செய்து அதைப் பனைவெல்லத்தில் ஒவ்வொருகுளிகையை 3-வேளைக் கொடுக்கவும். குளிர்சுரமான தொழிந்துவிடும். கடும்பத்தியம் வைக்கவும். எ-று. 253

விஜயவிக்கிரமசுரக் குளிகை.

தாளகந்துத்தம் நாபிசங்காரம் யிவைச்சார்
நீளவுமுண்டை செய்திடு.

(இ-ள்) விஜயவிக்கிரமசுரக் குளிகையாவது:—தாளகம், மயில்துத்தம், நாபி, வெண்காரம், இந்நான்கும் வகைக்கு அரைபலமாய்ச் சேர்த்து பாவையிலைச் சார்விட்டரைத்து குன்றியளவாய் குளிகை செய்து 3-நாள்தக்கவனுபானத்தினிலேற்ற சர்வசுரங்களும் நின்றுவிடும். எ-று. 254

சுரத்திற்குச் சோக்கர் குளிகை.

லிங்கஞ்சிலை கெவுரிதுத்தத்தில் வாளந்திப்பிலி மூலம்
மங்கை முலைப்பாலரைத்துவளி.

(இ-ள்.) சுரத்திற்குச் சொக்கர் குளிகையாவது:—சாதிலிங்கம், மனோசிலை, கெவுரி-மயில்துத்தம், சுத்திவாளம், திப்பிலிமூலம், யாவும் முலைப்பாலிலரைத்து பயர்வீதங் குளிகைசெய்து அந்திசந்தி 3-நாள் முலைப்பாலில் ஒவ்வொரு குளிகையிடவும் சுரமுதலியதியாவுந் தீரும். எ-று. 255

பிரதாபமார்த்தாண்ட குளிகை.

நாபிரசம்வாளம் லிங்கம் நற்காரம் பழச்சாற்றிற்
ஞபியிரைத்துக் குளிகைதாக்கு.

(இ-ள்.) பிரதாப மார்த்தாண்ட குளிகையாவது:—நாபி 2-விராகனிடை, ரசம் 2-விராகனிடைவாளம் 4-விராகனிடை லிங்கம் 4விராகனிடை வெண்காரம் 4-விராகனிடை இவ்வைந்தும் எலுமிச்சன் பழச்சாற்றரைத்து குன்றிவீதங்குளிகைசெய்து காலைமாலை 3-5-நாள் இஞ்சிசுரசத்தில் அளிக்கவும், சகலசுரங்களுந்தீரும். இச்சாபத்தியம்.எ-று

மகா ஆநந்த பைரவக்குளிகை.

திரிகடுகு நாபிலிங்கஞ் செங்கெந்திகாரம்பழத்
தரைத்திடு பயர் குளிகையது.

(இ-ள்.) மகா ஆனந்த பைரவக்குளிகையாவது:—சுக்கு, மிளகு, திப்பிலி, நாபி, லிங்கம், கெந்தி, வெண்காரம் யாவும் சமனாய் எலுமிச்சன்பழரசத்தில் 4-சாமமரைத்து பயர்வீதங் குளிகைசெய்து காலைமாலை 3-நாள் ஒவ்வொருகுளிகை தேனிலுரைத்திடவும். சுரம், குளிர், சன்னிமுதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 257

அக்கினிக் குமாரக் குளிகை.

விந்துநாதம் நாபிகாரத்தில் மிளகெர்க்கன்பட்டை
முந்தி பிரண்டைச்சாற்றரை.

(இ-ள்.) அக்கினிக்குமாரக் குளிகையாவது:—இரசம், கெந்தி, நாபி, வெண்காரம், வகைக்கு அரைபலம், மிளகு எருக்கன்வேர் பட்டை வகைக்கு 1-பலம் ஆகச்சேர்த்து பிரண்டைச்சாற்றிலரைத்து பயர்வீதங் குளிகைசெய்து 3-நாள் 2-வேளை தேனில் ஒவ்வொரு குளிகையிடவும் பலநோய்களுந்தீரும். 258

### சன்னிசைத்தியத்திர்க்குப் பூரக்குளிகை.

பூரந்துழாய்சாற்றிற் பொங்கமுணூறவரைத்
தேரப்பயர் குளிகைசெய்

(இ-ள்) சன்னிசைத்தியத்திற்குப்பூரக்குளிகையாவது:--பூரத்தை முலைப்பாலில் 4-சாமம் ஊறவைத்து எடுக்கச்சுத்தியாம், அதைத் துளசிச்சாற்றில் 3-நாளூறவைத்தெடுத்து அரைத்துச் சிறுபயர்வீதம் குளிக்கைசெய்து 1-குளிகை தேனிலிழைத்து 3-நாள் 6-பொழுதுண்ண, சன்னிசைத்தியந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 259

### வலிகள் 6-க்குக் குளிகை

எருக்கன்பால் சூதங்காரெள்ளூ செம்போத்துக்கண்ணென்
றரைக்கக் கால்மண்டலங் கொள்.

(இ-ள்) வலிகள் 6-க்குக் குளிகையாவது:—எருக்கன்பாலும் காரெள்ளும் வகைக்கு உழக்கு, ரசம் பலம் கால் செம்போத்து அதாவது கள்ளிக்காக்கையின் கண்விழி-1-யாவுமரைத்து கடலையளவாய் குளிகைசெய்து காலைமாலை கால்மண்டலம் இச்சாபத்தியத்தோடுண்டுவர, குமரகண்டவலி, காக்கைவலி, குதிரைவலி, புறவலி, முயல்வலி, திமிர்வலி, முன்வலிகள்தீரும். இன்னும் மார்வலிக்கு 1-பாகமும், குதிரைவலிக்கு அரைபாகமும் கொள்ள மற்றதியாவுந் தீரும். எ-று. 260

### கண்படலம்-வெள்ளெழுத்துக்குக் குளிகை.

நெல்லிமுள்ளி மிளகு தூளினிற் பழச்சாற்றரைத்
துருண்டை நெல்லிகண்ணிற்றீட்டவறும்.

(இ-ள்) கண்படலம்-வெள்ளெழுத்துக்குக் குளிகையாவது:—நெல்லிமுள்ளி, அரை கழஞ்சு, மிளகு கால் கழஞ்சு, சேர்த்துப்பொடித்து எலுமிச்சன் பழச்சாற்றிலரைத்து குளிகைசெய்து அதை முலைப்பாலிலுரைத்து கண்ணிலிடவும் - கண்படலந் தீரும். வெள்ளெழுத்து மாறும். எ-று. 261

### சுரத்துக்கு விக்கிரமக் குளிகை.

திப்பிலியிற் பாதிலிங்கஞ் செல்விபாலரைத்துருந்து
தப்பிலிதேனிற் குளிகைதாக்கு.

(இ-ள்) சுரத்துக்கு விக்கிரமக் குளிகையாவது:—திப்பிலி -2 இடை தூள்செய்து அதில் லிங்கம் 1-இடைசேர்தது கல்வத்திலிடுட்

மூலைப்பாலில் அல்லது பசும்பாலில் 2-ஜாமமரைத்து உளுந்தளவு குளிகைசெய்து சுரத்துக்குத் தேனில் அல்லது இஞ்சி சுரசத்தில் காலைமாலை ரெவண்டு குளிகையளிக்க ஒரோநாளையில் எவ்வித சுரமுந் தீரும். எ-று. 262

10 குளிகைப் படலம் 35

முற்றிற்று.

## 11 விரோசனப் படலம் 16.

### வாததேகப் பேதி.

பழம்புளியைக் கொடிக்கள்ளியின்பாலில் மத்தித்துட்
குழம்புகடலை யளவிற்கொள்.

(இ-ள்) வாததேகப்பேதியாவது:—பழயபுளியானது 1-கழற்சி யளவில் கொடிக்கள்ளிப்பாலானது அரை கழற்சியிடை சேர்த்து மத்தித்திடவும். அதுமெழுகாம். அதில் 1-கடலையளவு அல்லது சுண்டையளவு பனைவெல்லத்திலேற்றிடவும் பேதியாம். வாயினுலுண்டாகிய பலதுன்பங்களையும் நீக்குவிக்கும். 263

### பித்ததேகப் பேதி.

சிவதைவேர்பாலூறவதிற் சூரணம் பலங்காலாய
விதமா யுள்ளேற்றிடும்.

(இ-ள்) பித்ததேகப்பேதியாவது:—சிவதைவேரானதை பசும்பாலில் 1-நாளூறவைத்துலர்த்தி அதை யிடித்துச் சூரணஞ்செய்து அதில் கால்பலம் அல்லது அரைபலம் ஆள்பலமறிந்து உட்கொடுக்கவும் பேதியாம். பித்தத்தினுலுண்டாகிய கொடூரங்களியாவும் நீங்கிவிடும். எ-று. 264

### சேத்துமதேகப் பேதி.

வேறுரோசாப்பூவை வெண்ணையிற்றாளாயமத்தித்
தேறவே யேற்றுள்ளதை.

(இ-ள்.) சேத்துமத்தேகப் பேதியாவது;—ரோசாப் பூவை அரைபலம் வறுத்து பசுவெண்ணை ஒருபலத்தில் அதைப்பொடித்துப்

போட்டு வுலர்த்தித்தூளாக்கிச் சேர்த்து மத்தித்து அதில் கற்கண்டு ஒருபலம் பொடித்துச்சேர்த்துக் கழற்சியிடை உட்கொள்ளவும் பேதியாம். சேத்துமத்தாலுண்டாகிய நோயனைத்தும் நீங்கும்- எ-று. 265

ஆரோக்கிய சுகபேதி.

சோம்புபன்னீர்பூ தனியாசுக்கு நிலாவிரைகற்கண்
டாம்பொடித்துக் காச்சியுமுண்.

(இ-ள்) ஆரோக்கிய சுகபேதியாவது:—பன்னீர்பூ பலம் அரை சோம்பு, சுக்கு, வகைக்குப்பலம் கால் சூரத்துநிலாவிரை சூரத்துகடுக்காய் வகைக்குப்பலம் முக்கால் கொத்துமல்லி பலம் ஒன்று யாவும் இளவறுப்பாய்வறுத்து இடித்துச்சூரணஞ்செய்து சீனகற்கண்டு பலம் ஒன்று, தூள்செய்துபோட்டு அரைபடி ஜலம்விட்டு ஆழாக்காய் காச்சி வடித்து பால் முக்கால்படிவிட்டு குடிக்கவும் சுகுணமாய்ப் பேதியாம். பலநோய்கள் தீரும். எ-று. 266

நீராகாரப் பேதி.

முத்தெண்ணெக்காடியுழக் குண்ணலது வுப்புடனி
சித்தண்ணீர் தாம்பூலமுண்.

(இ-ள்) நீராகாரப்பேதியாவது:—ஆமணக்கெண்ணெயில் காடிநீர் வகைக்கு உழக்காகச்சேர்த்துக் குடிக்கவும் பேதியாம். ஈதன்றி, வேறு நீச்சத்தண்ணியில் கரிக்க உப்பிட்டுக்குடித்துவிட்டுத் தாம்பூலம்போட்டுக்கொள்ளவும் பேதியாம். இதிற் சிலநோய்கள் கண்ணும். எ-று.

திரிவிக்கிரமப் பேதி.

லிங்கம்ரசங்காரமொன்றினிற் றந்திமூன்றரைத்து
செங்குன்றி யளவாகத்தின்.

(இ-ள்) திரிவிக்கிரமப் பேதியாவது:—சாதிலிங்கம், பாதரசம், வெண்காரம் வகைக்கு விராகனிடை ஒன்று சுத்திவாளம் விராகனிடை மூன்று யாவுஞ்சேர்த்தரைக்கவும் மெழுகாம். அதிற்குன்றியிடை நெல்லிக்கா யூறுகாயில் அல்லது பனைவெல்லத்தில்வைத் துண்ணவும் பேதியாம் இரவில் மிளகுகியாழங் குடிக்கவும். எ-று. 268

## குளிர்ச்சிக்குப் பேதி.

ஆமணக்குயெண்ணெயிற் பேயன்பழத்தைநிசிவைத்து
நாமணக்க வுண்ணநலம்.

(இ-ள்) குளிர்ச்சிக்குப் பேதியாவது:—ஆமணக் கெண்ணெயா மூக்கில் பேயன்வாழைப்பழம் ஒன்று உரித்துப்போட்டுப் பிசைந்து இரவு முழுதும் அப்படியே வைத்து வெடிகாலையில் அதைக் குடிக்கவும் பேதியாம். இதிற் பித்தம், பைத்தியம், பிரமை, உன்மத்தம், தீரும். மருந்திடுமுறியும். எ-று. 269

## ஆக்கிராணப் பேதி.

பூண்டந்தர்தாமரையிற் புக்கதுணிமுடிந்துநிசி
பாண்டம்வைத்து வெடிகால்முகர்

(இ-ள்) ஆக்கிராணப் பேதியாவது:—வெள்ளைப்பூண்டு 3-அந்தரத்தாமரையிலே ஆர்க்கப்பொடித்துத் துணியில்முடிந்து இராமுழுதும் ஒருபாண்டத்தில் அப்படியேவைத்து அதிகாலையில் அதையெடுத்து இருநாசிகளில் முகரப்பேதியாம். இப்படி எத்தனைதிர முகர்ந்தாலும் அத்தனைதிறம் பேதியாம். எ-று. 270

## தேகாக்கிராணப் பேதி.

பள்ளாட்டுப்பாலைதிரி பத்துமிளகுங்கசக்கி
கொள்ளாட்டுநீர் நிசிவைத்துமுகர்.

(இ-ள்) தேகாக்கிராணப் பேதியாவது:—ஆடுதின்னுப்பாலையில் வெள்ளைப்பூண்டுதிரி 3-அல்லது 5-மிளகு 10-சேர்த்து ஆர்க்கப் பொடித்துக் கசக்கித்துணியில் முடிந்து இரவுமுழுதும் வெள்ளாட்டு நீரில் ஊறவைத்து அதைக்காலையிலெடுத்து முகரவும் பேதியாம். இப்படி எத்தனைத்திற முகரினும், அத்தனைத்திறம் பேதியாம் பலநோய்கள் தீரும். எ-று. 271

## சிவதைவேர்ப் பேதி.

ஆப்பாலவித்த சிவதைவே ரேலமுஞ்சீனி
கோப்பாயிடித்த தூட்கொள்

(இ-ள்) சிவதைவேரைப் பேதியாவது:—சிவதைவேரைப்பசும்பாலிற்போட்டு பால்சுண்டக்காச்சி அதையுலர்த்தியதில் ஏலம் அரிக்கா

இடைசேர்த்துப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து அதற்குச் சரிசர்க்கரைக்கூட்டிக்கலந்து ஒரு வெறுகடித்தூளை வெந்நீரிற் கொள்ளவும். பேதியாம் பலநோய்களுந்தீரும். எ-று. 272

நிலாவாரைப் பேதி.

திரிகடுகேலங்கடுக்காய் திகழ்நிலாவாரை நெல்லி
பரிவொடு தூளங்குபடை.

(இ-ள்) நிலாவாரைப் பேதியாவது:—சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், நிலாவாரை என்பது நிலாவிரை, கடுக்காய், நெல்லிப்பருப்பு, யாவுஞ் சமனுய்ச்சேர்த்து இடித்துப்பொடித்து வஸ்திரகாயஞ் செய்து காலையில் 1-வெறுகடிவீதம் உட்கொண்டுவரவும், நன்றுய்பேதியாகும். இதிற் பலநோய்களுந்தீரும். நல்லெண்ணை கடுகாகாது. எ-று. 273

தசவர்க்கப் பேதி.

திரிகடுகுநாகப்பூ சிவதை லவங்கமுமேலந்
திரிபலைசினிபாற் றூளாய்த்தின்

(இ-ள்) தசவர்க்கப்பேதியாவது:—சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, சிவதைவேர், சிறுநாகப்பூ, ஏலம், லவங்கம், யாவும் சமனுய்ச்சேர்த்து இடித்துப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து சரிசர்க்கரை சேர்த்து 1-வெறுகடித்தூள் தேனிவிழைத்துக் காலையிலுண்ணவும் பேதியாம். பித்தவாய்வு, பித்தம், பித்தவெரிச்சல், பித்தமயக்கமுதல்தீரும். எ-று. 274

கூழுண்ணும் பேதி.

தந்திபேரண்டம் வித்ததிறகிரட்டைக்கரி மூன்று
மூந்தியரைத்திட வுண்டிடு.

(இ-ள்) கூழுண்ணும் பேதியாவது:—சுத்திசெய்த வாளப்பருப்பும், ஆமணக்கண் முத்துரித்ததும், கொட்டாங்கச்சிகரிக்கிய கரியும், இம்மூன்றுஞ் சேர்த்தரைத்து யெடுக்கவும் மெழுகாம். இதிற் கொஞ்சம் ஆளுக்குத் தக்கபடி அளித்து வரப்பேதியாம். மீறில்-வசம்பு கரி வெந்நீரிற் புகட்டவும். எ-று. 275

சாதாரணப் பேதி.

வாளமே ரண்டமுத்து வன்காசு கட்டிசமன்
நீளபாலினி லரைத்திடு.

(இ-ள்.) சாதாரணப்பேதியாவது:—சுத்திசெய்தவாளம் ஆமணக்குமுத்து, காசுகட்டி, சமனாய்ச்சேர்த்து பசும்பால்விட்டரைத்தெடுக்க மெழுகாம். இதிற் குன்றியளவு வெந்நீரிற்கொள்ளவும் பேதியாம். இதில் காசுகட்டிக்குப்பதில் மிளகும், பாலுக்குப்பதில் எலுமிச்சம்பழரசஞ் சேர்த்தாலுஞ் சேர்க்கலாம். மீறில் வசம்பு கியாழம், அல்லது அபின்றின்னப் பேதிநிற்கும். எ-று. 276

வாளமில்லாப் பேதி.

கடுக்களிசுக் கிந்துப்புக் கால்மதங்கோடங்கை
அடுக்கிளநீர் விட்டரைத்துண்.

(இ-ள்.) வாளமில்லாப் பேதியாவது:—கடு-கடுக்காய், களி-களிப்பாக்கு, சுக்-சுக்கு, இந்துப்பு இந்நான்கிற்கும் இடையானது-யானைக்குக்கால் 4, மதம் 3, கொம்பு-2. துதிக்கை 1. இவ்வாறு சேர்த்து நிசித்தண்ணீர் விட்டரைத்து அதிற்கலக்கி குடிப்பிக்க நன்றாய்ப் பேதியாம். இதிற் பலவினைகளுமற்று தேகஞ் செழிப்புண்டாகும். பத்தியமொன்றுமில்லை. எ-று.. 277

அண்ணுடஞ் செய் பேதி.

கடுக்காய்ப்பிஞ்சதில் வாளங்கண்டரைத்து வாளறிந்து
முடுக்காயண்ணுடஞ் செய்தளி.

(இ-ள்) அண்ணுடஞ் செய்பேதியாவது:—கடுக்காயின் பிஞ்சும், வாளமுஞ் சேர்த்தரைத்து அண்ணுடம் ஆளறிந்து சுண்டைக்காயளவு திரட்டிக் கொடுத்துவரவும் பேதியாம். ஒருவேளை பேதியானது அதிகப்படின், வசம்பைச்சுட்டு வெந்நீரிற் கலக்கிக் குடித்திடவும் பேதியானது நின்றுவிடும். எ.று, 278

## 11. விரோசனப்படலம் - 16.

முற்றிற்று.

## 12 பஸ்மப் படலம் 42.

### கற்பூர சிலாசித்துப் பஸ்மம்.

கற்பூரச்சித்தைக்கண்டு வெந்தயத்தப்பி
நற்குக்கிடம்வை நீறும்.

(இ-ள்) கற்பூரசிலாசித்துப் பஸ்மமானது:—கற்பூரசிலாசித்தை சுண்ணாம்பிற் கவசஞ்செய்து உலர்த்தி தட்டியுதிர்த்து, வெந்தயத்தை தண்ணீரிலூறியபின் அரைத்து அதனுள் அக்கட்டியைவைத்துக் கவசஞ்செய்து 10-எருவிற்புடமிடப் பஸ்மமாம். அதை நுணுக்கித் தம்படியிடை அரை ஆழாக்கு பசும்பாலிற்போட்டு கால்நாழி பொறுத்துக் குடித்திடவும். இப்படி 5-நாட்காலையிற் குடித்துவர, இருமல். இரைப்பு, ஸ்ரீகள்நோய் தீரும். பசிமிகுதியாயெடுக்கும், புண், சிரங்குகளுமாறிவிடும். வெண்ணெ நெய்யிலுண்ண சீதபேதிதீரும். தேக வலுவைத்தரும். தாதுபுஷ்டி யுண்டாக்கும், இச்சாபத்தியம், எ-று.

### சீமைக் கல் நார் பஸ்மம்.

பாரிலிவணிலையாவது பட்டையுட்கல்நாரேற்றி
சேரபுடமிட பஸ்மஞ்செய்.

(இ-ள்) சீமைகல்நார் பஸ்மமானது:—இலந்தையிலை யரைத்து அல்லது அதின் பட்டையைச் சதைத்து உள்ளே கல்நாரைவைத்து அகலில் அலலது, கோணிப்பட்டையிற் சுருட்டி 20-எருவிற் புடமிடப் பஸ்மமாம். அதிற்றம்படியிடை இளநீரின் வாயையறுத்து அதிற்போட்டு வாய்மூடி ராவடுப்பில் சட்டியிற்றண்ணீர்விட்டு இக்காயை நடுவில்வைத்து அடுப்பைப் பற்றவைத்து வெடிகாலையிற் குடித்துவரவும். இப்படி $\frac{1}{2}$-அல்லது 1-மண்டலங்குடிக்க நாபிரிணம், வாய்நாற்றம், பல்ரோகம் 32-ம் தீரும். மேகமுதலிய தேகவிழலையுமாற்றும். பத்தியமா யிருக்கவும். எ-று. 280

### தாளக பஸ்மம்.

சீனத்திற்றாஞ்செலுத்திப் புடமிடபஸ்மம்
ஆணத்திற்பல நோயறும்.

(இ-ள்) தாளகபஸ்மமானது:—ஒரு குடுவைக்குள் படிகாரத் தூளைப்போட்டு நடுவில் தாளகத்தை வைத்து மேலகல்மூடி சீலை செய்து 15-எருவிற் புடமிட பஸ்மமாம். எடுக்க மஞ்சள்நிறமாயுள்ளதை நுணுக்கிவைத்துக்கொண்டு அனுபானங்களிலிட அந்தந்த நோய்கள் தீரும். சிறுகுழந்தைகட்குமாம். உடம்பூகாது. இச்சா பத்தியம். எ-று. 281

அபிரேக பஸ்மம்.

பொட்டுலுப்பிலபிரேகம் புளியாரையதை
இட்டு குக்கிடம் வைத்தெடு.

(இ-ள்.) அபிரேக பஸ்மமானது:—ஒரு சொப்பில் பொட்டுலுப்பு முக்கால்வாசி போட்டு அதினுள் வெள்ளை அபிரேகத்தை துண்டுதுண்டாய்க் கத்திரித்து வைத்து மற்றதற்குப் புளியாரைக் கீரையை சொப்பிமேலகல்மூடி சீலைமண்செய்து 30-எருவிற் புடமிடப் பஸ்மமாம். அதில் சுண்டையளவு தேனில் 3-அல்லது 5-நாள் காலை மாலை யுண்டுவர நீரொழுக்கு, நீர்க்கட்டு முதலியதுதீரும். இச்சாபத்திய மிருக்கவும். எ-று. 282

ரசகற்பூர பஸ்மம்.

பூரத்தைச்சீனத்திற்பொங்க வறுத்தேயெடுத்துப்
பாரத்தைப்பஸ்ம மாகும்.

(இ-ள்) இரசகற்பூரபஸ்மமானது:—இரசகற்பூரம் பலம் 1-க்கு படிகாரம் பலம் ஒன்னறை பொடித்து அடுப்பின்மேற்சட்டியிற் பாதி போட்டு நடுவில் பூரம்வைத்து மேலே மற்றப்பாதியைப் போட்டுத் தீயெரிக்க, அப்படிகாரம் பொங்கி உள்ளிருக்கும் கட்டியைவெளியிலே விடவொட்டாம லழுத்தியிருக்கையில் அவ்விரண்டையுங் கீழுமேலுமாய்ப் புறட்டிப்புறட்டிக் கிளறி வெந்தயத்தில் எடுத்து அப்பூரத்தை நுணுக்கி வைத்துக்கொண்டு பலநோய்கட்குத்தக்க வனுபானங்களிலேற்ற யாவுந்தீரும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 283

சவ்வீர பஸ்மம்.

வீரத்தைநாய்மண்டை வெள்ளோடுதூளிலிட்டன்
னேரத்திலோ ரெருவிலெரி.

(இ-ள்) சவ்வீர பஸ்மமானது:—சவ்வீரத்தை நாய்மண்டை யோட்டை இடித்துத்தூள்செய்து தெள்ளியதை ஓரகலிற்பாதி போட்டு நடுவில் வீரத்தைவைத்து மேலேயும் அத்தூளைப் போட்டு சீலைமண் 7 செய்து ஒரு விரட்டியிற் புடமிடவும் பஸ்மமாம். அதில் ஒரு அரிசிடை தேனிலேற்றவும். சன்னிதீரும். பல்கிட்டியது தாள் திறக்கும் இன்னும் சுரமுதலிய பலவினைகளும் நீங்கும். எ-று. 284

இலிங்க பஸ்மம்.

லிங்கத்தையாதனைப்பாலிட்டு சுருக்கிடில் விசிரி
பாங்கிலையுள் முழப்புடம்வை.

(இ-ள்.) இலிங்க பஸ்மமானது:—இலிங்கத்தைக் காட்டாமணக் குப்பாலில் 2 சாமஞ் சுருக்கிட்டு விசிரியிலையை ஒண்ணுபாதியா யறுத்து தேங்காய் கனத்துக்குள்வைத்து கோணிப்பட்டையிற்சுருட் டிமுழப்புடமிடவும். பஸ்மமாம். அதை நுணுக்கி சகலநோய்கட்குந் தக்கவனுபானங்களிலேற்றிட யாவுந்தீரும் இச்சாபத்தியமா யிருக்க வும். எ-று. 285

சாதிலிங்க பஸ்மம்.

முள்ளங்கிக்குள்ளி லிங்கமுன்வைத்தவ் வேரரைத்துக்
கொள்ளங்கிப் புடமிட்டெடு.

(இ-ள்) சாதிலிங்க பஸ்மமானது:—சாதிலிங்கத்தை முள்ளங்கிக் கிழங்கினுள்வைத்து வேறுமுள்ளங்கியின் வேரரைத்துக் கவசஞ் செய்து 10-எருவிற் புடமிட்டெடுக்க பஸ்மம் வெண்மையா யிருக்கும் பலநோய்க்கும் தக்க அனுபானங்களில் ஏற்றிவரவும் யாவுந்தீரும். இச்சாபத்தியமாகவே யிருத்தல் வேண்டும். இப்பஸ்மம் வெண்மை யாவது மிகக்கஷ்டம். எ-று. 286

கல்நாறு பஸ்மம்.

தெருவிலழுகியினைச் சென்றரைத்துக்கல்நாரைச்
சொருவியதைக் கவசித்தெரி.

(இ-ள்) கல்நாறுபஸ்மமானது:—தெருவிலழுகியென்னுங்குப்பை மேனியையரைத்து அதிற் கல்நாரைவைத்து சொருகிக்கவசஞ்செய்து 20 எருவிற் புடமிடவும் துல்யமாகிய பஸ்மமாம். இதிற் சுண்டைய

ளவு அனுபானத்திட மேகமுதலியதுதீரும். பல்துலக்கிவர பல்நோயற்றுப்பல்இறுகும். எ-று. 287

## சித்தண்ட பஸ்மம்.

அண்டோடுபூரம் பழச்சாற்றரைத்துப்பில்லித்
துண்டோட்டிற் போடும்புடம்.

(இ-ள்.) சித்தண்ட பஸ்மமானது:—சித்தண்டவோடு பலம் 2, பூரம்விராகனிடை கால் இதைப்பழச்சாற்றரைத்துப் பில்லைசெய்து லர்த்தி ஓட்டில்வைத்து அதின்மேலோடுமூடி சீலைமண்செய்து குக்கிடப்புடமிடவும் இப்படி 5-புடமிடப் பஸ்மமாம். இதிற்பணவிடை தேனிற்கொள்ள வெள்ளை வெட்டைமுதல் இன்னுஞ்சில நோய்களுந் தீரும். எ-று. 288

## கரட்டுகெந்தி பஸ்மம்.

கெந்தின்பொடுதலையைக் கிட்டியரைத்துள்வைத்து
ஐங்தெருவிற் புடமிட்டெடு.

(இ-ள்) கரட்டு கெந்தி பஸ்மமானது:—பொடுதலை இலையையரைத்து அதனுள் கரட்டுக்கெந்தகத்தை வைத்துப் பதிந்து ஐங்தெருவிற் புடமிட்டெரிக்கப் பஸ்மமாம். அப்பஸ்மம் துவரையளவு நெய்யிலிழைத்துண்டுவரவும், தவளைச்சொரி, மேகப்படை, ஊரல், தினவு முதல்தீரும். எ-று. 289

## கல்மத பஸ்மம்.

கல்மதத்தைவேலிச்சார் கண்டரைத்துப்பில்லித்தோட்
டில்லையைந் தெருவிலெரி.

(இ-ள்) கல்மதபஸ்மமானது:—கல்மதத்தைச் சுத்திசெய்து உத்தாமணியிலைச்சாற்றி லரைத்துப் பில்லைசெய்து ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து 25-விராட்டியிற் புடமிட பஸ்மமாம். இதில்பணவிடை அந்தந்த நோய்களுக்குத்தக்க அனுபானங்கலிட யாவுந்தீரும. எறு. 290

## கற்பூர பஸ்பம்.

சூடவல்லியையரைத்துச் சூடனைவைத்துச்சீலித்
தோடதிற்புட மிட்டெடு.

(இ-ள்) கற்பூரப் பஸ்பமாவது:—கற்பூரவல்லியை யரைத்து ஆலாத்திக்கற்பூரத்திற்குக் கவசஞ்செய்து ஓட்டில்வைத்து மேலோடு மூடி 4-5 சீலைசெய்து 4-வரட்டியிற் புடமிட்டெடுத்திட பஸ்மமாம், இதிற்றுவரையளவு தேனிலிழைத் துண்டு வரவும். சன்னி முதலிய குளிர், சுரம், தலைவலிமுதலிய பலநோய்களுந்தீரும் பத்தியந்தக்கபடி யிருக்கவும். எ-று. 291

குழைகேந்தி பஸ்மம்.

குழைகெந்தி கோவைச்சார்கொண் டரைத்தகலேற்றி
இழைசந்து பத்தெருவிட்டெரி.

(இ-ள்) குழைகெந்தி பஸ்மமானது:—குழைகெந்தியைக்கோவை யிலைச்சாற்றி லரைத்தெடுத்து பில்லைதட்டி அகலில்வைத்து மேலகல் மூடி சந்துவாய் சீலைசெய்து 10 எருவிற் புடமிட்டெடுக்கவும் பஸ்ம மாம். அதை அனுபானமறிந்தளிக்க வாய்வுமுதலிய பலநோய்களுந் தீரும். எ-று. 292

கோரோசினை பஸ்மம்.

சங்கன்வேரோசினையுஞ் சந்தித்தரைத்தெருவெட்
டங்கனே புடமிட்டெடு.

(இ-ள்) கோரோசினை பஸ்மமானது:—சங்கன்வேறுங் கோரோ சினையுஞ் சமனுயரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிவிட்டுமே லோடுமூடிச் சீலைசுற்றி 8-எருவிற் புடமிடவும், வெண்மைநிறமாகிய பஸ்மமாம் அதிற்றுவரையளவு கத்திரிச்சமூலத்தூளில் உட்கொடுக்க வும் சதையுருக்கி, எலும்புருக்கி, நீரடைப்பு, கல்லடைப்பு, சூலைமுத லியதியாவுந்திரும். எ-று. 293

தாம்பிர பஸ்மம்.

வெண்பூனைக்காஞ்சியிலை விட்டரைத்துச்செம்புதகட்
டுண்ணுளாந் தெருவிலெரி.

(இ-ள்) தாம்பிர பஸ்மமானது:—வெள்ளைப் பூனைக்காஞ்சி யிலை யையறுத்து செம்புத்தகட்டிற் கவசித்து ஓட்டிலிட்டு மேலோடுமூடிச் சீலைசெய்து 30-எருவிற் புடமிட்டெடுக்கவும். தும்பைப்பூபோலப்பஸ் மமாம். இதில் அரிசியிடை நெய் தேன் முதலியயதிலுண்ணவும் பல ரோகங்களுந்தீரும், பசிமிகுதியாம். எ-று. 294

மிருதார்சிங்கி பஸ்மம்.

தார்சிங்கியைப் பிரமதண்டு வேரிற்பதிந்து
பார்சீலேசெய் தெருபத்தெரி.

(இ-ள்) மிருதார்சிங்கி பஸ்மமானது:—மிருதார்சிங்கியைப் பிரமதண்டு வேரினுட்டுளேத்து அதிற் கட்டியைவைத்துப்பதிந்து அதிற் றமூரடைத்து சீலேமண்செய்து 10-எருவிற் புடமிடப் பஸ்மமாம். அதிற்பணவிடை தக்கவனுபானங்களிலளிக்க பொக்குரிணம், புண், சிரங்கு, கிரந்திமுதல்தீரும். எ-று. 295

இரச பஸ்மம்.

நாகத்துளிரசமும் நன்றரைத்தரிசியிடை
பாகப்படிவினை கட்களி-

(இ-ள்) இரசபஸ்மமானது:—நாகயிலேத் துளிரும் பாதரசமுஞ் சேர்த்தரைத்து எடுக்க மடியும் அதில் 1-அரிசியிடை காலேமாலே 3-அல்லது 5-7-நாளுண்டுவரவும் அனந்தவியாதிகள் தீரும், இச்சா பத்தியமாயிருக்கவும். ஒருபோதும் வாய்பிடிக்காது. பிடிக்கில் வேலன் பட்டைக் கியாழங் கொப்பளிக்கத்தீரும். எ-று. 296

வங்க பஸ்மம்.

பூண்டுபிரண்டையுமரைத்து பொங்குவங்கந் தகடடித்து
மீண்டுபுடங்க வசித்திடு.

(இ-ள்) வங்கபஸ்மமானது:—வெள்ளேப்பூண்டையும், பிரண்டையும், ஒன்றுயரைத்து வங்கத்தைத் தகடாயடித்து அதற்குத்தேங்காய்வீதங் கவசித்து முழப்புடமிட்டெடுக்கவும் பஸ்மமாம், பலநோய்கட்குத் தக்கவனுபானங்களிலேற்றிப் பத்தியமா யிருக்கயாவுந் தீரும் எ-று. 297

வெண்குங்கிலிய பஸ்மம்.

குங்கிலியத்தைமேனிக் குட்கவசித்தெண்ணெருவி
லிங்கிடவும் புடமொன்றதில்.

(இ-ள்) வெண்குங்கிலிய பஸ்மமானது:—வெள்ளேக்குங்கிலியத்தைக் குப்பைமேனியை யரைத்துக் கவசஞ்செய்து ஓட்டிலிட்டு மேலோட்டுமூடி சீலேமண்செய்து 8-எருவிற்புடமிடவும் பஸ்மமாம். அதை பலநோய்கட்கும் தக்கவனுபானங்களிலிட யாவுஞ்சுகுணமாம். எ-று.

வெள்ளி பஸ்மம்.

எவாச்சாரங் கள்ளிப்பால் விட்டரைத்துத் தகடேற்றி
உவாச்சிலைச் செய்தெரிகஜம்.

(இ-ள்) வெள்ளிபஸ்மமானது:—எவாச்சாரத்தைக் கள்ளிப் பால்விட்டரைத்து வெள்ளித்தகட்டின் மேற்பூசி உலர்த்தி அகலி விட்டு மேலகல்மூடிச் சீலைமண்செய்து கஜப்புடமிடப் பஸ்மமாம். இதில் ஒரு அரிசியிடை தக்க வனுபானங்களிலிட பலநோய்களுந் தீரும். தாதுவிர்த்தியையுந்தரும் பத்தியமாயுண்ணவும். எ-று. 299

பூர பஸ்மம்.

சுத்திப்பூரமுமொன்றதுட் படிகிரெண்டரைத்துத்
தித்திப்பா யனுபானத்திடு.

(இ-ள்) பூர பஸ்மமானது:—சுத்திசெய்த ரசகற்பூரம் 1-இடை பொரித்தவெண்காரம் 2-இடை, இவைகளை ஒன்றுகச் சேர்த்தரைத்து 1-2-அரிசியிடை பலவனுபானங்களிலும் எவ்விதநோய்கட்கு மளிக்க யாவுந்தீரும். பத்தியம் நோய்களுக்குத்தக்கபடி வைக்கவும். இதைக் காலை மாலை 3-அல்லது 5-நாளேற்றிவரவும். எ-று. 300

அன்னபேதி பஸ்மம்.

பேதிபழச்சாற்றிட்டுப் பின்னிரவி மூணுள்வை
சோதியுடன் றுல்யநீராம்.

(இ-ள்) அன்னபேதி பஸ்மமானது;—அன்னபேதியை எலுமிச் சன்பழச்சாற்றிலிட்டு 3-நாள் ரவியில்வைத்து காற்றேறும லெடுத்து பார்க்கத்துல்யபஸ்மமாயிருக்கும். அதைப்பின்வரும் செந்தூரம்போல் உபயோகிக்கவும். பலநோய்களையுங் கண்டிக்கும். எ-று. 301

இந்துப்புப் பஸ்மம்.

இந்துப்பு வெள்ளெருக்கனின் பழுப்புள்ளிட்டேமை
சந்திப்புக் கவசமெரியும்.

(இ-ள்) இந்துப்புப் பஸ்மமானது:—ஒருசட்டியில் வெள்ளெருக் கினிலைப் பழுப்பைப் பரப்பி அதின்மேல் இந்துப்பைத்தூவி, அதின் மேல் அப்பழுப்பைப் பரப்பி, மறுபடியும் இந்துப்பும் அப்பழுப்பும் அடுக்காய்ப்பரப்பி வேண்டியவரையில் இவ்வார் அமைத்து மேற்சட்டி

மூடி சீலேசெய்து காடாக்கினியாக கால்சாம மெரித்தெடுக்கப் பஸ்ம மாம். அதை மஞ்சட்கியாழத்தில் கச்சக்கருவாடு வறுத்ததுள் வெறு கடியும். இப்பஸ்மம் பணவிடையும் சேர்த்துட்கொடுக்க, காச்சற்கட்டி மூதல் உஷ்ணவாய்வு, சூதகவாய்வு தீரும். இவைகள் தீரும்வரையி லுண்ணவும். கட்டிகளுங் கரைந்துவிடும். எ-று. 302

கருடக்கல் பஸ்மம்.

கதலிகட்டைத்துளேக்குட் கருடக்கல்லிட்டுச்சீவித்
தகிகஜப் புடமிடுந்தான்.

(இ-ள்) கருடக்கல் பஸ்மமானது:—வாழைக்கட்டையின் நடுவிற் றுளேசெய்து அதிற் கருடக்கல்லேவைத்து சீலேமண் செய்து கஜப்புட மிடவும். பஸ்மமாம். இதிற் குன்றியிடை காலேமாலே 5-அல்லது 7-நாள் தக்கவனுபானங்களிலிட பலவித நோய்களுந்தீரும். பத்தியம் நோய்களுக்குத் தக்கபடி யிருக்கவேண்டும். எ-று. 303

கழற்சிக்காய் பஸ்மம்.

கழற்பருப்பு மேனிச்சார் கலந்தரைத்துப் பில்லேசெய்து
அழற்படவுங்குக்கிடத் தெரி.

(இ-ள்.) கழற்சிக்காய் பஸ்மமானது:—கழற்சிப் பருப்பை ஓட கற்றிப் பொடித்து இஞ்சிச்சாற்றரைத்துப் பில்லேசெய்து 10-எருவிற் புடமிடவும் பஸ்மமாம் இதிற் குன்றியிடைதேன், நெய்யில் 3-5-நாள் அந்திசந்தி தின்னவும். விரைவாதந்தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 304

பஞ்சதீபாக்கினி பஸ்மம்.

லிங்காசங் கெந்திதாளகம் வீரமாதளேப்பால்
பொங்கவரைத்துப் புடத்திற்போடு.

(இ-ள்). பஞ்சதீபாக்கினிபஸ்மமானது:—இலிங்கம், ரசம், கெந் தகம், தாளகம், வீரம், இவ்வைந்தும் சமனுப்சேர்த்து காட்டா மணக்குப்பாலில் 2-சாமம் அரைத்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி சீலேசெய்து குக்கிடப்புடமிட பஸ்மமாம். இதிற் சகலநோய்களுக்கும் தக்கவனுபானத்தேற்ற யாவுந்தீரும். எ-று. 305

### படிகிதாளக பஸ்மம்.

படிகியுந்தாளக மேனிச்சாற்றறைத்தகலில்
முடிகிச்சீலைகள் செய்தெரி.

(இ-ள்.) படிகிதாளக பஸ்மமானது:—தாளகமும் படிகாரமும், சமனுப்ச் சேர்த்து குப்பைமேனிச் சாற்றரைத்துப் பில்லைசெய்து அகலில் வைத்து மேலகல்மூடி சீலைசெய்து குக்கிடப்புடமிடவும், பஸ மமாம். அதிற்றுவரைவீதம் அந்திசந்தி 6-நாள் தேனிலிட சகல சுரங்கள், இருமல், இரைப்பு, ஈளை, க்ஷயம், முதலியதுந்தீரும். இச்சா பத்தியமாயிருக்கவும். எ-று. 306

### சங்குபாஷாண பஸ்மம்.

சங்குப்புகையிலைச்சார் தன்னிலரைத்தோட்டிலிட்டு
அங்குப்புடமிடப் பஸ்மம்.

(இ-ள்) சங்குபாஷாணப் பஸ்மமானது:—சங்குபாஷாணத்தை புகையிலைச் சார்விட்டரைத்து பில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி சீலைசெய்து 4-எருவிற் புடமிடப்பஸ்மமாம். இதிற் பணவிடைதேனில் 3-நாள் அந்திசந்தி யுண்ணவும். சுரங்கள் 64-ம் தீரும். எ-று. 307

### பால் துத்தப் பஸ்மம்.

வெள்ளெருக்கன்பழுப்பரைத்து வெண்பால் துத்தங்கவசித்
துள்ளிருக்கப் புடமையைந்தெரி.

(இ-ள்) பால்துத்தப் பஸ்மமானது:—வெள்ளைப்பால்துத்தத்தை வெள்ளெருக்கன் பழுப்பிலையையரைத்துக் கவசஞ்செய்து சீலையுங் கட்டி. 25-எருவிற் புடமிடவும் பஸ்மமாம். இப்பஸ்மத்தைக்கொண்டு எந்தச்சரக்கையும் எளிதிற் பஸ்மிக்கலாம். எ-று, 308

### பொட்டுலுப்புப் பஸ்மம்.

ஆமையோடகற்றாவி யங்குப்பிட்டகல்மூடி
நேமமாய்க் கம்பிபிகிந்தெரி.

(இ-ள்.) பொட்டுலுப்புப் பஸ்மமானது:—ஒரு அகலில் 1-பலம் ஆமையோட்டைப் பொடித்துத்தூவி அதின்மேல் ஒருபலம் பொட்டு லுப்பைப்போட்டு மேலகல்மூடி கம்பியாற் பிகிந்துகட்டி சீலைமண்

செய்து 10-எருவிற் புடமிட்டெடுக்கப் பஸ்மமாம். இதிற்குன்றி யிடை தேன்முதலிய வனுபானங்களிலேற்றப் பித்தக்குன்ம முதலி யவை தீரும். எ-று. 309

விராற்கல்லு பஸ்மம்.

நேர்விராற்றலைக்கல்லை நீர்முள்ளிக் கவசித்தீ
ரார்விராட்டியிற் புடமெரி.

(இ-ள்.) விராற்கல்லு பஸ்மமானது:—விரால்மீன்றலைக் கல்லை நீர்முள்ளியிலையரைத்துக் கவசஞ்செய்து சீலைமண்கட்டி 12-எருவிற் புடமிடப் பஸ்மமாம். இதிற்குன்றியிடை 6-நாள் அந்திசந்தி தேனி விழைத்துண்ண, மதுமேகம், தந்திமேகம், குன்மம், நீர்க்கட்டு, முத லியதுதீரும். பத்தியமாயிருக்கவும். எ-று. 310

இரசித பஸ்மம்.

சத்திசிவஞ் சரிபழச்சாற்றங்கரைத்து ரசிதமேற்
சுத்திதடவிப் புடமிட்டெடு.

(இ-ள்.) இரசிதபஸ்மமானது;—பாதரசமும், சுத்திகெந்தகமும் சமனுய்ச்சேர்த்து எலுமிச்சன் பழச்சாற்றரைத்து வெள்ளியைத் தகடுதட்டி அவ்விடை யிற் பேர்பாதிமருந்தை இருபக்கமும்பூசி ஓட் டில்வைத்து மேலோடுமூடிச் சீலைமண்செய்து முழப்புடமிடப் பஸ்ம மாம். 3-5-7 நாள் காலைமாலை அரிசியிடை நெய்யிற்கொள்ள தாது விர்த்தியைத்தரும் பலநோயகலும். எ-று. 311

வெண்கார பஸ்மம்.

காரங்குடுவையிட்டுக் கம்மார்வெற்றிலைச்சார்விட்
டேறமறுநாளிறு பஸ்மம்.

(இ-ள்.) வெண்கார பஸ்மமானது:—ஒருகுடுவையில் வெண்கா ரத்தைப்போட்டு கம்மார்வெற்றிலைச்சார் மிதக்கவிட்டு 1-நாளூறவைத் துமறுநாளில் கட்டியையெடுத்துக் காயவைத்து மற்றொருகுடுவையில் இக்கட்டியைவைத்து அச்சாற்றை மறுபடியும்விடப் பொங்கிப்பஸ்மமா கிடும். அதில் ஒருவிராகனிடை இளநீரிற்போட்டுக் குடிக்க நீர்ச் சுருக்கு நீர்க்கட்டுநிற்கும் இச்சாபத்தியமிருக்கவும். எ-று. 312

கௌரி பஸ்மம்.

மூலைப்பாலிற்கௌரியை முற்றுஞ் சுருக்கேற்றித்
தலைப்பாலிற் சுரமதிற்று.

(இ-ள்) கௌரிபஸ்மமானது:—கௌரியைச்சுத்திசெய்து மூலைப் பாலில் 2-சாமஞ் சுருக்கிட்டு அதைநறுணுக்கி வைத்துக்கொண்டு 2-அரிசியிடைதேனிலிழைத்து சுரமுடையவர்க்களிக்க வாந்தியும்பேதியு மாம். அவ்வாந்தியை நிறுத்த எலுமிச்சம்பழசாபத்து அல்லது புளிக் குழம்பும் புகட்டநிற்கும். பேதிநிறுத்த வரட்டித்தூள் கியாழம் கொடுக்கநிற்கும். குளிர்சுரம் ஒருநாளிற்றீரும். எ-று. 313

வெள்வங்க பஸ்மம்.

அத்திமரத்திற்றுளைசெய்தங் கடைத்துவங்கரசம்
எத்திகஜத்திற் புடமிட்டெடு.

(இ-ள்) வங்கபஸ்மமாவது:—அத்திமரமானதில் அரையடிகனம் ஒரு அடிநீளமுள்ளதில் நெடுக்கிற்றுளைத்து அரையடி ஆழஞ்செய்து அதில் கருவங்கம் பலம் அரை, ரசம் பலம் ஒன்று இரண்டும் தொங் கித்து அதிலடைத்து அக்கட்டையின் றாளால்வாயடைத்து கெட்டித் துச் சீலைமண்செய்து கஜப்புடமிட்டெடுக்க பஸ்மமாம். அதில் 1-2 அரி சியிடை நெய்தேன்முதலிய அனுபானத்திலிட சகலநோய்களுந்தீரும் இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 314

கருவங்க பஸ்மம்.

கருவங்கமிரசத்தைக் கண்டத்திமரத்திட்டுச்
சருவங் கஜப்புடமாய்த்தகி.

(இ-ள்) கருவங்க பஸ்மமானது:—முன்போல அத்திமரத்தில் துண்டு 1-தரித்து நெடுக்கில் அதினடுவிற்றுளைத்து மத்தியில் வங்க ரசந்தொந்தித்துப் புட்டாக்கிச்செலுத்தி அம்மரத்தின்றுளை நிறைப்பி அக்கொம்பால் மேக்கடித்து முன்போல் கஜப்புடமிட்டெடுக்க பஸ்ம மாம். அதில் அரிசியிடை தேன்முதலிய பலவனுபானத்தேற்ற மேக முதலிய பலநோய்களுந்தீரும். எ-று. 315

நாக பஸ்மம்.

நாகரசந்தொந்தித்து நல்லத்திமரத்தேற்றிப்
பாககஜமிட் டெடுத்துப்பார்.

(இ-ள்.) நாகபஸ்மமானது:—முன் கருவங்கபஸ்மஞ் செய்தது போலவே அத்திமரத்திற்றுளைத்து அதில் வேண்டியநாகத்தையுருக்கி யதில் ரசத்தைத் தொங்கித்து அத்துளைத்துருத்து மேக்கடித்து கோணிப்பட்டையிற்சுற்றிச்சீலைமண்செய்து சாணிபொதிந்து உலர்த்தி கஜப்புடமிட்டெடுக்கப் பஸ்மமாம் பலவனுபானத்திலேற்ற அனந்த நோய்கள்தீரும். பத்தியம் சரியாயிருக்கவும். எ-று. 316

பூர பஸ்மம்.

பூரஞ்சாம்பிராணியிற் பொங்கக்கொளுத்தியதை
நீரஞ்சாமற் சுரத்துநீட்டு.

(இ-ள்) பூரபஸ்மமானது:—பளிங்கு சாம்பிராணி பலம் அரை பூரம் பலம் ஒன்று ஓரறையிற் காற்றில்லாமூலையில் சாம்பிராணியைப் பொடித்துப் பாதிபரப்பி அதின்மத்தியில் பூரத்தைவைத்து அதன் மேல் சாம்பிராணி பலம் அரை பொடித்துத்தூவி கொளுத்திடவும். அது எரிந்தவுடன் அதையெடுத்துப் பஸ்மமாயரைத்து வைத்துக் கொண்டு அதில் 1-அரிசியிடை தேனில் சுரங்கட் கேற்ற ஜன்னி, சீதளம், குளிர், நளிர்சுரந்தீரும். எ-று. 317

கையிலாக்கும் ரச பஸ்மம்.

விடத்தேறுவேர்தூளில் விட்டாக்கில் ரசபஸ்மம்
படத்தேறும் நோயனைத்தும்பார்

(இ-ள்) கையிலாக்கும்ரசபஸ்மமாவது:—விடத்தேறு வேரையெடுத்துவுலர்த்திடித்துப்பொடிசெய்து அத்தூளிற்கொஞ்சமெடுத்து இடதுள்ளங்கையில் வைத்து வலதுள்ளங்கை பெருவிரலால் ரசம்வேண்டியதைவிட்டதில் அரக்கி ஊதிப்பார்க்க முன்விட்ட ரசமானது பஸ்மயாகிடும். அதைப் பலநோய்களுக்கும் தக்க அனுபானத்தேற்ற யாவுந்தீரும். எ-று. 318

அரிதார பஸ்மம்.

தாளகத்தில்நொச்சியிலைச் சற்றரைத்துக்கவசித்து
மீளகுக்கிடம் வைத்தெடு.

(இ-ள்) அரிதார பஸ்மமாவது:—நொச்சிலியிலையை யரைத்து அதற்குள் தாளகம் வைத்துக் கவசஞ்செய்து அதையொரு குடுவையிற்போட்டு மேலகல்மூடி சீலைமண் வலுவாய்ச்செய்து 10-வரட்டியிற்

புடமிடவும் பஸ்மமாம், அதையரைத்துவைத்து அதில் குன்றியளவு தேன்முதலிய பலவனுபானங்களி லேற்றிட குழந்தைமுதல் பெரியவர்க்குள்ள பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியமாய் வைக்கவும். எ-று.

படிகார பஸ்மம்.

படிகாரம்வெண்ணெயினிற் பற்றவரைத்துச்சொப்பிட்
டடியோடு புடமிட்டெடு.

(இ-ள் படிகாரபஸ்மமானது:—படிகாரம்வேண்டியவரையில் கல்வத்திட்டு அதில் பசுவெண்ணெசேர்த்து இரண்டொருசாம மரைத்து அது 2-பங்கு பிடிக்கும்படியானமொந்தையிற்போட்டு அகல்மூடி சீலைமண்செய்து 10-விரட்டியிற் புடமிட்டெடுக்க வெண்ணெபோல் பஸ்மமாயிருக்கும். அதை அனுபானங்களிலேற்ற வெள்ளை முதல் கொடூரமாகிய பல நோய்கள் தணியும். எ-று. 320

12 நீற்றினப் படலம் 42

முற்றிற்று.

## 13 சுன்னப் படலம் 20.

ஒழுகரைச் சுன்னம்.

சோகியைநீலித்துணி சுற்றிகுக்கிடமிடநீர்
தோகையருந்தச் சூதகம்போம்.

(இ-ள்) ஒழுகரைச் சுன்னமாவது:—ஒழுகரை சோகியென்னும் பலகரைகளை 3-விரற்கடையகலம், 2-முழநீளத்துள்ள துணியில் கொஞ்சம் நீலத்தைத் தண்ணீரிலுரைத்து அதிற்பூசியபின் 10-15 பலகரைகளை ஒவ்வொன்றாய்ச்சுருட்டி உருண்டையாக்கி 3-கை எருமுட்டையில் புடமிடச் சுன்னமாம். அதையப்படியே காற்றில்வைக்க மலர்ந்து விரிந்துபோம். அல்லதுகல்வத்திட்டரைத்து வைத்துக்கொள்ளவும். அதில் தம்படியிடை 2-3 எலுமிச்சம் பழச்சார்பிழிந்து அதிர்போடப் பொங்கும். அதையப்படியே பனியில்வைத்து அதை மாதர் முழுக்குவந்த மறுநாள் வெடிகாலையில் அது முதல் 3-நாள் குடிக்கவும். சூதகவாய்வு, மலட்டுவியாதி, மலட்டுவயர்வலி தீரும். கர்ப்பந்தரிக்கும். இல்லையேல் மறுமாதமுமுண்ணவும். எ-று. 321

## கமடாண்டச் சுன்னம்.

கமடாண்டமேனியினிற் கப்பிகுக்கிடமிடவும்
அமைவானச் சுன்னமதுவாம்.

(இ-ள்.) கமடாண்டச் சுன்னமாவது:—ஆமையோட்டை குப்பைமேனியிலையையரைத்து அவ்வோட்டிற்குக் கவசஞ்செய்து 10 எருவிற் புடமிடச் சுன்னமாம். அதை நுணுக்கி முலைப்பாலில் விட்டரைத்து குன்றிமணிப் பிரமாணம் குளிகைசெய்துலர்த்தி 3-அல்லது 5-நாட் காலைமாலை தேனில் ஒவ்வொரு குளிகையுண்டுவர சுரந் தீரும். 2-குளிகை வெண்ணை-நெய்யிற்கொள்ள சீதபேதி நிற்கும். இச்சாபத்தியம், எ-று. 322

## கர்க்கடாண்டச் சுன்னம்.

நண்டோட்டை பிரண்டைச்சார் நல்கியரைத்தைந்துபுடங்
கொண்டே குக்கிடமிடவாம்.

(இ-ள்.) கர்க்கடாண்டச் சுன்னம்:—நண்டோட்டை பிரண்டையையரைத்து அல்லதிடித்துச் சார்பிழிந்து அதில் அவ்வோடுகளை யரைத்து பில்லைதட்டி, ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைசெய்து 10-எருவிற் புடமிடச் சுன்னமாம். இப்படி 5-புடமிட்டெடுத்து சுண்டையளவு 3-5-நாள் 2-வேளை தேனிலுண்ண சுரமுதலியது தீரும். இச்சாபத்தியம், எ-று. 323

## சிங்கிச் சுன்னம்.

மான்கொம்பைச் செருப்படியுமன்றி பசும்பாலிலரைத்
தானிரண்டு புடமிடச்சுன்னம்.

(இ-ள்.) சிங்கிச்சுன்னமாவது:—மான்கொம்பைக் கழுவி செருப்படையரைத்து அதற்குக் கவசஞ்செய்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி சீலைசெய்து 10-எருவிற் புடமிட்டெடுத்து அதை பசும்பாலிலரைத்துப் பில்லைதட்டி ஓட்டிலிட்டு மேலோடுமூடிச் சீலைசெய்து 10-எருவிற் புடமிட்டெடுத்து நுணுக்கி 1-குன்றியிடை தேனிலுண்ண சுரம் வாய்வு, சூலைநோய், மார்நோய், வயற்றுநோய், உஷ்ணவாய்வு, மாதர்நோய்களனைத்துந் தீரும். 3-நாள் 2-வேளையுண்ண இச்சாபத்தியம், எ-று. 324

பவழச் சுன்னம்.

நற்பவழங் கீழ்க்காயினெல்லினிற் குக்கிடம்வை
அற்புதமாய்ச் சுன்னமாகும்.

(இ-ள்.) பவழச்சுன்னமாவது:—பவழத்தைக் கீழாய்நெல்லியிலே யரைத்து அதிற்பதிந்து ஓசோட்டில் வைத்து மேலோடுமூடி சீலே செய்து 10-எருவிற் புடமிடச் சுன்னமாம். அதிற் சுண்டையளவு தேன், நெய்யிலிடவும் சுரம், இருமல், இரைப்பு முதலியது தீரும். இச்சாபத்தியம். அவிரிலேயைச் சும்மாய் நசுக்கிவைத்துப் புடமிடப் பஸ்மமாம். அது மஞ்சளுக்குச் சிவக்கும். எ-று. 325

சங்குச் சுன்னம்.

உத்தாமணியிலேயினுள் ளாவின்சங்கமைத்து
எத்தாய்ப் புடமிட்டெடு.

(இ-ள்.) சங்குச்சுன்னமாவது:—பசுக்களுக்குக் கட்டியிருக்கும் பாலடையை உத்தாமணியிலேயரைத்து அதற்குக் கவசஞ்செய்து 10-15-எருவிற் புடமிடச் சுன்னமாம். அதை நறுக்கி 2-குன்றியி னிடைச் சுன்னத்தை 2-எலுமிச்சன் பழச்சார்பிழிந்து அதற்குச் சரி தும்பையிலேச்சார்விட்டு ஒன்றாய்க்கலந்து அதிற்போடப் பொங்கி யிறையும். அல்லது வாயிற் சுன்னத்தைப்போட்டு பின் சாறு குடித் திடவும். அது கொஞ்சநேரத்திற்கெல்லாம் வாந்தியாம். சுரம் அன்றே நின்றுவிடும். வாந்தியாகாதேல் மறுநாளும்அப்படியே கொடுக்கவும். இச்சாபத்தியம். எ-று. 326

துருசு சுன்னம்.

கள்ளிப்பால் நாய்மலங் கண்டர்க்கப்பித்தசமெருவிற்
கொள்ளப் பாற்புடமிட்டெடு.

(இ-ள்) துருசு சுன்னமாவது:—கொம்புக்கள்ளிப்பாலில் வெள் ளைநாய் மலத்தையரைத்துதுருசுக்குக்கவசஞ்செய்து 10-எருவிற் புட மிட்டெடுக்க துருசு சுன்னமாம். இதில் 1-அரிசியிடை தேனிலுட் கொள்ள சிலநோய்களகலும். வாந்தியுமாகும். எ-று. 327

கடம்பைக்கோம்பு சுன்னம்.

கடம்பைகொம்பை மேனிச்சார் கதிக்கவிட்டுலர்த்தியபின்
னிடம்புகட்டிக் சாரகளிற்றீர்.

(இ-ள்.) கடம்பைக் கொம்பு சுன்னமாவது :—கடம்பைக் கொம்பைமேனிச்சாற்றில்மிதக்கப்போட்டு வுலர்த்திமறுபடியும் அச்சாற்றைத்தடவி கஜப்புடமிடவுஞ் சுன்னமாம் இச்சுன்னம், சங்குபஸ்மம், கல்நார்பஸ்மம், 3-ஞ் சேர்த்து குன்றியளவு தேன், நெய், வெண்ணெயிலருந்தசகலநோய்களுந்தீரும். பத்தியம்பார்த்துவைக்கவும்.எ-று.

கலைமான் கொம்புச் சுன்னம்.

கலங்கொம்பைமேனிச்சார் கலந்தூறச்சதுர்நாள்வைத்
தலும்பின் குக்கிடமிட்டெடு.

(இ-ள்) கலைமான் கொம்புச் சுன்னமாவது:—கலைமான்கொம்பை குப்பைமேனிச்சாற்றில் 4-நாளூறவைத்து மறுபடியும் அதைக்குக்கிடப்புடமிடச் சுன்னமாம். இச்சுன்னம் துவரையளவு நோய்களுக்குத் தக்க வனுபானங்களிலேற்ற சுரம், சன்னிதீரும். தேனிலிட வாய்வு பிடிப்பு முடக்குத்தீரும். எ-று. 329

படிகாரச் சுன்னம்.

படிகியைப்பிரமதண்டுப் பாலடித்தவ்வேர்கவசித்
திடுவெருவீரைந்தினிற்புடம்.

(இ-ள்) படிகாரச்சுன்னமாவது:—படிகாரத்தைப் பிரமதண்டுப் பாலடித்து வுலர்த்தி அவ்வேரையரைத்துக் கவசஞ்செய்து 10-விரட்டியிற் புடமிடச் சுன்னமாம். இதிற் குன்றியிடைவீதம் அந்தி சந்தி 3-நாள் அல்லது 5-நாள் அகத்தியிலைச்சார் அல்லது குப்பைமேனிச் சாற்றொன்றிலீய பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும், எ-று. 330

பால்துத்தச் சுன்னம்.

பால்துத்தம் வெள்ளெருக்கன் பாலரைத்துமப்பழுப்பை
மேலமைத்தை யைங்தெருவிலெரி.

(இ-ள்) பால்துத்தச் சுன்னமாவது:—பால்துத்தம் பலம் 1-க்கு வெள்ளெருக்கன்பால் சமனுய்விட்டு 2-சாமமரைத்து உலர்த்தி அதின் பழுப்பிலையை யரைத்துக் கவசஞ்செய்து 25 எருவிற்புடமிடச்சுன்னமாம். இதினால் எந்தசரக்குகளையும் சுன்னஞ்செய்ய எளிதில் முடியும். எ-று. 331

### பொட்டுலுப்புச் சுன்னம்.

பொட்டுலுப்பினுள் ளண்டம்புக்க வகல்மூடிசீலே
யிட்டெரிப்பை யிருபதெரு.

(இ-ள்) பொட்டுலுப்புச்சுன்னமாவது:—பொட்டுலுப்பை ஓரேனத்திற்போட்டு அதினுள் 1-முழுமுட்டையைவைத்து மேலேனமூடி கம்பியாற்பிகிந்துகட்டி சீலேமண்செய்து 20-எருவிற்புடமிடச் சுன்னமாம். இதை தக்கவனுபானங்களிலிட பலநோய்களும்போம் வாதத்துக்குமேறும். எ-று. 332

### வங்கச் சுன்னம்.

வங்கமேற்புளியாரை மட்டரைத்துக்கவசித்து
பொங்கமேற் புடமிட்டெரி

(இ-ள்) வங்கச் சுன்னமாவது:—வங்கத்தின்மேற் புளியாரைக் கீரையரைத்துக் கவசஞ்செய்து 15-எருவிற்புடமிடச் சுன்னமாம். இதில் 1-அரிசியிடை 3-அல்லது 5-நாள் அந்திசந்தி தேனில் அல்லது நெய் வெண்ணெயிலுண்டுவரவும். பலநோய்களும் பற்றறுந்து போம். எ.று. 333

### வேடியுப்புச் சுனனம்.

சட்டியில்வெண்மரி கொழுப்புள் தங்கவிணங்கணமைத்து
நெட்டி யைம்ப தெருவிலெரி.

(இ-ள்) வேடியுப்புச் சுன்னமாவது:—ஒரு சட்டியில் வெள்ளாட்டின் கொழுப்புப் பாதிபோட்டு அதின்மேல் 7-ங்காச்சல் வெடியுப்பு வைத்து அதின்மேலும் அப்பாதி கொழுப்பைப் போட்டு மேற்சட்டி மூடிப்பலமாய்ச்சீலேசெய்து 50 எருவிற் புடமிட்டெடுக்கச் சுன்னமாம். பின்னும் உத்தாமணிச்சாற்றில் 16-சாமமரைத்து சீலே செய்து 50-எருவிற் புடமிடவுஞ் சுன்னமாம். இதிற் சகலநோய்கட்குந் தக்கவனுபானங்களிலேற்ற வயர்வலி, குலேவலி, மார்வலி முதலிய பலவினேகளும் பற்றறும். எ-று. 334

### வேண்காரச் சுன்னம்.

மொங்தையிற்காரம்வைத்து முன்கருப்பஞ்சார்விட்டுச்
சந்ததிற் சீலேசெய்தெரி.

(இ-ள்) வெண்காரச் சுன்னமாவது:—ஒரு மொங்தையில் வெண் காரத்தைக் கட்டியாய்வைத்து கருப்பஞ்சார் மிதக்கவிட்டு மேலகல் வாய்மூடிச் சீலைமண்செய்து குக்கிடப்புடமிடச் சுன்னமாம். இச்சுன் னம்வாதத்திற்கும் வைத்தியத்திற்கு உபயோகமுமாயிருக்கும். எ-று.

சித்தண்ட சுயச் சுன்னம்.

பாவைச்சாற்றண்டோட்டைப் பன்னியரைத்தகலேற்றித்
தேவைப்பாச்சிடு குக்கிடம்.

(இ-ள்) சித்தண்டசுயச் சுன்னமாவது:—பாவைச்சார் பிழிந்து அதில் முட்டைகளினோடுகளை யரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அகலிலிட்டு மேலகல்மூடிச் சீலைமண்செய்து குக்கிடம் அல்லதுமுழப் புடமிடச் சுன்னமாம். இதிற்குன்றியிடை தேனிலேற்ற வாய்வுகள் தீரும். இச்சாபத்தியம். எ-று. 336

சித்தண்டச் சுன்னம்.

பாவைரசமுட்டைக்குட் பற்றவிட்டுவாய்மூடி
நீவையொரு குக்கிடததில் நீறும்.

(இ-ள்) சித்தண்டச்சுன்னமாவது:—கோழிமுட்டைக்குள்ளிருக் கும் அம்புலியிற் கொஞ்சம் ஊற்றிவிட்டு அதிநிறைய பாவைச்சார் விட்டு வாய்மூடிச் சீலைசெய்து குக்கிடப்புடமிடச் சுன்னமாம். அதில் அரை குன்றியிடை தேனில் 3-அல்லது 5-7-நாட் காலை மாலை உண்டு வரவும் வாய்வுமுதலிய பலநோய்களுமகலும். பத்தியந்தக்கபடிவைக் கவும் யாவுந்தீரும். எ-று. 337

பேரண்டச் சுன்னம்.

தலையோட்டைப் பழரசத்திற்றனி நிலாவிரையிலுமே
நிலையாகப்புட மிரண்டிடு.

(இ-ள்.) பேரண்டச் சுன்னமாவது:—தலைமண்டையோட்டை எலுமிச்சம்பழ ரசத்திலரைத்து 2-சாமமானதன் பின் அதைப்பில்லை தட்டிக் காயவைத்து நிலாவிரையையரைத்துக் கவசஞ்செய்து முழப் புடம் 2-போடவும். 2-வது புடத்திற்கும் அதைப் பழரசத்தரைத்துப் பில்லைதட்டி யுலர்த்தி நிலாவிரைக்கவசித்து முன்போலப் புடமிடச்

சுன்னமாம். அதிற் குன்றியிடை தேன்நெய்யிலேற்ற பித்தமுதலிய சில நோய்கள் தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 338

பாலடைச் சுன்னம்.

பாலடையிற் பருத்தியிலைப் பற்றவரைத்துக் கவசித்
தேவ வோர்புடமிட்டெடு

(இ-ள்) பாலடைச் சுன்னமாவது:—பாலடையை உத்தாமணியிலையரைத்து அதற்குள் வைத்துக் கவசஞ்செய்துலர்த்தி சீவித்து அல்லதப்படியே 10-15-எருவிற்புடமிட்டெடுத்து காற்றில்வைக்கப் பூர்த்துவிரிந்து சுன்னமாம். அதில் 1-குன்றியிடை அனுபானங்களிலிட சுரமுதலியதியாவுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 339

முத்துச் சுன்னம்.

வங்காளமுத்தில் வஜ்ரவல்லியிலையுட்பதிந்து
இங்காள குக்கிடத்திடு.

(இ-ள்.) முத்துச்சுன்னமாவது:—வங்காளமுத்து அல்லது ஆணிமுத்துகளை பிரண்டையிலையரைத்து அதனுள் பதிந்து ஓரோனத்தில் வைத்து மேலேனமூடிச் சீலைசெய்து குக்கிடப்புடமிடச் சுன்னமாம். அதில் அரை குன்றியிடை தேன், நெய்யில் கொடுக்கவும். பல நோய்களும் பற்றறும். இச்சாபத்தியம். எ-று. 340

13. சுன்னப்படலம் - 20.

முற்றிற்று.

## 14. செந்தூரப் படலம் 34.

பூங்காவிச் செந்தூரம்.

காவிக்கல் படிகாரங்கண்டு சமனுயரைத்து
சீவிக்க நோய்கட்கிடும்.

(இ-ள்) பூங்காவிச் செந்தூரமாவது:—பூங்காவிக்கல்லும் பொரித்தபடிகாரமுஞ் சமனுயரைத்துப் புட்டியிலடைத்துவைத்து அதில் தம்

படியிடை அனுபான விசேஷத்திலிடவும் வெப்பம், சீதளம், வெள்ளை, பெரும்பாடு, உதிரப்பிரவர்த்தி, சீதபேதி, உஷ்ணபேதி, மூலச்சூடு, யாவுந்தீரும். பத்தியமில்லை. எ-று. 341

அபிரேகச் செந்தூரம்.

புளியங்காயபிரேகம் புதுவுரலிற்றுனிடித்து
வெளியைந்தார் புடமிட்டிடு.

(இ-ள்) கிருஷ்ணபிரேகச் செந்தூரமாவது:—முத்தியதிளசில்லாப் புளியங்காயையும், கிருஷ்ணபிரேகமுஞ் சேர்த்து உரலிலிடித்து அதைவாரி ஓட்டில்வைத்து மேலோடுமூடி சீலைசெய்து 30-எருவிற் புடமிடவும். இப்படி 5-6-புடமிடச் செந்தூரமாம். இதிற் குன்றியிடை காலைமாலை 5-நாள் தேனிலுண்டுவரவும் நீரொழுக்குந்தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 342

இரசகற்பூரச் செந்தூரம்.

படிகிபூரமுமொன்று பசுமஞ்சள் நால்பொடித்துக்
கடலைவீதம் பலநோய்க்களி.

(இ-ள்.) இரசகற்பூரச் செந்தூரமாவது:—படிகாரம் 1, இரசகற்பூரம் 1, பசுமஞ்சல் 4-இடை சேர்த்து இடித்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கடலையளவு 5-அல்லது 7-நாள் காலைமாலை வாயிற்போட்டு வெந்நீர் குடித்துக்கொண்டுவரவும். பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 343

இலிங்கச் செந்தூரம்.

சூடனுள்ளிங்கத்தைச் சுட்டுக்கொளுத்தியதை
வாடவுஞ் சுரத்துள்மாட்டு.

(இ-ள்.) இலிங்கச் செந்தூரமாவது:—கற்பூரம் அரைபலம் காற்றில்லா மூலையிற் பரப்பி மத்தியில் இலிங்கம் 1-பலம் வைத்து அதின்மேல் கற்பூரம் அரைபலம் நுணுக்கிப்போட்டு மூடிக்கொளுத்திடவும், எரிந்தவிந்த பிறகெடுத்து அரைக்கச் செந்தூரமாம். அதில் 1-அரிசியிடை தேனில் சுரத்துக்கிடவும் 2-3-வேளைக்குள் குளிர், சுரம், ஜன்னி, முதலிய பல நோய்களுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 344

### இரசச் செந்தூரம்.

சூதச்செந்தூரத்தைத் தொள்சுரங்கட்கேற்றிடவே
காதஞ்சென்றேடிடுங்காண்.

(இ-ள்) இரசச்செந்தூரமாவது:—பச்சையாய்க் கடையில்வாங்கி அதைச் சந்தனக்குழம்பில் 1-நாளூறவைத்தெடுத்திட சுத்தியாம். அதையுலர்த்தி கல்வத்திட்டரைக்கவும் செந்தூரமாம். அதைப் புட்டியிலிட்டு அதில் அரிசியிடை தேனிலிழைத்து சுரத்துக்குக் காலைமாலை இரண்டொருநாள் கொடுக்கவும். அச்சுரம் நின்றுவிடும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 345

### அன்னபேதிச் செந்தூரம்.

அன்னபேதிக் குடுவையில் வைத்துமூடியுமே
முன்னமோர் புடமிட்டெடு.

(இ-ள்.) அன்னபேதிச் செந்தூரமாவது :—அன்னபேதியை ஒரு குடுவைக்குள் போட்டு மேலகல்மூடி சீலைசெய்துலர்த்தி அதை 10-அல்லது-15-எருவிற் புடமிடவும் செந்தூரமாம். மறுபடியும் அதை நுணுக்கித் தண்ணீரிற் கலக்கி காலையில் ரவிவைத்து மாலையில் அத்தண்ணீரையிறுத்து வேறேதண்ணீர்விட்டு ரவியில் இப்படி 3-நாள் வைத்திறுத்து அரைத்திடச் செந்தூரமாம். தேனிலிடவும். சுரங்களும் முட்டையவித்ததிலளிக்கச் சீதபேதியுந்தீரும். இன்னும் பலநோய்க்கும் தக்க அனுபானங்களிலளிக்க பல நோய்களுந்தீரும். எ-று. 346

### சண்டமாருதச் செந்தூரம்.

பூரம்லிங்கமிடைபத்து பொற்கெந்திவீரஞ்செந்
தூரமொன்றிட சேர்த்தரை.

(இ-ள்) சண்டமாருதச் செந்தூரமாவது:—பூரம் பலம் 10 லிங்கம் பலம் 10-வீரம், ரசச்செந்தூரம், கெந்தகம் வகைக்கு ஒரு விராகனிடைகளாய்ச்சேர்த்து யாவுஞ் சுத்திசெய்து 2-ஜாமமரைக்கப் பவழநிறச் செந்தூரமாயிருக்கும். இதில்கெந்திமாத்திரம் கால்விராகனிடை அதிகஞ்சேர்க்க வாய்பிடிக்காது. அரை அல்லது முக்கால் ஒன்று குன்றியிடை பனைவெல்லம், தேன், பேயன்வாழைப்பழத்திற்றின்னவும், சகலநோய்களுந்தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று.

### தாளகச் செந்தூரம்.

தாரத்தைநொச்சிலிச்சார் தன்னிலரைத்துப்பில்லித்
தேரக்குச்கிடம் வைத்தெடு.

(இ-ள்) தாளகச்செந்தூரமாவது:—தாளகத்தை நொச்சிலிச்சாற்றில் இரண்டுசாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி சீலைமண் வலுவாய்ச்செய்து 10.எருவிற் புடமிட்டெடுக்கச் செந்தூரமாம். அதையரைத்துப் புட்டியிலிட்டு அரை குன்றியிடை தேனிலிட சகலநோயுந்தீரும். எ-று. 348

### மிருதார்சிங்கிச் செந்தூரம்.

சிங்கியைக்குகையிலறச் சென்றாதியரைத்திடவும்
வங்கம்போய்ச் செந்தூரமாம்

(இ-ள்.) மிருதார்சிங்கிச் செந்தூரமாவது:—மிருதார் சிங்கியை மூசையில்வைத்துமூடி நன்றாயறவூதிடவும் அது செந்தூரமாகும். அதையும் அரைத்து புட்டியில்வைத்துக் கொண்டு வெண்ணே, நெய், தேனிலிடவும் புண், பொக்கு, விரணமுதலியதை ஆற்றிவைக்கும். இன்னுஞ்சிலநோய்களையுங் கேட்கும். எ-று. 349

### வங்கச் செந்தூரம்.

மடையனிற்பஞ்சாங்கப்பூவைக் கிராசமிடக்கொம்பிற்
கடையவுஞ் செந்தூரமாங்காண்.

(இ-ள்) வங்கச்செந்தூரமாவது:—மடையனென்னும் வங்கத்தை யுருக்கி பஞ்சாங்கப்பூவாகிய ஆவாரம்பூவை யுலர்த்திதூள் செய்து அதிற்கிராசங்கொடுத்து 2-சாமமானபின்னெடுத்து அதை ஆவாரங் கட்டையிற் கடையச் செந்தூரமாம் அதைப்பல நோய்களுக்கு உபயோகிப்பதுடன் வாதத்திற்கும் வேதையாகப்பாயும். எ-று. 350

### படிகலிங்கச் செந்தூரம்.

சீனந்தசம்பொரித்த தின்னிலிங்க மொன்றரைத்துத்
தானந்த நெய்யி விழைத்துத்தா.

(இ-ள்) படிகலிங்கச் செந்தூரமாவது:—படிகாரத்தைப் பொரித்து 10-இடைக்கு லிங்கம் ஓரிடைசேர்த்துப் பொடித்து 2-ம் நேக

வரைத்து ஒருகாசிடையளவு செந்தூரத்தை நெய்யிலிழைத் துண்ண வும் சீதபேதியானது நீங்கும். தேனிலிழைத்துண்ணவும் மார்நோயா னதுதீரும். மற்றதற்கு அந்தந்த அனுபானங்களிலிட பலநோய்களுந் தீரும். இச்சாபத்தியம். எ-று. 351

சாரங்கச் செந்தூரம்.

சத்திசிவஞ் சிலைகாரத்தைப் பொடித்துத்தீபாக்கினி
பத்தவிடச் செந்தூரம்பார்.

(இ-ள்) சாரங்கச் செந்தூரமாவது:—ரசம், கெந்தி, மனோசிலை, வெண்காரம், இந்நான்கும் ஓரிடையாய்ப் பொடித்து அடுப்பின்மேல் ஓட்டில்வைத்து தீபாக்கினியாயெரித்து எடுக்கச்செந்தூரமாம். இதை தேனில் பயர்யிடை இழைத்தளிக்க சீதளம், சன்னி, சுரமுதலியவை தீரும். இச்சாபத்தியம். எ-று. 352

சாதிலிங்கச் செந்தூரம்.

சிவலிங்கங்கெந்தித்தே சிச்சாற்றுருட்டிப்பில்லித்
திவைரெண்டு மூன்றெருவிலெரி

(இ-ள்) சாதிலிங்கச் செந்தூரமாவது:—சாதிலிங்கமும், கெந்த கமும் சமனாய்ப்பிறுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் 2-சாம மரைத்து பில்லைதட்டி யுலர்த்தி அகலில்வைத்து மேல்கல்மூடி 5-சீலை செய்து 3-வரட்டியிற் புடமிட்டெடுக்கவும் செந்தூரமாம். 1-2-அரிசியிடை தக்கவனுபானங்களிலேற்ற சன்னி, இருமல், இரைப்பு, ஈளை, க்ஷயம். காசம், மூர்ச்சை, சுகசன்னி, சூலை, வாய்வு, வயர் எரிச்சல், குலையெரிவு குன்மம், பட்சகெந்திவாய்வு, மாலைக்கண், கண்டமாலை, மகோதரம், நீர்க்கோவை, சோகை, கிரந்தி, மேகம், வெள்ளை முதலியதுந் தீரும். பத்தியம் நோய்களுக்குத் தக்கபடிவைக்கவும். எ-று. 353

அன்னபேதிச் செந்தூரம்.

அன்னட்பேதியைக்குமரியச் சோற்றின்சாற்றரைத்து
முன்னம்போ டெருப்புடத்தில்.

(இ-ள்). அன்னபேதிச் செந்தூரமாவது:—சுத்திசெய்த அன்ன பேதியைக் கற்றாழைச்சோற்றின் சாற்றினலரைத்து பில்லைத்தட்டி யுலர்த்தி அகலிலிட்டுச் சீலைசெய்து கோழிப்புடமிடச் செந்தூரமாம். வெண்ணெயில் குன்றியிடையுண்ண குளிர்சுரம், மார்சளி, தலைவலி,

இருமல், இரத்தமூலம், சீழ்மூலம், பெரும்பாடு, வீக்கம் ,வெள்ளை, அஜீரணம், பேதி, இரத்தபேதி, சீதபேதி, முதலிய தியாவும் தீரும். இச்சாபத்தியம். எ-று. 354

காந்தச் செந்தூரம்.

காந்தமதைத்தீயிற்காச்சிச் சிவந்தபின்றாள்
ஏந்திழைக்குத் தேனிலிடு.

(இ-ள்) காந்தச்செந்தூரமாவது:—2-3-ஊசிபிடிக்குங்காந்தத்தை நெருப்பிற்போட்டுச் சிவக்கக்காச்சியபின் அதைப்பொடித்திடச் செந்தூரமாம். அதை வேளைக்கு ஒரு விராகனிடை தேனிலிழைத்துண்டு கடும்பத்தியமாயிருக்க கர்ப்பஸ்திரீ வீக்கம்வாடிடும். இப்படி 3 அல்லது 5-நாள் காலைமாலை உண்டுவரவும் இன்னும் சிலநோய்கள் தீரும். எ-று. 355

தாம்பிரச் செந்தூரம்.

செம்பிலவுல்கீரைச் சென்றரைத்துக் கவசித்
தைம்பதெருவிற் புடமிடு.

(இ-ள்) தாம்பிரச்செந்தூரமாவது:—அவுல்கீரையை அரைத்து செம்புதகட்டிற்குக் கவசஞ்செய்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி சீலைமண்செய்து 50-எருவிற் புடமிட்டெடுக்க குங்குமம்போல செந்தூரமாம். இதில் அரிசியிடை நெய்தேன் முதலிய அனுபானங்களிலிட சகலநோய்களுந்தீரும். பத்தியமாயிருக்கவும். எ-று. 356

மிருதார்சிங்கி செந்தூரம்.

சிங்கிமஞ்சள்சமன்பொடித்ததிச் செந்தூரமளிக்கக்
குங்கிமங்கும் பலநோயிற்குண்.

(இ-ள்.) மிருதார்சிங்கி செந்தூரமாவது:—மிருதார் சிங்கியும், மஞ்சளுஞ்சமனுப்ப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்திடவும் செந்தூரமாயிருக்கும். இதிற்பணவிடை அந்தந்த நோய்களுக்குத் தக்கவனுபானங்களிலிடவும் பலநோய்களும்பற்றறும். பத்தியமாயிருக்கவும். எ-று.

இரசச் செந்தூரம்.

செந்தூரமொன்று படிகிப்பாதியாயரைத்துத்
தங்தேனி வெவ்வினைக்குந்தா.

(இ-ள்-) இரசச்செந்தூரமாவது:—இரசச்செந்தூரத்தைச் சுத்தி செய்தது, பலம் 1, படிகாரம் பொரித்தது பலம் அரை 2-ம் ஒன்றுயரைத்து யாவும் புட்டியில்வைத்து பலநோய்களுக்கும் தேன் அனுபானத்தில் காலைமாலை 5-அல்லது 7-நாள் அளித்திடவும். அந்தந்த நோய்களகலும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 358

இலட்சுமி நாராயணச் செந்தூரம்.

சூதச்செந்தூரம் வெண்காரம் பொடித்தரிசி
வீதம்நெய்தேன் வெல்லத்தேற்று.

(இ-ள்.) இலட்சுமி நாராயணச் செந்தூரமாவது:—இரசச் செந்தூரம் பலம் 1 பொரித்த் வெண்காரம் பலம் அரை 2-ம் ஒன்றுய்ச் சேர்த்தரைத்திடவும் செந்தூரமாயிருக்கும். அதை அரிசியிடை நெய் தேன், பனைவெல்லம், சர்க்கரைமுதலியதிலிட சுரம், சீதளம், ஜன்னி, சூலை, மாரடைப்பு, வாய்வு, தமரகவாய்வு, பக்கசூலைதீரும், இருமல், இரைப்பு, ஈளைக்கு மிளகுதூளிலேற்றவும். இச்சாபத்தியம். எ-று.

இலிங்கச் செந்தூரம்.

ஆற்றுக்கிளிஞ்சலிற் குளங்குலிங்கம் வைத்துபுடம்
நாற்றிக்கிளுஞ் சீவித்தெரி.

(இ-ள்) இலிங்கச் செந்தூரமாவது:—ஆற்றுக் கிளிஞ்சலிற்குள் லிங்கத்தைவைத்து மேல்கிளிஞ்சள்மூடி 5-சீலைமண்செய்து 4-எருவிற் புடமிடவும் செந்தூரமாம். இதில் ஒரு அரிசியிடை காலை மாலை 3-5-7 நாள் பலநோய்களுக்கும் தக்கவனுபானங்களிலேற்ற சகலநோய்களும் பற்றறுந்துவிடும். இச்சாபத்தியம். எ-று. 360

ஆராதாரச் செந்தூரம்.

வீரம்பூரங்கெந்தி வெண்காரமிலிங்கஞ்செந்
தூரந்தால வெல்லத்துண்.

(இ-ள்) ஆராதாரச் செந்தூரமாவது:—சவ்வீரம், இரசகற்பூரம், இரசச்செந்தூரம், சாதிலிங்கம், சுத்திகெந்தி, பொரித்த வெண்காரம் இதில் லிங்கம் 10-இடையும் மற்றதெல்லாம் 5-இடையாய்ச் சேர்த்து சுத்திசெய்து ஒன்றுயரைக்க உயர்ந்த செந்தூரமாம். இதிற் பயறளவு பனைவெல்லத்தேற்றச் சகலநோய்களுந்தீரும். உப்பு, புளி, புகை, போகம் வாய்வுபதார்த்த முதலியவைக ளாகாவாம். எ-று. 361

அயக்காந்தச் செந்தூரம்.

கெந்தியயங்காந்தங் குமரிச்சாற்றரைத்துத்தேன்
முந்தியடைத்தே சீவித்தெரி.

(இ-ள்) அயக்காந்தச் செந்தூரமாவது:—பசும்பாலி லவித்த கெந்தி, பழச்சாற்றிலூறிய அயம், கொள்ளாவி யிலவித்தகாந்தம் இம் மூன்றுஞ் சமனுய்ச்சேர்த்து கற்றாழைச் சாற்றினலரைத்து ஓர்சட்டியி லிட்டு மேற்சட்டிமூடிச் சீலைசெய்து மூணரைசாமம் எரிக்கவும் செந் தூரமாகும், இதை பயரளவு பனைவெல்லம் தேன் நெய்யிலிட சகல ரோகங்களும் பரந்துபோய்விடும். கடும்பத்தியமாயிருக்கவும். எ-று.

உக்கிரவீரச் செந்தூரம்.

சீனம்பூநாகஞ்சரி சென்றரைத்துண் வெண்ணெநெய்யில்
கானம்போ மேகமதுகாண்.

(இ-ள்) உக்கிரவீரச் செந்தூரமாவது:—படிகாரமும், பூநாகமும் சமனுய்ச் சேர்த்தரைத்து உலர்த்தியெடுக்கச் செந்தூரமாம். இதிற் பணவிடை, நெய், வெண்ணெ, யொன்றில் 3-அல்லது 5-நாள் காலை மாலை யுட்கொண்டுவரவும். வெள்ளை, மேகவெட்டை பசுமை, இரத்த காசம், பெரும்பாடு உட்காச்சல், உஷ்ணவாய்வு, மதுமேகம், பகுமூத் திரம், நாவரட்சி, தந்திமேகம், நீர்கட்டு, நெஞ்செரிவு முதல் பலநோய கலும். இச்சாபத்தியம். எ-று. 363

உப்புச் செந்தூரம்

முலைப்பால்முருங்கைச்சாற்றுப் பரைத்துப்பில்லைசெய்து
சிலைப்பாச்செட்டெ ருவிலெரி.

(இ-ள்.) உப்புச்செந்தூரமாவது:—சோத்துப்பை முலைப்பாலில ரைத்து 2-வது முருங்கைச்சாற்றிலரைத்துப் பில்லைசெய் துலர்த்தி ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சீலைசெய்து 8-எருவிற்புடமிடச் செந் தூரமாம். இதிற்சுண்டையளவு தேனிலிழைத் துண்டுவரவும். மார் நோய்முதல் பலநோய்களும் பற்றறுந்து போய்விடும். இதை 5-நாள் காலைமாலை யுண்ணவும் இச்சாபத்தியம். 364

### கரியுப்புச் செந்தூரம்.

அந்தர்தாமரைச்சாற்றுப் பங்கரைத்து முப்புடம்வை
செந்தூரமாம் நெய்யிலிடு.

(இ-ள்) கரியுப்புச் செந்தூரமாவது:—அந்தரத் தாமரையாவது ஆகாசத்தாமரை யிலைச்சாற்றில் கரியுப்பையரைத்து 3-புடமிடவும். செந்தூரமாம். அதில் ஒருகுன்றியிடை நெய்யில் 3-நாள் காலை மாலை யுண்ணவும். சத்தி குன்மம்தீரும். இச்சாபத்தியம். எ-று. 365

### சாத்திரப்பேதி செந்தூரம்.

சாத்திரப்பேதியைப் பழச்சார்தன்னிலரைத்தகலிட்ட
மாத்திரஞ்சீவித் தெரிபுடம்.

(இ-ள்) சாத்திரப்பேதிச் செந்தூரமாவது:—சாத்திரபேதியை எலுமிச்சன்பழச்சாற்றிலரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேலகல்மூடி சீலைமண்செய்து குக்கிடப் புடமிடவும். செந்தூரமாம். இதைத் தக்கவனுபானங்களிலிட பலநோய்களும் பற்றறுந்துவிடும். பத்தியமாயிருக்கவும். எ-று. 366

### நவாச்சாரச் செந்தூரம்.

சாரமாடுண்ணுப்பாலைத் தன்சாற்றரைத்தகலிட்
டோசீவித்தெரி குக்கிடம்.

(இ-ள்.) நவாச்சாரச் செந்தூரமாவது:—ஆடுதின்னாப்பாலைச் சாற்றில் நவாச்சாரத்தை 1-ஜாமமரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அகலிலிட்டு மேலகல்மூடி சீலைசெய்து குக்கிடப்புடமிடவும் செந்தூரமாம். இதைத் தக்கவனுபானங்களிலிட பலநோய்களுமகலும். நோய்களுக்குத்தக்க பத்தியம் வைக்கவும். எ-று. 367

### துருசு செந்தூரம்.

புளியலது வெல்லத்துட்புகத் துருசைக்கவசித்து
நெளியவுமியிட்டதை யெரி.

(இ-ள்.) துருசு செந்தூரமாவது:—பழம்புளியாவது, அல்லது நல்லவெல்லமாவது ஒன்றில் துருசைவைத்துக் கவசஞ்செய்து, உமியைக்கொட்டிச் சாண்புடத்தில் இதை வைத்தெரிக்கவும் செந்தூரமாம்

இதைத் தக்கவனுபான விசேஷத்திலேற்றிடவும் பலநோய்களும் பற்றறுந்துபோய்விடும். இச்சாபத்தியம். எ-று. 368

பஞ்சபூதாக்கினிச் செந்தூரம்.

பூரம்வீரம் ரசங்கெந்தி பொங்கிலிங்கமும் வட்டத்
தாரி சாரத்தரைக்கச் செந்தூரம்.

(இ-ள்.) பஞ்சபூதாக்கினிச் செந்தூரமாவது:—பூரம், வீரம், லிங்கம், ரசம், கெந்தகம் இவைகளைச் சுத்திசெய்து ஐந்தும் பச்சை வெட்டாய்ச் சேர்த்து சமனிடையாய் வட்டத்தாரியிலைச் சாற்றிலரைத் தெடுக்கச் செந்தூரமாம். இதிற்பணவிடை பனைவெல்லத்தேற்றி வரவும். க்ஷயமுதலிய சகல நோய்களுந்தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 369

தனிப்பூரச் செந்தூரம்.

பூரத்திற்செம்பசளைப் புட்டரைத்துக் கவசித்தந்
நோரத்தி கலந்தெருவிட்டெரி.

(இ-ள்.) தனிப்பூரச் செந்தூரமாவது:—இரசகற்பூரத்திற்குச் சிவந்த பசளையையரைத்துக் கவசஞ்செய்து சீலைவலுவாய்ச் சுற்றியுலர்த்தி 5-எருவிற்புடமிடவும் செந்தூரமாம். அதில் சிறியவர்க்கு 1-அரிசியிடையும், பெரியவர்க்கு 2-அரிசியிடையும் தக்கவனுபானங்களிலேற்றப் பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியமிருக்கவும். எ-று. 370

வாந்திபேதிக்குச் செந்தூரம்.

பூரம்லிங்கம் வீரங்கெந்தி பொற்செந்தூரம்வசம்பு
நீரிலங்கரைக்கச் செந்தூரம்.

(இ-ள்.) வாந்திபேதிக்குச் செந்தூரமாவது:—இரசகற்பூரம், சாதிலிங்கம், சவ்வீரம், நெல்லிகெந்தி, இரசச்செந்தூரம், 5-ம் சுத்திசெய்து வகைக்கு 1-வராகனிடைசேர்த்து, கற்பூரம் கால்பலங் கூட்டியரைத்து பின்னும் வசம்புக் கியாழத்திலரைக்கவும் செந்தூரமாம். அதிற் குன்றியிடை மணிக்கோராவர்த்திக் கொடுத்துவர வாந்திபேதி நிற்கும். எ-று. 371

விரைவாதத்திற்குச் செந்தூரம்.

கற்சுன்னந் தெளிநீரிற் கண்டர்கருவளையலரைத்
தற்பில்லசித் தெரிபுடந்தான்.

(இ-ள்.) விரைவாதத்திற்குச் செந்தூரமாவது:—துருசு பலம் 1, கருவளையல் பலம் 2, இவைகளைக் கற்சுன்னத்தெளிவு நீரிலரைத்து பில்லைதட்டி யுலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி சீலைமண்செய்து குக்கிடப் புடமிடவும் செந்தூரமாம். அதிற் பணவிடை சர்க்கரை அல்லது கற்கண்டில் 5-நாள் அந்திசந்தியுண்டுவர அண்டவாய்வு, விரைவாதம், நாட்பட்ட குடல்வாதமுதல் தீரும். பேதியுமாகும். இச்சாபத்தியம். எ-று. 372

கேந்தகச் செந்தூரம்.

சுத்திகெந்தி நன்மிளகுந் தொட்டுசமனுயரைத்து
எத்தியந்தி சந்திக்கிடும்.

(இ-ள்) கெந்தகச்செந்தூரமாவது:—சுத்திகெந்தகமும், கெட்டிமிளகும் சமனுய்ச்சேர்த்தரைத்து எடுக்கவும் செந்தூரமாகும், அதை தக்க அனுபானவிசேஷத்திலிடவும் சுவாசகாசத்தை விரைவில் நிறுத்தும். மற்றநோய்களையுந் தீர்க்கும். இதை 3-அல்லது 5-நாள் இருவேளையுண்ண யாவுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 373

கண்டர் செந்தூரம்.

துருசிற்குநல்லவெல்லந் துக்ககவசித்தைந்து
எருவிற்புடமிடச் செந்தூரம்.

(இ-ள்) கண்டர் செந்தூரமாவது:—துருசை நல்ல வெல்லத்திற் பதிந்து ஓரகலிலேற்றி மேலகல்மூடிச் சீலைமண்செய்து 5-வரட்டியிற் புடமிட்டெடுக்கச் செந்தூரமாம். இதனைவாந்தி யெடுப்பதற்கு உபயோகிக்கவும். வாந்திமீறிடின்எலுமிச்சம்பழ்போஞ்சாகிலும் அல்லது புளிகுழம்பாகிலும் புகட்டவும் வாந்திநின்றுவிடும். எ-று. 374

14 செந்தூரப் படலம் 34

முற்றிற்று.

## 15 எண்ணெப் படலம் 27.

### பழைய தேண்ணே.

ஆமணக்கெண்ணெயுந் தாளிக்கொடியுங் காச்சியுண்டு
நாமணக்கப் பழையதுங்கொள்.

(இ-ள்.) பழையதெண்ணெயாவது:—தாளிக்கொடியில் சாண் 4-ணீளத்தில் 1-பிடிதுண்டு துண்டாய்த்தரித்து அதுகளை நறுக்கி ஆமணக்கெண்ணெயினிற் போட்டுக்காச்சி அதை 7-நாள் காலையில் ஒரு கரண்டிவீதம் குடித்துப் பின் பழையதுண்ணவும். அது மலட்டுப்பூச்சிகளையகற்றி கருதரிக்கச் செய்விக்கும். சூதகவாய்வுந்தீரும். இதிற்கருதரித்ததுமுதல் மாதமாதம் மும்மூன்றுநாள் குடிக்கவும் தாய்க்கும் குழந்தைக்கும் யாதொரு நோயின்றி காப்பாற்றும். அக்கொடியிலைமத்தியில் பாம்பு படம்போல மாசிபடர்ந்திருப்பதுதான் முக்கியம். எ-று.

### மேகத் தேண்ணே.

பாதியிடைப்பூவரசன்பட்டை விளக்கெண்ணெயொன்று
ஓதியதுபோ லெரித்துண்.

(இ-ள்.) மேகத்தெண்ணெயாவது:—நூறுவருடஞ்சென்ற பூவரசன்மரத்தினது பட்டை வீசை அரை அதின்மேற் பரனியை நீக்கி உட்சதையை நையநறுக்கி விளக்கெண்ணெவீசை 1-விட்டுக் காச்சி கடுகுதிரளும் பதத்திலிறக்கி 5-அல்லது 7-நாள் காலை உச்சிக்காண்டிவீதம் உட்கொள்ளவும் வருத்தவுப்பு, சுட்டபுளி கூட்டவும். இதில் வாதமுதல் கைகால் குடைச்சல், மேகங்கள் பிளவை, கடுவன்,படுவன் பொக்குபுண், ரிணம், படை, சொரி, தினையாவுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 376

### இருவாய்கட்டுக் கேண்ணே.

ஆமணக்கெண்ணெ முக்காலங்கெரிச்ச லரைசூடன்
நாமணக்க மத்தித்துவுண்.

(இ-ள்.) இருவாய்கட்டுக் கெண்ணெயாவது:—ஆமணக் கெண்ணெ பலம் முக்கால் எரிச்சலாகிய வெண்காரம் வராகனிடை அரை சூடனாகிய கற்பூரம் பணவிடை ஒன்று யாவும் மத்தித்து உட்கொடுக்கவும்.

இருவாய்கட்டாகிய மலசலம் அடைப்பட்டதுடைந்து பேதியாம் உபாதையுந்தீரும். எ-று. 377

உப்பசந்தீர எண்ணே.

உப்பைவிளக்கெண்ணே யுள்ளிட்டு மத்தித்து
அப்பவருந்தப் பேதியாம்.

(இ-ள்) உப்பசந்தீர எண்ணேயாவது:—உப்பை விளக்கெண்ணே யில் மத்தித்து உள்ளுக்குக் குடித்திடவும். உடனே பேதியாம் இதில் பாஷாணமுறியும், உப்பசமுந்தீரும், பேதியுமாகும், அதில் அரட்டல் புறட்டலாய் பெருமூச்சு வாங்குவதும் மட்டுபட்டு சுகுண மாகும். எ-று. 378

குழந்தை புஷ்டிக் கெண்ணே.

விளக்கெண்ணேச்சீரகமும் வெண்பூலாப் பட்டைதுளிர்
உளக்கெண்ணேயாய்க் காச்சியூத்து.

(இ-ள்) குழந்தை புஷ்டிக்கெண்ணேயாவது:—வெள்ளேப் பூலாப் பட்டையும், அதின்மேற்கொழுந்தும், சீரகமும் வகைக்கு ஒரு பல மாய்ச்சேர்த்து உழக்கு விளக்கெண்ணெயிற் போட்டுக்காய்ச்சியிறக்கி தினசாரி ஒவ்வொரு உச்சிக்கரண்டிவீதம் புகட்டிவரவும். அத்திவெட்டைமுதலிய மற்ற நோயனேத்தும் நீங்கி தேகபுஷ்டியைத்தரும். எ-று.

கைகால் குடைச்சலிற் கேண்ணே.

அரிதகியுமிளகு சலத்தரைத்து விளக்கெண்ணெயிற்சேர்த்
தெரிதிரிநாட் கழற்சியிடையுண்.

(இ-ள்.) கைகால் குடைச்சலிற்கெண்ணேயாவது:—கடுக்காயும், மிளகும் தண்ணீரிலரைத்து அதை விளக்கெண்ணேயிற் கலக்கிக் காச்சி 3 நாள் உச்சிக்கரண்டிவீதம் குடித்துவரவும். கைகால் குடைச்சல், குத்தல், வீக்கம், வாய்வினுலுண்டாகிய வினேகளனேத்தும் நீங்கிடும். கடும்பத்தியமா யிருக்கவும். எ-று. 380

பொன்னேண்ணே.

பசுமஞ்சட்கிழங்கின்சார் படிவிளக்கெண்ணேயரை
விசிதங்காச்சிடப் பொன்னிறம்.

(இ-ள்.) பொன்னெண்ணெயாவது:—பச்சையாகிய பசுமஞ்சட் கிழங்கின் சார்படி 1-ல் ஆமணக்கெண்ணெய்படி அரைவிட்டுக்காச்சிப் பதத்தில் வடித்திறக்கிப் பார்க்கப் பொன்னிறமாயிருக்கும். அதில்ஒரு காசிடை 5-அல்லது 7-நாட்குடித்து வரவும் வாய்வுகள்தீரும். இச்சா பத்தியம். எ-று. 381

மஞ்சட்காமாலைக் கெண்ணெ.

அதிமதுரம்பழச்சார் சங்கன்வேரரைத்தெடுத்துக்
குதிர்பசும் பாலுழக்கிற்கொடு

(இ-ள்) மஞ்சட்காமாலைக்கெண்ணெயாவது:—அதுமதுரம், சங்கன் வேர் 2-ம்சமனுய் எலுமிச்சன்பழச்சாற்றிலரைத்து மறுபடியும் பசும் பால்ஆழாக்குடன் விளக்கெண்ணெ ஆழாக்கு அல்லது உழக்குவிட்டுக் கலக்கி 3-அல்லது 5-நாட் குடித்துக் கடும்பத்தியமாயிருக்க மஞ்சட் காமாலைதீரும். எ-று. 382

பாதரச யெண்ணெ

சூதமவழிசனப்பூண்டுந் தொட்டரைத்து விளக்கெண்ணெ
யோதபலம் பத்ததில் விட்டுண்.

(இ-ள்.) பாதரச யெண்ணெயாவது:—வழிஜனப்பூண்டு யென்னும் புல்நங்கையும், பாதரசமும் சமனுயரைத்து விளக்கெண்ணெ 10-பலத்தில் விட்டுக் கலக்கி சூரியபுடமாய் வைத்து 3-நாட் சென்றபின் தினசரி காலையில் கால்பலம் எண்ணெகுடித்துவரவும். மேகம், புண், புரைமுதலிய சகலமுந்தீரும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 383

திமிர்வாய்வுக் கேண்ணெ.

தந்திரசம் லிங்கம் லவங்கஞ் சித்தாமணக்கெண்ணெ
முந்தியரைத்துங் கரண்டியுண்.

(இ-ள்) திமிர்வாய்வுக்கெண்ணெயாவது:—சுத்திசெய்த வாளம், பாதரசம், சாதிலிங்கம், லவங்கம், வகைக்கு பலம் 1, சித்தாமணக் கெண்ணெ குத்தியரைத்து 2-சாமமானபின் ஷை சித்தாமணக் கெண்ணெ வீசை அரை விட்டுக்கலக்கி ரவிப்புடம் வைத்து காலையில் 1-கரண்டிவீதங் குடித்துவரவும். பத்தியம்-பலா-கிச்சடி, நற்போ

ஜனமுண்ணவும். வெங்காயம், தயிர் சேர்த்து 5-நாளுண்ணவும். திமிர் வாய்வு, புடைகள்யாவும் 21 நாளையிற்றீரும். எ-று. 384

நீரிடி முத்தெண்ணெ.

நீரிடிமுத்தெண்ணெ கொடிவேலிவேர் சேர்த்தரைத்து
நேரிடிலெப்புண் புரைமேலிடு.

(இ-ள்) நீரிடிமுத்தெண்ணெயாவது:—நீரிடிமுத்தை யுடைத்து முளைபோக்கி அப்பருப்பையரைத்து தண்ணீரிற்போட்டுக் காச்சிடில், அதில் எண்ணெவரும். அந்த எண்ணெயில் சித்திரமூலவேர் சேர்த்தரைத்து சிரங்கு, புண், படை, சொரி, ரிணம், கிரந்தி முதலியவைகளின்மேற் றடவிவரவும் யாவும் ஆறிவிடும். எ-று. 385

பிரமேகத்தெண்ணெ.

முத்தெண்ணெத் தேங்காய்ப்பால் முற்பிரமிப்பொடுதலைச்சார்
சத்தெண்ணெயாங் காச்சிடு.

(இ-ள்) பிரமேகத்தெண்ணெயாவது:—ஆமணக்கெண்ணெ, தேங்காய்ப்பால், பிரமிச்சார், பொடுதலைச்சார், வகைக்குப்படி 1-சேர்த்துக் காச்சிப் பதத்திலிறக்கி 3-நாள் 2-வேளையுண்ண பிரமேகம், இரத்தப்பிரமியம், சீழ்பிரமியந்தீரும். பால்சோறுண்ணவும். எ-று. 386

சகலமேகத் தேண்ணெ.

பொடுதலைச்சார்தேங்காய்ப்பால் பொங்குவிளக் கெண்ணெயெரித்
திடுவடித்தேழ்நாட் கொள்ளிதை.

(இ-ள்) சகலமேகத்தெண்ணெயாவது:--தேங்காய்ப்பால்படிகால், பொடுதலைச்சார்படி அரை, விளக்கெண்ணெபடி முக்கால் யாவுங்காச்சி பதத்தில்வடித்து ஒருவாரம் காலை கரண்டியளவாய்ப் புகட்டவும். மேகங்ளியாவும்தீரும். இச்சாபத்தியமிருக்க இன்னுஞ்சிலநோய்களகலும். எ-று. 387

வாய் மூக்குச் சேவி நாற்றத்திற் கேண்ணெ.

சித்தாமணக்கெண்ணெத் திண்கையான் சார்காச்சி
முத்தாதெழுநா ளுண்முன்.

(இ-ள்.) வாய் மூக்குச் செவி நாற்றத்திற் கெண்ணெயாவது:---சித்தாமணக்கெண்ணெ, கரிசலாங்கண்ணிச்சார் வகைக்கு அரை படியாய்ச் சேர்த்துக்காச்சிக் கடுகுதிறள் பதத்திலிறக்கி 7-நாட் காலை யுண்டுவரவும். வாய், மூக்கு, செவிநாற்ற மாறிவிடும். இச்சாபத்தியம். எ-று.

16

விஷங்கரப்பானுக் கெண்ணே.

ஆடுண்ணுப்பாளே சிவனுர்வேம்புச் சார்பழச்சா
ரோடெண்ணேக் காச்சியேற்று.

(இ-ள்) விஷங்கரப்பானுக் கெண்ணேயாவது:-ஆடுதின்னுப்பாளே வேர் சிவனுர்வேம்பின்சார், எலுமிச்சன்பழச்சார் வகைக்குப்படி கால் விளக்கெண்ணேபடி முக்கால் விட்டுக்காச்சிப் பதத்திறக்கி வடித்து 5-நாள் வெடிகாலே உச்சிகரண்டியளவாக வுண்ண, விஷமுதலிய கரப் பான்தீரும். கடும்பத்தியம். எ-று. 389

விரைவாதத்திற் கெண்ணே.

ஆதண்டையீறுள்ளி யங்கரைத்து விளக்கெண்ணே
மூதண்டமாய்ச் சாரித்தெரி.

(இ-ள்.) விரைவாதத்திற் கெண்ணேயாவது:—ஆதண்டை யிலே யும், வெள்ளே வெங்காயமும் வெவ்வேருயரைத்து சமனுய்ச் சேர்த்து 10-பலம் விளக்கெண்ணேயிற் கலந்துக் காச்சிப் பதத்தில்வடித்து 5-அல்லது 7-நாள் வெறுகடிவீதம் காலேயில் தேக்கரண்டிவீதம் குடித்து வர, விரைவாதம், வாய்வுகள், கைகால் பிடிப்பு முதலியதுதீரும். இச் சாபத்தியம். எ-று. 390

நாக்குப்பூச்சிக் கெண்ணே.

கழற்சிச்சார்பாகல்சுக்குக் கரந்தைவசவிளக்கெண்ணே
பழுக்கக்காச்சேற் றெவர்க்கும்.

(இ-ள்) நாக்குப்பூச்சிக் கெண்ணேயாவது:—கழற்சி யிலேச்சார், பாகயிலேச்சார், சுக்கு, வசம்பு, கரந்தை வகைக்குவிராகனிடை 1-விள க்கெண்ணேபலம் 10-ல் விட்டு அதினேடுகொஞ்சம் வெங்காயம் இரச கற்பூரதூளுஞ் சேர்த்துக்காச்சிப் பதத்திலிறக்கி உச்சிக்கரண்டிவீதம் புகட்டபேதியாம். அதில் நாக்குப்பூச்சிகள் வெளியில் வந்து விழுந்து விடும். எ-று. 391

அரையாப்புக் கட்டிக் கெண்ணே.

வெங்காயச்சார்பழச்சார் வெண்குங்கிலியமெண்ணே
பொங்காய்த்தீக் காச்சிப்புடை.

(இ-ள்) அரையாப்புக்கட்டிக்கெண்ணே:—வெங்காயச்சார், எலுமிச்சன்பழச்சார், வெள்ளைக்குங்கிலியம், வகைக்கு விராகனிடை 1-சேர்த்து விளக்கெண்ணெபலம் 10-ல்விட்டுக்காச்சிப் பதத்திலிறக்கி 5-அல்லது 7-நாள்வெடிகாலேயில் உச்சிக்கரண்டிவீதம் உட்கொண்டுவரவும். அரையாப்புக்கட்டி உடைந்தாகிலும் அல்லது அழுந்தியாகிலும் ஆறிவிடும். இச்சாபத்தியம. எ-று. 392

ஈளைகாசத்திற் கேண்ணே.

கெஞ்சாவுத்தாமணிச்சார் கிட்டிவிளக்கெண்ணெயெரித்
தஞ்சாதுண்ணு லேந்துநாள்.

(இ-ள்.) ஈளைகாசத்திற் கெண்ணெயாவது:—நாட்பட்டுள்ள பழையகெஞ்சாவை அரைத்தவிழுதும், உத்தாமணிச்சாறும் சமனுக உழக்குவிளக்கெண்ணெயிற்கலக்கிக்காச்சிப் பதத்திலிறக்கி 3-நாள் அல்லது 5-நாள் காலேயில் உச்சிக்கரண்டிவீதம் குடித்துவர ஈளைகாசம்போம் இச்சாபத்தியம். எ-று. 393

குன்மத்திற் கேண்ணே.

முத்தெண்ணெத்திரிகடுகிந்துப்புப் பேய்க்கொமட்டிச்சார்
வித்தெண்ணெக் காச்சியுந்தா.

(இ-ள்) குன்மத்திற் கெண்ணெயாவது:—சித்தாமணக்கெண்ணெயில் பேய்க்கொமட்டிக்காயின்சாறும், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, இவைகளைப் பொடித்துப்போட்டுச் சாறும்விட்டுக் காச்சிப் பதத்தில்வடித்து 3-அல்லது 5-நாள் கரண்டிவீதம் உட்கொண்டு வரவும், குன்மங்கரைந்துவிடும். எ-று. 394

மேகரோகங்கட் கேண்ணே.

கழற்பருப்பிருசீரகம் பரங்கிரோகணிபூரம்
உழக்கதுமுத்தெண்ணே யெரித்திடு.

(இ-ள்) மேகரோகங்கட் கெண்ணெயாவது:—கெச்சைக்காய்ப் பருப்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், பரங்கிச்சக்கை, இரசகற்பூரம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை 1, ஆமணக்கெண்ணே உழக்குவிட்டுக் காச்சிபதத்தில்வடித்திரக்கி 7-நாள் உதையத்தில் உச்சிக்கரண்டிவீதம் உட்கொண்டுவர வெள்ளை, அரையாப்பு, மேகரோக முதலியவை தீரும். இச்சாபத்தியம். 395

## சேத்துமத்திற் கெண்ணெ.

கடுக்காயுங்கையான்சார் கலந்தெண்ணெயிற்காச்சி
மூடுக்காயுண்ணே மூன்றுநாள்.

(இ-ள்) சேத்துமத்திற் கெண்ணெயாவது:—கடுக்காயின் தூளும், கரிசலாங்கண்ணிச்சாறும் வகைக்குப்பலம் 1-விளக்கெண்ணெ வீசை கால் அதில் விடுத்துக்கலந்து காச்சிப்பதத்தில் வடித்து 15-நாள்வெடி காலையிற்குடிக்க, சேத்துமத்தினாலுண்டாகிய நோய்களனைத்தும் நீங்கிடும். எ-று. 396

## தும்மட்டிக்கா யெண்ணெ.

துண்டித்துநாற்பிளவாய்த் தும்மட்டிக்காயைவிளக்
கெண்ணெயிற் றூளியிலேற்றிடு.

(இ-ள்.) தும்மட்டிக்கா யெண்ணெயாவது:—துப்மட்டிக் காயை நவ்வாலாயறுத்து 10-க்கு விளக்கெண்ணெவீசை 1-ல்விட்டு இரண்டொருநாளூறவைத்து ஓர்சட்டியில்வார்த்து எருமுட்டைத்தாளியில் வைத்தெரித்து எடுத்திறுத்து அதை ஸ்திரீகளுக்கு 5-அல்லது 7-நாட்காலையில் உச்சிக்கரண்டிவீதங் குடிக்க சூதகவாய்வுமுதல் சகலநோய்களுந் தீரும். அதோடு பூண்டு, மிளகு, கரிமஞ்சள்சேர்த்தாலும் சேர்க்கலாம். இச்சாபத்தியம். எ-று. 397

## மலசலமடைப்புக் கேண்ணெ.

சேரேமுனேரண்டத் தெண்ணெபலத்திற்கால்மல்
ஓரேவிராகனிடை யிட்டெரி.

(இ-ள்) மலசலமடைப்புக்கெண்ணெயாவது:—ஏரண்டத்தெண்ணெ பலம் 1-கால்மல் அதாவது இரசபஸ்மம் விராகனிடை 1-சேர்த்துக் கலக்கி உள்ளுக்கேற்றவும். உடனே அடைப்பட்ட மலசலமானது உடைந்துமலசலப்பிரவர்த்தியாம். ஆகாவிடின்அபாயக்குறியாம். எ-று.

## மலட்டு வயர்வலிக் கேண்ணெ.

உப்புவிளக்கெண்ணெ சமனெக்கவிரண்டுங்கலக்கி
யப்பொழு துள்ளுக்கேற்றிடும்.

(இ-ள்) மலட்டுவயர்வலிக் கெண்ணெயாவது:—உப்புபலம் 1-விளக்கெண்ணெ பலம் 1-சேர்த்துக்கலக்கி உட்குடிக்க வாந்தியானாலு

மாகும். அதில் அப்பூச்சிகளும்விழும். அல்லது பேதியாளுலுமாகும். இவ்வாறு 3-நாட்காலேயிற் குடிக்க வயர்வலி நிற்கும். சந்தான முதிக் கும். மீறி வயர்வலிநிற்காமலும் கருதரிக்காமலுமிருக்கில் மறுமாதமும் பின்செப்புவதைச் செய்துண்ணவும். எ-று. 399

இதுவுமது.

எண்ணெத் தலைமுழுகி யெள்ளெண்ணெ ரெண்டுபலம்
அண்ணுமட்டிக் குங்கமரையுண்.

(இ-ள்). 2-வது முழுக்குவருகையில் எண்ணெதேய்த்து தலைமுழுகி நல்லெண்ணெ பலம் 2-ல் மட்டிக்குங்குமம் பலம் அரைசேர்த்துக் கலக்கி ஈரத்தலேயிற் கண்களேமூடிக்கொண்டு குடித்துவிட்டு மஞ்சள் பூசி குளிக்கவும் அப்படிக்குடிக்க அவ்வயர்வலி நின்று சந்தானமுதிக் கும். மீறில் 3 ம்மாதமும் இவ்வாறு செய்துண்ண அவசியம்வயர்வலி நின்று சந்தானமுதிக்கும். எ-று. 400

நேர்ந்த பிள்ளேக் கெண்ணெ.

தேரையொன்றைப்பிடித்தெண்ணெ சென்றெரித்து நான்குபொழு
தேரவுண்ண நேர்ந்தலெழும்.

(இ-ள்) நேர்ந்தபிள்ளேக் கெண்ணெயாவது:—தேரை யொன்றைப் பிடித்து விளக்கெண்ணெ 15-பலத்திற்போட்டுக் காச்சிக் கடுகுதிரள இறக்கி 1-வாரங்காலேயில் கரண்டிவீதம் புகட்டிவரவும் நேர்ந்தபிள்ளே கள் புஷ்டியாய் ஓங்கிவளர்வர். எ-று. 401

15-எண்ணெப்படலம். 27.

முற்றிற்று.

## 16 தைலப் படலம் 32

### படைச்சோரிக்குத் தைலம்.

நிம்பயெண்ணேக் காச்சியதனிற் பனேவெல்லந்தூவி
யும் படைப்புண் சொரிபூசிடும்.

(இ-ள்.) படைசொரிக்குத் தைலமாவது :—வேப்பெண்ணேப் பலம் 5, காச்சிக் கொதிக்கையில் பனேவெல்லம் பலம் 5, கிள்ளிக் கிள்ளித்தூவிப் பதத்திலிறக்கி உடனே வடித்து புட்டியிலிட்டுப் படை, சொரி, கடுவன், படுவன், மங்கு, தேமல். முதலியதற்கு காலேயில்தயிர் மோர் பழையது கூழ்முதலியதுண்டு இதை முற்கூறிய விடங்களிற் றடவி மாலேயில் குளித்துவரவும். 3-நாளிவ்வார்செய்ய மாறிவிடும். எ-று. 402

### கண்துலங்கத் தைலம்.

நந்திக்களாத்தும்பைமூப்பூ நல்லெண்ணேயினிலேற்றி
அந்திக்கிடாய் கண்துலங்கும்.

(இ-ள்.) கண்துலங்கத் தைலமாவது:—நந்தியாவட்டப்பூ 25, களாப்பூ-50, தும்பைப்பூ 100, இவைகளே நல்லெண்ணேயிற்போட்டு ஊறவைத்து குப்பையிற் புதைத்து அரை-அல்லது 1-மண்டலஞ் சென்றெடுத்து அதில் ஒவ்வொருதுளி கண்களில் விட்டுவரவும். சுரம், குளிர். சன்னிதீரும். கண்துலங்கும். இதிற்பீதரோகணி சேர்த்திடினுஞ் சேர்த்திடலாம். எ-று. 403

### மண்டையிடிக்கு தாழம்பூதைலம்.

எண்ணேயிற்றாழம்பூ வின்னிதழையூறவைத்துக்
கண்ணதிற்போடுங் துளியதாய்.

(இ-ள்.) மண்டையிடிக்கு தாழம்பூதைலமாவது:--தாழம்பூவுகளுள்ளிருக்கும் இளந்தளிரைக் கொஞ்சம் நல்லெண்ணேயிற் போட்டூறவைத் துரவியிற் சூடேற்றியதில், இரண்டொருசொட்டு கண்ணிற்பாயவிட்டு வரவும் சுரம், குளிர், சன்னி, பீநசம், தலேவலி, மண்டையிடி முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளேத்துந்தீரும். கண்களும் நன்ருய்த்தெரியும். எ-று. 404

காது மந்தத்துக்கு தைலம்.

மஞ்சள்வசம்புபூண்டுப் பிரண்டைச்சன்னிப்பூண்
டஞ் செண்ணெயிற் காச்சிடு.

(இ-ள்.) காதுமந்தத்துக்கு தைலமாவது:—கரிமஞ்சள், வசம்பு, வெள்ளைப்பூண்டு, பிரண்டை, சன்னிப்பூண்டு சாம்பிராணி, பெருங் காயம் யாவும் சமனுகசேர்த்து நல்லெண்ணெ 10-பலத்திற் போட்டுக் காச்சியிறுத்து தலைமுழுகிவரவும், காதுமந்தம், சீதளம், சன்னி, செவுடு, காதிரைச்சல், காதில் சீழ்வடிதல் முதலியதுதீரும். எ.று. ()

குளுத்திக்குத் தைலம்.

ஆவாரந்தழை சுரைக்காய்ச்சார் நல்லெண்ணெ சமன்
மூவாரந்தலை முழுகிவா.

(இ-ள்.) குளுத்திக்குத் தைலமாவது:—ஆவாரந்தழைச்சாறும், சுரைக்காயின்சாறும், சமனுய்ச்சேர்த்து நல்லெண்ணெயில்விட்டுக்காச்சி வடித்திறுத்து, தலைமுழுகிவரவும் தேகமானது அதிகுளிர்ச்சியா யிருக்கும். இத்தைலத்தைத் தலையிற்றேய்க்கும்போதே கண்முதல் தேகமுழுதும் குளிர்ச்சியாயிருக்கும். எ-று. 406

அண்டத் தைலம்.

அண்டம்வித்ததிலுள மஞ்சட்கருவகற்றி படிகியுங் கற்
கண்டுமடைத்து மூடிவை.

(இ-ள்) அண்டத்தைலமாவது:—கோழிமுட்டை அவித்து 2- ஆகவறுத்து மஞ்சட்கருவை யகற்றி அதினிறைய படிகாரமும் சீனு கற்கண்டு தூளுமடைத்து 2-பத்தையும் ஒன்றுய்மூடி நூலாற்கட்டி ஈரமணலிற் பரப்பி வைக்கவும் காடிபோற்றைலங்கசிந்து. இறங்கி டும். அதைக் கண்களிற்றீட்டிவரவும். கண்கள் துலங்கும். பித்தநீர் கக்கிடும், சாலேசுரமாறும், நயனவியாதிகள் தீரும். எ-று. 407

ஒரு தலைவலிக்குத் தைலம்.

மேனிசக்களத்திரச மெண்ணெயுங்காச்சியு மூணுள்
தானிதிற் றலைக்கு வார்க்கத்தா.

(இ-ள்.) ஒருதலைவலிக்குத் தைலமாவது:—குப்பைமேனியின் சக்களத்தியை இடித்துச் சார்பிழிந்ததற்குச் சமன் நல்லெண்ணெ

விட்டுக் காச்சிப் பதத்திலிறக்கி யிறுத்து 3-முழுக்கு வெடிகாலையில் தலைமுழுகிவரவும், ஒற்றைத்தலைவலி, இரட்டைத்தலைவலி, சன்னி. சீதளம் முதலியதுந்தீரும். எ-று. 408

### பாரிசவாய்வுக்குத் தைலம்.

வேளைச்சாற் றெள்ளெண்ணெவிட்டு கடும்பத்தியமை
நாளைத்தான் கொள்ளநலம்.

(இ-ள்) பாரிசவாய்வுக்குத் தைலமாவது:—நல்வேளையைச் சார் பிழிந்து அதற்குச்சரி நல்லெண்ணெவிட்டுச்சாரித்து 5-நாள் கடும்பத் தியத்திருந்து குடித்துவரவும், பாரிசவாய்வுத்தீரும். 6-ம்நாள் வறுத்த வுப்பு, சுட்டபுளி கூட்டி 7-ம் நாள் தலைக்குவார்க்கவும். எ-று. 409

### பெரியவியாதிக்குத் தைலம்.

நல்லெண்ணெத்தாழம்பூ நன்றாரமேற்பூசிற்
செல்லும்பார் பெருவியாதியே.

(இ-ள்.) பெரியவியாதிக்குத் தைலமாவது:—10-தாழம்பூவை நல்லெண்ணெயி லூறவைத்து அதைத் தேகமுழுதிலும் பூசிவரவும் பெரியவியாதி, மேகரிணம், படை, சொரி, தினவு, சிரங்குமுதலியது தீரும். தேகமுஞ் சுத்தியாம். இதற்குச்சாபத்து அவ்வேரைக் கியா ழஞ்செய்து சரிசீனிசேர்த்துக் காச்சிக் குடித்துவரவும் மேற்சொன் னதியாவுந்தீரும். எ-று. 410

### பேதியில் மருந்தீடேடுக்கத் தைலம்.

காடிபழச்சார் நல்லெண்ணெக்கலக்கி மாலையுண்ண
வாடிமருந்தா மலத்தில்வரும்.

(இ-ள்.) மருந்தீடெடுக்கத் தைலமாவது:—சீமைக்காடியும், எலு மிச்சன்பழச்சாறும், நல்லெண்ணெயும் வகைக்கு ஆழாக்குச்சேர்த்து மத்தித்து மாலைநேரத்தில் உண்ணவும். காலையில் உள்ளேற்றிய மருந் தானது மலத்தில் வெளிவந்து விழுந்துவிடும். சுடுகையாய் ரசஞ்சாத முண்ணவும். முன்துற்குணமியாவு மாறிடும். எ-று. 411

வாந்தியில் மருந்தீடெடுக்கத் தைலம்.

அகத்தியிலைத்துவைத்துக் காடியிலரைத்துப்பழச்சாற்றுட்
புகட்டிடுமுன் னெதிரெடுக்கும்.

(இ-ள்) வாந்தியில் மருந்தீடெடுக்கத் தைலமாவது:—அகத்தி யிலையைத்துவைத்து சீமைக்காடியி லதையரைத்து 2-எலுமிச்சன் பழச்சார்விட்டு மத்தித்து வடிகட்டி உட்கொள்ளவும். அதில் உடனே வாந்தியாகி உள்ளேறிய மருந்தானது வெளியில்வந்து விழுந்துவிடும். இதுமெத்தவும் கஷ்டத்தைக் கொடுக்கும். சுடுகையாய் ரசஞ்சாதம் உண்ணச் செய்யவும். எ-று. 412

முடக்குநோய்க்குத் தைலம்.

பூண்டுமுடக்கொத்தானைப் போட்டெள்ளெண்ணையிலரைத்து
மீண்டுமருந்துண் மூன்றுநாள்.

(இ-ள்) முடக்குநோய்க்குத் தைலமாவது:—வெள்ளைப் பூண்டு, முடக்கொத்தான் இவ்விரண்டையும் விளக்கெண்ணையி லரைத்து 3-அல்லது 5-நாள் அந்திசந்தி இச்சாபத்தியத்தோ டுண்டுவரவும் கை கால்முதலியது முடங்கியதுதீரும். பேதியுமாகும். எ-று. 413

தலைமுழுக்கிற் சுரம்வருதற்கு தைலம்.

வேப்பங்காயெண்ணையினில் விட்டெரித்துமும்முழுக்கிற்
சூப்புங்காலையி லிட்டிடு.

(இ-ள்.) தலைமுழுக்கிற் சுரம்வருதற்கு தைலமாவது:—வேப் பங்காய்களை நல்லெண்ணையில் நறுக்கிப்போட்டுக்காச்சி யிறக்கிவடித்து அதை 3-நாள் அதிகாலையில் தலைக்குவார்த்து சூப்பிட்டுக்கொடுத்துச் சாதமுண்பிக்கவும். தலைமுழுகும் தினத்தில் சுரமானதுவருதல் நின்று விடும். எ-று. 414

எரிகாமாலைக்குத் தைலம்.

பேய்ப்பீர்க்கன்சார்கரண்டிப் பின்னெண்ணைமிளகுசம
னுய்ச்சேர்க்க வேழுநாளுண்.

(இ-ள்) எரி காமாலைக்குத் தைலமாவது:—பேய்ப்பீர்க்கன் சார் ஒருகரண்டியும். நெல்லெண்ணை ஒரு கரண்டியும் சேர்த்துக்கலக்கி மிள கின்றாள் ஒருபலம்கூட்டி குலுக்கி ரவியில்வைத்து 7-நாட் காலையில்

ஒரு உச்சிக்கரண்டிவீத முண்டுவரவும். எரிகாமாலே கண்கள் பச்சை நிறமாயிருத்தல் தேகமெங்குமெரிதல் தீரும். இச்சாபத்தியமா யிருக்வும். எ-று. 415

### எலிகடிபலநோவிற்கு தைலம்.

கருவேலம்பட்டைச்சார் கலந்துநல்லெண்ணெவிட்டுக்
குருமூல மூன்றுநாளுண்.

(இ-ள்) எலிகடிபலநோவிற்கு தைலமாவது:—கருவேலம் பட்டைச்சார் சிரங்கை, நல்லெண்ணெ ஒருகாசிடைகுத்தி 3-நாட் காலையிற் குடிப்பிக்கவும் வயர்கழியும், வாந்தியுமாகும், தண்ணீரிற் குளிக்கவும். பிறகு சுடுகஞ்சி குடிக்கவும் வாந்திபேதிநின்றுவிடும். பின் மறு பத்தியம் ஆறுநாளிருக்கவும் எலிகடிவிஷம், இருமலிரைப்பு, வீக்கம் காச்சல், குளிர், சன்னிமுதலிய தோஷங்கள் தீரும். எ-று. 416

### செவிமந்தத்துக்குத் தைலம்.

எணணெநிலப்பனைக்காயிற் காச்சிப்பாதந்தேய்
குண்ணசெவி மந்தமறும்.

(இ-ள்.) செவிமந்தத்துக்குத் தைலமாவது:—நல்லெண்ணெ படிகால் நிலப்பனைக்காய் பலம் ஒன்று நறுக்கித் தூள்செய்துப்போட்டுக் காச்சி 40-நாள் அதைத்தொட்டு இரண்டுபாதங்களிலுந் தேய்த்துவரவும். காது மந்தப்பட்டுக்கேட்காதது நன்றுய்க்கேட்கும். இத்தைலத்தைக்கால் பெருவிரல் நகத்திற் றுளிதடவ கண்களானது நன்றுய்த் தெரியும். கக்கத்திற்றேய்க்கத் தலைநோயையகற்றும். எறு. 417

### சிரநோய்க்குத் தைலம்.

கொடிவேலிப்பட்டையினைக் குமரிச்சாற்றரைத்தெண்ணைப்
படிசேரப் பதத்திலெரி.

(இ-ள்.) சிரநோய்க்குத் தைலமாவது:—சித்திரமூலவேர்ப் பட்டையைக் கற்றுழைச்சார்விட்டரைத்து 4-பலம் விழுதை 1-படி நல்லெண்ணெயில் விட்டுக்கரைத்துக் காச்சிப் பதத்தில் வடித்து இறுத்து தலைநோயெடுக்கையில் 3-தலை வெடிகாலையில் முழுகிவரவும். அச்சிரநோய் நின்றுவிடும். எ-று. 418

### சுவாசகாசம் பீநசத்திற்குத் தைலம்.

துளசிச்சாரெண்ணெசமன் றெட்டெரித்துத் தலைமுழுக
இளகிசுவாச காசமேகும்.

(இ-ள்.) சுவாசகாசம் பீநசத்துக்குத் தைலமாவது:—துளசிச் சாறும் நல்லெண்ணெயும் சமனுகக்கலந்து காச்சிப்பதத்திலிறக்கி 20-விசை வெடிகாலையிற் றலைமுழுகவும். முழுகாதநாட்களில் இத்தைலத் தைநாசிகளில் நசியமிட்டுவரவும். சுவாசகாசமுடன் சகல பீநசமுந் தீரும். எ-று. 419

### தலைநோய் கழுத்திசுவுக்குத் தைலம்.

வில்வயிலைவிழுதெண்ணெ விட்டுகரைத்துக்காச்சி
செல்லி தலைமுழுகிட்டுத்தீர்.

(இ-ள்) தலைநோய் கழுத்திசுவுக்குத் தைலமாவது:—வில்வயிலையரைத்தவிழுதை நல்லெண்ணெயிற் கரைத்துக்காச்சிப் பதத்தில்வடித் திறக்கி 3-நாள் வெடிகாலையில் தலையிற்றேய்த்து வெந்நீரில்முழுகிவரவும். தலைநோய், கழுத்திசுவு மாறும். அன்றுபகல் தூங்காதிருப்பதுடன் சூப்புசாதமுண்ணவும். எ-று. 420

### நீர்பீநசத்துக்குத் தைலம்.

பூண்டுகண்டங்கத்திரிச்சார் பொன்வசம்பிடித்தெண்ணெ
மீண்டிரண்டு தலைக்கெரித்து மூழ்கு.

(இ-ள்) நீர்பீநசத்துக்குத் தைலமாவது:—வெள்ளைப் பூண்டு பலம் அரை வசம்புபலம் 2, சேர்த்திடித்து கண்டங்கத்திரிச் சார்படி ஒன்று நல்லெண்ணெபடி ஒன்றில்கலந்து யாவுங்காச்சி மெழுகுபதத்திலிறங்கி 2-3 தலைமுழுகிவரவும் நீர்பீநசமுதலியாவுந் தீரும். எ-று

### நுணக்கிரந்திக்குத் தைலம்.

வேசரிவிட்டையினதினீர் விட்டேனத்துண்டுவெல்லம்
நீசரியுட்கொடு முழக்கு.

(இ-ள்.) நுணக்கிரந்திக்குத் தைலமாவது:—கழுதைப்புட்டையையரைத்து அதில்வரும் நீரை ஒரு புட்டியில்விட்டு வலுவுள்ளவர்க்கு உழக்கு நீறும், வலுவில்லாதவர்க்கு ஆழாக்கு நீறுமாய் பனைவெல்லத்தைத் தின்றவுடன் இதைக் குடித்திடும் 3-நாளும் கடும்பத்

தியமாயிருந்து மறு 3-நாள் வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும் நுணுக்கிரந்தி முதல் பல கிரந்திரிணங்களாறும். 8-ம்நாள் ஓமந் தேய்த்துத் தலைமுழுக்காட்டவும். பிறகு எண்ணெயில் தலைமுழுகவும். எ-று. 422

### உறம் விழுதலுக்கு முடுகு தைலம்.

வெள்ளுள்ளிவனக்கடுகு விண்டுகுழித்தைலமெடுத்
தள்ளுள்ளிவிடப்பூசறும்.

(இ-ள்) உறம்விழுதலுக்கு முடுகுதைலமாவது :—வெள்ளைப் பூண்டும், காட்டுக்கடுகும் வகைக்குப் பலம் 10, ஒரு குடுவையிற் போட்டு மேலோடுமூடி சீலைமண்செய்து அடியில் 4-5-துளைசெய்து சுப்பல்கள் வைத்து குழியிற்பாதி புதைத்து மேல் எருமுட்டைகளைப் போட்டு கொளுத்திவிடத் தைலமிறங்கும். இதைப்பிள்ளைகள் குடல் வாதத்திற்கும், உறம்விழுந்ததற்கும் மேற்பூசிவரத்தீரும் எ-று. 423

### மண்டைகரப்பானுக்குத் தைலம்.

அலரிவேர் வசம்பு பூண்டதை யெண்ணெயிற் கலக்கி
விலகபூசிடும் புள்ளிமேல்.

(இ-ள்.) மண்டைக்கரப்பானுக்குத் தைலமாவது:—அலரிவேர் பட்டையும், வசம்பும், வெள்ளைப்பூண்டும் ஆகிய இம்மூன்றையும் அரைத்து நல்லெண்ணெயிற் கலக்கி அப்புண்களின்மேல் வைத்துப் பூசிவரவும். மண்டைகரப்பான்தீரும். இப்படி 4-5-நாட் பூசிவரவும். ஆறிவிடும். எ-று. 424

### தலைப்புழுவெட்டுக்குத் தைலம்.

மிளகு மூட்டுப்பூச்சி வெற்றிலைச்சாரணையெண்ணை
இளகத்தேய்ப் புழுவேகிடும்.

(இ-ள்) தலைப்புழுவெட்டுக்குத் தைலமாவது:—மிளகு 10, மூட்டுப்பூச்சி 18, சாரட்டைச்சார், வெற்றிலைச்சார் யாவும் நல்லெண்ணெயிற் கலக்கி ரவியில்வைத்து உலர்த்தி 3-தினம் உரோமங்களுதிர்ந்த விடங்களில் தடவிவரவும் தலைப்புழுவெட்டுகள்மாறி நன்றாய் மயிர் முளைந்திடும். எ-று. 425

### அட்டபீநசத்துக்குத் தைலம்.

பேய்ச்சுரை பேய்ப்பீர்க்குவித்துப் பின்னெண்ணெயிற்கலக்கித்
தேய்ச்சிரமேற்றுனசியஞ்செய்.

(இ-ள்.) அட்டபீநசத்துக்குத் தைலமாவது:—பேய்ச்சுரையின் வித்தும், பேய்ப்பீர்க்கன்வித்தும், அரைத்துநல்லெண்ணெயிற் கலக்கிக் காச்சியிறுத்து 3-நாள் தலையிற்றேய்த்து வெந்நீரில் முழுகவும். நாசிகளில் நசியமுமேற்றிவர அப்பீநசங்களகலும், கண்கள் பிரகாசமாயுந் துலங்கும். எ-று. 426

### சன்னிக்குத் தைலம்.

கடுகுள்ளிவசம்பு சர்ப்பக்கண்டம் பூநாகங்காயம்
வடிநிம்பத் தைலத்தெரி.

(இ-ள்.) ஜன்னிக்குத் தைலமாவது:—கடுகு, வெங்காயம்,வசம்பு சர்பக்கண்டம், பூநாகம், பெருங்காயம், யாவும்பொடித்து அரைத்து வேப்பெண்ணெயிற் கலந்து காச்சிப் பதத்திலிறக்கித் தலையிற்றேய்த்து முழுகிவரவும். ஜன்னி, சைத்தியம், சீதளம், சலுப்பு முதலிய வியாவுந் தீரும். எ-று. 427

### சாலேசுரத்துக்குத் தைலம்.

இரவிற்சீரகம் நீரிலிட்டூற வெண்ணெயிற்சேர்த்
தெரியத்தானமுஞ் செய்திடு.

(இ-ள்) சாலேசுரத்துக்குத் தைலமாவது:—சீரகம் 2-பலத்தை இராத்திரியில் தண்ணீரிலூறவைத்து வெடிகாலையி லிறுத்தெடுத்து சரியிடை நல்லெண்ணெசேர்த்துக் காச்சிப்பதத்திலிறக்கிவடித்துஅதை தலையிற்றேய்த்து முழுகிவரவும். சாலேசுரமானதகலும். கண்கள் நன்றாய்த்தெரியும் எ-று. 428

### ஒற்றைத்தலைநோய்க்குத் தைலம்.

நட்டுவக்காலியொன்றை நல்லெண்ணெயில் விடக்காச்
சிட்டுவக்காலில் முழுகிடு.

(இ-ள்.) ஒற்றைத்தலைநோய்க்குத் தைலமாவது:-நல்லெண்ணெயைக் காச்சி அதில் ஒரு கருந்தேளை உயிருடன்போட்டு அதுநன்றாய்ப் பொரிந்தபின் எடுத்தெரிந்துவிட்டு அதை வெடிகாலையில் 3 நாள் தலை

முழுகிவரவும். ஒற்றைத்தலைநோய், இரட்டைத்தலைநோய், சன்னி புறங்கழுத்திசிவுந் தீரும். எ-று. 429

## இரட்டைத்தலைநோய்க்குத் தைலம்.

*பூண்டுமஞ்சள்மிளகெண்ணைப் பொங்கவர்க்கஞ்சார்விட்டு
மீண்டுமஞ்சுதினஞ் சென்னித்தேய்.*

(இ-ள்) இரட்டைத்தலைநோய்க்குத் தைலமாவது:—நல்லெண்ணையில் பூண்டு, மிளகு, கரிமஞ்சள்போட்டுக் காச்சிச் சிவந்தபதத்தில் வெள்ளெருக்கன்சார்பிழிந்துவிட்டு இறக்கி அதை வெடிகாலையில் 3-5 நாள் தலைமுழுகிவரவும். இரட்டைத்தலைநோய், ஒற்றைத் தலைநோய் ஜன்னி, புறங்கழுத்திசுவுமுதல் தீரும் தலைமுழுகியவுடன் ரசஞ்சாத முண்டு முக்காடிட்டுப் படுத்துத்தூங்கவும். எ-று. 430

## கபாலபித்தத்துக்குத் தைலம்.

*எண்ணைகரிக்காப்பால் காட்டுச்சீரகமெரித்து
ஒண்ணட்டநாள் தலைதேய்த்திடு.*

(இ-ள்.) கபாலபித்தத்துக்குத் தைலமாவது:—நல்லெண்ணை 5-பலத்தில் பசும்பால் 5-பலம் விட்டு அதில் காட்டுச்சீரகம் 1-பலம் பொடித்துப்போட்டு காடாத்தில்விட்டுக் கலக்கிக்காச்சிகடுகுதிரள இறக்கியிறுத்து ஒண்ணட்டநாள் அல்லது வாரத்திற்கிருமுறை உச்சியிற்றேய்த்து தலைமுழுகவும். கபாலத்திலுள்ள பித்தச்சூடு, கண்களின் துர்நீர் துலைந்து பார்வை நன்றாய்த் தெரியும். எ-று. 431

## காதுசெவிடுக்குத் தைலம்.

*வெள்ளுள்ளித்தார முள்ளங்கிக் கிழங்கெண்ணையிற்காச்சி
யுள்ளிட்டுவரச் செவிடறும்.*

(இ-ள்.) காதுசெவிடுக்குத் தைலமாவது:—முள்ளங்கிக்கிழங்கைத்தட்டி வெள்ளைப்பூண்டைச் சதைத்து, தாளகத்தைப் பொடித்து சமனிடை நல்லெண்ணைவிட்டுக்காச்சிப் பதத்தில்வடித்து அதைக் காதிற்பிழிந்துவரவும். வெகுநாட்பட்ட காதுமந்தம், செவிடுமுதல் தீரும். எ-று. 432

### விடாச்சன்னிக்குத் தைலம்.

பிரமராகாக்ஷிசார் பிழிந்தெண்ணெச்சமன்காச்சி
கிரமமாய்மூன்று ஸ்நானஞ்செய்.

(இ-ள்.) விடாச்சன்னிக்குத் தைலமாவது:—பிரமராகாக்ஷி மட்டைகளை வரவைக்கலில்வாட்டிச் சார்பிழிந்து அதற்குச்சரி நல்லெண்ணெவிட்டுக் காச்சிப்பதத்தில் வடித்திறுத்து அதை 3-விசைவெடிகாலையில்தலையிற்றேய்த்துமுழுகி சூப்புடன்போஜனமருந்தி தூங்காதிருக்கவும். நாட்பட்டுவிடாத ஜன்னியானது விலகிவிடும். புறங்கழுத்திசுவுந் தீரும். எ-று. 433

16 தைலப் படலம் 32

முற்றிற்று.

## 17 பரிகாரப் படலம் 9.

### மலசலக் கட்டற.

காரஞ்சாரஞ்சீனங் கண்டுப்புப் பொட்டுலுப்பு
மோரேயேனத் தீயங்கெறி.

(இ-ள்.) மலசலக்கட்டற பரிகாரம்:—படிகாரம், வெண்காரம், நவாச்சாரம், சோத்துப்பு, பொட்டுலுப்பு, இவ்வைந்தும் ஒரு குடுவையிற்போட்டு சில்லுமூடி 10-எருவிற்புடமிட்டெடுத்து அதைச்சுரண்டி நுணுக்கி அதில் 1-தம்படியிடை இளநீர் தண்ணீரிற் போட்டுக் கலக்கிக்குடித்துவிடவும். உடனே மலசல பிரவர்த்தியாம். இதில் உஷ்ண வாய்வு, அஜீரணம், புளிஏப்பந்தீரும். எ-று. 434

### சீதள மாற.

கரிமஞ்சட்கியாழத்திற் கலந்துநற்பெல்லத்தை
பிரியத்துண் சீதளமறும்.

(இ-ள்) சீதளமாற பரிகாரம்:—கரிமஞ்சள் இரண்டொன்றை துண்டுதுண்டாய் நறுக்கி அரைபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்

ருய்க்காச்சி யிறுத்துவடிகட்டி அக்கியாழத்தில் கொஞ்சம் நல்லவெல்ல முங்கூட்டிக் கரைத்து இரண்டொருவேளைக் குடித்திடவும் சீதள மாறும். இருமல் நிற்கும். எ-று. 435

## தொண்டை கம்மலுக்கு.

சுன்னமேற்பெல்லந் தொண்டைமேற்பூசிநெருப்
பென்னதிற் பக்கங்காச்சு.

(இ-ள்) தொண்டை கம்மலுக்குப் பரிகாரம்:—சீதளத்தினால் தொண்டைகட்டி உமிழ்நீர்விழுங்க முடியாமல் வீக்கமுள்ளதற்கு அதின்மேல் சுண்ணும்பைப்பூசி பின்னும் அதின்மேல் நல்லவெல்லம் பூசி படைநெருப்பிற்காச்சவும் இப்படி 3-விசைசெய்ய யாவுஞ்சுகுணமாம். எ-று. 436

## நீர் கட்டிய துடைய.

கருங்கம்பளிபொசுக்கிக் கருப்புட்டி வைத்துருகில்
சுருங்கசலம் விட்டெரித்துண்.

(இ-ள்.) நீர்கட்டியதுடைய பரிகாரம்:—அடுப்பின்மேற் சட்டியைவைத்து அதில் கருங்கம்பளி அல்லது வெண்கம்பளிபோட்டுசாம்பலாக்கி அதினடுவில் பனைவெல்லம்வைக்க வுருகும். அதில் அரைபடி தண்ணீர்விட்டு ஆழாக்காய் காச்சியிறக்கி குடிக்க கொஞ்சநேரத்தில் நீர் தாராளமாயிறங்கும். மலமும்போம். எ-று. 437

## கடுவன் மாற.

நாலதுவாழைப்பழத்தி னல்லெருக்கன்பால்பிசைந்து
காலையிற்பூசியு மாலைக்குளி.

(இ-ள்) கடுவன்மாற பரிகாரம்:—வாழைப்பழம் 4-ல் எருக்கன்பால்விட்டுப்பிசைந்து கடுவனுள்ளவிடத்திற் காலையிற்பூசி மாலையிற் சொரிந்து தேய்த்துக்குளிக்கவும். அப்பூச்சுகளெல்லாஞ் செத்து தரையில்விழுவதில், விரணம், புண், புரை. சொரி, படை, பொக்கு, நமை, தினவு, சீழ், செந்நீர்யாவும் அற்றுவிடும். எ-று. 438

## பெரும்பிணிக்கு சாந்தி.

ஆயிரமருந்திற் கங்கரைகழிப்பெடுக்கப்
பாயினிற்படுப்பர் தேர்வர்.

(இ-ள்.) பெரும்பிணிக்கு சாந்திபரிகாரம்:—நாட்பட்ட வலுவாகிய தீராநோய்கட்கு ஆயிரமருந்துகள் அளிப்பதைவிட அவ்வேளையில் அரைக்கழிப்பாகிலும் சரியாய்ச்செய்திடவும். அந்நோய்கள் தடையின்றி எளிதில் நீங்கிவிடும். இதற்குப் பால்மாறிடின் பீடிக்கும். அவசியம் சாந்திகழிக்கவும். எ-று. 439

மருந்தேற்றும் வாரம்.

நாயர்செவ்வாய்குருவாரம் நன்மருந்துநோய்க்கேற்றிற்
பாயவவ்வார்வினை பற்றறும்.

(இ-ள்) மருந்தேற்றும்வாரம் பரிகாரம்:—நோய்களுக்கு மருந்தளிக்கவேண்டில் முதலில் ஞாயிற்றுக் கிழமை, செவ்வாய்க் கிழமை, வியாழக்கிழமைகளாகிய இம்மூன்று நாட்களில் ஏதாவதொன்றில் ஆரம்பிக்கவும். எவ்விதரோகங்களுந் தீருவதின்றி யாவும் இலேசாய் நீங்கிவிடும். எ-று. 440

பச்சிலை மூலிகை யெடுக்க.

பச்சிலைமேற்சுண்டுவிரற் பத்துநகமும்படா
துச்சிதமாய்க் கொய்துவெடு.

(இ-ள்.) பச்சிலைமூலிகையெடுக்க பரிகாரம்:—பசுமருந்து மூலிகைகளைப் பரிக்கவேண்டுமாகில் அவ்விலைகளின்மேல் சுண்டுவிரல்கள் 2-ம், நகங்கள் 10-ம் படாமல் ஒவ்வொரு இலையாய்க்கொய்து உபயோகிக்கவும். எவ்விதநோய்களும் எளிதில் நீங்கிவிடும். சாபமும் நிவர்த்தியாகும். எ-று. 441

மூலங்கரைந்திடற்கு.

பச்சைமிளகாய்பழமேழ் பங்குபூநாகமுமரைத்துண்
அச்சமிலை நோயறும்.

(இ-ள்) மூலம்கரைந்திடற்கு பரிகாரம்:—பச்சைமிளகாய் பழம் 7-பூநாகம்-7 வேளையொன்றுக்கு இவ்வாறரைத்து 3-அல்லது 5-நாள் காலைமாலை உட்கொண்டுவரவும். மூலமானது கரைந்து கூண்டுடைந்து விழுந்துவிடும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 442

17. பரிகாரப் படலம் 9

முற்றிற்று.

வைத்தியப்பெருங்குறள் மூலமும்-உரையும்

முதற்பாகம் முற்றிற்று.

உ

சிவமயம்.

கைகண்டவனுபோக

# வைத்தியப் பெருங்குறள்.

மூலமும்-உரையும்

## இரண்டாம் பாகம்—பின்னைநூறு.

### 18-சிகிற்சைப் படலம்-35.

சர்வ குன்மத்திற்கு.

உப்பிலுப்பைப் புண்ணாக்கை யுண்ணீரிலரைத்துகழற்
சிப்புகட்டு மூணாளிற்கே.

(இ-ள்) சர்வகுன்மத்திற்கு சிகிற்சை:—உப்பும், இலுப்பைப் புண்ணாக்கும் சமனாய்த் தண்ணீரிலரைத்துக் கழற்சியளவு 3-நாள் காலைமாலை யுட்கொண்டுவரவும் குன்மம், குன்மக்கட்டி கரைவதுடன் மலத்தில் சீழுதிரம் வருதலுக்கு அரைப்பத்தியம் வைக்கவும், அட்ட குன்மம், சர்த்திகுன்மம், எரிச்சல், நோதல், பசியில்லாமை தேக மிளைத்தல், குறல் கம்மல் முதலியவை தீரும். எ-று. 443

சன்னியகலச் சிட்கா.

சோற்றரைத்த வீரத்துட் பயர்வீத மளித்துண்
ளேற்றுமாம் பருப்பலதிப்பூ.

(இ-ள்) சன்னியகலச்சிட்கா சிகிற்சை:—சவ்வீரத்தைச் சோற்றிலரைத்து பயர் அல்லது துவரைவிதம் உட்கொடுத்து பின்சற்று

நோத்திற்கெல்லாம் மாம்பருப்பு அல்லது மாம்பூவைச் சோற்றி லரைத்து சுண்டைக்காயளவு உள்ளுக்கேற்றவும். இதற்கு மாத்தாம். உடனே சன்னிரோயகலும். எ-று. 444

சாராய்குடி யகல.

சாராயிற்பூநாகந்தன்னை வைமூனுட்கரையும்
சாராயிற்றுஞகத்தா.

(இ-ள்.) சாராய்குடியகலச் சிகிற்சை:—சாராயம் 1-திரானில் 5-6-பூநாகத்தை 3-நாட் போட்டுறவைக்கவும், அப்பூச்சிகள் தண்ணீ ராய்க்கரைந்துவிடும். அதை மறுபடியும் வேரொருதிரான் சாராயத் தில் கலந்து குடியனுக்குக் கொடுத்திட அவன் குடித்தமாத்திரத்தில் வாந்தியாய் வெகட்டலுண்டாவதினால் அவன் மற்றொருக்கால் அதை விரும்பான். எ-று. 445

நாய்க்கடி விஷங்காட்ட

புலித்தோல்பொரித் தெள்ளுப்பொடி வெல்லத்திற்பிசைந்து
சலித்தோர்க்கிடு மூனாள் தான்.

(இ-ள்.) நாய்க்கடிவிஷங்காட்டச் சிகிற்சை :— புலித்தோலைப் பொரித்து, எள்ளைப்பொடித்து புட்டிவெல்லத்திற்பிசைந்து எலுமிச் சங்காயளவாக 3-நானுட்கொடுக்கவும் நாய்க்கடியுண்டவர் சிறுநீரை ஓரேனத்திற் பிடித்துப்பார்க்க அந்நாய்க்கடிவிஷம் உதிரமதாய்க் கட்டி விழும். அப்படி விழாதாகில் விஷமில்லையெனக் கண்டறியவும். எ. று.

நீர்க்கட்டு நிற்க.

முள்ளங்கிக்கிழங்கின்சார் முன்காயஞ்சர்க்கரையும்
கொள்ளங்கு நீர்க்கட்டிற்கு.

(இ-ள்.) நீர்க்கட்டுநிற்க சிகிற்சை.—முள்ளங்கிக் கிழங்கின் சாற் றில் பெருங்காயத்தூளும் சர்க்கரையுஞ்சேர்த்து 3-அல்லது 5-நாள் காலைமாலை இருபொழுது முட்கொண்டுவரவும். நீர்க்கட் டானதுநின்று விடும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 447

சிறுநீரிறங்காததற்கு.

பூண்டுவெங்காயமொன்றிற் போஸ்டீஸெய் தடிவயற்றில்
மீண்டுகட்டாய் நீரிறங்கும்.

(இ-ள்.) சிறுநீரிறங்காததற்குச் சிகிற்சை:—வெள்ளைப்பூண்டு, வெங்காயம் ஈதொன்றையரைத்து அடிவயற்றில் போஸ்டீஸாக வைத்துக்கட்டியிருக்கவும், நீரிறங்கும். ஒருவேளை நீரிறங்காவிடின், நீர்பேதியாக இறங்காத நீருமிறங்கும். அதினால் வாதையுந்தணியும். எ-று.

சீதபேதி நிற்பதற்கு.

பட்டைச்சாராயத்திற் பன்னிபழச்சார் சமனுப்
விட்டை வேளையுண்ணவேண்டும்.

(இ-ள்) சீதபேதி நிற்பதிற்குச் சிகிற்சை:—பட்டைச் சாராயத்தில் எலுமிச்சன்பழச்சார் சரியிடையாய்விட்டு 3-நாள் காலைமாலை 5-6 வேளை உள்ளுக்குடித்துவரவும் சீதபேதியும், வயர்வலியுந்தீரும். இன்னுமற்ற பேதிகளுந்தீரும். பத்தியமாயிருக்கவும். எ-று. 449

வைசூரி சுரத்திற்கு.

ஈருள்ளிப்பூண்டொன்றை யிட்டுளங்கால் போஸ்டீஸெய்
பாருள்ளிற் காச்சறபடும்.

(இ-ள்.) வைசூரிசுரத்திற்குச் சிகிற்சை:—வெங்காயம் அல்லது வெள்ளைப்பூண்டு ஈதொன்றையரைத்து உள்ளங்கால்களிற் போஸ்டீஸாகக் கட்டிவைக்கவும் வைசூரியைச்சார்ந்த சுரம், குளிர், கொதிப்பு பைத்தியப்புலம்பல், சாந்தப்படும். தூக்கமும் நன்றுயப்பிடிக்கும், அம்மையும் அடங்கும். எ-று. 450

தலையிடி முகவலிக்கு.

சுக்கைத் தண்ணீரிலரைத்துப் போஸ்டீஸ்வலியின்மேல்
வைக்கப் பண்ணேகும்வலி

(இ-ள்) தலையிடி-முகவலிக்குச் சிகிற்சை:—சுக்கைத் தண்ணீரிலரைத்துக்கட்டியாய் வழித்தெடுத்து, வலிநோக்காட்டின்மேல் போஸ்டீஸாய் வைத்துப் பற்றுப்போடவும். தலையிடி-முகவலி, உஷ்ணம், சன்னி, சலுப்பு, முதலியதுதீரும். இவ்வாறு 2-3-விசை செய்யவும் நன்மையாம். எ-று. 451

தாது புஷ்டிக்கு.

நீர்முள்ளிவிரைசோம்பு நிற்கசமனுப்பாலி
லோர்மண்டல மருந்துள்.

(இ-ள்.) தாதுபுஷ்டிக்குச் சிகிற்கை:—நீர்முள்ளி விரையையும் சோம்பும், சமனையரைத்துப்பசும்பாலிற்கரைத்து ஒருமண்டலமுண்டு வரவும், அதிகவலுவேறியும் தாதுபுஷ்டியைத்தரும். இதைத்தின்னும் வரையில் ஸ்திரீபோகம், சிலந்திப்பதார்த்தங்களை நீக்கவும். எ-று.

திமிர்நாக்கு வாய்வலிக்கு.

சுக்கதனைவாயதிலிட்டுள் மென்றுவொதுக்குவதால்
மிக்கவும்நாவாய் திமிரற்றிடும்.

(இ-ள்) திமிர்நாக்கு வாய்வலிக்குச் சிகிற்சை:—சுக்கைத் தட்டி வாயினிலிட்டுமென்று ஒருபக்கமாய் ஒதுக்கிவைத்திருக்கவும். வாயில் உமிழ்நீரானது மிகுதியாய் வெளிவருவதில் பல்வலிகள், திமிர்நாவு, முகவலி, வாய்வலிகள்தீரும். இப்படி 2-3-தினம் செய்யவும் எ-று.

கிருமித் தலைநோய்க்கு.

படைநெருப்பிலெருமைவெண்ணை பதியவைத்துப்புகைச்செவி
யிடைவழிப்புகப் புழுவிழும்.

(இ-ள்) கிருமித்தலைநோய்க்குச் சிகிற்சை:—மண்டையிற் புழுக் களுதித்து தீராத்தலைநோயா யிருப்பவர்களுக்கு வரட்டிப்படைநெருப் பின்மேல் கொஞ்சம் வெண்ணையை வைத்திட அதில் எழும்பும் புகை யை ஒவ்வொரு காதுவழியாயும்பிடிக்க 4-5 புழுக்கள்வந்து வெளியில் விழும், உடனேதலைநோயுந்தீரும். அவர்களுக்கு நல்ல சுகபோஜன பதார்த்தமளிக்கவும். எ-று. 454

தோஷம்பிறந்து நாவிழலுக்கு.

சீனியுடன்முத்தக்கா சிற்சூடன்முலைப்பாலிற்
றூனுமரைத்துள் நசியந்தாக்கு.

(இ-ள்.) தோஷம்பிறந்து நாவிழலுக்குச்சிகிற்சை:—கோரைக் கிழங்கு, கற்பூரம், சர்க்கரை இம்மூன்றும் முலைப்பாலில் அரைத்து நாசிகளில் நசியமேற்றிடவும், தோஷப்பிறந்து நாவானது விழுந்தது டன் சன்னியினலுண்டாகிய பலநோய்களுந்தீரும். அப்படித் தீராவி டின் மறுபடி நசியமேற்றவுந்தீரும். எ-று. 455

நஞ்சுவிஷ மற்றிடற்கு.

சிறுநீரில்மஞ்சளரைத் திட்டுமூன் றலதைநாள்
இருநேரந்தர நஞ்சறும்.

(இ-ள்.) நஞ்சுவிஷமற்றிடற்குச் சிகிற்சை—மஞ்சளேச் சிறுநீரிலரைத்து புன்னைக்காயளவு காலேமாலே 3-நாள் அல்லது 5-நாளுண்டுவரவும். விஷக்கடிகள் 327-ம், நஞ்சுவகைகள் 18-ந்தீரும் கடும்பத்தியம் சிலந்திபதார்த்தமாகாவாம். எ-று. 456

நரம்பு சிலந்திக்கு.

மூக்கிரட்டையிலேவதக்கி முன்கட்டநரம்புவெளி
யாக்கிவிட்டே யாறிடும்புண்.

(இ-ள்) நரம்புசிலந்திக்குச் சிகிற்சை:—மூக்கிரட்டை யிலேயை வதக்கி நரம்புபுண்ணின்மேல் வைத்துவரவும். ஆறும் பின்னும் பெருங்காயத்தைப்பொரித்து நல்லெண்ணெயிலிழைத்துக் காச்சியெரித்து அதனைத்தடவிவரவும். நரம்பு சிலந்தி ஆறிவிடும். இப்படியேவிடாமல் தடவிவரவும். எ-று. 457

நீர்ச்சுருக்குத் தீர.

கற்கண்டுபடிகிசமன் கண்டரைத்தாப் பாலுண்ணுஞ்
சொற்கண்டு விடுஞ்சுருக்கு.

(இ-ள்) நீர்ச்சுருக்குத்தீரச்சிகிற்சை:—சீனுகற்கண்டு பொடியும், பொரித்தபடிகாரமும், சமனுய்ச்சேர்த்து பசும்பாலிற் கலந்து 3-நாட் காலேயில் உட்கொண்டுவரவும் நீர்ச்சுருக்குத்தீரும். இச்சாபத்தியமாய் வைக்கவும். இதனை மாலேநேரத்திலும் உட்கொண்டுவரவும் நன்மையைத்தரும். எ-று. 458

நீர்ப்பேதி யாக.

வெடியுப்புக்கற்கண்டு மிளநீரில் நிசிவைத்துக்
குடியப்பொழுது மூணுள்.

(இ-ள்.) நீர்ப்பேதியாகச் சிகிற்சை:—வெடியுப்பும், வெள்ளேக் கற்கண்டும் சமனுய்ப்பொடித்து இளநீரிற்போட்டு இராமுழுதும் வைத்து வெடிகாலேயில் 3-நாள் குடித்துவரவும். நீர்ப்பேதியாகும்.

உடனே வெள்ளையானது நீங்கிவிடும். நீங்காவிடின், படிகாரத்தைப் பொரித்து வெண்ணெயில் தம்படியிடை குழப்பித்தின்னநிற்கும் எ-று.

### படைசோரி யகல.

சீமையகத்தியிலைபுட்செல்ல நெல்லிக்காயரைத்து
நேமமுடன் படைசொரிகட்கிடு.

(இ-ள்) படைசொரியகலச் சிகிற்சை:—சீமையகற்தி யிலையும், நெல்லிக்காயுஞ் சேர்த்தரைத்து அதைத்தடவிவரவும் படை, சொரி, புண், புரை, சிரங்கு, கிரந்திமுதலியவைதீரும். இதற்குப் பத்திய மொன்றுமில்லை. இன்னும் அதிற் புங்கம்பால் சேர்த்தாலும் நன்மை தான். எ-று. 460

### பல்லரணைக்கு.

இந்துப்புத்தூளேகிரிலிட்டு வைக்கவீக்கமறும்
முந்திக்கஸ்தூரி மஞ்சளுண்.

(இ-ள்) பல்லரணைக்குச்சிகிற்சை: – பல்லோரத்தில் அரணைவால் போற்படிந்து வீங்கி வலிப்பெடுக்கில் அதின்மேல் இந்துப்பைப் பொடித்துவைத்துவரவும். அவ்வீக்கம் வலிப்பு நீங்கிவிடும். உடனே கஸ்தூரிமஞ்சளைத்தின்னவும். அவ்வீக்கங்கரைந்து பல்வலிகள் தீரும். எ-று. 461

### பல் லிருகலுக்கு.

சிரட்டைக்கரிமிளகுந் திகழ்சூடன் றுத்தம்பொடித்
திரட்டிப்பற்றுலக்கிறுகிடும்.

(இ-ள்). பல்லிருகலுக்குச் சிகிற்சை:—கொட்டாங்கச்சி சுட்ட கரியும், மிளகும், கற்பூரமும், மயில் துத்தமும் பொடித்து தினசாரி பல்துலக்கிவரவும். ஆடியபல்லானது இறுகியிடும். அப்பல் துவளாது உறுதியாய்விடும். அதில் எவ்விதநோய்களு முதிக்காது- எ-று. 462

### பவுத்திரந் தீர.

வாரம்நுணுயிலைச்சார் வைத்தாழாக்குண்காலை
நேரம்பவுத்திரமது நீங்கும்.

(இ-ள்) பவுத்திரந்தீரச் சிகிற்சை:—நுணுயிலைச்சார் பிழிந்து ஆழாக்குவீதம் 7-நாள் காலையிற்குடித்துவரவும். இதிற் கடினபத்திய மாயிருந்து வெந்நீறுஞ்சாதமுண்ணவும் மறுபத்தியத்தில் 3 - நாள்

ஆரைக்கீரையைப்புட்டிட்டு அப்பவுத்திரத்தின்மேல் வைத்துக்கட்டி வரவும். அதனுள்ளிருக்கும் பூச்சுகள் செத்து வெளியில்வந்துவிழுந்து விடும். இதில் எவ்வித பவுத்திரமும் பின்வராது நீங்கிவிடும். எ-று.

பல்லிற் புழுவெடுக்க.

வெந்நீரிற்காசுகட்டி விட்டுபடிகிக்கலக்கி
யந்நீரில்வாய் கொப்பளி.

(இ-ள்) பல்லிற்புழுவெடுக்கச் சிகிற்சை:—வெந்நீர்படி 2-காச்சி அதில் ஒருசிட்டிகை காசுகட்டித்தூளும் அரை பலம் படிகாரத்தூளும் போட்டுக்கலக்கி அதை வாயிலிட்டுக் கொப்பளித்து தரையில் உமிழ்ந் துவரவும். அதிற்புழுக்கள் வந்துவிழும். அதினுலுள்ள வாதைகளுந் தீரும். எ-று. 464

மருந்தீடு-அரவக்கடி யகல.

மருந்தீடரவகடி வங்ககலத் தன்சிறுநீர்
அருந்திடிருவகைக்கும்.

(இ-ள்) மருந்தீடு அரவக்கடியகலச் சிகிற்சை:—மருந்தீடான துள்ளேறி புத்தியைமயக்குவதற்கும், பாம்புகடித்ததற்கும், உடனே தன் சிறுநீரானதில் ஒரு சிரங்கைப்பிடித்துக் குடித்துவிடவும். அப் பாம்புவிடமேறுது. உஜ்ஜீவிப்பர். மருந்தீட்டிற்கு மாத்திரம் 3 - நாள் சிரங்கை குடித்துவரத்தீரும். எ-று. 465

பெரும்பாட்டிற்கு.

வெண்டுகில்நீர்சீரகமும் வெண்சீனியரைத்தெலுமிச்
சன்னளவேயீ வெண்ணெயில்.

(இ-ள்.) பெரும்பாட்டிற்குச் சிகிற்சை:—வெள்ளைத்துணியைச் சுட்டுக்கருக்கியநீரில் சீரகம் அரைகாசிடை சேர்த்தரைத்து சீனிசர்க் கரை அரைகாசிடை கூட்டிக்கலந்து எலுமிச்சன்காயளவாக வெண்ணெ யில்மத்தித்து 2-3 வேளைத்தின்னவும். பெரும்பாடுதீரும். பத்திய மில்லை. எ-று. 466

பெருவயர் கரைய.

விங்கங்கழஞ்சுக்காயம் செட்டிப்பு நத்தையைந்தும்
பொங்கவரைத்தீ கரைந்துபோம்.

(இ-ள்) பெருவயர்கரையச் சிகிற்சை:—சாதிலிங்கம் கழஞ்சு-1 பெருங்காயம் கழஞ்சு 2, நத்தை 5, யாவுஞ்சேர்த்தரைத்து 3-நாள் 6-பொழுது உண்டுவரவும். தயிர்குடமுடைந்தாற்போல பெரும்பா டுடைந்து கரைந்துவிடும். மகோதரமும் இதில்தீரும். எ-று. 467

மாரடைப்புக்கு.

கோரோசினைலிங்கங் கோவெண்ணெயலரைத்துகுன்றி
நேரோதின மைநாளும்முண்.

(இ-ள்) மாரடைப்புக்குச் சிகிற்சை:—கோரோசினை ஒருயிடை, சாதிலிங்கம் இரண்டுயிடை இவைகளைப் பசுவெண்ணெயிலரைத்து 3-நாள் அல்லது 5-நாள் காலைமாலைகளில் குன்றிவீதம் உட்கொண்டுவரவும். மாரடைப்பு, தொண்டைகம்மல், வாய்வுகள், சன்னிகள் தீரும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 468

முக வாதத்திற்கு.

தைவேளையறுகம்புல்தான் கசக்கிச்செவிபிழிய
எவ்வேளை விடவுமறும்.

(இ-ள்.) முகவாதத்திற்குச் சிகிற்சை:—தைவேளையும், அறுகம் புல்லும் கசக்கி செவிகளில் மும்மூன்றுதுளி பிழிந்துவரவும். முகவாதம், ஒருதலைவலி, பக்கவலி, தந்தரோகம், மண்டைக்குடைச்சல் முதலியதுதீரும். இதற்குப் பத்தியப்பரிகாரமொன்றுமில்லை. எ-று.

வயர் வலிக்கு.

முத்தக்காசபின்சுக்கு முன்வெதுப்பிவெல்லத்துள்
மத்தித்தே வயர்வலிக்குத்தா.

(இ-ள்.) வயர்வலிக்குச்சிகிற்சை:—கோரைக்கிழங்கு, அபினி, சுக்கு, இம்மூன்றுஞ் சமனுய்ச்சேர்த்து நெருப்பிலிட்டுவெதுப்பி பனை வெல்லத்தில் மத்தித்து 2-நாள் காலை மாலை ஒவ்வொரு கழற்சிவீதம் உருண்டையா யுருட்டிக்கொடுத்துவரவும். வயர்வலி தீரும். எ-று.

வரட் காமாலைக்கு.

பழத்தளவேமூக்கிரட்டைப் பருத்தவேரரைத்தாப்பால்
வழூத்திடவே தாக்கிடவறும்.

(இ-ள்.) வரட்காமாலேக்குச் சிகிற்சை:—மூக்கிரட்டையின்வேர் எலுமிச்சங்காயளவு அரைத்துப் பசும்பாலிற்கலந்து 3-நாட் கொள்ளவும். வரட்காமாலேதீரும். கடும்பத்தியமா யிருக்கவும். ஈதன்றி, சுக்கு, மிளகு, திப்பிலி 3-ம் பொடித்துப் பனைவெல்லத்தில் மத்தித்து உட் கொடுக்கவும். தீரும்.எ-று. 471

வாந்தி பேதிக்கு.

சுக்குதட்டி புட்டிரொப்பிச் சுட்டஜலத்திட்டுவடித்
துக் குதட்டிவிட்டு குடிக்கச்செய்.

(இ-ள்) வாந்திபேதிக்குச் சிகிற்சை:--ஒரு அவுன்ஸ்சுக்கைநறுக்கியாழமிட்டாகிலுஞ்சரி, அல்லது புட்டியில் ரொப்பியாகிலுஞ்சரி, கொதிக்கிற சலத்தில்விட்டு வடிகட்டி உட்புகட்டவும். தாகமெடுக்கும் போதெல்லாம் இதையே கொடுத்துவரவும்.வாந்திபேதிநிற்கும். எ-று.

விரை வாதத்திற்கு.

கழற்பருப்புலிங்கம்வெள்ளைக் கருவிலரைத்துப்பிசரி
அழற்பொரித் தருந்துமூணுள்.

(இ-ள்) விரைவாதத்திற்குச் சிகிற்சை:—கெச்சைக்காய்ப் பருப்பும், சாதிலிங்கமும் சமனிடையாய்ச் சேர்த்து சிற்றண்ட வெண்கரு விட்டரைத்து அம்முட்டையாவும் பிசரிப்பொரித்து 3-நாள் 6-வேளை உட்கொண்டுவரவும். விரைவாதம், வீக்கம், நோய்முதலியதுந்தீரும். பத்தியமாயிருக்கவும். எ-று. 473

வெட்டு காயத்திற்கு.

ஏலரிசிப் பேன்கொட்டையிற் பூரந்தேங்கெண்ணே
மேலரை செப்புச்சிமிள் வைத்திடு.

(இ-ள்.) வெட்டு காயத்திற்குச் சிகிற்சை:—இரசகற்பூரம், ஏலரிசி, பேன்கொட்டை, இம்மூன்றையும் தேங்காயெண்ணெயிலரைத்து செப்புச்சிமிளில் வைத்து ரவியிலுலர்த்தி தடவிவரவும். தேகத்தில் அடிபட்டாலும், வெட்டுகாயம் பட்டாலும் உடனே ஆறிவிடும். எ-று.

வெண் குட்டத்திற்கு.

உத்தாமணியிலேயோடுள் மிளகுவொன்பதரைத்
தெத்தா யிடுமிதை மூணுள்.

(இ-ள்) வெண்குட்டத்திற்குச் சிகிற்சை:—உத்தாமணியிலை 9, மிளகு 9, 2-ம் சேர்த்தரைத்து 3-நாள் அந்திசந்தி 6-வேளையுண்டு வரவும். வெண்குட்டமாறிவிடும். இதோடு வெள்ளை, வெட்டைமுதலியதுந்தீரும். 1-நாளில் 3-வேளையு முண்டுவர சுரமுதல்தீரும். எ-று.

வேந்த புண்ணுக்கு.

வெண்கருவில் நல்லெண்ணைவிட்டு துணியிற்றேய்த்துப்
புண்பருவிற்படப் போடப்போம்.

(இ-ள்.) வெந்த புண்ணுக்குச் சிகிற்சை:—கோழிமுட்டையின் வெண்கருவோடு நல்லெண்ணைச் சமனாய்விட்டு மத்தித்து, அதைச்சீலையிற்றேய்த்து நெருப்பினால் வெந்தபுண்கள், பருவுகள்மேற்போட்டு வரவும். உடனே ஆறிவிடும். சிலந்திபதார்த்தங்களை நீக்கவும். எ-று.

நீர் கட்டுக்கு.

குமரியின்சாரதனிற் கொண்டுபொரிகாரம் வைத்துண்
குமுறவும் நீரிறங்கும்.

(இ-ள்.) நீர்கட்டுக்குச் சிகிற்சை:—கற்றாழையின் சமூலம் வதக்கிச்சார்பிழிந்து அரை ஆழாக்குச்சாற்றில் வெண்காரத்தைப் பொரித்து அரைதம்படியிடை அதிற்போட்டுக்கலக்கி 7-8 நாள் உட்கொண்டு வரவும். நீர்கட்டியதுடைந்து சரியாய் நீரிறங்கும். கொஞ்சம்பத்தியமாய் வைக்கவும். எ-று. 477

18-சிகிற்சைப்படலம். 35.

முற்றிற்று.

---

## 19 சாந்திப் படலம் 47

கோட்டாவி யடங்க.

தென்னம்பூவரைத்து மார்சேரத்தடவிவர
முன்னங்கோட்டாவி யறும்.

(இ-ள்-) கோட்டாவியடங்கச் சாந்தி:--தென்னம்பாளையிலுள்ள பூவுகளைத் தண்ணீர்விட்டரைத்து குழந்தைகள் அல்லது பெரியவாள்

மார்பிற்றடவிவரவும். கோட்டாவி யடங்கும். அதையே உள்ளுக்கு வார்க்கவும். வயர்நோய், இருமல்முதலியதுதீரும். தாய்பத்திய மிருக்கவும். எ-று. 478

சிறுநீர் விடலுக்கு.

வெள்ளாடுசெம்பிலியாட்டின் மூத்திரப்பைகள்
தள்ளாது சுட்டுண்ணத்தா.

(இ-ள்) சிறுநீர்விட லுக்குச் சாந்தி:—வெள்ளாட்டு மூத்திரப்பையும், செம்பிலியாட்டு மூத்திரப்பையும் இவ்விரண்டையும் 3 நாள் சுட்டுத்தின்னு கையில் குழந்தைகள் இராத்திரியில் நித்திரையில் சிறுநீர் விடுவது அடங்கிவிடும். இதற்குப்பத்தியமில்லை. எ-று. 479

தேகஞ் சிறுக்கப் பெறுக்க.

நெடுந்தேனிலூன்சிறுக்கும் நெய்யினிலூன்பெருக்கும்
இடுங்காரமே பொரித்தே.

(இ-ள்) தேகஞ்சிறுக்கப் பெருக்கச் சாந்தி:—வெண்காரத்தை நெய்யிற்பொரித்து தேனிற் சுண்டையளவு இழைத்துண்ண பெருத்த தேகஞ் சிறுக்கும். நெய்யிலிழைத்துண்ணசிறுத்ததேகம் பெருக்கும். இப்படி 10-20-30-40 நாளுண்ணவும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 480

சாராய் குடியகல.

குக்கிடத்திற்கேழ்வரகைக் கொட்டியம்மலமெடுத்து
தக்கிடப்பின் சாராயிற்று.

(இ-ள்.) சாராய்குடியகலச் சாந்தி:—குக்கிடமாகிய கோழியைக் கட்டிவைத்து அதற்குக் கேழ்வரகைப்போட, அதுதின்று எச்சமிடுகையில் அவ்வெச்சத்தையெடுத்து இரண்டொருதிரான் சாராயிற்கலக்கிக் குடிப்பிக்கவும். அவன்மறுபடியும் அதனைவிரும்பான். குடிக்கான். எ-று. 481

சன்னி தலைவலிக்குப் பற்று.

கடுகுசுக்குச்சமனுப் கன்னிப்பால் விட்டரைத்து
நெடுகநெற்றியிற் பற்றிடு.

(இ-ள்.) சன்னி தலைவலிக்குப்பற்று சாந்தி:—கடுகு, சுக்கு 2-ம் சமனாய்ச்சேர்த்துமுலைப்பால்விட்டரைத்து நெற்றியில்,புறங்கழுத்தில், கன்னத்தில்தடவிப் பற்றுப்போட்டு அனலிற்காச்சவும். இப்படி 2-3-வேளை செய்ய, சன்னித்தலைவலிதீரும். இதில் சாம்பிராணி, ஏலமுஞ் சேர்க்கலாம். எ-று. 482

ஆண்பிள்ளை பிறக்க.

நொச்சியிலை பூண்டுமிளகும்மரைத்து மூழ்குநாள்
மெச்சியுண்ணு முத்தினங்காண்.

(இ-ள்.) ஆண்பிள்ளை பிறக்கச் சாந்தி:—நொச்சியிலையோடுகூட வெள்ளைப்பூண்டும், மிளகுஞ் சேர்த்தரைத்து மாதர்கள் முழுகினது முதல் 3-நாளும் காலையிலுண்டுவரவும். ஆண்பிள்ளை கர்ப்பந்தரித்துப் பிரசவிப்பள். இதிற் பெண்பிள்ளை கர்ப்பந்தரிப்பது கடினம். அம்மாதர்க்குக் குளிநிற்காவிடின், மறுமாதத்திலும் இவ்வாறே செய்துண்ணவும். கர்ப்பந்தரிக்கும். எ-று. 483

குறல் கம்மலுக்கு.

பிண்ணாக்கினைக் கும்பியிற்பிறட்டி வெதுப்பிமென்று
உண்ணாக்கினில் நீருண்ணு.

(இ-ள்) குறல் கம்மலுக்குச் சாந்தி:—எள்ளுப் பிண்ணாக்கிற் கொஞ்சமெடுத்து அடுப்பின் கும்பியினிற்போட்டு வெதுப்பி அதையெடுத்து வாயிற்போட்டு மென்று அந்த ரசத்தை விழுங்கிடவும். இவ்வாறு இரவிற்செய்ய காலையில் குறல் பழையபடி நன்ருய்ப் பேசத் தொனியுண்டாகும். எ-று. 484

வயர் நோய்க்கு.

மூக்குத்தூளுமிழ்நீரில் முன்குழைத்துந்தியினிற்
ருக்கிப்போடுஞ் சுற்றித்தான்.

(இ-ள்) வயர்வலிக்குச் சாந்தி:—வயற்றுநோயில் வாதைப்படுவார்க்கு, இரண்டுமூன்று சிட்டிகை மூக்குத்தூளை யெடுத்து உள்ளங்கையில் வைத்து உமிழ்நீர்துப்பி, அதைக்குழப்பி அவாள் தொப்புளைச்சுத்தித் தடவிவைக்கவும். அது கொஞ்சம் நேரத்தில் அந்த வயற்

றுநோயானது நின்றுவிடும். நிற்காதாயின் மறுபடியும் அவ்வாறே போடவும். அவசியம் நிற்கும். எ-று. 485

வயர் பொருமலுக்கு.

வெள்ளைப்பூண்டுண்டு விளக்கெண்ணையுமுடனே
கொள்ளவாந்தியு மாகுங்கூர்.

(இ-ள்.) வயர் பொருமலுக்குச் சாந்தி:—வயர்பொருமி மூச்சு விடத் திமிர்தண்டப்படுகையில், வெள்ளைப்பூண்டையுரித்துக் கொஞ்சந்தின்று உடனே விளக்கெண்ணையுங் கொஞ்சங்குடிக்க, சற்றுநேரத்திற்கெல்லாம் வாந்தியாகும். அல்லது பேதியாகும். வயருந்தளரும், தேகஞ் சௌக்கியமாம். எ-று. 486

சேரியா மந்தத்துக்கு.

வெற்றிலையில் மிளகிட்டு மென்னுண்ண வாந்தியுமாம்
பற்றுமந்த மதிற்பார்.

(இ-ள்) சேரியாமந்தத்துக்குச் சாந்தி:—சாதமானது சேரியாமல் நெஞ்சைக் குத்திக்கொண்டு உபத்திரவப்படுவார்க்கு அவ்வேளையில் 2-3-வெற்றிலையில் ஏழெட்டு மிளகைவைத்து அவாள்வாயிற்போட்டு நன்ருய் மென்றுதின்னச்சொன்னல், அவாள் தின்ற கொஞ்சநேரத்திற்கெல்லாம் வாந்தியெடுப்பா். அதில் அவர்கள் வயர்சள்ளும். சுகுணப்படுவர். எ-று. 487

வாளப்பேதி மட்டடங்க.

எருமுட்டையைப்பொடித்துமிட்டு வெந்நீரிற்காச்சி
ஒருமிக்கவுண்ண நிற்கும்.

(இ-ள்) வாளப்பேதி மட்டடங்கச் சாந்தி:—நேர்வாளஞ்சேர்த்துச் செய்த பேதிமாத்திரை அல்லது,குழம்பு, மெழுகு முதலியதைத் தின்று நிற்காப்பேதியாய் அவஸ்தைப்படுபவர்க்கு அவ்வேளையில் காட்டு எருமுட்டை அல்லது எருமைச்சாணி வரட்டியைத் தூள் செய்து 1-படி சலத்திற்போட்டு எட்டொன்ருய்க்காச்சி 4-விசை வடிகட்டி அதைப் புகட்டவும். பேதிநின்றுவிடும். அல்லது வரட்டித்தூளை கொதிசலத்திற்போட்டு வடிகட்டிப் புகட்டினுலும் புகட்டலாம். பேதிநின்றுவிடும். எ-று. 488

பித்த மயக்கத்துக்கு.

கடலைப்புளிப்பதில் நீர்கலந்துமேகுடிப்பிக்க
உடலைமுறுக்கல் போகுமுன்.

(இ-ள்.) பித்தமயக்கத்துக்குச் சாந்தி:—பித்தமயக்கத்திஞல்பல வித குணக்கேடடைந்து அவதிப்படுபவர்க்கு கடலைப்புளிப்பு அரையாழாக்கில் சலம் அரையாழாக்குவிட்டுக்குலுக்கி உட்புகட்டிவரவும். நிற்கும். இப்படியே அதுநிற்கும்பரியந்தம் குடிக்கவும். பித்தமயக்கமானது ஒழிந்துவிடும். எ-று. 489

வெள்ளைப் பிரமியத்துக்கு.

சீனத்தை வெண்ணெயினிற் சென்றரைத்துப்புடமிட்டுண்
தானத்தை விட்டேகுந்தான்.

(இ-ள்) வெள்ளைப் பிரமியத்துக்குச் சாந்தி:—படிகாரத்தை வெண்ணெயில் அரைத்து, பெரியகுடுவையில்வழித்துப்போட்டு, மேலகல்மூடி 7-சீலைமண்செய்து, 10-வாட்டியிற் புடமிட்டெடுக்க அவை நவநீதம்போல் பஸ்மித்திருக்கும். அதில் தம்படியிடை புன்னையளவு வெண்ணெயினிற் குழைத்துண்ணப் வெள்ளைப் பிரமியமுதல்பலநோய்களையுங்கண்டிக்கும். எ-று. 490

இரைப் பிருமலுக்கு.

பச்சைதவளைலேகியம் பண்ணிவைத்துண்ண
லச்சை யிரைப்பிருமலறும்.

(இ-ள்.) இரைப்பிருமலுக்குச்சாந்தி:—பச்சைத்தவளைகளை 4-5 பிடித்து அவைகளின்தோல்களையுரித்துஎலும்புகுடல் மஷ்டுகளைநீக்கி, மாமிசங்களையவித்து அதைநன்ருய்க்கொந்திக் கொஞ்சம் மிளகாய், புளி, மிளகு, உப்புசேர்த்து சுக்கு, சோம்பு,சீரகம்,கரிமஞ்சள், அதிமதுரம்துள்செய்துபோட்டு நெய்விட்டுக்கிளறி கடைந்து தாளிதஞ்செய்து காலை மாலை 5-7 நாளுண்ணவும் இரைப்பிருமல்தீரும். இச்சாபத்தியம்-எ-று. 491

மருந்தீ டேடுக்க.

எண்ணைகாக்கணம் வேரிழைத்து பழச்சார்விட்டு
உண்ணவும்போ மருந்தீடது.

(இ-ள்) மருந்தீடெடுக்கச்சாந்தி:—வெள்ளைக்காக்கட்டான் வேர் 1-பலம் தண்ணீரிலிழைத்து நல்லெண்ணை இரண்டரை பலத்தில் விட்டு அதில் 4-5-எலுமிச்சன் பழச்சார்பிழிந்துவிட்டுச் சாரித்து கலக்கி வெடிய4-மணிக்குக் குடித்திடவும். அது 7-8 மணிக்கெல்லாம் பேதியாகும். அந்தபேதியில் உள்ளுக்கேறிய மருந்து வெளிவந்து விழும், பிறகு காரரிசிபுட்டில் ஒருமுடி தேங்காய்த்திருவிப் போட்டுப் பிசறி வயர் மார்பின்மேல் ஒத்தடமிட்டு அதையே தின்றுவிடவும். அப்பால் கோழி ஒன்றுசமைத்து சாதமுண்ணவும். எ-று. 492

அரையாப்பு கட்டிக்கு.

கரிமஞ்சளெருக்கிலை யிரண்டுமரைத்துப்பில்லித்
தரையிற்கட்டிட வரையாப்பறும்.

(இ-ள்.) அரையாப்புக்கட்டிக்குச் சாந்தி:—எருக்கிலை நடுத்தரமாயுள்ளயிலை 4-5, கரிமஞ்சள் நுணிகளாய்ச்சேர்த்து அரைத்துப் பில்லைதட்டி அரையாப்புக் கட்டியின்மேல்வைத்து ஓட்டுப்பில்லைமேல் வைத்துக் கட்டிவரவும். அது அழுந்திவிட்டாலும் அழுந்திவிடும், அல்லது உடைந்துவிட்டாலும் உடைந்துவிடும். பிறகந்தரிணத்தை ஆற்றிக்கொள்ளவும். எ-று. 493

கனவு காணுதிருக்க.

சீணந்தலைக்கீழ் வைத்ததின்பின்னிசியுறங்கிற்
தானந்த[illegible]டயாங் கனவுதான்.

(இ-ள்) கனவுகாணுதிருக்கச் சாந்தி:—தினசாரி இராத்திரிகாலங்களில் கனவுகண்டு திகில்படுபவர்கள், கொஞ்சம்படிகாரத்தை இராத்திரிபடுக்கையில் தலையின்கீழ்வைத்துத் தூங்குவாராயில் அக்கனவுகாணுமலே சுகமாகத்தூங்குவர். இப்படி சிலநாள் நடத்திடில் அக்கனவு மாறிவிடும். எறு. 494

கனவில் விந்து நஷ்டமற,

அரைக்கழஞ்சுகாரீயமங் குருக்கிக்கட்டயிடுப்
பிறவிற்கனவிற் பிந்தெழா.

(இ-ள்.) கனவில் விந்துநஷ்டமறச் சாந்தி:—இரவில்தினங்கனவு கண்டு பிந்துகலிதமாவோர் காரீயம் அரைகழஞ்சு உருக்கி மணியாகத்

திரட்டி துளைசெய்து தன் இடுப்பில் கட்டிக்கொள்ளவும். அக்கன வொன்றுங்காணுது, விந்துநஷ்டமும் வராது. மோகினி மெரிப்பதும் அகலும். எ-று. 495

கண்ணோய் வராதிருக்க.

எள்ளிளம்பூபற்படா திங்கருந்தப்பூ வொன்றிற்
குள்ளவருட முதிக்காது.

(இ-ள்) கண்ணோய்வராதிருக்கச்சாந்தி:—இளசாயிருக்கும் எள்ளின்பூவுகளைக்கொய்து அவைகளைப்பற்களிற்படாமல் விழுங்கிவிடவும். அவ்வாறு எத்தனைப்பூவுகளை விழுங்குகிருர்களோ, அத்தனை வருடம் வரையில் தங்களுக்கு அக்கண்ணோய் வருதிருக்கும். அத்துடன் கண்களில் ஓர்புள்ளி அல்லது பூவிழாதிருக்கும். எ-று. 496

சிரங்குகள் மாறுவதற்கு.

நவநீதம்வெடிகாலை நன்றருந்திடமூணுள்
தவருது சிரங்கற்றதாம்.

(இ-ள்.) சிரங்குகள் மாறுவதற்குச் சாந்தி:—நவநீத மென்றுல் வெண்ணை அவ்வெண்ணை பசு அல்லது எருமையதாயிருக்கினும் பரவாயில்லை. அதில்பெரிய எலுமிச்சன்காயளவு வெடிக்காலையில் 3 நாள் தின்னவும். கைகால் புட்டத்திலுள்ள பலசிரங்குகளும் தானுய் ஆறிவிடும். இதற்குப்பத்தியமில்லை. எ-று. 497

காது சேவிடு தீர.

காயம்வசம்புபூண்டும் பிரண்டையெண்ணையினிற்
பாயவெரித்து ஸ்னானம்பண்.

(இ-ள்) காதுசெவிடுதீரச்சாந்தி:—காதில் சன்னி சீதள சைத்தியத்தால் வாய்வுதங்கி, அக்காதுகேளாது மனிதர்தூர அல்லது சமீபத்தில் பேசுவது கேளாமலும் இரைச்சலிட்டு மந்தமாயிருக்கில், அதற்கு காயம், வசம்பு, பூண்டு, பிரண்டைநறுக்கியும் மற்றதைப் பொடித்தும், நல்லெண்ணையிற் போட்டெரித்து தலைமுழுகவும் செவிடறும். இன்னுமிதில் கஸ்தூரிமஞ்சள், கொம்பரக்கு, கரிமஞ்சள், நஞ்சறுப்பான் பூண்டுசேர்த்தாலும் மெத்தநன்மையாம். எ-று. 498

## கைகால் முடங்கலுக்கு.

நண்டுகொழுப்பெள்ளெண்ணெ நற்சுக்குவாய்விளங்கம்
கொண்டெரித்துத் தடவக்கொடும்.

(இ-ள்). கைகால் முடங்கலுக்குச்சாந்தி—நண்டுகொழுப்பு பலம் 5-நல்லெண்ணெ பலம் 5-சுக்குபலம் அரை, வாய்விளங்கம்பலம் அரை, இம்மூன்றும் நுணுக்கி அதிற்போட்டுக்காச்சிப் பதத்திலிறக்கி வடித்துவைத்து கைகால் முடங்கிவீங்கி கரடுகட்டியதில் தடவிவரவும். 4-5-நாளைக்குள் சுகுணமாய்விடும். இதைக்குடிக்கினும் நன்மை. எ-று.

## குளிர் காச்சலுக்கு சிட்கா.

தும்பைச்சார்மிளகுபூண் டுள்ளரைத் தெரித்தருந்த
வெம்புங்காச்சற் குளிர்போய்விடும்.

(இ-ள்) குளிர்காச்சலுக்குச் சாந்தி:—தும்பையிலைச்சார் ஆழாக்கில் மிளகு பூண்டு சேர்த்தரைத்து, அதைக்காச்சி குளிர் அல்லது சுரம் வரும்நேரத்திற்குமுன் அரையாழாக்குக் குடித்துவிடவும் இப்படி 2-3 வேளைகுடித்திட அக்குளிர்சுரமானது நின்றுவிடும். ஆனால் வெய்யலில் திரியக்கூடாது. எ-று. 500

## உள்ளுக்கேறிய மருந்தெடுக்க.

எண்ணெநெய்தல்பால்கலந்துண்டிட்டு மறுநாளில்விளக்
கெண்ணெகுடிக்க மருந்தறும்.

(இ-ள்.) உள்ளுக்கேறிய மருந்தெடுக்கச் சாந்தி:—நல்லெண்ணெ பலம் இரண்டரையில் ஒரு தேங்காய்ப்பால்கலந்து காலையிற்குடித்திட பகலின்மேல் மலத்தில் கொஞ்சங்கொஞ்சமாய் மருந்துவெளியில் வந்துவிழும். மறுநாட்காலையில் கொஞ்சம் விளக்கெண்ணெ குடித்திட மற்றமருந்துகளும் விழுந்திடும். உடனே கோழிக்கரிசாதமுண்ணவும். யாவும்துலைந்துவிடும். எ-று. 501

## இரத்த மூலத்திற்கு.

கருங்கோழிக்கல்நெல்லும் கண்டிடித்துள்வெற்றிலையிட்
டருங்கூழாய் கட்டபானம்.

(இ-ள்.) இரத்தமூலத்திற்குச் சாந்தி:—கருங்கோழியின் வயிற்றைப்பீறி அதின் தீனிப்பையிலுள்ள கல்லும் நெல்லையுமெடுத்துப்

பொடித்துத்தூள்செய்து அதை வெற்றிலையிற்பரப்பி அபானத்தில் மூலத்தின்மேற் கட்டிவர, அம்மூலம் உடனேவாங்கிவிடும். இதை 4-5 தினங்கட்டவும். எ-று. 502

கீல் வாயுவிற்கு.

தழுதாழைச்சாறுமுக்குத் ததிற்கற்சுன்னங்கலக்கி
பொழுதாரே மூணுட்புகட்டு.

(இ-ள்.) கீல்வாயுவிற்குச் சாந்தி:—தழுதாழை 3-குத்துயிலைச் சாறும் கழற்சியளவு கற்சுன்னமுங்கலக்கி 3-நாள் 6-வேளை அந்தி சந்தி கொடுத்துவர கீல்வாய்வுதீரும். கடும்பத்தியம்வைக்கவும். இதை உள்ளுக்கு உழக்குரசங் கொடுத்துவரவும். வெள்ளை தீறும். எ.று.

குட்டம்-18-க்கு.

தகரைகடப்பமவித்ததினி யாவாரம்பட்டைப்
பகாமுடன் வெந்நீரிற் பாச்சு.

(இ-ள்.) குட்டம் 18-க்குச்சாந்தி:—தகரையின் வித்தும், கடப் பங்கொட்டையும், நிலாவாரம்பட்டையும், சமனுய்ச்சேர்த்து வெந்நீரி லரைத்து எலுமிச்சங்காயளவு வெந்நீரிற் கூட்டிக்கொடுத்துண்டிட குட்டம் 18-ந்தீரும். கடும்பத்தியமாயிருக்கும் வரையில் முருங்கைக் காய், அதின்கீரை, வெங்காயம் சேர்த்துண்ணவும். எ-று. 504

குழந்தை அண்டவாயுவுக்கு.

அண்டகரு குன்றிகழலப்பருப்புங் காயமரைத்
துண்டிடவு மண்டவாய்வுக்கு.

(இ-ள்.) குழந்தை அண்டவாயுவுக்குச்சாந்தி:—சித்தண்ட வெள் ளைக்கருவுடன், குன்றிமணிப்பருப்பும், கெச்சைக்காய்ப் பருப்பும், பெருங்காயம், யாவுஞ்சேர்த்தரைத்து பீஜத்தின்மேற் றடவிவரவும். அண்டவாய்வு தீர்வதுடன் விரையேர்வதிறங்கலும், விரைவீக்கமுந் தீரும். எ-று. 505

பல் தசை வளர்தலுக்கு.

காசுகட்டித்துண்டைக் கண்டோதுக்கிப் பல்லில்வைக்கக்
கூசிவிட்டுப் பல் தசைபோங்குன்றி.

(இ-ள்.) பல்தசை வளர்தலுக்குச் சாந்தி:—ஒருதுண்டு காசுகட்டியைப் பல்தசை வளர்ந்ததின்மேல் ஒதுக்கிவைத்திருக்கவும், குழிந்த பல்லுதசை வளர்தல், பல்வலி, அதிலுள்ளரிணங்கள், யாவும் அகன்று விடும். இதையே 2-3 விசை செய்துவரவும் நன்மையைத்தரும். எ-று.

பக்கசூலைக்குச் சிட்கா.

தாலவெல்லஞ் சுன்னந்தன்னிலிருகழஞ்சு
யேலவுண்ணும் பக்கசூலைக்கே.

(இ-ள்.) பக்கசூலைக்குச் சிட்காச்சாந்தி:—சுண்ணாம்பிற் பனைவெல்லஞ்சேர்த்துத் தொந்தித்து அதில் 2-கழஞ்சு உருட்டி விழுங்கி விடவும் பக்கசூலையானது உடனே நின்றுவிடும். பத்தியமில்லை. இப்படி இரண்டு மூன்றுவிசை தின்னவும். பக்கசூலை நின்றுவிடும். எ-று

சுவாச காசத்துக்கு.

கரும்பூனைக் கட்டமதைக் கண்டெடுத்துத் தூளாக்கி
யிடும்போதுண் ரஸ்தாளியில்.

(இ-ள்.) சுவாச காசத்துக்குச் சாந்தி :—கரும்பூனையின் மலத்தை ஆர்க்கப்பொடித்து இரஸ்தாளி வாழைப்பழம் பேர்பாதியில் வைத்துப் பதிந்து காலைமாலை 3-அல்லது 5-நாள் உள்ளேற்றவும். சுவாசகாசந் தீரும். கடும்பத்தியம் வைக்கவும். மெலிந்த தேகத்துக்கு வறுத்தவுப்பு, சுட்டபுளி சேர்க்கவும். எ-று. 508

வாந்தியாவதற்கு.

கண்டரினைக் கந்தைசுற்றிக் கல்லடுப்பிலேயெரித்து
விண்டெடுக்கச் செந்தூரமே.

(இ-ள்) வாந்தியாவதற்குச் சாந்தி:—துருசை கந்தைத்துணியிற் சுற்றி யடுப்பிற்போட்டெரித்து யெடுக்கவும் செந்தூரமாம். அதிற் பயரிடை தேனிலிழைத்துட்கொடுத்து இளநீர் தண்ணீர் குடிப்பிக்கவும் வாந்தியாம். அதிகப்படின், புளிக்குழம்பை உள்ளேற்ற வாந்தி நிற்கும். எ-று. 509

தாது புஷ்டிக்கு.

புருஷத்திலாதவர்க்குப் போகமதிகரிக்கும்
புருஷரத்தின முண்ணும்போது.

(இ-ள்) தாதுபுஷ்டிக்குச் சாந்தி:—புருஷத்தில்லாதவர்கள் தின சாரி காலையில் புருஷரத்தினமென்னும் ஓரிதழ்தாமரை அதாவது சூரியகாந்தியைக் கண்டயிடத்திற் பிடுங்கித் தின்னவும். தாதுபுஷ்டி யைத்தரும். பாலிற்கொள்ள சத்ததிகரித்து விந்திருகிப் போகமதி கரிக்கும். எ-று. 510

சீதபேதி தீர.

காரரிசித்தவிட்டைக் கைநிறையத்தின் றுவரப்
பாரதிற் சீதப்பேதிபடும்.

(இ-ள்) சீதபேதிதீரச் சாந்தி:—சீதபேதி யதிகரித்து பலநாள் எந்தமருந்தை தின்றாலும் அது பற்றாதிருப்பதற்கு,காரரிசித் தவிட் டைக் கைநிறையவெடுத்து தினம்காலை, மத்தி, மாலை நேரங்களிலுண்டு வரவும். தீராச் சீதபேதியானது சென்றிடும். எ-று. 511

கண்களிற் பித்தநீர் கக்க.

வேளைரசம்போக்கி வில்லையாய்ச் செய்ததையன்
ஞளை சிரமோட்டின் கீழ்வை.

(இ-ள்.) கண்களிற் பித்தநீர்கக்கச் சாந்தி:—வேளையிலையைக் கசக்கி இரசமெல்லாம் பிழிந்துவிட்டு பில்லையாக்கி உச்சந்தலையில் வைத்து அதின்மேல் ஓடுவைத்துக் கட்டிடவும் ½-கடிகைபொறுத்து அவிழ்த்தெடுத்துப் பிழிய முன்போல ரசமானது லலாடத்திருந்து கக்கிவரும். மறுபடியும் அத்திப்பியைக் கட்ட முன்போல ரசம்வரும். கண்கள் நன்றாய் துலங்கும். எ-று. 512

புறங்கழுத் திசுவிற்கு

உற்றதிலையைக் கசக்கி யுள்ளங்காலிட் டோட்டிற்
பற்றவதைக் கட்டியும் நீபார்.

(இ-ள்) புறங்கழுத்திசுவிற்குச் சாந்தி:—முன்போல அவ்வேளை யிலையைக் கசக்கி வில்லைசெய்து ஓட்டில்வைத்து இரண்டுள்ளங்கால் களிற் கட்டிவைத்து மறுபடியும் பிழிய நீர்வரும் அதையுங் கட்டி வைத்தவிழத்திட, கழுத்தினரம்பிலுள்ள புறளிநோய், சன்னி முதலி யதுதீரும். அவ்வேளை வெள்ளைப்பூவுள்ளதாப்ப் பரித்துச் செய்ய வும். எ-று. 513

முலைப்பால் சுரக்க.

பூண்டுமிளகுடனே புத்துகல்லிவேறிரண்டு
மீண்டுமரைத் துள்ளேற்றுமே.

(இ-ள்) முலைப்பால் சுரக்கச்சாந்தி:—வெள்ளைப்பூண்டு, மிளகு, 2-க்கும் சமனுப் பூநாகஞ்சேர்த்து நன்ருயரைத்து உள்ளுக்கேற்றி வரவும். முலைப்பால் கெங்கையாய்ச் சுரக்கும். இப்படி 2-3 வேளை மாருமலுண்டுவரவும். நன்மையைத்தரும். எ-று. 514

வெள்ளைநோய் தீர.

மஞ்சள்சரக்கொன்றையிலை மட்டாய்ப் பரித்தரைத்துக்
கொஞ்சம் பசுமோரினிற் கொள்.

(இ-ள்) வெள்ளைநோய்தீரச் சாந்தி:—மஞ்சள் மலருள்ள சரக் கொன்றையிலையை பரித்துவந்தரைத்து பசுமோரிற் கலக்கி 3-நாட் காலையில் உண்டுவரவும். வெள்ளையானது தீரும். கடும்பத்திய மிருக்க வும். இல்லாவிடின் வறுத்தவுப்பு, சுட்டபுளிகூட்டவும். எ-று. 515

அஜீரணத்திற்கு.

அன்னமஜீரணமா யன்றலறப்பூண்டுரித்துத்
தின்னவிளக் கெண்ணெபலத்தே.

(இ-ள்) அஜீரணத்திற்குச் சாந்தி:—புசித்தசாதஞ் சீரணிக்காமல் மந்தப்பட்டு வயர்விம்மி வயிற்றுநோயால் வாதைப்படுகையில், கொஞ் சம் வெள்ளைப்பூண்டை யுரித்துத்தின்னக் கொடுத்து பிறகு 1-பலம் விளக்கெண்ணெயைக் குடிப்பிக்கவும். வாந்தியாகி வாதைதீரும். மல சலமும்விடும். எ-று. 516

இடுப்பு நோய்க்கு.

சீமைக்கடுகு சுக்கதிற்காயம் நீரிலரைத்
தாமப்பொழு திடுப்பிற்றப்பு.

(இ-ள்) இடுப்புநோய்க்குச் சாந்தி:—சீமைக்கடுகு, சுக்கு, பெருங் காயம், தண்ணீரிலரைத்து இடுப்பில் நோயிருக்குமிடத்தில் தடவிவர வும். சற்றுபொறுத்தெரியும். அதை உடனே கழுவியபின் மறுபடியும் அதையே பூசிவரவும். இடுப்புநோய் தீரும. எ-று. 517

பல் கிட்டியது திறக்க.

ஓமத்தைவெள்ளெருக்கனுட் பாலினிலரைத்துத்
தாமத்தைச்சிறுநீரிற்று.

(இ-ள்) பல்கிட்டியது திறக்கச்சாந்தி:—ஓமத்தைவெள்ளெருக்கன் பாலிலரைத்து அதைச்சிறுநீரிற்கலக்கிப் புகட்டவும். அல்லது அதனைக்குளிகைசெய் துலர்த்திப் பொடித்து முன்போலுள்ளேற்ற பல் கிட்டியது தாள்திறக்கும். இதைப் பல்கிட்டாததற்கு முன்னளிக்க பிரகு பல்கிட்டாது. எ-று. 518

பக்க சூலைக்கு.

இரட்டைப்பிரமட்டையின் கொழுந்தில் நெய்யைவிட்
டரைத்துக்குழப்பி யதைத்தா.

(இ-ள்.) பக்கச்சூலைக்குச் சாந்தி:—இரட்டைப்பிரமட்டை ஆண் நீண்டதும்,பெண்குறுகியதில், ஆணுக்குப்பெண்,பெண்ணுக்காணிலைக் கொழுந்தை நெய்யிலரைத்துக்குழப்பி 3-நாள் 3-வேளை புன்னையளவு தின்னப் பக்கச்சூலை, இடுப்புநோய், வாய்வுமுதல் தீரும். எ-று. 519

அரையாப்புச் சுரந்தீர.

ஏனத்தின்பிச்சியதனில் மிளகைவைத்துலர்த்தித்
தானத்தைத்தின்ன செலுந்தா.

(இ-ள்) அரையாப்புச்சுரந்தீரச் சாந்தி:—பன்றியின் பிச்சி நீரில் மிளகை யூறவைத்து உலர்த்தி அதைத்தின்று வரவும். அரையாப்பு, அதினால்வருஞ் சுரமானதுந்தீரும். இதற்கு யிச்சாபத்தியமா யிருக்கவும். ஸ்திரிகளினாலுண்டாகிய பலநோய்களும் தீரும். எ-று. 520

சீதபேதி 1-நாளிற்றீர.

மூங்கிலுப்பு வோர்தோலா வுற்றபினி விராகனிடை
ஆங்கரைத்துக் காற்பங்குதா.

(இ-ள்.) சீதபேதி 1-நாளிற் றீரச்சாந்தி:—மூங்கிலுப்புத்தோலா ஒன்று, அபினி விராகனிடை அரை அல்லது 1, 2-ம் சேர்த்தரைத்து நான்கில் ஒரு பங்கை காலை-மத்தி-மாலைகளில் உண்டுவரவும். ஓரேநாளையில் நிற்காத சீதபேதி நின்றுவிடும். இதற்குப்பத்தியமில்லை.எ-று.

மந்த வசீரணத்துக்கு.

உப்புடன்வெற்றிலையு முண்ணமலசலபொருமல்
தப்பிடா தற்றுவிடுந்தா.

(இ-ள்.) மந்தவசீரணத்துக்குச் சாந்தி:—புசித்தசாதஞ் செரிக்காது அசீரணமாய் மந்தப்பட்டு, வயர்பொருமி உப்பசமாய் மலசலம் பந்தப்பட்டு கட்டிடின். அதற்கு 10-வெற்றிலையில் கொஞ்சம் உப்பை வைத்து மடித்துத்தின்னக்கொடுக்க உடனே வாந்திவரும். சாதமும் வெளியில்வந்துவிழும். வயர் சள்ளும் தேகம் சுவஸ்தமாய்விடும்.எ-று.

சிறுநீரி ரத்தமாய் வரலுக்கு.

மாம்பட்டையைப் பசுமோர் வார்த்திடித்துவடிகட்டித்
தாம்பட்டையைப் பசுமோரிற்று.

(இ-ள்) சிறுநீரிரத்தமாய் வரலுக்குச்சாந்தி:—மாம்பட்டையை மேற்பரணிகளையகற்றி, அதைப்பசுமோரிலிடித்து வடிகட்டி மறுபடியும் அதில் பசுமோர்விட்டுக்கலக்கிக் குடிப்பிக்கவும். சிறுநீரிலி ரத்தமாய் வருவதைப்பிரித்து தெளிவாயிறங்கும். இதற்குப்பத்தியமில்லை. எ-று. 523

சர்வ பிரமியத்துக்கு.

புளியிலையைத்துவைத்தஇன்சார் புகெகொஞ்சம்நல்லெண்ணை
யளியவதைக் கலக்கியுந்தா.

(இ-ள்.) சர்வபிரமியத்துக்குச் சாந்தி:—புளியமரத் திலையைத் துவைத்துச் சார்பிழிந்து அதிற்கொஞ்சம் நல்லெண்ணைவிட்டுச் சாரித்து 3-நாள் கடும்பத்தியம்வைத்து உட்கொண்டுவரவும். தீராத சகல பிரமியங்களுந்தீரும். நீர்க்கடுப்பு நிற்கும். 7-ம்நாள் விளக்கெண்ணை தேய்த்து தலைமுழுக்காட்டவும். எ-று. 524

19 சாந்திப் படலம் 47.

முற்றிற்று.

## 20 பற்பலப் படலம் 57.

நிற்காபேதி நிற்க.

புகையூறல் வெற்றிலைக்காம்புடன் சுண்ணமூன்றரைத்து
வகையாயுண் சுண்டையளவாய்.

(இ-ள்) நிற்காபேதிநிற்க:—புகையூறலாகிய ஒட்டையுடன் வெற்றிலைக்காம்பும்,சுண்ணும்பும்,இம்மூன்றுஞ்சேர்த்தரைத்துசுண்டையளவாக உட்கொள்ளுகையில் மாளாதபேதியானது அந்தநேரத்திலேயே நின்றுவிடும். இதற்குப் பத்தியமென்பதொன்றில்லை. எ-று. 525

கட்டிய மலசலமற-

சுருங்கி வயருப்பித் தொல்லையால் மலங்கட்டில்
முருங்கினிலை தொக்கிச்சாறுண்.

(இ-ள்.) கட்டிய மலசலமற:—முருங்கையிலையை யரைத்துச் சார்பிழிந்து அதில் உப்புகொஞ்சஞ்சேர்த்து அதைக் கலக்கி உள்ளுக் கேற்றிடவும். பின் அவாளைக்கவிழ்ந்துபடுக்கவைத்து கண்டங்கைகால் முதல் நெட்டையொடித்து விட்டதே பின்னும் குடிக்க மலசல முடைபடும். எ-று. 526

முகப் பருவுக்கு.

முகப்பருவில் வாதைபட முகப்பருவில் மண்ணெண்ணை
சுகப்படவும் பூசிடச்சொல்.

(இ-ள்.) முகப்பருருவுக்கு:—மோகத்தினுல் முகத்திற் பருவு கிளம்பி அதைக்கிள்ளிவிட அது உபாதை செய்வதுடன் முகம் கண் வாயெல்லாம் ஒரே வீக்கமாய் வீங்கிடில், சீமைமண்ணெண்ணையைத் தடவி, சீமைப்பஞ்சேற்றியும் வெற்றிலை மேல் வைத்துக் கட்டிடவும். 4-மணி நேரத்திற்குள் வீக்கம்வற்றி, வாதையும் அடங்கி சுகுணப் படுவர். இல்லையேல் கொல்லும். எ-று. 527

மூர்ச்சை-பற்கிட்டலுக்கு.

பற்கிட்டில்மூர்ச்சைக்குப் பைத்தண்ணீரிற்கரைத்து
மற்கட்டிப் பாச்சவறும்.

(இ-ள்.) மூர்ச்சை பற்கிட்டலுக்கு:—கொஞ்சம் உப்பைத் தண்ணீரிற்கரைத்து அதை உள்ளுக்கேற்றிடில், அது கொஞ்சநேரத்திற்கெல்லாம் மாரடைத்ததுவடங்கி பற்கிட்டியது தாள்திறந்து, மல்லார்ந்துசோர்ந்து விழுவதும் நின்றுவிடும். இதற்குப்பத்தியமில்லை. எ-று.

பசிதீபன முண்டாக.

ஓமம்நாய்க்கடுகு பொடியுட் பனைவெல்லம் பிசைந்து
நேமமாய்க் கழற்சியளவுண்.

(இ-ள்) பசிதீபனமுண்டாக:—ஓமம், நாய்க்கடுகு வகைக்கு ஒவ்வொருபலமாய்த் தூள்செய்து அதிற்பனைவெல்லம் பலம் ஒன்று அல்லது ஒன்னரைசேர்த்துப் பிசைந்து அதிற்கழற்சியளவு காலை, மத்திமாலையில் உட்கொண்டுவரவும். அதிகமாய்ப் பசியுண்டாகும். எ-று.

தாது புஷ்டிக்கு.

பேரீந்தில்நீர்முள்ளிப் பின்னபினிவைத்துண்ணப்
பாரீயுந்தாது புஷ்டியாம்.

(இ-ள்.) தாதுபுஷ்டிக்கு—நீர்முள்ளி விராகனிடை 20-அபினி விராகனிடை 1-யிவைகளை நேகவரைத்து தக்கபடிபேரிச்சன் பழத்தினுள்வைத்துப்பதிந்து, 5-நாட் காலை மாலை யுண்ணுகையில், புளிமட்டாய்ப்பதார்த்த முண்டு இரவிற் பால்குடிக்கவும். தாதுபுஷ்டியைத் தரும். எ-று. 530

வீரிய விர்த்திக்கு.

மிளகெள்ளுங்கெஞ்சாவும் வெதுப்பித்தேன்விட் டரைத்துண்
னுள துள்ளில் வீர்யவிர்த்தி.

(இ-ள்.) வீரியவிர்த்திக்கு:—எள்ளு, மிளகு, கெஞ்சா 3-ம்சமன் சேர்த்து வெந்ததும் வேகாததுமாய் வறுத்துப் பொடிசெய்து தேன் விட்டரைத்துதான்படுக்குமுன் 4-மணிநேரத்துள் சுண்டையளவுண்டு புளி தண்ணீர்நீக்கிப் பசும்பால்குடித்து 15-நாள் போகிக்காதிருக்க அதிகபலமுண்டாம். எ-று. 531

மூலச் சூட்டுக்கு.

முத்தாததாழம்பூ வுட்சதையையுண்டுவா
வத்தாத மூலச்சூடறும்.

(இ-ள்.) மூலச்சூட்டுக்கு:—தாழம்பூ விதழினுள்ளிருக்கும் கழுதைபுட்டையென்னும் உட்சதையை 3 நாள் மாறாது தின்றுவரவும் மலத்திற்குப்பின் உதிரம்விழும் மூலச்சூடும், உஷ்ணவாய்வுந் தீரும். இதற்குப்பத்தியமானது ஒன்றுமேயில்லை. எ-று. 532

நரைமயிர் கறுக்க.

கோரோசினைப்பங்நீர்க்குள் வெள்ளிக்காடிகாரம்
நேரோமத்திட கறுப்பாம்.

(இ-ள்) நரைமயிர்கறுக்க:—பங்நீரில் சமனாய் கோரோசினையும், வெள்ளிக்காடிகாரமும் போட்டுவைக்கவும். அது கொஞ்சநேரத்திற் கெல்லாம் கரைந்துவிடும். அதைச்சுப்பலினாலெடுத்து நரைத்தரோமங்களிற்றடவ உடனே கறுத்துவிடும். வெண்மயிராய்த்தெரியாது. அடிமயிர் கறுக்காது. எ-று. 533

ஜன்னிக்கு ஆக்கிராணம்.

காட்டெருமுட்டைகளையக் கண்டெருக்கன் பாலினைவிட்
டூட்டியடிக்கடி புடமிட்டெடு.

(இ-ள்) ஜன்னிக்கு ஆக்கிராணம்:—காட்டெரு முட்டை நனைய எருக்கன்பால் அடித்தடித்தூட்டி யுலர்த்தி 10-ஆவர்த்திசெய்து புடமிட்டெடுத்து அதைநாசியில் நசியமேற்றிடவும். ஜன்னியாற்பற்கிட்டியதாள்திறக்கும். சகலதோஷத்தைப்போக்கும் மண்டையிடியையோட்டும், சன்னி, பிசாசைவிலக்கும், பித்தமயக்கம், சோர்வு, வலிகள் முதலியதை நீக்குவிக்கும். எ-று. 534

இடுப்பு நோய்க்கு.

வெள்ளைவெண்காயம் வெல்லஞ்சமனெடுத்துட்
கொள்ளவுந் தீருமந்நோய்.

(இ-ள்.) இடுப்பு நோய்க்கு:—வெள்ளை வெண்காயமும், நல்ல வெல்லமுஞ் சமனாயெடுத்து தினசாரி உட்கொண்டுவரவும். இடுப்பு நோயானது தீரும். உடனே சாரமெழுத உண்ணவும். அதில் பேதியாகிடில், அவ்விடுப்பு நோயில்லாது மாறிவிடும். இதற்குப் பத்தியமில்லை. எ-று. 535

இரத்தங் கக்கலுக்கு.

*மணித்தக்காளித் திப்லி மதுவகைக்காலரைத்துப்*
*பணித்தக்கால் முத்தினமேபடை.*

(இ-ள்.) இரத்தங்கக்கலுக்கு:—மணித்தக்காளியிலையும், திப்பிலிப் பொடியும், தேனும் வகைக்கு கால்-பலமாக நிறுத்து யாவுஞ் சேர்த்தரைத்து 3-நாள் உட்கொண்டுவரவும். இரத்தங்கக்கலானது நின்றுவிடும். இதற்குப் பத்தியமாயிருக்க, இரத்தப்பிரமியமுந் தீரும். எ-று. 536

இருமல் காசத்துக்கு.

*ஆப்பாலிற் சிங்கித்துளங்கிருமல் காசத்திற்*
*றப்பாக வருந்திடுந்தான்.*

(இ-ள்.) இருமல்காசத்துக்கு:—பசும்பாலில் சிங்கித்துளாகிய மான்கொம்புச் சுன்னம் குன்றியிடை சேர்த்து சற்றுநேரம் ஊற வைத்துக் குடிக்கவும். இப்படி 10-நாளுண்ணவும் இருமல், க்ஷயம், காசம், சூடானதுதீரும். தண்ணீரிலிருக்கவும். தாதுவிர்த்தியைத் தரும். எ-று. 537

ஈளை இருமலுக்கு வாந்தியாக.

*கருஞ்சீரக மிலுப்பைக் கட்டிசமனுப்பொடித்தே*
*ஒருவார மிருவேளைக்கிடு.*

(இ-ள்.) ஈளை இருமலுக்கு வாந்தியாக:—கருஞ்சீரகமும், இலுப்பைப் புண்ணாக்கும் சமனாயெடுத்து பொடித்து வஸ்திரகாயஞ்செய்து 1-வாரம் அந்திசந்தி உட்கொண்டு வரவும். வாந்தியாகிடும். அதில் ஈளை இருமலுந்தீரும். பத்தியமொன்றுமில்லை. எ-று. 538

உச்சி மயிருதிரலுக்கு

*பச்சைகொடியானிலையும் பண்ணும்பழம்பாசியிலை*
*உச்சிசிரமேற் பூசிடு.*

(இ-ள்.) உச்சிமயிருதிரலுக்கு:—பச்சைக்கொடியானிலையும், பழம்பாசியிலையும் இவ்விரண்டுஞ் சமனயரைத்து உச்சியில் உரோமங்களுதிருமிடத்தில் பூசி, மறுநாட் கழுவியும், மறுபடியும் பூசி மறுநாட் கழுவியும், இப்படி ½-மண்டலம் 20-நாள் பூசிக்கழுவிவரவும். அதி

ளுள்ள பூச்சுகள் செத்து வெளிப்பட்டு வந்திடும். பிறகு மயிருதி ராமல் முளைத்துவரும். எ-று. 539

## உதட்டில் வெள்ளைமாற.

*நீலிச்சாற்றிற் குன்றிநேரரைத்து நிசிவுதட்டிற்*
*கோலிப்பாச்சிடுந் துயிலில்.*

(இ-ள்.) *உதட்டில் வெள்ளைமாற:—நீலியாகிய அவுரியிலைச்சாற்றில் குன்றியின் பருப்பை நேகவரைத்து சிமிளிலடைத்து இராத்திரி காலங்களில் நித்திரை செய்வதற்குமுன் உதட்டிற் பூசிக்கொண்டு தூங்கிவரவும். உதடு வெள்ளையாயிருப்பது கருத்தநிறமா யாகிவிடும். எ-று.* 540

## எச்சைத் தழும்பிற்கு.

*தழும்பிற்குறும்பியைத் தடவித்தேய்படைசொரிகள்*
*எழும்பித்திரும்பியும் வரா.*

(இ-ள்) *எச்சைத்தழும்பிற்கு:—காதுகுறும்பியானதை எச்சைத் தழும்புள்ள விடங்களில் அரக்கித் தேய்த்துக் கொண்டு வரவும். எச்சைத்தழும்புகள், படைகள், சொரிகளியாவும் மாறிவிடும். பின் இவைகள் நிலைக்காது. இப்படி 4-5 வேளை தேய்த்துவரவும். எ-று.* 541

## பவுத்திரத்துக்கு.

*ஈருள்ளிக்கஞ்சாவின் னிலையும்வதக்கிக்கட்*
*டேருள்ளிற் பவுத்திரம்போம்.*

(இ-ள்.) *பவுத்திரத்துக்கு:—கஞ்சாயிலையும், ஈரவெங்காயமும். இரண்டையும் வதக்கி பவுத்திரத்தின்மேல் வைத்துக் கட்டிவரவும்: பவுத்திரமுதலிய மூலமுந்தீரும். இப்பவுத்திரமூலமானவை சிசுவத்தி தோஷஞ்செய்தலினலுண்டாகியதென சிலர் சொல்லுகின்றனர். எ-று.*

## காக்கை வலிக்கு.

*வசம்புத்தூளுப்புகொஞ்ச மாண்முருங்கையிலையரைத்து*
*நிசம்பழவீத முண்ணிடு.*

(இ-ள்.) *காக்கைவலிக்கு:—புளியங்கொட்டையிற் பாதியிடைக்குவசம்பு நறுக்கிச்சோத்துப்புக்கொஞ்சம்போட்டு அதில் ஆண்முருங்*

கையிலேயுங் கூட்டியரைத்து எலுமிச்சம்பழவிதம் 3-நாளுண்டுவரவும். காக்கைவலியானதகலும். கடும்பத்தியம் வைக்கவும். எ-று. 543

## குடைச்சலிற்குப் பற்று.

காடியில்மிளகுங் கற்பூரந்தானரைத்துப்
போடுமக் கைகால்மேற்பூசு.

(இ-ள்.) குடைச்சலிற்குப்பற்று:—மிளகு, கற்பூரம் 2-ம் காடியிலரைத்து கைகால்களிலுள்ள குடைச்சலின்மேற்றடவி யனல்காட்டிவரவும். அக்குடைச்சல்கள்மாறி வீக்கமும்வற்றிவாதையுமறும். இதை 2-3 நாள் பற்றுப்போட்டுக்கொண்டே வரவும். எ-று. 544

## கோறுக்குக்கு.

சிங்கிலிங்கம் பூரம்ரசச் செந்தூரம்நீரிலரைத்
தங்குலிங்கத்திற் பூசவாறும்.

(இ-ள்.) கொறுக்குக்கு:—மிருதார்சிங்கி, சாதிலிங்கம், இரசகற்பூரம், இரசச்செந்தூரம் இந்நான்கையுந் தண்ணீரிலரைத்து தடவிவரவும். 2-3 நாளில் கொறுக்குப்புண்ணாகிய ரிணமியாவும் ஆறிவிடும். கடும்பத்தியமாய் வைக்கவும். எ-று. 545

## சொரி தினவுக்கு.

தாருடனே தேங்காயெண்ணெச் சமன்காச்சிப்பூசிற்
பாருடனே போங்காண்சொரி.

(இ-ள்) சொரிதினவுக்கு:—தாரும், தேங்காயெண்ணெயும் சமனுய்க்கலந்து காச்சி 3-நாட் காலையிற்பூசி மாலையிற் குளித்து வரவும். சொரி, தினவு, சிரங்கு, ஆனைச்சொரி, தேமல், படை, புண், ரிணம், மேகம், நமைமுதலிய தியாவும்மாறிதேகஞ்சுயவடிவாயிருக்கும்-எ-று.

## நரைமயிர் கப்பிட.

மாசக்காய்சுட்டுநீர்வை தசனுப்பொடியரைத்து
மீசைக்காய் கப்புமிடு.

(இ-ள்) நரைமயர் கப்பிட:—மாசிக்காயைச் சுட்டுக் கரியாக்கியதில் சமன் தாசனுப்பொடியைச்சேர்த்து அரைத்து மீசை முதலிய

நரைத்தரோமங்களில் சோப்பினுற்கழுவி இதைத்தடவிவரவும், அதிற் கப்புயேறி கறுத்தமயிராகிவிடும். எ-று. 547

தேக நீரூதல்தீர.

கடலைப்புளிப்புத்தேன் கலந்திருவேளைத்தசநாள்
உடலிற்குடிக்க வடியும்.

(இ-ள்) தேகநீரூதல்தீர:—கடலைப்புளிப்பும், தேனும் சமனுய்க் கலந்து 10-நாள் அந்தி சந்தி இருவேளையும் கால் அல்லது அரை ஆழாக்குவீதம் உட்கொண்டுவரவும் தேகநீரூதல்வடியும். அதினுலுண் டாகிய வாதைநோய்களுந்தீரும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று.

கல்லடைப்புக்கு.

பொரிகாரந்திப்பிலியும் புட்டிவெல்லத்தண்ணீர்கல்
பரிகாரங் குப்புறவிழும்.

(இ-ள்.) கல்லடைப்புக்கு:—வெண்காரத்தைப் பொரித்து திப்பி லியைப்பொடிசெய்து சமனுய்ச்சேர்த்துப் பனைவெல்லமுங் கலந்து கழற்சியளவு 10-நாள்இருவேளையும் உட்கொண்டுவரவும்.நீரடைப்பு, கல்லடைப்பு, நீங்கி நீரிற்கல்தெரித்துத் தரையில் வந்துவிழும். அக் கல்லையரைத்து தலை, நெற்றி, கன்னத்திற் பூசவும். தீராத சென்னி நோய்தீரும். இச்சாபத்தியம். எ-று. 549

பகுமூத்திரத்துக்கு.

வேங்கைப்புலி யெலும்பை விட்டரைத்துந்திப்பூச
நீங்கிப்பகு நீறுநிற்கும்.

(இ-ள்) பகுமூத்திரத்துக்கு:—வேங்கைப்புலியின் எலும்பைத் தண்ணீரில் நேரவரைத்து உந்தியிற்பூசிவரவும் பகுமூத்திரமானது அடைப்பட்டு மடைதுந்து அடங்கிநின்றுவிடும். பிறகு அந்தசெய லிருக்காது. இதற்குப்பத்தியமென்பதில்லை. எ-று. 550

புருஷ னகலாதிருக்க.

தன்விலக்கச்சீலை சுட்டதன்சாம்பலுள்ளேற்றப்
பின்விலக்கப் போகானவன்.

(இ-ள்.) புருஷனகலாதிருக்க:—தான் மாதவிடாயான விலக்கச் சீலையைச்சுட்டுச் சாம்பலாக்கி அதை எதிலாகிலுஞ்சேர்த்து உள்ளுக் கேற்றிடவும். அதைத்தின்றதே அவன் தன்னைவிட்டுப் பிரியான். அவனை விலக்கிவிடவும் முடியாது, அவனும் போகான். எ-று. 551

புருஷன் வேண்டாதவர்க்கு.

சாதிக்கா யெள்ளெண்ணெய் தன்னிலுரைத் துட்பூசிப்
பேதிக்காதப் பெண்ணைப்புணர்.

(இ-ள்.) புருஷன் வேண்டாதவர்க்கு:—சாதிக்காயை நல்லெண் ணெயிலுரைத்து அதை லிங்கத்திற்றடவிப் புணரவும்.புருஷனைவேண் டாதமனைவியானவள் அவனைவிட்டுக் கணமேனும் பிரியாள். எக்கா லும் அடிமையாயிருப்பள். எ-று. 552

மருந்து வேக்காளமற.

தென்னம்பிஞ்சிச்சார் சீனிக் காய்ச்சியரைப்பலத்துண்
முன்னம்வெப்பந் தணியுமுடி.

(இ-ள்.) மருந்து வேக்காளமற:—தென்னம் பிஞ்சியின் சாறும், சீனியுங்கலந்துகாய்ச்சி வேளைக்கு அரைபலமுண்டுவர மருந்தின்வேக் காளம் அதின் வெப்பம்,மேற்சுவாசம்.நாவரட்சி, முதலியன தணியும். முலைப்பாலை அடிக்கடிவாயிற்குத்திவரவும், யாவர்க்குஞ் சாந்தமாகும். எ-று. 553

வயிறு நோய்க்கு.

திரிகடுகிற் பனைவெல்லந் திரட்டியே யுண்டுவரப்
பிரிந்துவயிறு வலிபோகும்பின்.

(இ-ள்.) வயறுநோய்க்கு:—சுக்கு,மிளகு,திப்பிலி, இம்மூன்றை யும் இளவறுப்பாய்வறுத்துப் பொடிசெய்து அதிற் பனைவெல்லம் போட்டுப் பிசைந்துப் புன்னைக்கொட்டையளவு ஒருவேளைக் குண்டு வரவும். அவ்வயிறுவலி நின்றுவிடும். இன்னுஞ்சிலநோய்களையுந்தணிக் கும். எ-று. 554

வெள்ளைக்கு.

சீனத்தினைப்பொரித்துத் தின்னபசுவெண்ணெயது
பானத்தில்வெள்ளை போம்பார்.

(இ-ள்.) வெள்ளைக்கு:—படிகாரத்தைப் படைநெருப்பின்மேல் வைத்துப்பொரித்து அதை நுணுக்கி ஒருதம்படி எடையுள்ளதைப் பசுவெண்ணெயில் அல்லது பசு நெய்யிலிழைத்து காலை மாலை இரு பொழுதுந்தின்ன வெள்ளையானது நின்றுவிடும். சிதபேதியுந் தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 555

## முடக்கு வாதத்துக்கு.

நாகவல்லியி னிலையில் நற்சிலா சித்தைவைத்து
ஏகருக்கிட மிட்டெடு.

(இ-ள்) முடக்குவாதத்துக்கு:—கற்பூரசிலாசித்தை சுத்தி செய்து நாகவல்லியினிலையையரைத்துஅதற்குக்கவசஞ்செய்து ஓர்சொப்பில் வைத்து மேலகல்மூடி சீலைமண்செய்து 10-எருவிற் புடமிடவுஞ் சுன்னமாம், அதைச்சுண்டையளவு தேனிலிழைத்து 5-நாள் காலை மாலை யுண்டுவர முடக்குவாதமானது தீரும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 556

## உஷ்ண வாய்வுக்கு.

உப்பிற் பிரண்டையை யுள்ளடுக்கிக் கறுக்கியுண்
செப்புமுஷ்ணவாய் வற்றிடும்.

(இ-ள்.) உஷ்ண வாய்வுக்கு:—ஒருசட்டியில் உப்பைப் பரப்பி அதின் மேல்கணுவைநீக்கிய பிரண்டைத்துண்டுகளை, அடுக்கி அதன் மேல் உப்பைத்தூவிபிரண்டையைப்பரப்பி, இப்படி எத்தனை அடுக்கு செய்திடினும் மேல்சட்டிமூடி அடுப்பில்வைத்து எரிக்கையில் உப்பு சிடசிடப்பற்றபின் இறக்கிவைத்து தினம் காலை மாலை ஒவ்வொரு சிட்டிகை உட்கொண்டுவர உஷ்ணம், உஷ்ணவாய்வு, பித்தம், பித்தமயக்க முதல்தீரும்; பசிதீபனமுண்டாம். 20-40 நாள் தின்னவும் குணமாம் எ-று. 557

## பல் நோய்க்கு.

புளியுப்புச்சீயக்காய் பொருந்தவே மத்தித்து
தெளியும்பல் லீரில்வைநேர்.

(இ-ள்) பல்நோய்க்கு:—புளி, உப்பு, சீயக்காய் மூன்றும் நசுக்கி நோக்காடாகிய பல்லீரின்மேல் வைக்கவும், இரண்டொரு வேளையில்

அப்பல்நோயானது நீங்கிவிடும். அப்படிவைத்திருப்பதில் அவ்விஷநீரானது சுக்கும்வரையில் இருக்கவேண்டும். எ-று. 558

கண் ணோய்க்கு.

அன்னபேதியைநீரி லங்கரைத்துக் கண்சுற்றி
முன்னமே யதைப்பூசிடு.

(இ-ள்.) கண்ணோய்க்கு:—அன்னபேதியை இரும்புத் தகட்டில் வைத்து தண்ணீர்விட்டு இரும்பினுலிழைத்து இராத்திரியில்கண்ணைச் சுற்றிப் புறவளையமாய்ப் பூசிவைக்கவும். அக்கண்ணோயானது காலையில் சுகுணமாய்அச்சிவப்புமாறி, கண்ணீர்வடிதலற்று,குத்தல் நோக்காடறும். எ.று. 559

காது நோய்க்கு.

வேளை மிளகுடனே வெள்ளுள்ளிச் சார்செவியன்
ஞுளைவிட வகலுமங் நோய்.

(இ-ள்) காதுநோய்க்கு:—வேளையிலையில் கொஞ்சம் மிளகும் வெள்ளைப் பூண்டும் நசுக்கிவைத்து அம்மூன்றையும் நன்ருய்க்கசக்கி கோயுள்ளகாதிற் பிழிய எரியும். உடனே காதுநோய், குத்தல். சீழ்வடிதல், கூவுதல்யாவும் நின்றுவிடும். இதை இரண்டொருவேளை விடவும். எ-று. 560

தலை நோய்க்கு.

முலைப்பாலுஞ் சாம்பிராணி முதிரேலங் தானரைத்து
தலைப்பாகங் தான்றடவிடும்.

(இ-ள்.) தலைநோய்க்கு:—முலைப்பாலிற் கொஞ்சம் பளிங்கு சாம்பிராணியும் ஏலமுஞ்சேர்த்தரைத்து அதைத்தலையிற் றப்பிப்பற்றுப்போட்டு படைநெருப்பிற்காய்ச்சவும் அந்ததலைநோயானதுதீரும். உடனேநல்லெண்ணெயில் சாம்பிராணியும் கரிமஞ்சளும் நுணுக்கிப்போட்டுக்காய்ச்சி தலைதேய்த்து முழுகவும். எ-று. 561

அட் சரத்துக்கு.

ஆட்டுமண் ணீரலினை யன்றடுப்பினில் வெதுப்பி
போட்டுமுண் போமக்கரம்.

(இ-ள்) அட்சரத்துக்கு:—ஆட்டின்மண்ணீரல் ஒன்றை அடுப்பிற்போட்டு வெதுப்பியெடுத்து அதைவாயிற்போட்டுக் குதப்பி அவ்

வுமிழ்நீரை உட்கொள்ளவுந்தீரும். அது நாபிரிணத்தையும் ஆற்றும். அதினுலுண்டாகிய வெப்பத்தையும் தணிக்கும். எ-று. 562

தொண்டை கம்மலுக்கு.

எள்ளுப்பிண்ணுக்கை நெருப்பின்கும்பியினில்வெதுப்பிக்
கொள்ளப்புண்ணுக் குண்ணறும்.

(இ-ள்) தொண்டைக்கம்மலுக்கு:—தொண்டையைக்கட்டிக் கம்மலோடு கீச்சுக்குறலாய்ப் பேசிடின் எள்ளுப் புண்ணுக்கை கும்பி நெருப்பில் வெதுப்பி, அதைவாயிற் போட்டுமென்று, அவ்விரசத்தை விழுங்கிவரவும். உடனே அக்கம்மல்நீங்கி நன்ருய்த் தொனியோசையுடன் பேசுவர். எ-று. 563

உதிரங் கக்கலுக்கு.

தேத்தான் விதைமாவுந் தெள்ளமுதும்பாயசஞ்செய்
தூத்தாய் குடிப்பிக்கவும்.

(இ-ள்.) உதிரங்கக்கலுக்கு:—தேத்தான்கொட்டைகளை உரலிற் போட்டு வெந்நீர்தெளித்து இடித்து மாவாக்கி அம்மாவில் ஆழாக்கும் பச்சரிசிநொய்யில் ஆழாக்கும்சேர்த்து சர்க்கரையுங்கூட்டிப் பாயசங் காய்ச்சி 2-3 விசை குடிக்கவும். வாயிலுதிரங்கக்குவது நின்றுவிடும். எ-று. 564

உதிரப் பாட்டுக்கு.

கருஞ்சீரகஞ்சுட்டக்கரித் துணியுமயணஞ்செய்
திருமூணுளிட வேகிடும்.

(இ-ள்.) உதிரப்பாட்டுக்கு:—கருஞ்சீரகமும் கரித்துணிகொளுத்திய சாம்பலும் சமனுய்ச்சேர்த்து, அதிற் பனைவெல்லமுங்கூட்டி அம்மியிலரைத்து எலுமிச்சங்காயளவுள்ளதைக் காலைமாலை 2-3 நாளுண்ண உதிரப்பாடானது நின்றுவிடும். எ-று. 565

நீர்க் கட்டுக்கு.

கருங்கம்பளி பொசுக்கிக் கருப்புட்டி வைத்துருகில்
ஒருபடிநீர்விட் டெரித்துண்.

(இ-ள்) நீர்க்கட்டுக்கு:—அடுப்பின்மேல் சட்டியின் மத்தியில் கருங்கம்பளி அல்லது வெண்கம்பளித் துண்டைப்போட்டுச் சாம்ப

லாக்கி, அதின்மத்தியில் பனைவெல்லம்வைக்க உருகும். அதில் அரை படிதண்ணீர்விட்டு ஆழாக்காய்க் காச்சிவடித்துக்குடிப்பிக்கவும. நீர் தாராளமாயிறங்கும். எ-று. 566

## நரம்பிற் புண்ணுக்கு.

கொருக்காப் புளியிலையைக் கொய்துமிழ்நீ ரினிலரைத்து
முருக்காய்த் தடவிடும்புண்ணில்.

(இ-ள்.) நரம்பிற்புண்ணுக்கு:—தேகத்தில் நரம்பின்மேல் புண்ணாகவிருக்கில், அதற்குக் கொருக்காப்புளியிலையை உமிழ்நீர்விட்டரைத்து அப்புண்ணின்மேற் றடவிவர ஆரிவிடும். மறுபடியும் அப்புண்ணானது ஜனிக்கவேமாட்டாது. எ-று. 567

## கைகால் வீக்கத்துக்கு

ஒதியம்பட்டையை நறுக்கி யுயர்வீக்கத்திற்கட்டி
டதிகங்குத்தல் நோயறும்.

(இ-ள்) கைகால் வீக்கத்துக்கு:—கைகால்களில் வீக்கமுண்டாகி அதிகங்குத்தல் குடைச்சலுண்டாகில், ஒதியம்பட்டையை நறுக்கி இரவில் கட்டி காலையிலவிழ்த்து வேறேகட்டிவரவும். 3-நாளில் அவ்வீக்கத்துடன் குத்தல் குடைச்சல்முதலிய பலநோய்களுந் தீரும். எ-று. 568

## நீரொழுக்குக்கு.

கூவிளங்கனியபினி கொண்டரைத்து வெண்ணெயிலுண்
தீவிரத்தினி லடைபடும்.

(இ-ள்.) நீரொழுக்குக்கு:—கூவிளங் கனியாகிய வில்வப்பழத்தின் உட்சதையும அபினியுஞ்சேர்த்தரைத்து வெண்ணெயிலுண்டுவரவும் நீரொழுக்கானது நின்றுவிடும். இதைநிற்கும்வரையி லுண்டுவரவும் வெகுநன்மையைத்தரும்; இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று.

## விரை நோய்க்கு.

புகையூறற்கழல்வித்துப் பொடிபனை வெல்லம்பிசைந்து
வகையாயுண் விரைவாதம்போம்.

(இ-ள்). விரைநோவுக்கு:—கழற்சிப்பருப்பை ஆர்க்கப் பொடிசெய்து அதற்குச்சரியிடை ஒட்டடைசேர்த்து அதிற் பனைவெல்லஞ்

கூட்டி முன்றையும் அரைத்து புன்னைக்காயளவு காலைமாலை 3-நா ளுண்டுவரவும். விரைநோயானதுதீரும். இச்சாபத்தியம். எ-று.

எலி கடிக்கு.

மூவாறெலிக்கடிக்கு முன்னெலியின் கட்டத்தூள்
தாவாழைப் பழத்தினிற்றுன்.

(இ-ள்) எலிகடிக்கு:—18-வகை எலிகடிகட்கும் அதின் மலம் உலர்ந்ததை ஆர்க்கப்பொடிசெய்து சுண்டையளவு பாதிவாழைப்பழத் தினுள்வைத்துப்பதிந்து 3-நாள் 6-பொழுது உண்டுவரவும் எலிக்கடி, பெருச்சாளிகடி, மூஞ்சுறுகடி, பூனைக்கடிதீரும். கடும்பத்தியம். எ-று.

சூதக வயிறுவலிக்கு.

தனியிலுப்பைப்பிண்ணாக்கைச் சலத்தரைத்துக்கதலிக்
கனியிலுட்கொள் சூதகம்போம்.

(இ-ள்.) சூதகவயிறுவலிக்கு:—இலுப்பைப்பிண்ணாக்கைத் தண் ணீரிலரைத்து புன்னைக்காயளவுவீதம் பாதி வாழைப்பழத்தினுட் பதிந்துதலைமுழுக்குவந்த 3-நாளுமுண்டுவர சூதகவயிறுவலி தீரும்; கர்ப்பமுந்தரிக்கும். அப்படிக்கில்லையேல் மறுமாதமும் இவ்வாறுண் ணவும். எ-று. 572

காது குத்தலுக்கு.

சுன்னம்புகையிலையுந் தொந்தித்தை முலைப்பாற்
றன்னிற் பிழிசெவியிற் றுன்.

(இ-ள்) காதுகுத்தலுக்கு:—புகையிலையும் சுண்ணாம்பும் ஒன் றுய் நசுக்கித் துணியில்முடிந்து அதைமுலைப்பாலிற்போட்டுவைத்து அவ்விரசத்தைக் கசக்கிக் காதுகளிற்பிழியவும் காதுகுத்தல், காது நோய், காதுகூவுதல், காதில்சீழ்வடிதல் தீரும். எ-று. 573

மூலச் சூட்டுக்கு.

பூரிமரப்பிசினும் பொங்குகூவிள்மவுரி
மோரிலரைத்திடவு மூணுள்.

(இ-ள்) மூலச்சூட்டுக்கு:—பூரிமரத்துப்பிசின், வில்வப்பத்திரி, அவுரிமருந்து இம்மூன்றும் சமனாய்ச்சேர்த்து பசுமோரிற் கரைத்து

3-நாள் காலை உச்சி மாலை 3-விசையும் 2-குன்றிபிடைவீத முண்டுவர மூலச்சூடு, இரத்தம்விழுதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 574

### பெரும் பாட்டுக்கு.

தென்னங்கள்ளாழாக்குச் செல்முழுக்குமூணுளுண்
ணின்னங்கொள் மறுமுழுக்குக்கே.

(இ-ள்.) பெரும்பாட்டுக்கு:—ஆழாக்குத் தென்னங்கள்ளை மாதர் கட்குமுழுக்குவந்த நாள்முதல் 3-நாளும் காலையிற் குடித்துக் கொண்டேவரவும். ஈதன்றி மறுமாதம் 3-நாளும் காலையிற்குடித்துக் கொண்டேவரவும். பெரும்பாடானது நின்றுவிடும். எ-று. 575

### கண்ட மாலைக்கு.

கம்பளியிலைத்துத்தங் கண்டரைத்துப்பற்றிடப்போம்
நம்பவுங் கண்டமாலை.

(இ-ள்) கண்டமாலைக்கு:—கம்பளிச்செடி யிலையும், மயில்துத்தமும் சேர்த்தரைத்து கண்டமாலைப்புண்ணுகிய விடங்களில் அதைப் பற்றுப்போட்டுவரவும். அக்கண்டமாலையும் அதிற்புறையேறிய புண்ணும் விரைவில் உலர்ந்துமாறிவிடும். எ-று. 576

### கண்ணிற் பூவிற்கு.

காட்டுவாகைவிரையைக் கண்டுரைத்துத்தண்ணீரிற்
றீட்டமண்டலத்திற்செலும்.

(இ-ள்.) கண்ணிற்பூவிற்கு:—காட்டுவாகைவிரையைத் தண்ணீரிலுரைத்து ஒருமண்டலம் கண்களிற்றீட்டிவரவும். கண்ணிலுள்ள பூமாறி நன்ருய்த்தெரியும் காரசாரத்தைநீக்கிப் பாலுஞ்சோறுண்ணவும். பகலில் ஆட்டுக்கரி சூப்பு உண்ணவும். பூமாறிடும். எ-று. 577

### இரத்த வாந்திக்கு.

பங்நீரிளஞ்சூடாய்ப் பற்றவைத்துட்குடிக்க
செங்நீரோடும் வாந்திபோம்.

(இ-ள்) இரத்தவாந்திக்கு:—பங்நீரைச்சுடவைத்து இளஞ்சூடாயிருக்கையிலிறக்கி அதைக்குடித்துவரவும். இரத்தவாந்திமுதல்மார்பு தொண்டை வரட்சி,மூக்கில் நீர்வடிதல், வயிற்றுநோய், வயிறுகடுப்பு,

சாலைப்பற்றியநோய், வெப்பம், பித்தமயக்கம், சோகம், தலைசுழற்றல் தீரும். எ-று. 578

## பாண்டு நோய்க்கு.

மோட்டெருமைத் தயிருழக்கில் மூத்துளிசா ணிப்பால்விட்
டோட்டிமிளகேழ் பொடித்திடு.

(இ-ள்.) பாண்டுநோய்க்கு:—எருமைத்தயிர் உழக்கில் எருமைச் சாணியின்சார் 3-துளிவிட்டு மத்தித்து அதில் மிளகு 7-8 பொடித் துச்சேர்த்துக்காய்ச்சி 3-நாள் குடித்துவரவும். பாண்டு, சோகை, காமாலை முதலியனதீரும். 7-நாள் கடும்பத்தியமிருந்து 8-நாள் தலைக் குவார்க்கவும். எ-று. 579

## நேத்திரக் குளிர்ச்சிக்கு.

நெல்லிவற்றல் கற்கண்டினிற் படிகியரைத்துவிழி
செல்லிடத்தீட்டக் குளுர்ச்சி.

(இ-ள்.) நேத்திரக்குளிர்ச்சிக்கு:—நெல்லியின்வற்றல் படிகாரம், சீனுகற்கண்டு இம்மூன்றையும் முலைப்பால் அல்லது பசும்பால்விட் டரைத்து கயறுதிரட்டி அதை இருகண்களிலும் தீட்டிவர கண்கள் துலங்கி பலவினைகளையும் அகற்றுவைக்கும்; சாலேசுரமும் நீங்கும். எ-று. 580

## மருந்தீட்டில் வசமாக.

கோரோசினையுஞ் சங்கங்கொழுந்தும் நாவூற்றை
நேரோட்டி வெற்றிலையிலிடு.

(இ-ள்.) மருந்தீட்டில் வசமாக:—கோரோசினையும் சங்கங்கொ ழுந்தும் சமனாயெடுத்து நாவின் ஊற்றையாலரைத்து அதை வெற்றி லைகளில் தடவிக்கொடுத்துதாம்பூலந் தரித்துக்கொள்ள, அதைத்தின்ற வர் வைத்தவர்க்குக் கைவசமாவர். தன்சொற்படி கேட்பர். எ-று.

20 பற்பலப் படலம் 57.

முற்றிற்று

# 21 லேகியப் படலம் 9.

### திரிவிக்கிரம லேகியம்.

அரிதகிபிற்பிஞ்சு திராக்ஷைப்பழந் தேன்விட்டுப்பிசைந்
தருந்தபற்கண் செவிநோயறும்.

(இ-ள்) திரிவிக்கிரம லேகியமாவது:—கடுக்காய்ப் பிஞ்சியைப் பொடித்து ஓரேனத்திற்போட்டு, திராக்ஷைப்பழம் கொட்டையுள்ளது சமன்சேர்த்துப் பிசைந்து தேன்விட்டுமத்தித்து, கழற்சியளவு இராத்திரிபடுக்காமுன் வாயிற்போட்டு வெந்நீர்குடித்துத்தூங்கி காலையிற் பார்க்கக் கண்ணோய், காதுநோய், பல்நோய் முதலியதுதீரும். எ-று.

### அனுபான லேகியம்.

கருமணக்கத்தை பொரிகண்டரைத்து நெய்யிற்பிசைந்
திருப்புலேகியஞ் செய்திடு.

(இ-ள்) அனுபான லேகியமாவது:—கருப்பு மணக்கத்தைப் பொரிமாவு அரைபடியில் கற்கண்டுதூள் பலம் 15-சேர்த்து, நெய் பலம் 1-விட்டுப்பிசைந்து லேகியமாக்கி கொட்டைப்பாக்களவில் எவ்விதபஸ்மம், செந்தூரம், மருந்துகளையும்வைத்துண்ணவும். அனுபான லேகியம். எ-று. 583

### குன்மத்துக்கு லேகியம்.

மிளகப்பளாகாரம் வெல்லமிலேகியஞ்செய்து
இளகவெந்நீரி லுட்கொள்.

(இ-ள்.) குன்மத்துக்கு லேகியமாவது:—மிளகு அப்பளாகாரம், சமன்சேர்த்து தக்கபடி பனைவெல்லங்கூட்டிப் பிசைந்து இடித்து லேகியமாய்ச்செய்து 1-மண்டலம் அந்திசந்தி புன்னைக்காயளவு வெந்நீரிலுட்கொள்ளவும். குன்மமானது கரைந்துநீங்கிவிடும். இச்சா பத்தியம ...ரிருக்கவும். எ-று. 584

### சூலைக்கு லேகியம்.

மேனியிருள்ளிவிண் டரைத்தாமணக்கெண்ணே
தானிலேகியஞ் செய்தளி.

(இ-ள்) சூலைக்கு லேகியமாவது:—குப்பைமேனியிலை பலம் 4-வெங்காயம் பலம் 2-இவைகளைச்சேர்த்தரைத் ததன்பிறகு கொஞ்சம் விளக்கெண்ணெய்விட்டுக்கிளறி லேகியபாகமாய்ச்செய்துஉட்கொண்டு வரவும். சூலை, பக்கசூலை, மார்நோய், மலக்கட்டு, பித்தசோகை முதல் தீரும், பத்தியமிருக்கவும். எ-று. 585

பசிதீபனமுண்டாக லேகியம்.

இஞ்சியுடன்சீரகமு மிந்துப்பரைத்தருந்த
மிஞ்சிபசிதீபனமிகும்.

(இ-ள்.) பசிதீபனமுண்டாக லேகியமாவது:—இஞ்சி மேற்பரணியைப்போக்கிஅதற்குச்சமன் சீரகமும், இந்துப்புஞ்சேர்த்துநன்றுயரைத்து துவையலாய்ச்செய்து 3-அல்லது 5-நாளுட்கொண்டுவரவும். உஷ்ணவாய்வுமுதல்நீங்கி பசிதீபனமுண்டாகும், இச்சாபத்தியம்.

சுக்கு லேகியம்.

சுக்குபலந்தூளிடித்துத் துட்டுபனைவெல்லம்நெய்தேன்
மிக்கவிடும் லேகியஞ்செய்துண்.

(இ-ள்) சுக்குலேகியமாவது:—சுக்கானது 1- பலத்தைத் தூளிடித்து வைத்துக்கொண்டு பனைவெல்லம் 1-துட்டுக்குவாங்கி அதைப் பாகுசெய்து இத்தூளைக்கொட்டிகிளறி நெய் தேனையும்விட்டு லேகியமாய்ச்செய்து அதில் புன்னையளவு உட்கொள்ள உஷ்ணபேதி சுரமுதலியது தீரும். எ-று. 587

மிளகு லேகியம்.

மிளகுபலந்தூளிடித்து மிக்கபனைவெல்லம்நெய்தேன்
அளவுபடலேகியஞ் செய்தளி.

(இ-ள் மிளகு லேகியமாவது:—மிளகு 1-பலத்தைத் தூளிடித்துவைத்துப் பனைவெல்லம் 1-துட்டுக்குவாங்கி அதைப் பாகுசெய்து இத்தூளைக்கொட்டிக்கிளறி நெய் தேன்விட்டு லேகியஞ்செய்து அதிற் புன்னையளவு உட்கொள்ளவும் சுரம் பித்தமுதலிய நோய்தீரும். எ-று.

திப்பிலி லேகியம்.

திப்பிலியைத் தூளிடித்துத் தின்பனைவெல்லம் நெய்தேன்
ஒப்பியதை லேகியம்செய்துண்.

(இ-ள்.) திப்பிலி லேகியமாவது:—திப்பிலியானது 1-பலத்தைத் தூளிடித்து வைத்து பனைவெல்லம் 1-துட்டுக்குவாங்கி அதைப்பாகாக்கி அத்தூளை யதிற்கொட்டிக்கிளறி நெய்தேன்விட்டு லேகியஞ் செய்து அதிற்புன்னையளவு உட்கொள்ள குளிர், சீதளம், இருமல் முதல் தீரும். எ-று. 589

திரிகடுகு லேகியம்.

*திரிகடுகைத்தூளிடித்துச் செய்பனைவெல்லம் நெய்தேன்*
*எரியவதை லேகியஞ்செய்தேற்று.*

(இ-ள்.) திரிகடுகு லேகியமாவது:—சுக்கு, மிளகு, திப்பிலி இம் மூன்றையும் பொடித்துத் தூளாக்கிவைத்து பனைவெல்லத்தை சரியிடைசேர்த்துப் பாகுசெய்து அதிற்கொட்டிக்கிளறி நெய்தேன்விட்டு லேகியமாய்ச்செய்து அதிற்புன்னையளவு தின்னவும். வயிற்றுநோய் முதலியது தீரும். எ-று. 590

21-லேகியப் படலம். 9.

முற்றிற்று.

## 22 மெழுகுப் படலம் 17

சார மெழுகு.

*சாரங்கொம்புக்கள்ளிப்பால் தன்னிலிருசாமமரைத்*
*தேரவிளக் கெண்ணெயிலரை,*

(இ-ள்.) சாரமெழுகாவது:—நவாச்சாரத்தைக் கல்வத்திட்டு 2-சாமம் கொடிக்கள்ளிப்பால் விட்டரைத்து அதன்பின் விளக்கெண்ணெயிலரைத்துக் கடலைவிதம் பனைவெல்லத்தில் 3-நாள் 6-வேளை உண்டுவரவும். மகோதரம், பெருவயிர், காச்சற்கட்டி, நீராம்பல்,நீர்க்கோவை பிளவை, வல்லை, சூலைமுதல்தீரும். இச்சாபத்தியம். எ-று. 591

காந்த மெழுகு.

*நீரிடிமுத்துச்சிட்டம் நேர்வாளங்காந்தமரைத்*
*தேறிடப்பனை வெல்லத்திடு.*

(இ-ள்.) காந்தமெழுகாவது.—நீரிடிமுத்து, பழைய சிட்டக்கல் காந்தம், சமன், வாளஞ்சுத்தி இரட்டிப்பாய்ச்சேர்த்து யாவும் அரைத் துவழித்து மேதிப்பாலையில்வைத்து பனைவெல்லத்தில் கடலைவீதம் 3-நாள் 6-வேளையுண்டுவரவும் காமாலை, வாய்வு, வல்லைக்கட்டி, காச்சற் கட்டி, சூதகக்கட்டி, மகோதரம், பெருவயர், நீராம்பல், நீர்க்கோர்வை முதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 592

லிங்க மெழுகு.

லிங்கஞ்செருப்படைச்சாற்றிட் டரைத்திலுப்பைநெய்
பொங்கசுருக்கிட மெழுகாய்ப்போம்.

(இ-ள்.) லிங்கமெழுகாவது:—சாதிலிங்கத்தைச் செருப்படைச் சாற்றிலரைத்து கரண்டியில்வைத்து இலுப்பெண்ணெயில் 2-சாமஞ் சுருக்கேற்றி அதைக்கொதிக்கவைக்கவும். மெழுகாகிடும் அதிற் பயர ளவுவீதம் 3-நாள் அல்லது 5-நாள்காலைமாலைசர்க்கரையி லுட்கொண்டு வர. சகலநோய்களுந்தீரும். எ-று. 593

பூர மெழுகு.

வெள்ளைவெங்காயங் கம்மார்வெற்றிலைச்சாற்றிற்பூரங்
கொள்ளவுஞ் சுருக்கிட்டுக்கொடு.

(இ-ள்.) பூரமெழுகாவது:—பூரத்தை அயக்கரண்டியில் வைத் துப்பொடித்து வெள்ளைவெங்காயச்சார்,கம்மார்வெற்றிலைச்சார் 2-லும் 4-சாமஞ்சுருக்கேற்றிக் கிண்டிவர மெழுகாம். இதிற்பயரளவு தேன், பால், நெய், வெண்ணை ஒன்றிலேற்றவும்,சன்னிமுதல் பலநோய்களுந் தீரும். எ-று. 594

வீர மெழுகு.

லிங்கம்வீரம்பூரத்திற் றிரிகடுகுத்தேன்
தங்கசேர்த்தாட்ட மெழுகாம்.

(இ-ள்.) வீரமெழுகாவது:—லிங்கம், வீரம், பூரம்வகைக்கு வராகனிடை 1-சுக்கு, மிளகு, திப்பிலிவகைக்கு வராகனிடை 2, யா வும் பொடித்து தேன்விட்டரைத்து காலை மாலை 2-3-நாள் 2-3 பயர் வீதம் உட்கொள்ளவும் சன்னிவாய்வுகள் முதலிய பல நோய்களுந் தீரும். இச்சாபத்தியம். எ-று. 595

## கெந்தக மெழுகு.

எருக்கிலைச்சாற்றிற் கெந்தியெண்சாம மிலுப்பைப்பூ
சுருக்கிடச்காற்றூர் சாமத்துள்

(இ-ள்) கெந்தகமெழுகாவது:—சுத்திகெந்தகம் பலம் 10-பொடித்து எருக்கிலைச்சார்பிழிந்து அரிக்கஞ்சட்டியில்விட்டு 8-சாமஞ் சுருக்கிட்டெடுத்து உலர்த்திப்பொடிசெய்து மறுபடியும் இலுப்பைப்பூச் சாற்றில் 6-சாமஞ்சுருக்கிடவும் மெழுகாம். அதைப்பரணியில் வைத்துப் பயரளவு 3-நாள் 6-வேளை உட்கொள்ளவும். சகலரோய்களும் போம். இச்சாபத்தியம். எ-று. 596

## வேறு கெந்தக மெழுகு.

கெந்திமுந்திரிப்பழச்சார் கிட்டிசுருக்கிடமெழுகாம்
அந்திசந்தி சர்க்கரையிலளி.

(இ-ள்) வேறுகெந்தக மெழுகாவது:—சுத்திசெய்த கெந்தகம் பலம் 1-அதைமுந்திரிப்பழச்சார்பிழிந்து கட்டியை ஓட்டில்வைத்துச் சுருக்கிட்டெடுக்க மெழுகாம். அதிற்குன்றியளவு சர்க்கரையில் அந்திசந்தி கால் அல்லது அரைமண்டலம் உண்டுவரவும். சகலநோய்களுந்தீரும். பத்தியம். பசும்பாலுண்டு சுகபோஜன மருந்தவும். எ-று.

## ஊசி மெழுகு.

நூரூசிப் பத்திராட்சி னுட்கிழங்கின் சாற்றூரப்
பாரூசிப் பண்மெழுகாம் படை.

(இ-ள்.) ஊசிமெழுகாவது:—சீனவூசியில் 100-எடுத்து பத்திராட்சிக்கிழங்கின் சாற்றில் ஊரவைத்து மெழுகாகியபின் னெடுத்து பயரளவு காலைமாலை ஒருவாரம் அல்லது இரண்டுவார முண்டுவரவும். சோகை, காமாலை, பாண்டு, வீக்கம், நீர்க்கட்டுத்தீரும். இதைத்தக்க வனுபானங்களிலுண்ண அதிகபலனைத் தருவதுமன்றி தாதுபுஷ்டி, வீரியவிர்த்தியுண்டாகும். இதைப் பயர்விதம் 1-மண்டலமுண்ணுகையில் போகம், சாராயம்,மீன்,சிலந்திபதார்த்தம் நீக்கி சுகபோஜனமருந்தவும். இளைத்தவுடம்புபருக்கும். சடம்வலுக்கும், மதயானைப்பலம் வரும். பலநோய்கள் தீரும். எ-று. 598

தனிவீர மெழுகு-

புளிக்குழம்பு யரைப்பலத்திற் புகவீரம்விராகனிடை
யளிச்சுருக்கிட் டிடமெழுகாம்.

(இ-ள்.) தனிவீர மெழுகாவது:—சவ்வீரம் 1-விராகனிடைக்கு புளிக்குழம்பு அரைபலம் கரைத்து சுருக்கிட்டெடுக்கவும் மெழுகாம். இதிற் பயரளவு 3-5 நாள் காலைமாலை தேனிலிழைத் தேற்றிவரவும் பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 599

வேறுசார மெழுகு.

சாரங்கொடிக்கள்ளிப்பால் தன்னிலரைக்கமெழுகாம்
வாரங்கொடித்திடுங் குன்றியிடை.

(இ-ள்) வேறுசாரமெழுகாவது:—நவாச்சாரத்தைக் கொடிக்கள்ளிப்பாலிலரைக்கவும் மெழுகாகும். அம்மெழுகில் ஆளின்வலுவறிந்து குன்றியிடைவீதமாய் தக்கவனுபானங்களிலிடவும் பேதியாம். பத்தியமாயிருக்க சூதகவாய்வுமுதல் பலவாய்வுகளுந்தீரும். எ-று. 600

திரிசூத மெழுகு.

வீரம்லிங்கம்பூரஞ்சமன் விண்டரைக்கத் தேனில்மெழு
கோச்சுக்குநீரி விட்டிடு.

(இ-ள்) திரிசூதமெழுகாவது:—வீரம், பூரம், லிங்கம், இம்மூன்றும் சமபாகமாய் நிறுத்தெடுத்து சுத்திகள்செய்து கல்வத்திற்போட்டு, தேன்விட்டரைக்கவும் மெழுகாம். பயரிடை சுக்குத்தூள் அல்லது சுக்குக்கியாழத்தில் ஏற்றவும் வாய்வுகள் தீரும். உப்பில்லாவெந்நீர்சோறுண்ணவும். எ-று. 601

வேறு-திரிசூதமெழுகு.

திரிகடுலிங்கம்வீரத்திற் பூரந்தேனிலரைத்து
ஒருகெடுவங் குண்சன்னிக்கு.

(இ-ள்.) வேறு திரிசூத மெழுகாவது:—லிங்கம், வீரம், பூரம், வகைக்கு விராகனிடை 1-சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்குவராகனிடை 2, யாவுஞ்சுத்திசெய்து தேன்விட்டரைத்து அந்திசந்தி 3-நாள் சர்க்கரை, பனைவெல்லத்தி லுண்டுவரவும் சன்னிமுதல் பலநோய்களுந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 602

பஞ்ச ரசாயன மெழுகு.

கேவுரிலிங்கஞ்சிலைதாரங் கெந்திபொடித்துக்கரண்டி
சுவரவிட்டுக் கிளரமெழுகாம்.

(இ-ள்) பஞ்சரசாயனமெழுகாவது:—கெவுரி,லிங்கம், மனோசிலை தாளகம், கெந்தகம்இவைகளைச்சுத்திசெய்துபொடித்து அயக்கரண்டியிலிட்டு எரிக்கையிற்கிளரிவர மெழுகாம். அதில்பயரளவுதேன், நெய், சர்க்கரை. பனைவெல்லத்தில் 3-5-நாள் அந்திசந்தியுண்டுவர பலநோய்களுந்தீரும். நல்லபத்தியமாயிருக்கவும். எ-று. 603

விரைவாதம்-குடல்வாதத்துக்கு மெழுகு.

விளக்கெண்ணைகொடிக்கள்ளி வெல்லஞ்சாரம்வாளம்
களர்ச்சிசாத்தரைத்துண் மெழுகாம்.

(இ-ள்.) விரைவாதம்-குடல்வாதத்துக்கு மெழுகாவது:—நவாச்சாரம், சுத்திவாளம், பனைவெல்லம், கொடிக்கள்ளிப்பால், விளக்கெண்ணெய்ஒன்றாய்ச்சேர்த்தரைக்க மெழுகாகும். அதைகாலைமாலை 3-5-7-நாளுட்கொள்ளவும். விரைவாதம், குடல்வாதம், பக்கவாதம், சூதகவாய்வுமுதல் தீரும். பேதியுமாம். எ-று. 604

பக்கசூலைக்கு மெழுகு.

கள்ளிப்பாலிற்பூரங் கண்டரைத்து மெழுகாக்கிக்
கிள்ளிமூவிசை குன்றியிடு.

(இ-ள்.) பக்கசூலைக்கு மெழுகாவது:—கொம்புக்கள்ளிப் பாலில் பூரத்தை நேகவரைத்து மெழுகாக்கி அதிற்குன்றிவீதம் 3-விசையுண்ணபேதியாகும். பக்கசூலையுந்தீரும் 5-நாள் இச்சாபத்தியமிருக்கவும். குழந்தைகட்குத் துவரைவீதம் முலைப்பாலிலேற்றவும். எ-று. 605

விரோசன மெழுகு.

வாளமொன்று தீராக்ஷைபழமங் கிரண்டுமரைக்கமெழு
கேளகுன்றிதராய் வெல்லத்தில்.

(இ-ள்) விரோசனமெழுகாவது:—சுத்திவாளம் ஒரிடை திராக்ஷைப்பழம் ஈரிடையாகச்சேர்த்து அரைக்கவும் மெழுகாம்அதில்குன்றியளவு சர்க்கரை நெய், தேன், பனைவெல்லம், நெல்லியூறுகாய்,நிசித்தண்ணீர் ஒன்றில் ஆளறிந்தளிக்க நன்றாய்ப்பேதியாம். எ-று. 606

பேதிக்கு மெழுகு.

வாளமேரன்டமுத்து வண்காசுகட்டிசமன்
நீளப்பாலினி லளாத்திடு.

(இ-ள்) பேதிமெழுகாவது:—சுத்திவாளம், ஆமணக்கு முத்து காசுகட்டி 3-ம் சமனுப் பசும்பாலிலரைத்துயெடுக்க மெழுகாம். இதிற் குன்றியளவு வெந்நீரிற்கொள்ளவும் பேதியாம். இன்னும், காசுகட்டிக் குப் பதில் மிளகும், பாலுக்குப்பதில் பழச்சாறும் சேர்க்கலாம் மீறில் வசம்புக்கியாழமேற்றவும். எ-று. 607

22 மெழுகுப் படலம் 17

முற்றிற்று.

## 23–சரபத்துப் படலம்–19.

எலுமிச்சன்பழச் சரபத்து.

பழச்சாற்றிற்சரிசீனிப்பங் கிரண்டரைப்பங்கீர்
விழக்காய்ச்சிப் பதத்திறக்கிவிடு.

(இ-ள்.) எலுமிச்சன்பழச் சரபத்தாவது:—எலுமிச்சன் பழச் சாறு பலம் ஒன்னேகால், சீனிசர்க்கரைப்பலம் ஒன்னேகால், பன்னீர் பலம் இரண்டரை சேர்த்துக்காய்ச்சிப் பதத்தில்வடித்திறக்கி ஒருதுட் டிடை தினமானமுண்டுவரவும். பித்தம், பித்தவாய்வு, உஷ்ண முதலியதுதீரும். தேகம் சௌக்கியமாம். எ-று. 608

நாரத்தன்பழச் சரபத்து.

நார்த்தன்பழச்சாரொன்று நற்சீனிரெண்டெரித்துப்
பார்த்துமெழுகாய்க் காய்ச்சிப்படை.

(இ-ள்.) நார்த்தன்பழச் சரபத்தாவது:—நார்த்தன்பழச் சாறு ஓரிடை, சீனிசர்க்கரை ஈரிடை, இரண்டும்காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்திறக்கித் தன்னுறலாய் ஆறவைத்து புட்டியில்விடுத்து அதில் ஒரு துட்டிடை அன்றாடம் உட்கொண்டுவரவும் பித்த முதலியயா வுந்தீரும். எ-று. 609

### திராகைஷப்பழச் சரபத்து.

திராகைஷப்பழச்சார் கண்டதிற் சரிபன்னீரிரட்டிக்
கராடத்திட் டெரித்திடுங்காண்.

(இ-ள்.) திராகைஷப்பழச்சரபத்தாவது:—திராகைஷப்பழச் சார் பலம் கால் கற்கண்டுபலம் கால், பங்கீர்பலம் அரை, யாவுங்கராடத்திற் போட்டுக்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்திறக்கிபுட்டியில்விடுத்து 1-துட்டிடைதினசாரி உட்கொண்டுவர, பித்தம், உஷ்ணவாய்வு, கைகாலெரிவு முதலியது தீரும்.எ-று. 610

### கோடிமாதளைப்பழச் சரபத்து.

துட்டுகனஞ்சீவிபழந் துண்டிடித்துச்சார்பிழிந்து
விட்டதனிற் சீனியெரித்திடு.

(இ-ள்) கொடிமாதளைப்பழச் சரபத்தாவது:—கொடிமாதளைப் பழத்தை ஒருதுட்டுக்கனத்திற்சீவி இடித்துச்சார்பிழிந்து, அதில் 2-பலம் சீனியைக்கலந்துகாய்ச்சி மெழுகுபதத்தில் வடித்திறக்கி தினந்தினம் ஒரு துட்டிடையுண்டுவர, பித்தம். பித்தச்சூடு, முதலியவை தீரும். எ-று. 611

### மாதளம்பழச் சரபத்து.

ஓரிடைமாதளம் பழச்சா ரொன்றரையிடைச்சீனி
சேரிடையா யெரித்தெடுபதம்.

(இ-ள்) மாதளம்பழச் சரபத்தாவது:—மாதளையின்பழ ரசம் இடை ஒன்று சீனிசர்க்கரை இடை ஒன்னரை இவ்விரண்டுங் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்திறக்கி நிதம் ஒரு துட்டிடை யுண்டுவரவும். பித்தம், பிறட்டல்,பித்தவாய்வு, பித்தமயக்கமுதலியவை தீரும். எ-று.

### புளியம்பழச் சரபத்து.

புளியம்பழச்சார்வீசைப் புகல்சீனியிருவீசை
தெளியவதைக் காய்ச்சியளி.

(இ-ள்) புளியம்பழச் சரபத்து:—புளியம்பழம் சார்பிழிந்தது ஒருவீசைக்குசீனிசர்க்கரை 2-வீசைசேர்த்துக்காய்ச்சி மெழுகுப்பதத்தில் வடித்திறக்கி அனுதினம் ஒருதுட்டிடையுண்டுவர முற்கூறியநோயுடன் வெறி, வெள்ளோக்காளமியாவுந்தீரும். எ-று. 613

அன்னாசிப்பழச் சரபத்து.

அன்னாசிப்பழச்சாரொன்றங் வீசைசீனிரெண்டில்
முன்னாகக்காய்ச்சி பங்கீர்மூட்டு.

(இ-ள்) அன்னாசிப்பழச் சரபத்தாவது:—அன்னாசிப் பழச்சார் வீசை 1-வெள்ளைச்சர்க்கரை வீசை 2, இவைகளைக்காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்திறக்கி அதிற் பங்கீர்பலம் 2-விட்டுக்கலந்துதினம் ஒரு துட்டிடையருந்த, பித்தம், இருமல், வெப்பமானதுதணியும். எ-று.

நாகப்பழச் சரபத்து.

நாகப்பழச்சார்படிநால் நற்சீனிச்சரிகாய்ச்சிப்
பாகப்படிப்பார்ச்சும் பங்கீர்.

(இ-ள்.) நாகப்பழச் சரபத்தாவது:—நாகப்பழத்தை ஒருபாண் டத்திற்பிசைந்து அதில் 4-படிசார்விட்டுக்காய்ச்சிஒருபடியிருக்கவடித் திறக்கி அதற்குச்சரி சர்க்கரை சேர்த்து தினம் அரைபலம் வீதம் குடித்துவரவும். பித்தம், பித்தச்சூடு, வெப்பமுதலியவை தீரும். எறு,

கோய்யாப்பழச் சரபத்து.

கொயயாப்பழமுன்போற் கொண்டெரித்து வெண்சீனி
பெய்யாயதிற் பங்கீர்பின்.

(இ-ள்.) கொய்யாப்பழச் சரபத்தாவது:—கொய்யாப் பழத்தை முன்போற்காய்ச்சியதில் ஒருவீசையுள்ளதற்குவெள்ளைசர்க்கரை ஒரு வீசைசேர்த்து பங்கீர்பலம் அரைவிட்டுக் கலக்கி வேளைக்கு 1-துட்டி டைவீதமுண்டுவரவும். பித்தம், மயக்கம், மூர்ச்சைமுதலியதுந்தீரும். எ-று. 616

வில்வப்பழச் சரபத்து.

வித்திலாக்கூவிளங்கனியை வெந்நீரிற் கடைந்துபிழிந்
தேத்திடாய்ச் சீனிப்பங்கீரிலுண்.

(இ-ள்) வில்வப்பழச் சரபத்தாவது:—வில்வப்பழத்தை விரை போக்கி வெந்நீர்விட்டுக் கடைந்து பிழிந்து காய்ச்சி,அதில் சர்க்கரை சமன்சேர்த்து பங்கீர்விட்டுக்கலந்துதினசாரி 1-துட்டிடை உட்கொண் டிட பித்தம் மயக்கமுதல்தீரும். கண்திருஷ்டி நன்றாய்த்தெரியும்:எ-று,

விளாம்பழச் சரபத்து.

விள்ரம்பழத்தை முன்போல விட்டெரித்துச் சீனிபங்நீர்
அளாவிவிட்டதை யருந்து.

(இ-ள்) விளாம்பழச் சரபத்தாவது:—விளாம் பழத்தை விரை போக்கி வெந்நீர்விட்டுக் கடைந்து பிழிந்து காய்ச்சி, அதில் சர்க்கரை சமன்சேர்த்து பந்நீர்விட்டுக் கலந்து நிதம் ஒரு துட்டிடையுட்கொள்ள பித்தம், மயக்கம்தீரும். மருந்தீட்டையும் போக்கும். எ-று. 618

வாழைப்பழச் சரபத்து.

கதலிப்பழச்சார்பிழிந்து கண்டெரித்துச்சீனிபங்நீர்
மிதலவிடப்பா லதையுண்டிடு-

(இ-ள்) வாழைப்பழச்சரபத்தாவது:—வாழைப்பழத்தைத்தோல் போக்கி,வெந்நீர்விட்டுப்பிசைந்து பிழிந்துள்ள ரசத்துக்குச்சமன்சர்க்கரைசேர்த்து பந்நீர்விட்டுக்கலந்து தினம் ஒரு துட்டிடையுண்ண, முற்கூறியநோய்கள்திரும். தேக அழலையாற்றும். எ-று. 619

தாமரைப்பூ சரபத்து.

தாமரைப்பூச்சார் வீசைதன்னில் வெண்சர்க்கரைவீசை
யாமதைக்காய்ச்சிப் பந்நீரேற்று.

(இ-ள்) தாமரைப்பூச் சரபத்தாவது:—தாமரைப்பூவின் ரசம் 1-வீசைக்குவெள்ளைச்சர்க்கரை 1-வீசை சேர்த்துக்காய்ச்சிமெழுகுபதத்தில்வடித்திறக்கி அதிற் பந்நீர்பலம் 5-விட்டுக்கலந்து நிதம் 1-துட்டிடையுண்டிடவும் முற்கூறிய நோயனைத்துமகலும். எ-று. 620

தாழம்பூ சரபத்து.

தாழம்பூச்சார்வெள்ளைச் சர்க்கரையுஞ்சமன்வீசை
ஆழக்காய்ச்சிப் பந்நீரமை.

(இ-ள்) தாழம்பூச்சரபத்தாவது:—தாழம்பூச்சார் வீசை 1-க்கு வெள்ளைச்சர்க்கரைவீசை 1-சேர்த்துக் காய்ச்சிமெழுகுபதத்தில்வடித்திறக்கி பந்நீர் 2-பலம் விட்டுக்கலந்துதினம் 1-பலங்குடித்துவர, பித்தம், உஷ்ணம், தேகவழல், வைசூரி முதலியவை தீரும்.எ-று. 621

ரோசாப்பூச் சரபத்து.

பங்கீர் மொக்கினில் வெங்கீர்பட்டுறக் காய்ச்சியபின்
பங்கீர்விட்டதிற் காய்ச்சிப்படை.

(இ-ள்.) ரோசாப்பூ சரபத்தாவது:—காய்ந்த ரோசாப்பூயிடை 18-க்கு வெங்கீர் படி முக்காலிற் போட்டு 2-மணி நேரம் ஊறவைத்து அதை 3-ஆழாக்காய்ச் சுண்டக்காய்ச்சியபின், பன்னீர் பலம் அரை, கற்கண்டு 180-ரூபாயிடை கலந்து மறுபடியுங்காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்திறக்கி வேளைக்கு 1-துட்டிடை உண்டுவர, மலசலக்கட்டு, நீர்பிணைப்பு, காங்கை, மூலச்சூடு, மேகந்தீரும். தேகங்குளிர்ச்சியாம். எ-று. 622

இவ்வாறே வல்லாரைச் சரபத்து செய்யவும், யாவும் ரூபாயிடை சேர்க்கவும்.

நன்னாரிவேர் சரபத்து.

நன்னாரிவேர் முன்போல் நன்றெறித்துச்சீனி பங்கீர்
தன்னாலா யங்கேற்று.

(இ-ள்.) நன்னாரிவேர் சரபத்தாவது:—உலர்ந்த நன்னாரிவேரை தட்டி நறுக்கி வெங்கீரிற்போட்டு ஊறவைத்துப் பிசைந்து பிழிந்து காய்ச்சி அதில் சர்க்கரைச்சேர்த்து பங்கீர் கலந்து தினம் 1-துட்டிடை உட்கொண்டுவர, பித்தம், மயக்கம், மூர்ச்சை, சூடு முதலியதுதீரும். இவைகட்கு கொய்யாப்பழ சரபத்துபோல் இடைசேர்த்துச் செய்யவும். எ-று. 623

சந்தன சரபத்து.

கட்டைத்தூள் நீரூறக் கண்டெரித்துச் சலம்பங்கீர்
விட்டுக்காய்ச்சியும் பதத்தெடு.

(இ-ள்.) சந்தனச் சரபத்தாவது:—உலர்ந்த சந்தனக்கட்டைத்தூள் பலம் 2, மோர் பலம் 10, சலம் பலம் 4-ம் விட்டுக்காய்ச்சி, மற்றும் நாளில் வெங்கீர் பலம் 4-விட்டு, மறுபடியும் சலம் பலம் ஒண்ணே கால்,பங்கீர் பலம் 2, விட்டுக்காய்ச்சி வடித்திறக்கிவேளைக்கு கால்பலம் உண்டுவர, பிரமேகம், மூலச்சூடு முதலியது தீரும். எ-று. 624

### இஞ்சி சரபத்து.

இஞ்சியாரேகால்ரூபாயிற் சீனியெழுபத்தைந்
தெஞ்சியீராழாக்கு நீர்விட்டெரி.

(இ-ள்.) இஞ்சி சரபத்தாவது:—இஞ்சியின்சார் தோலா ஒண்ணேகால், வெந்நீர் உழக்கிற்போட்டு 1-முகூர்த்தநேரம் வைத்து சீனிசர்க்கரை தோலா 75-சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்திறக்கி வேளைக்கு 1-துட்டிடை யுட்கொள்ள, பித்தம், மயக்கம், வெறி, வெள்ளோக்காளம் தீரும். பசி மிகுதியாயெடுக்கும்.எ-று. 625

### காடி சரபத்து.

சீமைக்காடியிற் புட்டிச்சீனி யெட்டெட்டுத்தோலா
ஆமக்காடியைக் காய்ச்சியளி.

(இ-ள்.) காடிசரபத்தாவது;—சீமைக்காடி புட்டி 1, சீனிசர்க்கரைதோலா 64, 2-ம் ஒன்றாய்க்காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்திறக்கி நிதம் 1-துட்டிடை யுண்டுவரவும். முற்கூறிய நோய்களகலும். இதை வேளைக்கு அரைபலம் சரபத்தை 1-படி சலத்திற் கலக்கிக் குடிக்கவும். எ-று. 626

23 சரபத்துப் படலம் 19.

முற்றிற்று.

---

## 24. சுரமுதிவுடுப் படலம். 27.

---

### அசுவனிக்கு.

நவதானியந்தலையை நன்றாகச்சுற்றி பசுக்
கவைதானமுன்வை யகலும்.

(இ-ள்.) அசுவனியாகில்:—அசுவனி நட்சத்திரத்தில் சுரமானது தித்திடஅது 10-நாளையிற்றீரும். அப்படித் தீராதாகில், அதற்குச்சாந்திட நவதானியத்தை அவாள் தலையைச்சுற்றிப் பசுமாட்டின் முன் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 627

பரணிக்கு

எள் ளுஞ்சோர் தலைசுற்றி யெங்குமூர்மேற்கினிலே
சள்ளும் நாற்சந்தியில்வை.

(இ-ள்.) பரணியாகில்:—பரணி நட்சத்திரத்திற் சுரமானது தித்திட, 5-நாளையில்விடும். அப்படி விடாதாகில், அதற்குச் சாந்தி-எள்ளுஞ்சோறுஞ் சேர்த்து அவாள் தலையைச்சுற்றி ஊருக்குமேற்கில் நாலுசந்தியில் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். 628

கிருத்திகைக்கு.

நெய்யுஞ்சோர் தலைசுற்றி நிற்குமூரக்கினிமூலை
வையுஞ்சேர் சுரமற்றிடும்.

(இ-ள்.) கிருத்திகையாகில்:—கிருத்திகை நட்சத்திரத்தில் சுரமானது தித்திட, அது 21-நாளையில் நிற்கும். அப்படி நிற்காதாகில், அதற்குச் சாந்தி நெய்யுஞ் சோறும் பிசரி அவாள் தலையைச்சுற்றி ஊருக்கு அக்கினிமூலையில் வைக்கவும். அச்சுரமானது உடனேநின்று விடும். எ-று. 629

ரோகணிக்கு.

பாலுஞ்சோர் தலைசுற்றிப் பண்பாக வூர்நடுவில்
காலும் நேர்புறம் வைத்திடும்.

(இ-ள்.) ரோகணியாகில்:—ரோகணி நட்சத்திரத்திற் சுரமானது தித்திட, அது 11-நாளையில் தீரும். அப்படி தீராதாகில், அதற்குச் சாந்தி-பாலுஞ்சோறுஞ் சேர்த்து அவாள் தலையைச்சுற்றி ஊருக்கு நடுவில் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். இதின் குணம், மந்தப்படும், வாய்பினத்தும், வாந்தியெடுக்கும், இருமல் உண்டாகும். மலசல மிறங்குகையில் வாந்தியதிகரிக்கும், தேகங்கொப்பளிக்கும், காயும், வாய்வுபரியும், சொரியும், சுருண்டிடும், மார்புக்கும் வயற்றிற்கும், பாறைபாச்சினுப்போலிருக்கும், கண்டத்துக்கும்பிடறிக்கும் திமிரேறி யிருக்கும். எ-று. 630

மிருக சீருடத்திற்கு.

துல்லியப்பூவுளுந்து தலைசுற்றி பெருமாட்கோயில்
எல்லையிற்று ளமைத்துமேவை.

(இ-ள்,) மிருகசீருடமாகில்;—மிருகசீருட நட்சத்திரத்திற் சுரமானதுதித்திட, அது 9-நாளையிற்றீரும். அப்படி தீராதாகில், அதற்குச்சாந்தி-வெள்ளைப்பூவும் உளுந்தும் அவாள் தலையைச்சுற்றிப் பெருமாட்கோயில் முன் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 631

### திருவாதிரைக்கு.

மால்குருசுன் சுங்கன்பகல் மன்னுடையார் கோயில்முன்வை
பால்பிரமானஞ் சுற்றிப்பணி.

(இ-ள்) திருவாதிரையாகில்:—திருவாதிரை நட்சத்திரத்திற் சுரமானதுதித்திட அது 5-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில், 25-நாளினிற்குள் மரணமடைவர். அதற்குச்சாந்தி-பால், பரமானம் அவாள் தலையைச்சுற்றி புதன், வியாழம், வெள்ளி, சனி இவ்வாரங்களின் பகலில் உடையவர்கோயில் முன்வைக்கவும், அச் சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 632

### புனர்பூசத்திற்கு.

காயஞ்சோர்தலைசுற்றிக் கண்டுபெருமாட்கோயில்
மாயன்முன் வைக்கவகலும்.

(இ-ள்) புனர்பூசமாகில்:—புனர்பூச நட்சத்திரத்திற் சுரமானதுதித்திட, அது 3-நாள் அல்லது 21-நாளிற்றீரும். அப்படித் தீராதாகில் அதற்குச்சாந்தி-பெருங்காயமும் சோறும் அவாள்தலையைச்சுற்றி பெருமாட்கோயில்முன் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 633

### பூசத்திற்கு.

பூசத்துதித்தசுரம் பொல்லாங்கில்லாதகலும்
பாசத்திற் றணியப்படும்.

(இ-ள்) பூசமாகில்:—பூசநட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது யாதொருநாட் கெடுவுமின்றி பொல்லாங்கென்ப தில்லாமலே கெட்டாமல் நின்றுவிடும். இதற்குவேறொரு சாந்திகளு மில்லை யாதலால் அச்சுரமானது உடனேநின்றுவிடும். எ-று. 634

ஆயிலியத்திற்கு.

ஆயிருந்தபுத்ததின்மே லங்குபாணக்கமும்பால்
சேயிருந்து விட்டிடவறும்.

(இ-ள்) ஆயிலியமாகில்:—ஆயிலிய நட்சத்திரத்திற் சுரமானது தித்திட அது மற்றுநாள்விட்டுவிடும். அப்படிவிடாதாகில், அது 18-நாளிற்குள்விடும். அப்படியும், விடாதாகில் அதற்குச்சாந்தி-சர்ப்பமிருக்கும் புத்தின்மேல் பாணக்கம், பால்தானிருந்து வார்க்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 635

மகத்திற்கு.

எள்ளுஞ்சோர்தலைசுற்றி யெவ்விடத்துஞ் சுடலையில்வை
சள்ளும்பார் தடையற்றிட.

(இ-ள்) மகமாகில்:—மகநட்சத்திரத்திற்சுரமானதுதித்திட, அது 6-அல்லது 12-நாளில்விடும். அப்படிவிடாதாகில், 2-மாதத்துள் விடும். அதிலும் விடாதாகில் அதற்குச்சாந்தி - எள்ளும் சோறும் அவாள் தலையைச்சுற்றி சுடலையில்வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 636

பூரத்திற்கு.

பருப்புஞ்சோர்தலைசுற்றிப் பக்கம்பிடாரிக்கோயி
லிருப்பிற்சேர்ந்திடவு முன்வை.

(இ-ள்.) பூரமாகில்:—பூரநட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது 11-நாளில்விடும். அப்படிவிடாதாகில் அதற்குச்சாந்தி-பருப்புஞ்சோறும் அவாள் தலையைச்சுற்றி பிடாரிக்கோயில் முன் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 637

உத்திரத்திற்கு.

தேனுஞ்சோர் தலைசுற்றிச் சீதேவியார்கோயில்
தானும்போய் தரைவைத்திடும்.

(இ-ள்.) உத்திரமாகில்:—உத்திரநட்சத்திரத்திற்சுரமானதுதித்திடஅது 9-நாளில்விடும் அப்படிவிடாதாகில் அதற்குச்சாந்தி தேனும் சோறும் அவாள் தலையைச்சுற்றி சீதேவியார்கோயில் முன்வைக்கவும் அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 638

அத்தத்திற்கு.

பாலுஞ்சோர்தலேசுற்றிப் பக்கந்துர்க்கையின்கோயில்
மேலுஞ்சேர் தரைவைத்திடும்.

(இ-ள்.) அத்தமாகில்:—அத்தநட்சத்திரத்திற் சுரமான துதித்திட அது 7-நாளில்விடும், அப்படி விடாதாகில் அதற்குச் சாந்தி-பாலுஞ்சோறும் அவாள் தலையைச்சுற்றி துர்க்கைகோயிலின்முன் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 639

சித்திரைக்கு.

வத்திரமுஞ்சோறுகரி வைத்துதலேச்சுற்றியங்கு
சித்திரமுஞ் சேரிடத்தில்வை.

(இ-ள்.) சித்திரையாகில்:—சித்திரை நட்சத்திரத்திற் சுரமுதித்திட, அது 8-நாளையில்தீரும். அப்படித்தீராதாகில் அதற்குச்சாந்தி-சோறு, கரிவஸ்திரம்வைத்து அவாள் தலையைச்சுற்றி சித்திரமெழுதியுள்ள கூடத்தில்வைக்கவும். அச்சுரமானது உடனே நின்று விடும் எ-று. 640

சுவாதிக்கு.

சோறிலேக்கரி தலையைச்சுற்றி சுடுகாட்டினில்வை
வேறிலேச் சுரமதுவிடும்.

(இ-ள்.) சுவாதியாகில்:—சுவாதி நட்சத்திரத்திற் சுரமானதுதித்திட, அது 10-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில்அதற்குச்சாந்தி-சாதமும் பிட்டியகீரையும் அவாள் தலையைச்சுற்றி சுடுகாட்டில்வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 641

விசாகத்திற்கு.

சோறிரைச்சிக்கரி தலையைச்சுற்றி புன்னைமரத்தின்கீழ்
நேரிதைவைக்கச் சுரமும்நிற்கும்.

(இ-ள்.) விசாகமாகில்;—விசாக நட்சத்திரத்திற் சுரமான துதித்திட அது 21-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில், அதற்குச் சாந்தி-சோறும் இரைச்சிக்கரியும் அவாள் தலையைச்சுற்றிபுன்னைமரத்தின்கீழ் வைக்கவும். அச்சுரமாளது உடனேநின்றுவிடும். எ-று. 642

## அநுஷத்திற்கு.

அநுஷத்துதித்த சுரமங்ககலும் பயமில்லை
மனுஷர் பிழைப்பரதில்

(இ-ள்) அநுஷமாகில்:—அநுஷ நட்சத்திரத்திற் சுரமான துதித்திட, யாதொரு பயமுமில்லாது அப்பொழுதே நின்றுவிடும். இதற்கு வேறொரு சாந்திகளும் வேண்டியதில்லை. நாளென்பதோர் கெடுவுகளு மிதற்கில்லை. பல மருந்துகளு மருந்தாமல், அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 643

## கேட்டைக்கு.

பாலுஞ்சோர் தலைசுற்றிப் பக்கந்துர்க்கையின்கோயில்
மேலுஞ்சேர்சுரம் விடிடும்.

(இ-ள்.) கேட்டையாகில்:—கேட்டை நட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது 16-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில், அதற்குச் சாந்தி-பாலுஞ்சோறுஞ் சேர்த்து அவாள் தலையைச்சுற்றி துர்க்கை கோயிலின்முன்வைக்கவும். அச்சுரமானதுஉடனேநின்றுவிடும். எ-று.

## மூலத்திற்கு.

பயர்சோறுந்தலைசுற்றிப் பணி சமாதியில்வைக்க
வுயிர்தேறுஞ் சுரமற்றிடும்.

(இ-ள்.) மூலமாகில்:—மூலநட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது 11-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில், 8-மாதத்திலேகும், அதிலுமேகாவிடின், அதற்குச் சாந்தி-பயறுஞ்சோறும் பிசரி அவாள் தலையைச்சுற்றிச் சமாதியண்டையில் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 645

## பூராடத்திற்கு.

சீதரனுர் கோயிலிடஞ்சென்று நின்றுதான் தர்மம்
ஆதரவாயிய வகலும்.

(இ-ள்.) பூராடமாகில்:—பூராட நட்சத்திரத்திற் சுரமான துதிக்க, அது 8-நாளையில்விடும். அப்படிவிடாதாகில், அதற்குச்சாந்தி-பெருமாட்கோயிலண்டைபோய் நின்று இடது பாரிசமாய் தானதர்மங்கள் செய்யவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 646

### உத்திராடத்திற்கு.

உத்திராடத்துதித்துவுள்ள சுரம் நாளிரண்டி
லொத்தியோடிப் பதுங்கிடும்.

(இ-ள்.) உத்திராடமாகில்:—உத்திராட நட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது 2-நாளையிற்றீரும். பீடிக்காது. அதற்கொரு சாந்திகளும் செய்யவேண்டியதில்லை. சந்தேகமின்றி மருந்தளித்தாலும், மருந்தளிக்காவிட்டாலும் அச்சுரமானது உடனே நின்றுவிடும் எ-று. 647

### திருவோணத்திற்கு.

ஓணத்திற்சுரந்தோன்றி லொன்றுமே பயமில்லை
கோணத்திற் பரந்தோடுங் குன்றி.

(இ-ள்.) திருவோணமாகில்:—திருவோண நட்சத்திறத்திற் சுரமானதுதித்திட, அது ஒன்றுமே செய்யாது, யாதொரு பயமுமின்றி கூடிய சீக்கிரத்திலகன்றுவிடும். இதற்குச் சாந்தி முதலிய தொன்று மில்லை. மருந்தானதளித்தாலும், அளிக்காவிட்டாலும், அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 648

### அவிட்டத்திற்கு.

தயிர்சோறுந் தலைசுற்றித் தந்திடவேயந்தணர்க்கு
உயிர்தேறு மவர்க்கொன்றிலை.

(இ-ள்.) அவிட்டமாகில்:—அவிட்ட நட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது 10-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில், அதற்குச் சாந்தி-தயிருஞ்சோறும் அவாள் தலையைச்சுற்றி மறையோர்களுக்குக் கொடுக்கவும். இதில் யாதொருதுன்பமும் விளையாது அச்சுரமானது உடனே அகன்றுவிடும். எ-று. 649

### சதையத்திற்கு.

பஞ்சவர்ணச்சோறுச்சிப் பக்கஞ்சுற்றி யந்தணர்க்கு
கொஞ்சமிர்தமாகக் கொடும்.

(இ-ள்.) சதையமாகில்:—சதைய நட்சத்திறத்திற் சுரமான துதித்திட, அது 16-நாளையிற்றீரும். அப்படித் தீராதாகில், ஒரு வருடத்திற்குள் மரணமடைவர். அதற்குச் சாந்தி-பஞ்சவர்ணச்

சோறு உச்சி தலைசுற்றிப் பார்ப்பாருக்குக் கொடுக்கவும். அச்சுர மானது உடனே நின்றுவிடும். எ-று. 650

## பூரட்டத்திற்கு.

ஆப்பால்சோர் தலைசுற்றியங்கு பிள்ளையார் கோயில்
தாப்பாய்வை சுரந்தவிறும்.

(இ-ள்) பூரட்டாதியாகில்:—பூரட்டாதி நட்சத்திரத்திற் சுரமான துதித்திட, அது 6-நாளையிற்றீரும். அப்படித்தீராதாகில் 12-நாளை யில் அகலும். அதிலும் அகலாவிடின், அதற்குச்சாந்தி-பசும்பாலும் சோறும் அவாள் தலையைச்சுற்றி பிள்ளையார்கோயில் முன் வைக்க வும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 651

## உத்திரட்டாதிக்கு.

தயிர் சாதந்தலைசுற்றித் தங்கவுடையவர்கோயில்
வெயில்நேரம் வெளிவைத்திடும்.

(இ-ள்.) உத்திரட்டாதியாகில்:—உத்திரட்டாதி நட்சத்திரத்திற் சுரமானதுதித்திட அது 16-நாளையிற்றீரும் அப்படித்தீராதாகில், தயிருஞ்சோறும் அவாள் தலையைச்சுற்றி உடையவர் கோயில் முன் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்றுவிடும். எ-று. 652

## ரேவதிக்கு.

பால்சோறுந் தலைசுற்றிப் பண்சித்ரமண்டபத்தின்
மேல்சேரவதை வைத்திடும்.

(இ-ள்.) ரேவதியாகில்:—ரேவதி நட்சத்திரத்தில் சுரமான துதித்திட, அது 8-நாளையில்விடும். அப்படி விடாதாகில். அதற்குச் சாந்தி-பாலுஞ்சோறும் அவாள் தலையைச்சுற்றி சித்திரங்களெழுதி யுள்ள மண்டபத்தில் வைக்கவும். அச்சுரமானது உடனே நின்று விடும். எ-று. 653

24. சுரமுதிவுடுப் படலம் 27.

முற்றிற்று.

---

## 25 கட்டுப் படலம் 6

### தாளகக் கட்டு.

*நொச்சியிலைச்சாற்றூர முள்ளேற்றிப்புடமிடக்கட்*
*டெச்சமதாய்ப் பலநோய்க்கிழை.*

(இ-ள்) தாளகக் கட்டாவது:—நொச்சியிலையரைத்துச் சார்பிழிந்து, அதிற்றாளகத்தை யரைத்து பில்லைசெய்துலர்த்தி அகலில்வைத்து மேலகல்மூடி சீலைசெய்து 10 - வரட்டியிற் புடமிட்டெடுக்கக் கட்டாகும். அல்லது அச்சாற்றில் இரண்டொருசாமம் சுருக்குக் கொடுத்தாலும் கட்டாய்விடும். அதை எந்தநோய்களுக்கும் இழைத்திடவுதவும். எ-று. 654

### வெடியுப்புக் கட்டு.

*சட்டியினிலெருக்கிலையுட் டங்கவிணங்கனைவைத்து*
*நெட்டி ருபதெருவிலெரி.*

(இ-ள்) வெடியுப்புக் கட்டாவது:—ஒருசட்டியில் எருக்கிலையைப் பரப்பி அதில் வெடியுப்பைவைத்து அதின்மேலும் அவ்விலையைப் பரப்பி மேல்சட்டிமூடி பந்தாகச் சீலைமண்செய்து 20-எருவிற்புடமிட உருகிக்கட்டிடும். அதில் மிளகளவு வெற்றிலையிலுண்ண வயர்வலி, குன்மம், உஷ்ணவாய்வு முதலியாவுந்தீரும். எ-று. 655

### லிங்கக் கட்டு.

*சிவன்வேம் பரைத்திலிங்கத்திட் டப்பிமத்தங்கா*
*யவையேற்றிப் புடமிட்டெடு.*

(இ-ள்.) லிங்கக்கட்டாவது:—சிவனார் வேம்பின் சமூலமரைத்து அதில் லிங்கத்தைவைத்து கவசஞ்செய்து ஊமத்தங்காயினுள்ளடைத்து சீலைமண்செய்து முழப்புடம்போடவும் கட்டாம். அக்கட்டுசாரவித்தைக்கு குருவாகவும், நோய்கட்குரைப்பதாகவும் யோசிக்கவும். எ-று. 656

### பூரக் கட்டு.

*பூரங்காட்டாத்திப்பால் பொங்கவடித்துபிரேக்கி*
*லேரத்தீமுசி முசிச்சாரேற்று.*

(இ-ள்.) பூரக்கட்டாவது:—காட்டாத்திப்பாலை ஒருபலம் பூரத்துக்கு குமுறவடித்துக் கொமட்டியில்வாட்டி 2-சாமமாகியபின் எடுத்து அபிரேக்குத் தகட்டில்வைத்து அடியில் விளக்கேற்றி அத்தீயனல்பட முகட்டில் முசிமுசிச்சார்புகட்டி இரண்டுசாமம் சுருக்கிடவும்கட்டும். எ-று.

## கௌரிக் கட்டு.

கௌரியைநாற்சாமங் கிட்டிப்பேய்ப்பீர்க்கன்சார்
தவறிடாதேற்றுய்ச் சுருக்கு.

(இ-ள்.) கௌரிக்கட்டாவது:—கௌரியை ஓட்டில்வைத்து அடுப்பேற்றித்தீயெரித்து பேய்ப்பீர்க்கன் சாற்றில் 4-சாமஞ் சுருக்கிடவுங் கட்டும். அதை சுரம், ஜன்னிமுதலிய பலநோய்களுக்குந்தேன் முலைப்பாலிலுரைத்திடவும். சகலநோய்களுந்தீரும். எ-று. 658

## பாஷாணக் கட்டு.

கள்ளிமரத்திற் பாஷாணம் மடைத்தோர்மாதஞ்சென்
றுள்ளதெடுத்துப் புடத்தெரி.

(இ-ள்) பாஷாணக் கட்டாவது:—கள்ளி மரத்தைத் துளைத்து அதில் ஒருபலம் பாஷாணத்தைவைத்து அத்தூளால் வாயையடைத்து சாணிபொதிந்து சீலைமண்செய்து, ஒருமாதம்பொருத்து அதை வெட்டித்துண்டுசெய்து அதைக்காட்டு எருமுட்டையில் புடமிட்டெடுக்கக் கட்டாம். அக்கட்டை எவ்விதவேலைகட்கும் உபயோகிக்கவும். நோய்கட்குத்தேனில், முலைப்பாலில் இழைக்கவு முதவும். எ-று.

25-கட்டுப் படலம். 6.

முற்றிற்று.

## 26 புகைப் படலம் 13.

### மந்தார காசத்திற்குப் புகை.

துடிமஞ்சட்பூவதனைச் சுங்கானிட்டுப்புகையும்
பிடியஞ்சிப் போமதனிற்பின்.

(இ-ள்.) மந்தாரகாசத்திற்குப் புகையாவது:—பசுமஞ்சட் பூவுகளையுலர்த்தி அவைகளைத் துண்டுதுண்டாய்க்கத்தரித்து ஒருசுங்கானிற் கொஞ்சம்போட்டு நெருப்பிட்டுப் புகைபிடிக்கவும். மந்தாரகாசமானது ஒரேநாளையில் நின்றுவிடும். 2-3 வேளை அல்லது 2-நாள் பிடிக்கவும். எ-று. 660

### தலை வலிக்குப் புகை.

நாய்ப்பாகற்சார்சீலை நன்றாட்டித்திரித்துலர்த்திச்
சாய்ப்பாக நாசிபுகைதாக்கு.

(இ-ள்.) தலைவலிக்குப் புகையானது:—நாய்ப்பாகல் சாறை சல்லாத்துணியிலேற்றி யேற்றியுலர்த்திப் பெரியதிரியாய்த்திரித்து,அதில் ஒருமுனையைக்கொளுத்தி அப்புகையை இரண்டுமூக்குகளிலும் ஏற்றிவரத் தீராத்தலைநோயுந்தீரும். இதையே 4-5-விசை இவ்வாறு செய்யவும். எ-று. 661

### கோறுக்குக்குப் புகை

பொடுதிலையின்விழுதிரசம் புகவரைத்தாளடையுலர்த்தி
விடுகுழியிற் புகைபடமேலேற்று.

(இ-ள்.) கோறுக்குக்குப் புகையானது:—பொடுதலையரைத்த விழுது தேங்காய்வீதம் பாதரசம் 2-விராகனிடை சேர்த்தரைத்து 6-அடையாய்த்தட்டி யுலர்த்தி 3-நாள் 6-வேளை ஒருகுழியில் மொங்கையைவைத்து புளியம்பராணி நெருப்பிட்டு, அதின்மேற்கலவடை கவிழ்த்துநிறுவாணமாய் ஆளைச்சுற்றி முக்காடிட்டுமூடி உள்நெருப்பிட்டு, ஒருபில்லையைப் பொடித்திட்டு அப்புகைமேல் கொறுக்குப்புண்ணைக் காட்டிக்குந்தி வேதுபிடிக்கத்தீரும். கடும்பத்தியம். எ-று. 662

### பீநசத்துக்குப் புகை.

இலுப்பைப்புண்ணாக்கின் றூளிட்டுகடிதத்தில்திரித்
தலுப்பைப்புண்ணு கேற்றிடும்.

(இ-ள்.) பீநசத்துக்குப் புகையானது:—இலுப்பைப் புண்ணாக் கையிடித்து தூளாக்கி அதைக்கடிதத்திற் றிரியாகத்திரித்து படைநெருப்பிற் பொடியைத்தூவி 2-நாசிகளில் புகையேற்றவும். அப்பீநசமானவை யுடனே, நீங்கிவிடும். இதையே 4-5 விசை செய்யவும். எ-று.

### மூலத்திற்குப் புகை.

கழுதைலத்தியை யுலர்த்திக் கனலேற்றிப்புகை முளைமேற்
றழுவமத்தியில் விழுமூலம்.

(இ-ள்.) மூலத்திற்குப் புகையானது:—கழுதை லத்தியை யுலர்த்தி குழியிற் பெருநெருப்பிட்டு அதில் இதைப்போட்டு முளைமூலத்திற் புகைபடவும், பக்ஷியைப்போற் குந்தவைத்து சுற்றிலுந் துணியால்மூடி வேதுபிடிக்கவும். அம்மூலங்கரைந்து முளையானது கீழே விழுந்துவிடும். எ-று. 664

### பாலக்கிரகங்கட்குப் புகை.

கோட்டம் வசம்பு கடுகுங்கூவிளம் நெய்யிற் பிசரிப்
போட்டங்கியிற் சேய்க்கிடு.

(இ-ள்) பாலகிரகங்கட்குப் புகையானது:—கோட்டம், வசம்பு, கடுகு, வில்வம் இந்நான்கும் பொடித்துத் தூளாக்கி நெய்யிற் பிசறி அதைக் குழந்தைகளின் முகத்திற்கு நேராய் படைநெருப்பிற் இத் தூளைப்போட்டுப் புகைபிடிக்கவும். பாலக்கிரக முதலிய பலவித தோஷங்களும் மாறிவிடும். எ-று. 665

### முளை மூலத்திற்குப் புகை.

ஆனைத்தோலுட்புகையை யாசனத்தினிற்பிடிக்கத்
தானத்தோ டற்றுவிழும்.

(இ-ள்) முளை மூலத்திற்குப் புகையானது:—ஆனைத்தோலைத் துணித்துப் பொடித்து அதை நெய்யிற் பிசறிவைத்துக்கொண்டு ஒரு குழியிற் பெருநெருப்பிட்டு இதைப்போட்டு மேல் கலவடைவைத்து

தீயாக்கி மூளையிற் புகைபட பட்சிபோற் குந்தி துணிமூடி வேது பிடிக்கவும். மூளை அற்று விழுந்துவிடும். எ-று. 666

உள்மூலம் புறமூலத்திற்குப் புகை.

புகைபசுங்கொம்புள்மூலம் புறமூலமேதிகொம்பைப்
புகையெழும்பப் போடவைக்கு.

(இ-ள்) உள்மூலம்புறமூலத்திற்குப்புகையானது:—பசுமாட்டின் கொம்பை உள்மூலத்திற் படப்புகைக்க உள்மூலமும், எருமைமாட்டின் கொம்பைப்புறமூலத்திற் புகைபோட்டு அதிற் படப்புகைக்கப் புறமூலமுந்தீரும். இக்கொம்புகளைத்தூள் செய்து புகைக்கவும். எ-று. 667

இரைப்பு நீங்கப் புகை.

ஊமத்தைவேர்சுங்கானுள் ளிட்டுப்புகைபிடிக்கச்
சாமத்திற்போ மிரைப்பு.

(இ-ள்.) இரைப்பு நீங்கப்புகையானது:—ஊமத்தன்வேரை நிழலுலர்த்தலா யுலர்த்தி அதைநையநறுக்கிச் சுங்கானிற்போட்டுப் புகை பிடித்துவரவும். அது மார்பிலுள்ள கபநுரைகளை யறுத்து இரைப்பிருமலைத் தணிக்கைசெய்யும். சுவல்பபத்தியமாயிருக்கவும். எ-று.

4. முறைக்காச்சலுக்குப் புகை.

பன்றிவிட்டைக்கழுதைவிட்டைப் பன்முதலைமேனியுள்ளி
அன்றிடித்துப் புகைதிரித்திடு.

(இ-ள்.) நாலாமுறைக்காச்சலிற்குப் புகையானது:—பன்றி விட்டையும், கழுதைவிட்டையும், முதலையோடும், குப்பைமேனி யிலையும் வெங்காயமுஞ் சேர்த்துப்பொடித்துத் துணியில் திரியாகத் திரித்து கொளுத்தி மூக்குகளிற்புகைபிடிக்க 4-முறைக்காச்சல் அகன்றுவிடும். இச்சாபத்தியமாயிருக்கவும். எ-று. 669

பிடிப்புக்குப் புகை.

நாகவல்லிச்சாற்றிலிங்கம் நன்றரைத்துத்துணிதடவி
யேகசுங்கானிட்டு புகையேற்று.

(இ-ள்) பிடிப்புக்குப் புகையானது:—சாதிலிங்கம் 4-கழஞ்சு, வெற்றிலைச்சாற்றிலரைத்து அதை 6-பங்காக்கி ஒவ்வொருபங்கையும் கில்களிற்றடவி 3-நாள் அந்திசந்தி சுங்கானிற்போட்டுப் புகைபிடித்து வரவும். கைகால் பிடிப்புமுதல்தீரும். கடும்பத்தியமிருக்க மண்டைச் சூலை, கபாலச்சூலை, குடைச்சல், பரங்கிப்புண், கிரந்தி, பிரமியம் ஸ்திரிரோகம், வாய்வு, சன்னிதீரும். எ-று. 670

## மூக்கிற் புழுசோரிதலுக்குப் புகை.

வெள்ளெருக்கன்பால் துணியில்விட்டுலர்த்திப் பீலிசுற்றி
யுள்ளிருக்க நாசிபுகை யூட்டு.

(இ-ள்) மூக்கிற்புழுசொரிதலுக்குப் புகையானது:—வெள்ளெருக்கன்பாலில் கெட்டித்துணியை நனைத்து உலர்த்தி மயிலிறகைவைத்துச் சுருட்டிதிரியாகத்திரித்து கொளுத்தி அதைமூக்கிற் புகையேற்றவும். உள்ளிருக்கும் புழுக்கள் வெளியில்வந்துசெத்துவிழும். இப்படி 2-3 விசைசெய்யவும். எ-று. 671

## லிங்கப் புத்துக்குப் புகை.

குங்கிலியம்பூரம் பளிங்குச்சாம்பிராணி கெந்தி
யங்கிடித்தே றப்புகையிடு.

(இ-ள்) லிங்கப்புத்துக்குப் புகையானது.—வெள்ளைக் குங்கிலியம், பளிங்குசாம்பிராணி, சுத்திகெந்தி, பூரம், 4-ம் சமனிடையாய்ச் சேர்த்துபொடிசெய்து லிங்கப்புத்தின்மேற் புகையேற்றிவரவும். அப்புத்தானது ஆறிவிடும். பத்தியமாயிருக்கவும். எ-று. 672

26 புகைப் படலம் 13.

முற்றிற்று.

# 27 கலிக்கப் படலம்- 14.

## சகலசுரத்திற்கு கலிக்கம்.

விழலரிசிவேம்புமஞ்சள் வெற்றிலைக்காம்புக்கோரைக்
கிழங்குதிரி கடுகரைத்துமிடு.

(இ-ள்) சகலசுரத்திற்குக் கலிக்கமாவது:—விழலரிசி, வேப்பனிலை மஞ்சள், வெற்றிலைக்காம்பு, கோரைக்கிழங்கு, சுக்கு,மிளகு, திப்பிலி யாவும், அமுரியிலரைத்து செப்புக்கிண்ணியில் மத்தித்து 3-நாளான பின் துவரைவீதம் உருண்டைகள்செய்து நிழலுலர்த்தி முலைப்பாலி லுரைத்துக் கண்களிற்கலிக்கமிட சகல சுரங்களுந்தீரும். எ-று.

## அகத்தீசர் கலிக்கம்.

மிளகுதுவரம்பருப்பு வெற்றிலைச்சார்லவங்கப்பூ
தளரவரைத்துக் கண்ணிற்றூக்கு.

(இ-ள்) அகத்தீசர் கலிக்கமானது:—கம்மார் வெற்றிலைச்சாற்றில் மிளகு, லவங்கப்பூ, துவரம்பருப்பு சேர்த்திழைத்துக்கண்களிற் கலிக் கமிடவும். சுரம், ஜன்னி, சீதளம் யாவுந்தீரும். இதை முலைப்பாலி லும் இழைத்து கலிக்கம் போடலாம். இதற்குப் பூதகலிக்கமென் றும் பெயர். எ-று. 674

## நேத்திர நோய்க்குக் கலிக்கம்.

முலைப்பாலிற் காசுகட்டி முன்கடுக்காய்ச் செப்பிலிழைத்
திலக்காக நேத்திரத்திடு.

(இ-ள்) நேத்திரநோய்க்குக் கலிக்கமானது:—செப்புத்தகட்டின் மேல் முலைப்பாலைவிட்டு கடுக்காய், காசுகட்டி வைத்துரைத்து அல் லது இழைத்து கண்களிற் கலிக்கமிடவும். நேத்திர வியாதி 96-ம் தீரும். இதை 3-5-நாள் மாறுமற் கலிக்கமிட்டு வரவும். எ-று. 675

## ஜன்னிக்குக் கலிக்கம்.

இந்துதிரிகடுவாகை வித்து கோசலத்தரைத்து
முந்திகுளிகையு மொன்றாய்முட்டு.

(இ-ள்.) ஜன்னிக்குக் கலிக்கமானது:—இந்துப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, காட்டுவாகை விளா, சமனுய்ச்சேர்த்துகோமயத்திலரைத்து, ஒரேயுருண்டையாய்க் குளிகைசெய்து அதைக் கோமயத்திலாவது, அல்லது எலுமிச்சன் பழச்சாற்றிலாவது, உரைத்துக் கலிக்கமிட சன்னிதோஷந்தீரும். எ-று. 676

சாலேசுரத்திற்குக் கலிக்கம்.

மிளகுதுழாய் நந்திகளா முப்பூகற்கண்டுமா
தளரசமெண்ணேயில் விட்டுத்தாக்கு.

(இ-ள்) சாலேசுரத்திற்குக் கலிக்கமானது:—வெள்ளைமிளகு, சீனுகற்கண்டுதூள், களாப்பூ, நந்தியாவட்டப்பூ, துளசிப்பூ, புளிமாதளைப்பழரசம், சமனுய்ச்சேர்த்து நல்லெண்ணை விட்டுவிட்டு வெய்யலில் வைத்து அதில் நாகூர்சல்லிக்கா சொன்றுபோட்டு புட்டியிலேற்றி கண்ணிற்றீட்டிவர சுரம், ஜன்னி, தலைநோய்தீரும். கண் பிரகாசமாய்த் தெரியும். எ-று. 677

பார்வைமட்டிற்குக் கலிக்கம்.

கடுக்காயைச் சோற்றவித்துக் கருமுலைப்பாலினிலுரைத்து
முடுக்காய் மூனுட்கொன்றிடு.

(இ-ள்.) பார்வை மட்டிற்குக் கலிக்கமானது :—கடுக்காயைச் சோற்ருேடு வேகவைத்து, அதை முலைப்பாலிலுரைத்து மூன்றுநாட்கொருவிசை கண்களிற் கலிக்கமிட்டு, இரவில் நெல்லிபருப்பும், வெள்ளைமிளகு முலைப்பாலிலரைத்து தலையில் அப்பிவைத்து இராமுழுதுமிருந்து காலையில் இளவெந்நீரிற் றலைமுழுகவும். வெகுநாள் பார்வை மட்டாகிய கண்கள் நன்ருய் வெளிச்சமாய்த் தெரியும். எ-று.

உன்மத்தம் பேய்க்குக் கலிக்கம்.

சாரணைவேர் நெய்யுரைத்ததிற் காடியிற்குழைத்துத்
தோரணையாய்க் கண்ணேற்றிடு.

(இ-ள்) உன்மத்தம்-பேய்க்குக் கலிக்கமானது:—சாரணைவேரை நெய்யிலுரைத்து அதைக் காடியிற்குழைத்து இருகண்களிலுங் கலிக்கமிட்டு வரவும். உன்மத்தம், திரிதோஷம், பூதப்பிரேதபிசாசு பிரமராக்ஷசு முதலியதேகும். இன்னும் சன்னி, பைத்தியம், பிரமையுந் தீரும். எ-று.
679

பார்வையில்லார்க்குக் கலிக்கம்.

சுக்குமேற்பாணியைத் துண்டித்ததைமுலைப்பால்
மிக்கவே யரைத்திடுங்கண்.

(இ-ள்.) பார்வையில்லார்க்குக் கலிக்கமானது:—சுக்கு மேற்பாணியைச்சீவிவிட்டதின்பின் அதை முலைப்பாலிலுரைத்து மூன்றுநாளைக்கொருவிசை கண்களிற்கலிக்கமாய்த் தீட்டிக்கொண்டு வரவும். இதில் பொக்கு, ரிணம், குத்தலியாவுந்தீரும். பார்வையும் நன்றாய்த் தெரியும். கண்ரோகம் காசந்தீரும். எ-று. 680

பல்கிட்டிய சன்னிக்குக் கலிக்கம்.

வேப்பெண்ணெயிற்சோப்பைவிட் டரைத்துச்சிமிளேற்றிச்
காப்பெண்ணெயைக் கண்ணிடும்.

(இ-ள்) பல்கிட்டியசன்னிக்குக் கலிக்கமானது:—வேப்பெண்ணெபலம் $2\frac{1}{2}$-யில், சோப்பு 1-பலத்தை 2-சாமமரைத்து ஓர் செப்புப் பாணையிலேற்றி ஓர் நாகூர்சல்லிக்காசைக் கூடப்போட்டுவைத்து கண்களிற்கலிக்கமிடவும். பற்கிட்டியசன்னி தாள்திறக்கும். சுரம், தலைவலி முதலியவைதீரும். எ-று. 681

நயனரோக குளிகைக் கலிக்கம்.

இந்துதிரிகடுகு கிராம்பிற்காயம் வெற்றிலைச்சாற்
றந்தியரைத்திடு கயராய்த்தரி.

(இ-ள்) நயனரோக குளிகைக்கலிக்கமானது:—இந்துப்பு, சுக்கு மிளகு, திப்பிலி, லவங்கப்பூ, பெருங்காயம், சுத்திசெய்தவாள மியாவும் கம்மார்வெற்றிலைச்சாற்றில் 4-சாமமரைத்து கயர்போலத்திரட்டி நிழலிலுலர்த்திமுலைப்பாலிலுரைத்துக் கலிக்கமிடவும். நேத்திரநோய் களியாவுந்தீரும். எ-று. 682

படலகாசத்துக்குக் கலிக்கம்.

திரிகடுகுசங்குதுத்தஞ்சிலை தாரமதுரம்புங்கன்
எருத்துபூச்சாற் றரைத்தெடு.

(இ-ள்) படலகாசத்துக்குக் கலிக்கமானது:—சுக்கு, மிளகு, திப்பிலி, சங்கு, மயில்துத்தம், அதிமதுரம், மனோசிலை, அரிதாரம், புங்கன்வித்து, பீதரோகணி யாவும் சமனாய்ச்சேர்த்து நந்தியாவட்டப்பூச்

சாற்றிலரைத்து உருண்டைசெய்து தேனிலுரைத்து கண்களிற்கலிக் கமிட்டுவர, கண்ரோகம் 96-ம் படலகாசமும் தீரும். எ-று. 683

## நேத்திரப்பார்வைக்குக் கலிக்கம்.

செம்மரத்தைத் தேனிலிழைத்திட்டுக் கண்ணிற்றீட்டிவர
மும்மரமாய்க் கண்தெரியுமுன்.

(இ-ள்.) நேத்திரப்பார்வைக்குக் கலிக்கமானது:— ஓர் செம்ம ரத்துண்டை தேன்விட்டிழைத்து செப்புடப்பியில் வைத்து நாகூர் சல்லி 1-போட்டு மூடிவைத்து காலை துடைப்பச்சுப்பலிற் றொட்டு இருகண்களிற்றீட்டிவர உடனே கண்கள் நன்ருய்த்தெரியும். தினம் போட்டுவர அதிநன்மையைத்தரும். எ-று. 684

## மப்படைந்த கண்ணுக்குக் கலிக்கம்.

எட்டிவிதைச்சுணைபோக்கி யிட்டுரைத்துமுலைப்பாலில்
தொட்டிடமப்படைந்தகண் துலங்கும்.

(இ-ள்) மப்படைந்த கண்ணுக்குக் கலிக்கமானது;—எட்டிக் கொட்டையின் சுணையைச் சுரண்டிவிட்டு அதைமுலைப்பாலி லுரைத் துக் கண்களிற்றீட்டிவரவும், மப்படைந்தகண் சாலேசுரமான தகன்று விடும். இப்படி அண்ணுடம் தீட்டிவரவும், கண்நன்ருய்த்தெரியும். எ-று.

## கண்ணீர் முட்டலுக்குக் கலிக்கம்.

சங்கனிலைச்சார்காசிற் றட்டைகிண்ணியிலிழைத்து
அங்கதைக்கண் ணேற்றியேவா.

(இ-ள்.) கண்ணீர் முட்டலுக்கு கலிக்கமானது:—சங்கனிலையை இடித்துச்சார்பிழிந்து அதைத்தட்டைக்கிண்ணியைக்கவிழ்த்து அதின் மேல்விட்டு நாகூர்சல்லிக்கா சாலிழைக்கப் பச்சைநிறமா யிருக்கும். அதின்பேரில் பசுவெண்ணைப்போட்டு உள்ளங்கையால் அரக்கித்தேய்த்து சலம்விட்டலம்பி இப்படி 7-திறஞ்செய்து அதைவழித்து கண் களிற்றீட்டிவர சகலநோயுந்தீரும். எ-று. 686

27. கலிக்கப் படலம் 14.

முற்றிற்று.

## 28 மூலிகைப் படலம் 29

### தினம் வரும் சுரந்தீர.

உத்தாமணியிலையி லொன்பதுமிளகொன்ப
தொத்தா தளியரைத்தே.

(இ-ள்) தினம்வரும் சுரந்தீர மூலிகையானது:—தினசாரி தப்பாது சுரமானதுவந்திடின், அதற்கு உத்தாமணியிலை 9-மிளகு 9-2ம் சேர்த்தரைத்து காலையிற்கொடுத்து, உச்சியிலும், மாலைநேரத்திலும் இவ்வாறே வெவ்வேறரைத்துக் கொடுத்துவரவும். இரண்டொரு நாளையில் அச்சுரம் நின்றுவிடும். எ-று. 687

### 2-முறை மாறற் சுரந்தீர.

மிளகாறுபூண்டுதிரி வுத்தாமணிக்கழற்சி
வளமாயரைத்து மாட்டு.

(இ-ள்.) 2-முறை மாறற்சுரந்தீர மூலிகையானது:—ஒருநாள் விட்டு மறுநாள்வரும் மாறற்சுரத்திற்கு:—மிளகு 6-வெள்ளைப்பூண்டு 3-உத்தாமணியிலை 1-கழற்சியளவு இம்மூன்றுஞ் சேர்த்தரைத்து சுரம்வரும் நாளையில்முன்போல 3-வேளையும் தனித்தனியாய் அரைத்துக்கொடுக்கவும், 2-முறைமாறற் சுரந்தீரும். எ-று. 688

### 3-முறை மாறற் சுரந்தீர.

நவமிளகுநாற்பூண்டு நல்லுத்தாமணிக்கழற்சி
யவையரையுமேற் கொண்டிட.

(இ-ள்) 3-முறைமாறற் சுரந்தீர மூலிகையானது:—3 - நாளைக்கோர்நாள்வரும் மாறற்சுரத்திற்கு-மிளகு, 9, வெள்ளைப்பூண்டு 4,உத்தாமணியிலை 1-கழற்சியளவு இம்மூன்றுஞ்சேர்த்தரைத்து சுரம்வரும் நாளையில் முன்போல 3-வேளையும் தனித்தனியாயரைத்துக் கொடுக்கவும். 3-முறைமாறற் சுரந்தீரும். எ-று. 689

### 4-முரை மாறற் சுரந்தீர.

மிளகீரார்பூண்டதுவார் முன்போலவ்விலையரைத்து
அளவாய்மூன்றி லிரண்டளி.

(இ-ள்.) 4-முறை மாறற்சுரந்தீர மூலிகையானது:—4-நாளைக் கோர்விசைவரும் மாறற்சுரத்திற்குமிளகு -12, வெள்ளைப் பூண்டு 6-உத்தாமணியிலை 1-கழற்சியளவு இம்மூன்றுஞ்சேர்த்தரைத்து 3-பங்காக்கி 1-பங்கை அவாள்தலையைச்சுற்றி யெறிந்துவிட்டு மற்ற 2-பங்கை உட்கொடுக்க 4- முறைமாறற் சுரம்தீரும். எ-று. 690

### 4-வித மாறற் சுரந்தீர.

முன்னம்நசிமசியெனவு முத்தாமணிமிளகு
தன்னையரைத்தளி யெவர்க்கும்

(இ-ள்) 4-விதமாறற்சுரந்தீர மூலிகையானது:—எவ்வித மாறற்சுரத்திற்கும் உத்தாமணியிலையுடன் மிளகு பூண்டைச் சேர்த்து (நசி மசி) என்று 108-உருச்செபித்து முன்போலரைத்து 3-வேளையு முட்கொடுத்துவரவும். இந்நான்குவகை சுரங்களுந் தீரும். எ-று. 691

### சுரத்திற்குக் கையிற் கட்ட.

மிளகுநாற்பூண்டுதிரி வெள்ளறுகு நவமரைத்து
தளரவேகைமேற் சுட்டும்.

(இ-ள்.) சுரத்திற்குக் கையிற்கட்டமூலிகையானது:—சுரம்வருகையில் ஆணுக்கு வலது பெண்ணுக்கிடதுகை மணிக்கட்டில் அரை துட்டை வெள்ளை அல்லது மஞ்சள்துணியில் வைத்துமுடிந்து 4-ம் நாள் அவிழத்துவிட்டபின் மிளகு-4, பூண்டு 3, வெள்ளறுகு 9-சேர்த்து நசுக்கி கைநரம்பின்மேல்வைத்து தம்படியைப்பதியவழுத்திக்கட்டிவைக்கவும். சுரங்களியாவுந்தீரும். எ-று. 692

### 2-முறைச் சுரத்திற்குக் கையிற் கட்ட.

வேளையிலைமிளகும் வெண்பூண்டதுவரைத்தந்
நாளையிலதைக் கட்டிடும்.

(இ-ள்) 2-முறைச்சுரத்திற்குக் கையிற்கட்ட மூலிகையானது:-வேளையிலையும், மிளகும், வெள்ளைப் பூண்டுஞ் சேர்த்து நசுக்கி முன்போல வலதுகையிற் கட்டிவைக்கவும். இவ்விரண்டாமுறைச் சுரமானது நீங்கிவிடும். இவைகளுக்குப் பத்தியமென்ப தொன்றுமில்லை. எ-று. 693

### 3-முறைச் சுரத்திற்குக் கையிற் கட்ட.

கோவையிலைவேண்டுகிலிற் குண்முடிந்து தூபமிட்டுத்
தேவையுடன் கைகட்டித்தீர்.

(இ-ள் ) 3-முறைச்சுரத்திற்குக் கையிற்கட்ட மூலிகையானது:— கோவையிலையை வெள்ளைத்துணியில் முடிந்து தூபதீபங் காட்டி ஆணுக்குவலது, பெண்ணுக்கிடதுகையிற் கட்டிவைக்க இம்மூன்று முறைச்சுரமானது இனிவராமல் நீங்கிவிடும். எ-று. 694

### 4-முறைச் சுரத்திற்குக் கையிற் கட்ட.

நாயரினெருஞ்சிற்கு நற்காப்பினைக்கட்டிப்
பாயவதுவுங்குளிசம் பண்.

(இ-ள்) 4-முறைச்சுரத்திற்குக் கையிற்கட்டமூலிகையானது:— நாயரில் சூரியோதயத்தில் நெருஞ்சிக்குக் காப்புகட்டி தூபதீபங்காட்டிசூரியநமஸ்காரஞ்செய்து அவ்வேரறுமற்பிடிங்கிக்குளிசமாடி அவாள் சிகையிற்கட்டிவைத்து அவ்விலையுடன் பூண்டு, மிளகு, சேர்த்தரைத்து நசிமசி என்று 1008 ஓதி உள்ளுக்கேற்றவும். அந்நான்கா முறைச்சுரம் நீங்கிவிடும் எ-று. 695

### அரையாப்பு வற்ற.

ஊமத்தைச்செடிரவி யுதிக்குமுன் பிடுங்கிவெயில்
நாமத்தைப்போட நலிபோம்.

(இ-ள்.) அரையாப்புக்கட்டிவற்ற மூலிகையானது:— ஆதிவாரம் சூரியோதயத்தில் ஊமத்தைச்செடியை அரையாப்புக் கண்டவர் பேரைச்சொல்லி அவர்நோய் அற்றுப்போகவென்று சொல்லி அச்செடியைவேரறுமற் பிடுங்கி வெயிலிற்போட, அது வாடவாட அவ்வரையாப்பு வாடிவற்றிவிடும். இதை அந்நோய்காணும் 3-நாளைக்குள்செய்யப்பலிதமாகும். எ-று. 696

### சுவாசகாசத்திற்கு.

பொடுதலைக்காயரைத்துப் பொங்கியசோற்றைநான்குண்
விடுதலையாம் பத்துநாளில்.

(இ-ள்.) சுவாசகாசத்திற்கு மூலிகையானது:—காலையிற் பொடுதலைக்காய் 1-சிரங்கையறுத்து அதைத்தண்ணீரிலரைத்து விளாங்காய

ளவு விழுதை ஆழாக்கரிசிபொங்கி அதிற்போட்டுப் பிசைந்து தின்ற பின், 10-மணிக்குமேல் கவுச்சுநீக்கி மற்றபதார்த்தத்துடன் போஜன மருந்தவும், இப்படி 20-நாள் தின்றுவர 10-நாளையில் சுவாசகாசம் அற்றுவிடும். எ-று. 697

சன்னிவிகார குணத்திற்கு.

மூத்துளியேதும்பைச்சார் முன்னிரண்டுமூக்கில்விட
அத்துளியிற் சன்னியறும்.

(இ-ள்.) சன்னிவிகாரகுணத்திற்குமூலிகையானது:—தும்பைச் சாரைவடிகட்டி அதில் 3-துளி 2-மூக்குகளிலும்விட, உடனே சன்னி யாற்சனித்த விகாரகுணங்கள் யாவுந்தீரும். ஈதன்றி எருக்கன் சாற்றி லும் இவ்வாறுசெய்ய சன்னியானது சுகுணமாய்விடும். எ-று. 698

சுகசன்னி தீர.

மிளகருணைவேர்ப்பட்டை மிகரூபாயிடையரைத்து
இளகமுலைப்பாலிற் சேர்த்திடு.

(இ-ள்.) சுகசன்னிதீர மூலிகையானது:—மிளகருணை வேர்பட் டையை 1-ரூபாயிடைக்குத் தட்டியெடுத்து அரைத்து அதனை முலைப் பாலிற்கலக்கி யுண்ணச்செய்யவும், சுகசன்னி, முகசன்னி, சீதளமுத லியதுதீரும். பத்தியமாய் வைக்கவும். எ-று. 699

சன்னி தோஷந்தீர.

பூப்பட்டைக் களிப்பாக்கும் போட்டரைத்துமுவ்வுருண்டை
கூப்பிட்டு வெந்நீரிற்கொடு,

(இ-ள்) சன்னிதோஷந்தீர மூலிகையானது:—முருங்கைப்பட் டையும், களிப்பாக்கும் 2-ம்சேர்த்தரைத்து 3-உருண்டைகள் செய்து உள்ளுக்கேற்றிவரவும். இதில் ஒருவேளை தன்நினைவுதப்பித்தடுமாறில் அதை வெந்நீரிற்கரைத்தேற்றி வரவும். சன்னிதோஷந் தீரும். எ-று.

சுளுக்கு நோய்தீர.

துத்தியிலையைக்கொஞ்சஞ் சோட்டுவிளக்கெண்ணைவிட்டு
எத்திகசக்கியும் பூசிடு.

(இ-ள்.) சுளுக்குநோய்தீர மூலிகையாவது:—துத்தி யிலையிற் கொஞ்சம் பரித்து அதை உள்ளங்கையில்வைத்து அதிற் கொஞ்சம்

விளக்கெண்ணெவிட்டு அறக்கிக்கசக்கி அச்சாற்றை சுளுக்கேறிய விடத்தில் பூசிவரவும். சுளுக்குமுதலிய நரம்புபிசகினதுந்தீரும். எ-று.

சூலை முடக்குநோய் தீர.

எருக்கன்வேர் நறுக்கிலிங்க மிட்டுபிசறிக்காயச்
சுருக்கிற் சுங்கானிட்டுபிடி.

(இ-ள்.) சூலை முடக்குநோய்தீற மூலிகையானது:—எருக்கன் வேரை நையநறுக்கி அதில் லிங்கத்தைப் பொடித்துத் தூவிப் பிசரியுலர்த்தி சுங்கானிற் கொஞ்சம்போட்டுப் புகைபிடிக்கவும். புண், புரை, வயர்கட்டி, பிடிப்பு, முடக்கு, சூலை, குத்தல், குடைச்சல், வலிகள் நீங்கும். புழுவுதிரும். பலநோய்தீரும். 702

மரித்த பிள்ளை விழ.

சீந்திற்கொடிசுக்குச் சென்றரைத்துச் செத்தபிள்ளைக்
கேந்திழையுண்ணப் பெறுவளே.

(இ-ள்) மரித்தபிள்ளைவிழ மூலிகையானது:—சீந்திற் கொடியும், சுக்கும் ஒன்றுய்ச்சேர்த்தரைத்து பிரசவிக்கப்போகிற பெண்பிள்ளையானவளுண்ணவும். உடனே வயற்றிற்செத்த அல்லதுமரித்தபிள்ளையானது கீழேவிழும். யாதொரு துன்பமும்நேராது எ-று. 703

பெண்கள் பிரவிடையாக.

மேனிச்சார் நல்லெண்ணெவிட்டு கலந்துமூணுள்
தானிச்சா பத்தியத்திற்று.

(இ-ள்.) பெண்கள் பிரவிடையாக மூலிகையானது:—குப்பை மேனிச்சாற்றில் கொஞ்சம் நல்லெண்ணெவிட்டுக் கலந்து 3-நாள் 6-வேளை உள்ளுக்கேற்றிவரவும். திரளாதபெண்திரளுவள். யாதர்களிவ்வாருண்ண சூதகவாய்வினுல் முழுக்கில்லாதவர்கள் முழுகுவர். எ-று.

சேட்டுமக் கபமற.

குட்டிபலாக்குச்சியினைக் குழித்தைலமிறக்கினா
வொட்டிடச் சுப்பலினறிடு.

(இ-ள்.) சேட்டுமக்கபமற மூலிகையானது.—குட்டிப்பலா அதாவது பிராயன்குச்சிவிறகைக் குழித்தைலமிறக்கி அதை ஒருசுப்பலிற்

ரெட்டெடுத்து நாவினிற் றடவிவிடவும் ஒருநிமிஷத்தில் சேட்டுமக பமானது அடங்கிநின்றுவிடும். பலநோய்களுந்தீரும். எ-று. 705

சோத்தைப் பல்லுக்கு.

பரிஞ்சிச்சுருட்டதின் சாம்பற்றேயலதுகரி
நெருஞ்சிக் கருக்கியுந்தேய்.

(இ-ள்) சொத்தைப்பல்லிற்கு மூலிகையானது:—புகையிலையின் சுருட்டுச்சாம்பலை சொத்தையாகிய பற்களின்மேல் வைத்து வரவும் தீரும், அல்லது வேறு ஆனைநெருஞ்சியை யுலர்த்தி கொளுத்திக்கரு க்கியதை அப்பற்களிற்றேய்த்துப் பற்றுலக்கிவரவும். சொத்தைப்பல் லின் புழுவுகள்வெளிப்பட்டு நசிய வாதையடங்கிடும். அதிற் பல்லாட் டமும் பல்லிறுகி அசையாதிருக்கும். எ-று. 706

தலை நோயிற்கு.

அட்டியறப்பிரண்டை யங்கனலில் வாட்டிரசம்
நெட்டியிரு செவியிற்பிழி.

(இ-ள்.) தலைநோய்க்கு மூலிகையானது:—பிரண்டையை அன லில் வாட்டித்தலைநோயாளிகளின் இரண்டு காதுகளிலும் 5-6 சொட்டு கள் பிழிந்து வரவும். தலைநோய், தலையிடி. தலைமண்டைச்சூலை, சன்னி, சலுப்பு, சீதளம், சைத்தியமியாவுந் தீரும். எ-று. 707

நரம்பு குத்தலுக்கு.

கையான்சார் நசியமிடக் கண்டந்த நோயிடத்தில்
மெய்யாய்த் தேய்த்துப் பூசுமேல்.

(இ-ள்.) நரம்புகுத்தலுக்கு மூலிகையானது :—கரிசலாங்கண் ணிச்சாற்றை இரண்டு நாசிகளிலும் நசியமிடவும். அல்லது நோயுள்ள விடங்களில் 2-வேளைகளிலும் தேய்க்கவும். அல்லது மேற்பூசிவர வும். நரம்பின்னரிவு, குத்தல், நோக்காடு முதலியவை தீரும். எ-று.

நாகத்தாளி முள் கக்க.

மணக்கத்தை யமுதுடனே வரமுள்ளிநுமுட்டி கலந்
திணக்கத்துண் வெளிவந்திடும்.

(இ-ள்.) நாகத்தாளிமுள் கக்க மூலிகையானது:—மணக்கத்தை யரிசியும், வரமுள்ளியிலையும், வெவ்வேறுய் நுமுட்டி ஒன்றுய்க்கலந்து

உட்கொண்டு வரவும். கால்கை தேகங்களிலேறிய நாகத்தாளி முள்ளானது தானே வெளியிற் கக்கி வந்திடும். இவ்வாறு 3-விசை யுண்டு வரவும். எ-று. 709

கருமேகப் படைக்கு.

உப்புமீருள்ளி சரக்கொன்றையிலை மூன்றரைத்து
செப்பிமேற் பூசிக்குளிக்கச்செய்.

(இ-ள்.) கருமேகப்படைக்கு மூலிகையானது:—செழுமலர்க் கொன்றை அதாவது சிவந்த மலர்களையும். அகத்தியிலையைப்போலும், முருங்கைக்காயைப்போன்றது செஞ்சரக்கொன்றை அவ்விலையோடு கொஞ்சம் உப்பும் வெங்காயமுஞ் சேர்த்தரைத்து காலையில் உடம் பெங்கும்பூசி, மாலையிற் குளித்துவரவும். இவ்வாறு 3-நாட்செய்ய கருமேகப்படை சொரியகலும். எ-று. 710

சோகை காமாலைக்கு.

புங்கனிலைச்சாருடனே புள்ளிவெள்ளாட்டுப்பாலும்
அங்குகலந் தேற்றுமூனாள்.

(இ-ள்.) சோகை காமாலைக்கு மூலிகையானது:—புங்கனிலைச்சார் ஆழாக்கு, வெள்ளாட்டுப்பால் ஆழாக்கு இரண்டும் ஒன்றாய்க்கலந்து 3-அல்லது 5-நாள் காலைமாலை உட்கொண்டுவரவும். சோகை, காமாலை, பாண்டு, விஷப்பாண்டு முதலியது தீரும். கடும்பத்தியமிருக்கவும். எ-று. 711

தந்திமேகத்துக்கு.

துத்தியிலை யமுதரைத்துச்சுட்டு வேர்பட்டையெண்ணை
மத்தி நனையவுமருந்து.

(இ-ள்.) தந்திமேகத்துக்கு மூலிகையானது:—துத்தியிலையும், அரிசியும் ஒன்றாய்க் கலந்து அரைத்து அதை ஓட்டடையாகச்சுட்டு நல்லெண்ணையிற்றோய்த்துத் தோய்த்துத் தின்னவும். இப்படி 3-அல்லது 5-நாள் காலைமாலை உட்கொள்ளவும். தந்திமேகம், மதுமேகமுதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 712

தலைச்சுண்டு மாற.

எருக்குமொக்குச் சிறுநீரிலிட்டு மூனாள்ரவிவைத்துப்
பொருக்கமொட்டந் தலைபூசப்போம்.

(இ-ள்) தலைச்சுண்டுமாற மூலிகையானது:—எருக்கன்மொக்கு கொஞ்சம் பரித்துவந்து அதைச் சிறுநீரில் 3-நாள் ஊறவைத்து ரவி யிற் காய்ந்தபின் 4-ம் நாளெடுத்து நன்ருய்ப்பிசைந்து தலையிற் பூசி ஊறியபின் 3-ம் சாமத்தில் 3-நாள் தலைமுழுகிவரவும். தலையிற் சுண் டுதிர்ந்துவிடும். எ-று. 713

பகுமூத்திர மட்டுப்பட.

பூண்டாரைக்கீரை மிளகுங்கூட்டிப் பிரட்டியுண்ண
நீண்டாரை நீரைவரட்டும்.

(இ-ள்.) பகுமூத்திர மட்டுபட மூலிகையானது:—ஆரைக்கீரை யைப் பரித்துவந்து அதில் வெள்ளைப்பூண்டும், மிளகுஞ்சேர்த்துப் பிரட்டி 10-நாளிவ்வார் வெறும்வாயிலுந்தின்று, சோற்றிலு முண்டு வரவும். பகுமூத்திரம், நீரிழிவு, மதுமேகம், தந்திமேகமுதல் தீரும். எ-று. 714

பக்குப் பீநசத்துக்கு.

புகையிலையும் பேய்ப்பீர்க்கும் பொடித்துப் பிறட்டி நசியமிட
பகையிலைப்பக்காய் பற்றிடும்.

(இ-ள்.) பக்குப் பீநசத்துக்கு மூலிகையானது:—பேய்ப்பீர்க் கன் சமூலமும், புகையிலையும் வகைக்கு 1-பலமாய்ச் சேர்த்து உலர்த் திப் பிறட்டிச் சூரணஞ்செய்து அதை 2-நாசிகளிலும் நசியமேற்றிவர பக்குப்பீநசம், மண்டைக்குடைச்சல்முதல் தீரும். எ-று. 715

28-மூலிகைப் படலம். 29.

முற்றிற்று.

## 29. நசியப் படலம். 16.

சர்வ தோஷத்திற்கு நசியம்.

துய்யவிஷ்ணுகாந்தி நொச்சி சொட்டுமூத்திரத்துரைத்து
எய்யவுள் நசியமிடு.

(இ-ள்) சர்வதோஷத்திற்கு நசியமாவது:—வெள்ளை விஷ்ணு காந்தி வேறும், நொச்சிலிவேறும் சிறுநீரிலுரைத்து இரண்டு நாசிகளிலும் நசியமிடவும். சர்வ தோஷங்களும், பல நோய்களும் நீங்கும் இவ்வாறு 4-5-ஆவர்த்தி நசியமிட வெகு நன்மையாம். எ-று.

ஒருதலைவலிக்கு நசியம்.

சவுரிபழங்காயஞ் சமன்றனி முலைப்பாலினிலாட்டி
சுவரிடவும் நாசியிலேற்று.

(இ-ள்.) ஒருதலைவலிக்கு நசியமாவது :—சவுரிப்பழச்சாறும், பெருங்காயமும் சமனுப்சேர்த்து முலைப்பாலில் அரைத்து ஒரேகுளிகையாய்ச்செய்து முலைப்பாலிலுரைத்து இரண்டு நாசிகளிலும் நசியமேற்றிடவும். ஒருதலைவலியானது அகன்றுவிடும். எ-று. 717

பித்தவெறிக்கு நசியம்.

பன்றியினுதிரமதினிற் பழுபாகற்சார்சேர்த்
தன்றிடு மிருநாசியில்.

(இ-ள்.) பித்தவெறிக்கு நசியமாவது:—பன்றியினுதிரத்தில், பழுபாகல் சாரைக்கலந்து மத்தித்து அதை இரண்டுநாசிகளிலும்நசியமேற்றிவரவும். பித்தம், பித்தமயக்கம், மூர்ச்சை, வெறி, உன்மத்த முதலியவைதீரும். இதையே இரண்டொருவிசை செய்யவும். எ-று.

பீநசம் நாசிப் புண்ணிற்கு நசியம்.

முயல்கட்டமுள்ளங்கை முன்னுமுட்டிச்சூரணஞ்செய்
துயர்வட்ட முண்ணசியமூட்டு.

(இ-ள்.) பீநசம் நாசிப்புண்ணுக்கு நசியமாவது:—முயல்கட்டம் அதாவதுமுயலின்புக்கையை உள்ளங் கையில் வைத்தரக்கிநுமுட்டித் தெள்ளியசூரணத்தை இரண்டு நாசிகளிலும் நசியமேற்றிடவும். பீந

சம், மூக்குகளிற் புண்கள் முதலியவை அகலும். இவ்வாறு 3-விசை செய்யவும். எ-று. 719

## சிரரோகத்திற்கு நசியம்.

செவ்வியம்ரேணுக மிந்துப்பிற்சுக்கு விளங்கங்கையான்
அவ்விலைச் சாற்ருட்டியிடு.

(இ-ள்.) சிரரோகத்திற்குநசியமாவது;—செவ்வியம், ரேணுகம், இந்துப்பு, வாய்விளங்கம், சுக்கு இவைகளைப் பொடித்து வகைக்கு 3-விராகனிடையாய்ச் சேர்த்து கரிசலாங்கண்ணிச்சார் ஒருபடி விட்டரைத்து அதில் ஒருபடி பசுநெய்விட்டுக்கலக்கி அதன்பின்னும் கரிசலாங்கண்ணிச்சார் ஒருபடிவிட்டு அரைத்து நாசிகளில் நசியமேற்றிட தலைவலி நிற்கும். எ-று. 720

## ஆயீக சுரத்திற்கு நசியம்.

எண்ணை தலைதேய்த்துதிப் பிலிக்காக்கைப் பொன்னரைத்து
பண்ணுநசியஞ் சுரநோய்படும்.

(இ-ள்.) ஆயீகசுரத்திற்கு நசியமாவது:—நல்லெண்ணையைத் தலையிற்றேய்த்து அவ்வெண்ணையை நன்ருய்வழித்துஅதில்காக்கைப் பொன்ரேக்கும், திப்பிலித்தூளுஞ் சேர்த்தரைத்து அதைநாசியில்நசியம் பண்ணவும். ஆயீகசுரமாகிய சீதச்சுரமானது அகன்றுவிடும். எ-று. 721

## சன்னி வீக்கத்துக்கு நசியம்.

வெள்ளைவெங்காயமுலைப்பால் விட்டரைத்துச்சார்நசியத்
துள்ளசன்னி வீக்கமேகும்.

(இ-ள்) சன்னிவீக்கத்துக்கு நசியமாவது:—வெள்ளைவெங்காயத்தைத்துவைத்து அதில்முலைப்பால்விட்டுஅவ்விரசத்தை இரண்டுநாசிகளிலும் நசியமேற்றிடவும சன்னிமேல் வீக்கமானதுதீரும். இதையே 2-3-4 விசை நசியமேற்றிவரவும். எ-று. 722

## சன்னிக்கு சோடசீத நசியம்.

நாபிமிளகெருமுட்டை நற்சாம்பற்றாளாக்கித்
தாபி நசியமிடவுஞ் சன்னும்.

(இ-ள்.) சன்னிக்கு சோடசீத நசியமாவது:—நாபி 1, மிளகு 3, காட்டெருமுட்டைச்சாம்பல் 16, இதை ஒருநாள் முழுதும் இடித்து வஸ்திரகாயஞ்செய்து இரண்டு நாசிகளிலும் நசியமேற்றிவரவும் சன்னி, விஷதோஷம், சுரமுதலியவை தீரும். எ-று. 723

உன்மத்தம் பேய் பிசாசிற்கு நசியம்.

தேவதாரிப்பழத்தினைக் கசக்கிச்சார்நசியம்
பாவநாசியி லேற்றிடும்.

(இ-ள்.) உன்மத்தம் பேய்பிசாசிற்கு நசியமாவது:—தேவதாரிப் பழத்தை நசுக்கிப்பிழிந்த சாற்றை 2-3-4, விசை இரண்டுநாசிகளிலும் நசியமேற்றிவரவும் உன்மத்தம், பூதப்பிரேதப் பிசாசுகள் அகன்று விடும். இதோடு பித்தம், பினத்தல், மயக்கம், மூர்ச்சைகளும் நீங்கும் எ-று. 724

அர்க்கேசுர நசியம்.

எருமுட்டைச்சாம்பலிலே யெருக்கன்பால்விடநாலிற்
கொருதுட்டே மிளகரைத்தூட்டு.

(இ-ள்) அர்க்கேசுர நசியமாவது:—காட்டெருமுட்டைச் சாம்பலில் எருக்கன்பால்விட்டு உலர்த்தி மறுபடியும் இவ்வாறே 4-5, திறமேற்றியுலர்த்தி நாலிற்கொன்றாக மிளகைத்தூளாக்கிப்போட்டு அரைத்து ஒருபணவிடைத்தூளை மூங்கிற்குழைகளில் வைத்து 2-நாசிகளிலும் ஊதி நசியமேற்றவும். திரிதோஷம், சன்னி, விஷசுரம், தலைவலி முதல் தீரும். எ-று. 725

இலிங்கேசுர நசியம்.

அத்திப்பழுப்புச்சாற்றங்குதிரிகடுகுகிந்துப்
பெத்திப்பொடித்திரு நாசிலேற்று.

(இள்.) இலிங்கேசுர நசியமாவது:—அத்திப்பழுப்புச் சாற்றில் சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பொடிசெய்துசேர்த்து அரைத்து வஸ்திரகாயஞ்செய்து இரண்டுநாசிகளிலும் நசியமேற்றிடவும் சன்னி, திரிதோஷம், தலைவலி, முதலியதியாவுந்திரும். எ-று. 726

### பூதேசுர நசியம்.

வேலிப்பருத்திப்பால்விட்டு திப்பிலிப்பொடியை
மேலிப்படி நசியமேற்று.

(இ-ள்.) பூதேசுர நசியமாவது:—வேலிப் பருத்தி யென்னும் உத்தாமணிப்பாலில் திப்பிலிப் பொடியைத்தூவி யரைத்து வஸ்திர காயஞ்செய்து இரண்டுநாசிகளிலும் நசியமேற்றிவரவும். சன்னி, விஷசுரம், திரிதோஷம், தலைவலி, பூதப்பிரேதப் பிசாசுமுதலியதும் நீங்கி விடும். எ-று. 727

### காளிகேசுர நசியம்.

பாகயிலைச்சார்வெள்ளைப் பற்பூண்டிந்துப்பரைத்து
யேகவிரண்டு நாசிலேற்று.

(இ-ள்.) காளிகேசுர நசியமாவது:—பாகயிலையின்சாற்றில் வெள்ளைப்பூண்டு பற்களும் இந்துப்புஞ்சேர்த்தரைத்து அதை இரண்டுநாசிகளிலும் நசியமேற்றிவரவும் சன்னி, விஷசுரம், தலைவலி, சீதளம்,உஷ்ணமுதலியது தீரும். எ-று. 728

### நோய் மீறதீற நசியம்.

ஏலக்காய்பொடி நசியமிட்டோர் சிட்டிகை தேனைப்
பாலிற்றுன்றர வதிகம்பார்.

(இ-ள்) நோய் மீறதீற நசியமாவது :—ஏலக்காயைப் பொடியாக்கி வஸ்திரகாயஞ் செய்து அதை நாசிகளில் நசியமிட்டு 1-சிட்டிகை தேனிலிழைத்து உள்ளுக்கேற்றவும். தீர்ந்த நோய் மீறி முன்போல அதிகப்படும். வாதையும் அதிகப்படும். எ-று. 729

### இதற்கு முறிப்பு.

மாற்றுய்க் கத்திரிப்பிஞ்சி மால் தும்பப்பூவரைத்து
போற்றுலப்புன்னையின் காயிடை.

(இ-ள்.) இதற்கு முறிப்பாவது :—முன் தீர்ந்த நோயானது அதிகப்படுவதில் அது மறுபடியும் அடங்குவதற்கு முறிப்பு—இளங் கத்திரிப்பிஞ்சும், தும்பைப்பூவுஞ் சேர்த்தரைத்து புன்னைக்காயளவு 3-வேளையுட் கொடுக்க முன் அதிகரித்த பலநோய்களும் அக்கணம் அகன்று விடும். எ-று. 730

### கைவிட்ட சன்னிக்கு நசியம்.

நாபிமிளகுச்சூட னங்கை மூலைப்பாலரைத்துத்
தாபிநசியம் நாசிற்குக்கு.

(இ-ள்) கைவிட்டசன்னிக்கு நசியமாவது:—பச்சை நாபியும், கற்பூரமும், மிளகும் சமன் சேர்த்தரைத்து மூலைப்பாலிலிழைத்து இரு நாசிகளில் நசிய மேற்றிடவும் கைவிட்ட சன்னி, எழுநாயர், பகு நாயர்,முதலிய பலநோய்கள் அகன்றிடும் உடனே, எழுந்திருந்துலாவு வர். எ-று. 731

29-நசியப் படலம். 16.

முற்றிற்று.

---

## 30 கடிவிஷப் படலம் 16

---

### பலவிஷக் கடிகட்கு.

வெனிகரெனுங்காடி விஷக்கடி வாய்விட்டுண்ண
இனியகடி விஷமற்றிடும்.

(இ-ள்) பலவிஷக்கடிகட்கு முறிப்பு:—வெனிகரென்னும் சீமைக் காடியிற் கொஞ்சம் தேள் கொட்டியவர்க்கும், பாம்பு கடித்தவர்க்கும் 1-துளி கடிவாயில் விட்டு, கொஞ்சம் தண்ணீர் விட்டுக் குடிக்கவும் எவ்வித விஷங்களுமாறி கக்கிவிடும். தேளுக்கு மாத்திரம் குடிக்க வேண்டியதில்லை எ-று. 732

### காணுக்கடிகட்கு.

எள்ளெண்ணெக் குட்டிதக்காளி சாறுஞ்சாரித்து
வெள்ளிரவி வைத்தருந்தும்.

(இ-ள்) காணுக்கடிகட்கு முறிப்பு:—நல்லெண்ணெக்குச் சரியாய் குட்டித்தக்காளிச்சார்பிழிந்து அதில்விட்டுக் கலக்கி 3-நாள் சூரியப் புடமாய் வைத்து அதில் ஒரு சிறுகரண்டி வீதம் 3-நாட்காலையிற் குடித்துக் கடும்பத்தியமாயிருக்க, தனக்குத் தெரியாமற் கடித்த எவ் வித விஷக்கடிகளுமாறும். எ-று. 733

### தேள்கடி விஷத்துக்கு.

சாரத்திற் சுன்னத்தைச் சந்தித்திட நீரந்
நேரத்திற் கொட்டல் மேலிடு.

(இ-ள்.) தேள்கடி விஷத்துக்கு முறிப்பு:—நவாச்சாரத்திற் கொஞ்சம் சுண்ணும்பை வைத்திருக்க அது சற்று நேரத்தில் தண்ணீராய்க் கரைந்துவிடும். அதை தேள்கொட்டிய வாயின்மேல் வைக்க குளிர்ந்துவிடும். இதன்றி முருங்கையிலையும் உப்புங்கசக்கி காதில் பிழிய விஷமிறங்கும். எ-று. 733

### பாம்புகடி விஷத்துக்கு.

உப்பீரத்துணிமுடிந்து வுண்ணெஞ்சுக் குழிகட்டி
யுப்போடுஞ் சலம்வாயிட்டுப்பு.

(இ-ள்.) பாம்புகடி விஷத்துக்கு முறிப்பு:—கொஞ்சம் உப்பை ஈரத்துணியில் முடிந்து அவாள் நெஞ்சுக்குழியிற் கட்டி முடிந்து தான் கொஞ்சம் உப்பை தன்வாயிற்போட்டு தண்ணீர்விட்டுக்குதப்பி அவாள் தேகமுழுதும் துப்பிவரவும் அவ்விஷமீண்டு உஜ்ஜீவிப்பர் எ-று. 734

### பாம்புகடித்தேரு விஷத்துக்கு.

அரவக்கடி யகலவங்கு சிறுநீர்சிரங்கை
பரவக்குடி விஷம்படும்.

(இ-ள்.) பாம்புகடித்தேரு விஷத்துக்கு முறிப்பு:—பாம்புகடித்தவுடனே தன் சிறுநீரிற் சிரங்காய்ப்பிடித்து தான் குடித்துவிடவும். அக்கடி விஷமேருது. அவனும் கீழேவிழமாட்டான். ஆபத்தில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளாதது என்ன மதியீனம். எ-று. 735

### விரியன்கடி விஷத்துக்கு.

காடியினில் விழுதிசமூலம் பிசைந்து கழற்சியிடை
நாடி கருப்புட்டியிட்டு நாட்டு.

(இ-ள்,) விரியன்கடி விஷத்துக்கு முறிப்பு:—விழுதிச்சமூலத்தை யரைத்துக் காடியிற்பிசைந்து பனைவெல்லமுஞ் சேர்த்து கழற்சியளவாய் வடிகட்டிக் குடித்துவரவும். விரியன்கடி விஷமானதுதீரும்.

ஈதன்றி முள்ளியிலையை யரைத்து காடியிற்கரைத்துப் புகட்டவுந் தீரும். எ-று. 736

எலிக்கடி விஷத்திற்கு.

நாயுருவிச் சக்களத்தி நன்மிளகு பூண்டரைத்து
வாயுருவ வுண்ணவறும்.

(இ-ள்.) எலிக்கடி விஷத்துக்கு முறிப்பு:—நாயுருவிச் சக்களத்தியிலையுடன் கொஞ்சம் மிளகு வெள்ளைப்பூண்டு சேர்த்தரைத்து 3-நாட்காலையில் புன்னைக்காய்விதம் தின்றுவரவும். 18-எலிக்கடி விஷங்களுந்தீரும். இதற்குக் கடும்பத்தியமிருக்கவும். எ-று. 737

அரணைக்கடி விஷத்துக்கு.

சிறுகுறிஞ்சான் குமிளனிலை சென்றிடித்துச் சார்பிழிந்து
அறுதினங்காலைமாலையருந்து.

(இ-ள்.) அரணைக்கடி விஷத்துக்கு முறிப்பு:—சிறுகுறிஞ்சானிலையும், குமிளனிலையும் சேர்த்திடித்துச் சார்பிழிந்து அதை 6-அல்லது 7-நாள் காலைமாலை இருவேளையும் உண்டுவரவும். அரணைக்கடி விஷமானதகலும். இதற்குக் கடும்பத்தியமாயிருக்கவும். எ று. 738

பேய் நாய் கடி விஷத்துக்கு.

பேய்ச்சுரையின் குடுக்கையினீர் பின்விட்டுண்ணிருவேளை
நாய்க்கடியின் விஷமற்றிடும்.

(இ-ள்.) பேய்நாய்கடி விஷத்துக்கு முறிப்பு:—முத்திய பேய்ச்சுரைக் குடுக்கையில் தண்ணீரை நிறைப்பிவிட்டு மற்றுநாள் அந்திசந்தி இருவேளையும் சிரங்காய்விதம் 3-நாள் குடித்துவரவும் வாந்தியாகும். 3-வேளையில் பேய்நாய்கடி, கடுப்புநீங்கும் பச்சரிசிகஞ்சி குடிக்கவும். எ-று. 739

சிலந்திக்கடி விஷத்துக்கு.

தேள்கொடுக்கிலையிற் சாதிக்காய் நாற்பங்கிலொன்று
தூள்பொடித்தரைத் தேற்றிடும்.

(இ-ள்.) சிலந்திக்கடி விஷத்துக்கு முறிப்பு:—தேள்கொடுக்கிலையானது கொட்டைப்பாக்களவு, சாதிக்காயானது அதில் 4-ல் 1-பங்கு சேர்த்து கல்வத்திட்டரைத்து 3-நாள் 6-வேளை உட்கொண்டுவரவும். சிலந்திக்கடி விஷமானது தீரும். கடும்பத்தியமாயிருக்கவும். எ-று.

### வண்டுகடி விஷத்துக்கு.

சிவன்வேம்புச் சூரணத்தைத்தின்ன வெந்நீர்ருவேளை
நவில்வண்டுகடி யற்றிடும்.

(இ-ள்.) வண்டுகடி விஷத்துக்கு:—சிவனார்வேம்புச் சமூலத்தைச் சூரணஞ்செய்து 2-விராகனிடை கொண்டதை 3-நாள் 6-வேளை வெந்நீரில் உட்கொள்ளவும். வண்டுகடி, செவ்வட்டைக்கடி, திமிர்விஷந் தீரும். குட்டத்துக்கு 1-மண்டலம் தின்று இச்சாபத்தியமா யிருக்கவும், எ-று. 742

### பாம்புக்குப் பரீட்சை.

உப்பதுபாண்டந்துடைத்து வுள்விடுக்கவோர்பாம்பை
அப்பொழுதே நிமிஷத்திற்சாம்.

(இ-ள்.) பாம்புக்குப் பரீட்சை:—உப்புள்ள பாண்டத்தை நன்றாய்த்துடைத்துவிட்டு ஒருபாம்பை நோகாது உள்ளேவிட்டுவாயைத் துணியாற் கட்டிவைக்கவும். அது 5-நிமிஷத்திற் செத்துவிடும். அல்லது அப்பாம்பின் படத்தின் சூலமத்தியில் துடைப்பத்தாற்குத்தகீழேவிழுந்துயிர்விடும். எ-று. 743

### பாம்பு பதுங்கி யோட.

பாம்பிருக்குமிடத்துப்பைப் பற்றியிரைக்கவுமோடிப்
போம் பிறர்க்குப் பயந்தப்புறம்.

(இ-ள்.) பாம்பு பதுங்கியோட:—வீட்டிலாகிலும், அல்லது வேறிடங்களிலாகிலும் பாம்பிருக்கக் காண்கையில், அவ்விடத்திற் சிறங்கை உப்பைத் தூவிவிடவும். அங்குள்ள பாம்பானது பயந்து தூலதூரம் வேறோரிடத்திற்கு ஓடிப்போய்விடும். அவ்வுப்பு அதற்குச் சத்துரு. எ-று. 744

### பாம்புகள் தம்பிக்க

வீட்டிடத்திற் பாம்பிருக்க வெள்ளூள்ளியைநசுக்கிப்
போட்டிடத்திற்போந் தம்பித்து.

(இ-ள்,) பாம்புகள் தம்பிக்க:—எவ்விடங்களிலாகிலும் பாம்பானதிருக்க அதனிடத்தில் இரண்டொரு வெள்ளைப்பூண்டுதிரியை நசுக்கிப்போடவும். அவ்வாடைப்பட பாம்பானது அங்கு தம்பித்துவிடும்.

அதை என்ன செய்தபோதிலும் அது அசைவற நின்றுவிடும். அதை யெடுக்க ஓடிவிடும். எ-று. 745

### மோட்டுப்பூச்சி நிர்மூலம்.

தாமரை யிலையதனிற் றங்கவிட மோட்டுப்பூச்
சாமரை நிமிஷத்திற்றுன்.

(இ-ள்.) மோட்டுப்பூச்சி நிர்மூலம்:—பச்சைத்தாமரையிலையில் நோகாது 1-அல்லது பல மோட்டுப்பூச்சிகளைவிடவும் அவை அப்படி இப்படி அசையாது அரை நிமிஷத்தில் மடிந்துவிடும். அவ்விலையைச் சுவரோரத்தில் வீடெங்கும் பரப்பிவைத்திருக்க அப்பூச்சிகள் நசிந்து விடும். எ-று. 746

### விஷமருந்து கக்க.

அரவக்கடியகல வங்குண்மருந்துவெளி
வரவும்புளிவ்வணமுண்.

(இ-ள்.) விஷமருந்துகக்க:—பாம்புகடிப்புண்டவன் விழுந்தபின் பல மருந்துகள் பச்சிலைச்சாறுகள் உள்ளுக்கேற்றி வயருப்பி வாதைப் படுகையில், புளியும், உப்பும் சேர்த்து மத்தித்து 1-பலமிருக்க அதை உள்ளுக்கேற்றிட, உடனே வாந்தியாய் அம்மருந்து பச்சிலைச்சாறுகள் அத்தனையும் வெளிப்பட சுகுணப்படுவர். வாந்திவராதாகில் அந்திக்கு கடுக்க மிளகுநீர் கொடுக்க வாந்தியெடுப்பர். எ-று. 747

30. கடிவிஷப் படலம் 16.

முற்றிற்று.

# 31. விரணப் படலம் 25.

குறித்த விடம் புண்ணுக்க.

பொட்டுலுப்புடன் சுண்ணும்புஞ் சமனுயரைத்துதுளி
யிட்டுமேற் போடவும் புண்ணும்.

(இ-ள்.) குறித்தவிடம் புண்ணுக்க:—பொட்டுலுப்பும், சுண்ணும்பும் சமனுயரைத்து அதைத் துணியிற்றடவி குறித்தவிடங்களிற் போட அங்கு புண்ணுய்விடும். அதின் ஈரம்வற்ருமல் நனைத்துக் கொண்டேவரவும். இதையே மருந்தின்மேற்றடவ அல்லது வைக்கக் கரைந்துவிடும். இவ்விரண்டுக்கும் தேங்காயெண்ணெயிட்டாற்றவும், எ-று. 747

துந்தபுண் கிளைக்க.

முள்ளிக்கீரையைக்கருக்கி முன்சிறுநீர் குழப்பிவைக்க
கிள்ளிச்சிறியதாய்ப் புண்ணும்.

(இ-ள்) துந்தபுண்கிளைக்க:—முள்ளிக்கீரைச் சமூலமும் பிடுங்கி வந்து உலர்த்தி அதைக்கருக்கிச் சாம்பலாக்கி அதிற்கொஞ்சமெடுத்து தண்ணீர் அல்லது சிறுநீர்விட்டுக்குழப்பி அதை முன்புண்ணுயிருந்து வாய் துந்தவிடத்தில் கொஞ்சம்வைக்க அங்கு புண்ணுய்விடும் எ-று.

விரண மாற யெண்ணெ.

அரசன்கொழுந்து சாம்பற்பூரங்கற்பூரம்
வரிசையெண்ணெயி லிழைத்துத்தீட்டு.

(இ-ள்) விரணமாறயெண்ணெ:—இரசகற்பூரம், ஆலாத்திக் கற்பூரம்வகைக்கு விராகனிடை 2, அரசன்கொழுந்து சாம்பல் பலம் 1-இம்மூன்றும் நல்லெண்ணெ 2-துட்டுக்குவாங்கி அதிற்சேர்த்துக்குழப்பிப் புண், சிரங்கு, பொக்கு, ரிணங்களின்மேற் போட்டுவரவும்ஆறும். ஆருதரிணங்கட்கு புங்கம்பட்டையின்றாள் இந்த எண்ணெயைத் தடவி அதின்மேற்றூவிவர நாட்பட்டதுதீரும். எ-று. 749

இலிங்கத்துவாரத்திற்குக்குடிநீர்.

மூணுட்கலியாண முருக்கம்பட்டைச்சாற்றிற்
கோணுப்பல மிரண்டிற்கொள்.

(இ-ள்.) இலிங்கத்துவாரத்திற்கு:—கட்டையாகிய வெள்ளைக் கலியானா முருக்கன்பட்டைச்சாறு பலம் இரண்டுவீதம் 3-நாட் காலையிற்குடித்துவர இலிங்கப்புத்தில் புடைகொண்ட ஐந்தாறு துவாரங்கள் அடைபட்டு ஆறிவிடும். இச்சாபத்தியமாயிருக்கவும், எ-று. 751

இலிங்க மெழுகு.

சிங்கிலிங்கம்பூரமிளகிற் சுக்குசமன்றேன்விட்
டங்கரைத்துக் கடலையளவுண்.

(இ-ள்) இலிங்கமெழுகு:—இலிங்கம், இரசகற்பூரம், மிருதார் சிங்கி, மிளகு, சுக்கு இவ்வைந்தும் சமனுய்ச்சேர்த்து தேன்விட்டரைத்துக் கடலையளவாய் காலை மாலை 3-5 நாள் உண்டுவரவும். பலநோய்கள் தீவிரத்தில் நீங்கிவிடும். ஈதன்றி, புண், புறை, விரணம், படை, உள்ளங்காலில், குழிக்காலில் பள்ளம்விழுதல், சுருக்கு, வெள்ளை, கொறுக்கு, கிரந்தி, கட்டி, சுரம், சன்னி, மேகந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 752

பற்கடி ரிணத்திற்குக் களிம்பு.

உத்தாமணிச்சாற்றினுள் ளிழைத்துப்பல்லதின் றூள்
வத்தா கடிவாயில்வை.

(இ-ள்) பற்கடி ரிணத்திற்குக்களிம்பு:—மயானத்திலுள்ள வெந்தமனிதர்களின் பல்லுகளை த்தூள்செய்து உத்தாமணிச் சாற்றிலுள்ளிழைத்து மனிதர்கடிவாய் ரிணத்தின் புண்களின்மேற் றடவிவரவும். அந்தரிணமாறி யாறிவிடும். பின்யொருவாதைகளு மிருது. எ-று.

பல ரிணமாறக் களிம்பு.

செப்பிற்களிம்பலது செங்கால்பச்சையும்வெள்ளை
வெம்பவிழைத்து ரிணமேவிடு.

(இ-ள்.) பலரிணமாறக்களிம்பு:—செம்பினிலுள்ள களிம்பு, அல்லது செங்கால்பச்சை, வெள்ளைப்பாஷாணம் 2-ம் தேங்காயெண்ணெயிலரைத்து புண், சிரங்கு, ரிணங்களின்மேற் றடவிவரவும் மாறிவிடும். புடைரிணத்திலும் போட்டுவர நீர்வாண்டு ஆறிவிடும். எ-று. 754

சிலந்திகட்டு மூலாம்.

வெண்ணெயிற்பூரமரைத்து மிக்கரிணமேற்போடக்
வுள்ளதிறபோஞ் சிலந்திகுன்றி,

(இ-ள்.) சிலந்திகட்கு முலாம்:—வெண்ணெயில் இரசகற்பூரம ரைத்து ரிணங்கள்மேற்போட, அல்லது பூசிவரவும். இன்னுஞ் சீலே யிற்றடவியேற்றவும். சிலந்திப்புண்கள், ஊன்வளர்ந்தபுண்கள், ஆறு தரிணங்கள் உடனே ஆறிவிடும். இதில் வெள்ளைக்குங்கிலியமுஞ்சேர்க்கலாம். எ-று. 755

கிரந்தி கட்காறு முலாம்.

வெண்ணெலிங்கங்குங்கிலியம் விண்டரைத்துரிணமேற்ற
அண்ணதிற்புண்ணது வகலும்.

(இ-ள்) கிரந்திகட்காறுமுலாம்:—வெண்ணெயில் வெள்ளைக்குங் கிலியம் விராகனிடை 2-சாதிலிங்கம் விராகனிடை 2-ஒக்க வரைத்து புண்கள் ரிணங்கள்மேற்றடவிவரவும். அவ்விரணங்கள், ஊன்வளர்ந்த துகள், சிலேயோடினதுகள் யாவும் ஆறிவிடும். எ-று. 756

ஊன்வளர்ந்ததற்கு முலாம்.

வெண்ணெயிற்குங்கிலியங் குருவிட்டோர்விராகனரைத்து
புண்ணதனிற் போடப்புறம்.

(இ-ள்) ஊன்வளர்ந்ததற்கு முலாம்:—வெண்ணெயில் குங்கிலிய மும் துருசும் வகைக்கு விராகனிடை 1-ஆகவரைத்து முன்போல விரணங்கள், ஊன்வளர்ந்ததுகள், சிலேயோடியப்புண்கள், மேற்றடவி வரவும். யாவும் கூடியசீக்கிறத்தில் ஆறி உலர்ந்துமாறிவிடும். எ-று.

விரணங்களாறத்திரி.

மஞ்சள்சுன்னம்பூர மட்டெள்ளெண்ணெயரைத்துப்
பஞ்சுதிரிபூசிரிணம் பாச்சு.

(இ-ள்.) விரணங்களாறத்திரி:—கரிமஞ்சள், சுண்ணும்பு, கொஞ்சம் ரசகற்பூரம் இம்மூன்றும், நல்லெண்ணெயிலரைத்து பஞ்சுநூலிற் றிரியாகப்பூசி யுலர்த்தி விரணங்களுக்குள்ளேற்றிவர எரிச்சலில்லாமல் கெட்டசதையினைத்தின்று ரிணத்தையாற்றிவிடும். இன்னும்மேக ரிணம், பிளவை, கொறுக்குக்குத் துணியிற்பூசி அதின்மேற் போட்டுவர ஆறிவிடும். எ-று. 758

புண்களுக்குப் பிளாஸ்திரி.

கண்டர்வெள்ளைக்குங்கிலியங் கண்டெண்ணெயிலரைத்துக்
கொண்டுமெள்ளப் புண்ணிலிட்டிடு.

(இ-ள்.) புண்களுக்குப் பிளாஸ்திரி:—துருசும், வெள்ளைக்குங்கி லியமும் நல்லெண்ணெயிலரைத்து அதைவழித்துப் பரணியில் வைத் து எவ்விதபுண்கள் ரிணங்களுக்கும் இப்பிளாஸ்திரியைக் கெட்டித் துணியிற்றடவி அதின்மேற் போட்டுவரவும். அவ்விரணங்க ளாறி விடும். எ-று. 759

கட்டிகளுக்குப் பிளாஸ்திரி.

துத்தந்துருசிலிங்கந் துய்யகுங்கிலயஞ்சிங்கி
முத்தெண்ணெயி லரைத்திடு.

.(இ-ள்.) கட்டிகளுக்குப் பிளாஸ்திரி:—மயில்துத்தம், துருசு, சாதிலிங்கம், வகைக்குப் பலம் கால், வெள்ளைக்குங்கிலியம் பலம் 1. மிருதார்சிங்கி பலம் அரை, யாவும் விளக்கெண்ணெ விட்டரைக்க மெழுகாம். அதனைத்துணியிற்றடவி கட்டிகளின்மேற் போட்டுவர வும், கட்டியுடைந்து முளைவெளிப்பட்டு ஆறிவிடும். 760

விரணங்கட்குப் பிளாஸ்திரி.

குங்கிலிய மெழுகுருக்கிக்கொண்டு தேன்னெய்யினிலரைத்து
தங்கசலத்தில் விட்டிடு.

(இ-ள்.)விரணங்கட்குப்பிளாஸ்திரி:-வெள்ளைக்குங்கிலியமும்,வெள் ளைமெழுகும் 2-ம் சேர்த்துருக்கி தேங்காய்நெய்விட்டரைத்து அதைச் சலத்தில் விடுத்து அலம்பி ஆற்றிச்சிமிளில் வைத்துச் சல்லாத்துணி யிற்றடவி விரணங்களின்மேற்போட்டுவர அவ்விரணங்க ளாறிவிடும் எ-று. 761

கறுப்புப் பிளாஸ்திரி.

விளாம்பிசினிகறுங் குங்கிலியமுருக்கி விளக்கெண்ணெ
அளாவிவிட்டுச் சலத்தில்வடி.

(இ-ள்.) விரணங்களுக்குக் கறுப்புப் பிளாஸ்திரி:—விளாம்பிசி னியும், கறுங்குங்கிலியமும் சமனுப்ச் சேர்த்துருக்கி விளக்கெண்ணெ விட்டுக் காச்சி சலத்தில் விட்டலம்பி கெட்டித்துணியிற்பூசி ரிணங்க ளின்மேற் போட்டுவரவும். எவ்விதரிணங்களும் விரைவி லாறிவிடும். எ-று. 762

## வெள்ளைப் பிளாஸ்திரி.

பூரம்வெண்குங்கிலியம் பொற்றேங்காயெண்ணெயரைத்
தோரத் தண்ணியிற் சுத்தித்திடு.

(இ-ள்.) விரணங்களுக்கு வெள்ளைப்பிளாஸ்திரி:—இரசகற்பூரம் 1, வெள்ளைகுங்கிலியம் 2, இவைகளைத் தேங்காயெண்ணெவிட்டரைத்துத் தட்டைக்கிண்ணிப் பின்புறம் வைத்துச் சலம்விட்டு உள்ளங்கையினுலரக்கி தேய்த்துத் தேய்த்து சலம்விட்டு 7-திறமலம்பி அதை வழித்தெடுக்கக் காரம்போலாகும். அதைத்துணியிற்பூசி புண்கள் விரணங்கள் மேற்போட்டுவரவும், நாட்பட்ட வைகளெல்லாம் ஆறிவிடும். எ-று. 763

## சிவப்புப் பிளாஸ்திரி.

போகுமிலிங்கம்பூரம் பொற்கஸ்தூரிமஞ்சள்
காடியிலங்கரைத்துக்கணி.

(இ-ள்) விரணங்களுக்குச் சிவப்புப் பிளாஸ்திரி:—சாதிலிங்கம் 2, ரசகற்பூரம் 1 கஸ்தூரிமஞ்சள் அரிக்கால், இம்மூன்றையுங் காடிவிட்டரைத்து நிழலுலர்த்திச் சீலையிற்றடவி புண்கள் விரணங்கள் மேற் போட்டுவரவும். நாட்பட்டவைகளெல்லாம் சடுதியில் ஆறிவிடும். எ-று. 764

## காரப்பிளாஸ்திரி.

துருசுதுத்தம் பலங்கால் துய்யகுங்கிலிய மொன்
றரைப்பு மெண்ணெயில் நாறுபோல்.

(இ-ள்.) விரணங்களுக்குக் காரப்பிளாஸ்திரி:—துருசு, மயில் துத்தம் வகைக்கு காலிடை, வெள்ளைக்குங்கிலியம் ஓரிடைசேர்த்து எள்ளெண்ணெயிலரைத்து நாறுபோல் வரும் பதத்தில்வழித்தெடுத்து துணியிற்றடவிப் போட்டுவரவும். பலவித விரணங்களும் விரைவிற் றீரும். எ-று. 765

## இரசப்பிளாஸ்திரி.

சத்திசிவன் காரமுந்துத் தந்துருசு குங்கிலியம்
எத்திவிளக்கெண்ணெயிலெரி.

(இ-ள்.) விரணங்களுக்கு இரசப்பிளாஸ்திரி:—நெல்லிக்கெந்தி பாதரசம், வெண்காரம் வகைக்கு விராகனிடை 1, துருசு, துத்தம்.

வகைக்கு விராகனிடை 2, வெள்ளைக்குங்கிலியம் பலம் அரை, யாவும் விளக்கெண்ணெயிலரைத்து பிறகு மெழுகு பலம் ஒன்றை சேர்த்தரைத்து துணியிற்றடவி புண்கள் விரணங்கள்மேற் போட்டுவர யாவும் ஆறிவிடும். எ-று. 766

மெழுகு பிளாஸ்திரி.

வங்கச்செந்தூரஞ் சிங்கிவன் றுத்தந்துருசெண்ணெ
பொங்கக்காச்சிப் போட்டிடும்.

(இ-ள்.) விரணங்களுக்கு மெழுகுபிளாஸ்திரி:—வங்கச்செந்தூரம் பலம் 5, மிருதார்சிங்கி பலம் ஒன்று, மயில்துத்தம், துருசு வகைக்கு பலம் அரை, நல்லெண்ணெ பலம் 10, முன் எண்ணெயைக் காச்சி யாவும் பொடித்துப்போட்டு பதத்திலிறக்கி இதைத்துணியிற்றடவி புண்கள் விரணங்கள்மேற் போட்டுவர யாவுமாறும். எ-று. 767

கேட்டி பிளாஸ்திரி.

எண்ணெ குங்கிலியமுருக்கிட்டு வங்கச்செந்தூரம்
ஒண்ணதாய்க் காச்சியெடு.

(இ-ள்) விரணங்களுக்குக் கெட்டிபிளாஸ்திரி:—நல்லெண்ணெ பலம் இரண்டரை காச்சி வெள்ளைகுங்கிலியம் பலம் 4-போட்டுருக்கி வங்கச்செந்தூரம் பலம் 1-சேர்த்துக்காச்சி மஞ்சள் நிறமாய் வரும்போது இறக்கிச் சீலையிற்றடவி நானுவித புண்கள், விரணங்கள்மேற் போட்டுவர எவ்வகை ரிணங்களும் ஆறிவிடும். எ-று. 768

அக்கினிப் பிளாஸ்திரி.

வீரமெழுகுருக்கி மிக்கவிளக்கெண்ணெ விட்டு
நீரில்வடித்துச் சிமிளேற்றிடு.

(இ-ள்.) விரணங்களுக்கு அக்கினிபிளாஸ்திரி:—வெள்ளைமெழுகு பலம் 1, சவ்வீரம் பலம் அரை, பொடித்து ஒரு ஏனத்திட்டுருக்கி வேகும்போது விளக்கெண்ணெ பலம் இரண்டரைவிட்டு நீரில்வடித்துவிட்டு சிமிளிலேற்றி சல்லாவிற்றடவி பின்பு எலுமிச்சன் பழச்சார்பூசி நவாச்சாரப் பொடியைத்தூவிச் சீலையை புண்விரணங்கள்மேற் போட ஆற்றிவிடும். ஒருவேளை சோய்புண்டாகில் அதை எடுத்துவிடவும் அதில் நீர்கசிந்து ஆறிவிடும். எ-று. 769

காரச் சீலே.

துத்தம்நெருப்பிலிட்டுச்சுட்டு விளக்கெண்ணெயினில்
வைத்துமிழைத்துப் புண்வாய்மாட்டு.

(இ-ள்.) விரணங்களுக்குக் காரச்சீலே:—மயில்துத்தம் கொஞ்சம் நெருப்பிலிட்டுச் சுட்டுப் பஸ்மமாக்கி அதனே விளக்கெண்ணெயி லிழைத்து புண்வாயிற் காரச்சீலேயாய்ப்போடவும். அவ்விரணம் சீழ் செந்நீரற்று முளையும் வெளிப்பட்டுச் சுகுணப்படும். எ-று. 770

இரசமெழுகு.

சூதமீருள்ளிரசந் தொட்டரைக்க மெழுகாமுண்
வாதம் பாரிசவாய்வறும்.

(இ-ள்,) இரசமெழுகு:—பாதரசத்தில் வெள்ளேவெங்காயச்சார் விட்டரைக்கவும் அந்தரசமடிந்து மெழுகாகும். இதில் அரிசியிடை 3-5-7 நாள் உட்கொண்டுவரவும் வாய்வு, சூலே, பாரிசவாய்வு, கால்கை பிடிப்பு மேககாரகமுதலியதும் தீரும். எ-று. 771

இரசகெந்தி மெழுகு.

தேனிற்சூதங்கெந்திதொட்டுக் கற்கண்டரைத்து
தானிற்குன்றி யிடையேதா.

(இ-ள்) இரசகெந்தி மெழுகு:—சூதம், கெந்தி சமனுகச்சேர்த்து பனங்கற்கண்டுங்கூட்டி தேனிலரைத்து குன்றியளவா யுண்டுவரவும். வாதம் 64-மேகம் 21-இன்னும் பலநோய்களுந் தீரும். இதைக் காலே மாலே 5-நாள் அல்லது 7-நாள் இச்சாபத்தியமாக யுண்ணயாவுந்தீரும் எ-று. 772

31 விரணப் படலம் 25.

முற்றிற்று.

---

## 32 ஜெயநீர்படலம். 73.

### கதலிப்பழச் செயநீர்.

புளியங்கொட்டைத்தோலிற் புகவாழைப்பழம்பிசைந்து
அளியவை சலமிறங்கும்.

(இ-ள்) கதலிப்பழச்செயநீராவது:—வாழைப்பழத்தைத்தோலுரித்து அதில் புளியங்கொட்டைகளின்றோலைப் பொடித்துச் சூரணஞ்செய்து அதிற்கலந்துபிசைந்து ஓரேனத்திற்போட்டு ஒருபக்கம்சாய்ப்பாகவைக்கவும் சலமிறங்கும். இதனையுண்டுவருவதில் தேகங்குளிர்ச்சியைத்தரும். எ-று. 773

### வாழைப்பழச் செயநீர்.

வாழைப்பழங்கோப்பை வைத்துமியிற்பிசைந்ததனைத்
தாழப்படச் சாய்த்துவை.

(இ-ள்.) வாழைப்பழச்செயநீராவது:—வாழைப்பழங்களை யுரித்துத் தோல்போக்கி அதை ஓர் தட்டைப் பீங்கானில்வைத்து அதில் காரரிசி உமியைக்கொஞ்சந்தூவிப் பிசைந்து வெய்யலில் ஒருபக்கம் சாய்த்துவைக்கவும். ஜலமானதிறங்கும். அதைச்சும்மாயாகிலும், அல்லது காச்சி சர்க்கரை, பந்நீர்விட்டெரித்துண்டிடினும் தேகவழலறும். குளிர்ச்சியைத்தரும். வெட்டையை நிவர்த்திசெய்யும் எ-று. 774

### வாந்திபேதிக்குச் செயநீர்.

சூடன்பலங்காலெடுத்துச் சுக்குகியாழத்தரைத்துப்
போடவொருபுட்டியிட்டுப் புகட்டு.

(இ-ள்) வாந்திபேதிக்குச் செயநீராவது:—கற்பூரம் பலம் கால் எடுத்துப்பொடித்து அதைச்சுக்குக் கியாழத்திலரைத்து ஒரு புட்டி நிறையவிட்டு அதிற்பாதியை உள்ளுக்கேற்றிடவும். உடம்பெரிந்தால் நிறுத்திவிடவும் இல்லாவிடின் மற்றப்பாதியையும் உட்புகட்டிட உடம்பெரியும் உடனேபால் குடிப்பிக்கவும். அதுமுறியும், வாந்திபேதியும் நின்றுவிடும். எ-று. 775

## கருமானங்கள்.

### தவளைச்சோரிக்குக் கரு.

பத்தீதலைக்கிள்ளிப்பைங் கூழினில்மூனாள்
சத்தீதரச் சண்ணுமே.

(இ-ள்) தவளைச்சொரிக்கு கருவாவது:—ஈய்கள் 10-15 பிடித்து அவைகளின்றலைகளைக்கிள்ளி யெரிந்து இறக்கைகளையும் போக்கி உடலைக் கூழில்வைத்து மறைத்து அவாள்வாயிற்போட்டுவா, இப்படி 3-நாள் தின்னுகையில் தவளைச்சொரிமாறி சுத்ததேகமாய்விடும். பத்தியமில்லை எ-று. 776

### பிறளிநோய்க்குக் கரு.

வெற்றிலைப்பாக்குடனாயீ விட்டுமூன்றிட்டுண்ணப்
பற்றிலைப்பார்பிறளி நோய்போம்.

(இ-ள்.) பிறளிநோய்க்கு கருவாவது:—வெற்றிலைப்பாக்கில் நாயினீயானது 3-பிடித்துவைத்து மடித்துக்கொடுத்து வாயிற்போட்டுக் கொள்ளச்சொல்லவும், அவாள் 2-3 நாள் இச்சாபத்தியமாய்த் தின்றுவர பிறளிநோய்நீங்கிடும். இவ்வாறு 5-6 வேளை தாம்பூலமருந்தவும். எ-று. 777

### ரோமங்களகலக் கரு.

செத்தநாயின்வாயிற் சென்றிலுப்பைக்கட்டிதுருத்
தத்தைரோமமேற்றாளாய்வை.

(இ-ள்) ரோமங்களகலக் கருவாவது:—இறந்துவிட்ட நாயின்வாயில் வேண்டிய இலுப்பைக்கட்டியைத் துறுத்து வைத்து நன்றாயூறிய பின் அதை பொடித்து ரோமங்களின்மேற் றடவிவாவும். முழுதிலும் தடவியரோமங்களுதிர்ந்துவிடும். பிறகுமுளையாது இது எதற்குத்தடவினும் உதிரும், எ-று. 778

## கர்ப்பவகை.

### நிலாவிரைக் கர்ப்பம்.

சூரத்துநிலாவிரையின் சூரணமாப்பாலிலுண்ண
வாரத்தகிலாப் பேதியாம்.

(இ-ள்.) நிலாவிரைக் கர்ப்பம்;—சூரத்து நிலாவிரையைச் சூரணஞ்செய்து தண்ணீரிலுண்ண விரோசனமாம். துளசிச்சாற்றி லுண்ணகுளிர் வெப்புத்தீரும். கொன்றைப்பட்டைத்தூளி லுண்ண சூலையறும். வெள்ளாட்டுப்பாலிலேற்றச் செவ்வாப்பறும், எருமைமோரில் அல்லது எண்ணெயிலுண்ண எலிக்கடிமீளும். எருமைப்பாலி லுண்ண மருந்தீடுமுறியும். தண்ணீரிற்சாரித்து உடம்பிற்பூச கடிவர்க்கந்தீரும். பாலைப்பிலைச்சாற்றிலுண்ண செய்யான்கடிதீரும். எருக்கன் பழுப்புச் சாற்றிலுண்ண பெருச்சாளிகடி தீரும். எருமைநெய்யிலுண்ண சகல விஷக்கடிகளுந் தீரும். பசுநெய்யிலுண்ண நரைமாறிடும். கோதுமைப் பாலிலுண்ண குன்மந்தீரும். நாக்குப்பூச்சிகளும்விழும். வெள்ளாட்டு மோரிலுண்ண வயர்வலிநீங்கும். பசுநெய்யிலுண்ண ஊன்வலுத்திடும். வெந்நீரிலுண்ண திமிர்பூச்சிகள் அகலும். மோரிலுண்ண செரியாமை நீங்கும். கோமயத்திலுண்ண புண்சிரங்குகள் மாறும். ஆட்டு மூத்திரத்திலுண்ண அரணைக்கடிமீளும். வேலம்பட்டைச் சாற்றில் வாய் கொப்பளிக்கத் தந்தநோய்மாறும். இச்சாபத்தியம். எ-று. 779

### தூதுவேளைக் கர்ப்பம்.

கானிற்றூதுளைச்சூர்ணங் கண்டுண்ணெய்யூன்வலுக்கும்
தேனிற்றேகமு மிளைக்கும்.

(இ-ள்) தூதுவேளைக்கர்ப்பம்:—தூதுவேளையை யுலர்த்தி இடித்துச்சூரணஞ்செய்து 2-வெறுகடித்தூள் பசுநெய்யிலுண்ண தேகம் வலுக்கும். தேனிலுண்ண தேகமிளைக்கும். தேன் திப்பிலியிலுண்ண இருமல்தீரும். வெந்நீரிலுண்ண வெதுப்புத்தீரும். மேதித்தயிரிலுண்ண எலிக்கடிவிஷந்தீரும். கோமயத்திலுண்ண பலவிஷக்கடிகள் தீரும். ஆட்டுப்பாலிலுண்ணப் பித்தந்தீரும். எருமை மூத்திரத்திலுண்ண சீதளமறும். எருமைமோரிலுண்ண பாண்டுமாறும். ஆட்டுமூத்திரத்திலுண்ண மருந்தீடுமுறியும். காடியிலுண்ண பெரும்பாடுதீரும். வெற்றிலையிலுண்ண் வயர்வலிமாறும். பிரமிச்சாற்றிலுண்ண சந்தானமுதி

க்கும். தண்ணீரிலுண்ண செய்யான்கடிமீளும். குப்பைமேனிச்சாற்றி லுண்டு மேற்பூச தேள்விஷம், சிலந்திகடிமாறும். பேயன் வாழைப் பழத்திலுண்ண சுக்கிலப்பிரமியந்தீரும். இந்நோய்கள் தீரும்வரையி லுண்டு பத்தியமாயிருக்கவும். எ-று. 780

## பலநோய் மருந்துகள்.

### வாந்தி தாகத்திற்கு.

விடையந்திப்பிலிக்கிராம்பு மெனமயிற்பீலிசைச்சாம்பற்
கடையும்புத்துத் தேனிற்காண்.

(இ-ள்.) வாந்திதாகத்திற்கு:—அதிவிடையம், இப்பிலி, லவங் கப்பூ, மயிலிறகு சுட்டசாம்பல், பொடித்து வஸ்திரகாயஞ் செய்து புதியதேனில் வெருகடித்தூளைப்பிசறி உட்கொடுத்து வரவும். வாந்தி யடங்கி தாகமானது நின்றுவிடும். எ-று. 781

### சீதளமறத் தைலம்.

கரிமஞ்சள்சாம்பிராணி கனமிளகெள்ளெண்ணெயினில்
எரியுந்தைல முழுகிடு.

(இ-ள்.) சீதளமறத்தைலம்:—நல்லெண்ணெயைக் காச்சி அதில் கரிமஞ்சள், சாம்பிராணி, மிளகு பொடிசெய்துப்போட்டு காய்ந்தபின் பின் இறக்கிவடித்து தலையிற்றேய்த்து ஸ்நானஞ்செய்து வரவும் சீத ளம், குளுமை, சளி, தும்மல், மார்சளி, கபம், கோழை, தலைபாரம், தலைநோய் தீரும். எ-று. 782

### தலைப்புழு வெட்டுக்கு.

சுவரில்பேயீப்புலியைத் துவளத்தலைதேய்க்கில்
தவறிலாது ரோமமுளையும்.

(இ-ள்.) தலைப்புழுவெட்டுக்கு:—சுவர்களில்மேயும் ஈப்புலியில் 2-3, பிடித்து அதை மயிர்களுதிர்ந்தவிடங்களிற் றேய்த்துவர உட னே அவ்விடத்தில்மயிர்கள்முளையும். புண்ணாகாது. இப்படி 2-3 நாள் தேய்த்துவரவும். அது ஈக்களைப்பிடித்துத் தின்பவையாம். எ-று.

குட்டம் பெரு வியாதிக்கு.

பூவரசன்பட்டையைச் சால்பொங்கநீர்விட்டுக்குப்பை
யாவதில்மண்டலம் வைத்தேற்று.

(இ-ள்.) குட்டம்-பெருவியாதிக்கு:—ஒருபெரியமிடாவில் 100-வருடஞ்சென்ற பூவரசன்பட்டையை மேற்பாணிநீபோக்கி அதினிறைய போட்டு வாயிநிறையத் தண்ணீரை ரொப்பி மேல் சாணக்கைமுடி சீலைமண்செய்து குப்பையில் 1-மண்டலம் புதைத்துவைத் தெடுக்கத் தைலம்போலிருக்கும், அதைக்காச்சி அதில் 5-6-7-8 துளிவீதம் காலை மாலை 10-20 நாளுண்டுவரவும். குட்டம் பெருவியாதிநீங்கும். பசி மிகுதியாயிருக்கும். எ-று. 784

விரை நோவிற்கு.

கழற்சிப்பருப்பைக் கண்டாவின்றயிரினிலுண்
அழற்சியுள விரைநோயறும்.

(இ-ள்.) விரைநோவிற்கு:—கெச்சைக்காய் பருப்பை 2-3 தூள் செய்து காலையிற் பசுந்தயிரிற்போட்டுக் கலக்கிக்குடித்து வரவும். இப்படி 3-நாள் குடித்துவரவும். விரைநோய், விரைவீக்க முதலிய தியாவுந்தீரும். பத்தியமாயிருக்கவும். எ-று. 785

இருமலிற்கு வாயிலடக்க.

அதிமதுரப்பாலினை வாயடக்கியுமிழ்நீருந்த
மதிமதுரமாய் விளங்கலாம்.

(இ-ள்.) இருமலிற்கு வாயிலடக்க:—இரைப்பிருமலால் வாதைப்பட்டு இரவிற்றூக்கமின்றி அவதிப்படுவோர்கள் ஒருதுண்டு அதிமதுரப்பாலை தங்கள்வாயிற்போட்டு அடக்கிக்கொண்டு அந்த சாரத்தை விழுங்கிவர அவ்விருமலானதுமட்டுபடும். தூக்கமும்பிடிக்கும். எ-று.

மூலந்தீருவதற்கு.

வெண்குங்கில்யம் பழச்சார்விட்டரைத்து வெண்ணெயிழைத்
துண்பங்கிலேர்து நாளும்.

(இ-ள்,) மூலந்தீருவதற்கு:—வெள்ளைக் குங்கிலியத்தை எலுமிச்சன்பழச் சாற்றிலரைத்து அதனை எண்ணெயிற்குழப்பி 5- நாள்

மாருது உட்கொண்டு வரவும் மூலந்தீரும். ஈதன்றி தினம் பூசுணைக் கிரையைக்கடைந்து தின்னவும் பூசுணைக்காயாகாது. எனக்கரியுந்தின்ப துண்டு-எ-று. 787

கடுகு லேகியம்.

கடுகொன்றுப்பொடித்துக் கறணடிரண்டு பாகாய்த்தேன்
விடுகிண்டிப் பலவினைக்கே.

(இ-ள்.) கடுகுலேகியம்:—கடுகுசேர்-1 அதைச்சூரணஞ்செய்து கற்கண்டுசேர் 2-பாகாய்க்காச்சி முன்பொடியைக் கொட்டிக் கிண்டி தேன்விட்டுக்கிளறி லேகியபதத்திலிறக்கி காலை மாலை 3-5 நாளுண்டு வரவும். மந்தாரகாசம், சுவாசகாசம், பொருமல், ஈளைமுதல் தீரும். எ-று. 788

பாதிரி வேர் சூரணம்.

பாதிரிவேர்பட்டையின்றூள் பாலிலுண்ணப்பத்தியமாய்
தீதறவே யெப்பிணிக்குந்தின்.

(இ-ள்) பாதிரிவேர் சூரணம்:—பாதிரிவேரை யுலர்த்திச் சூரணமாய்ச் செய்து அதைப் பசும்பாலில் 2-வெருகடிவீதம் 3-நாள் அல்லது 5-நாள் காலைமாலைப்பத்தியத்துடனுண்டுவர, கணுக்கால்வீக்கம், கைகால் முடக்குவீக்கம், சூலைநோய், சூதகவாய்வுமுதல் தீரும் எ-று.

மகோதரந் தீற.

ஆட்டமுரிச்சேரரையிலங் கடுக்காய்பத்தரைத்து
கூட்டியிடும் வெண்பிணிக்கு.

(இ-ள்.) மகோதரந்தீர:—வெள்ளாட்டு மூத்திரத்தின் சேர்-½ சூரத்துக் கடுக்காய் 10, இதைப் பொடித்துப்போட்டு அதிலரைத்து 3-நாட் காலையிற் குடித்துவர, மகோதரம் ஆம்பலகட்டி, பெருவயர், குணக்குச்சூலை முதல்தீரும். கடும்பத்தியமாயிருக்கவும். எ-று. 790

புங்கம் பட்டை யெண்ணை.

விளக்கெண்ணை புங்கம்பட்டை வெங்காயங் காச்சிவடித்
தளக்க வரைப்படியிருக்க.

(இ-ள்.) புங்கம்பட்டையெண்ணை:—புங்கம்பட்டையை மேற்பரணிசீவியது 1-மாங்காயளவுடன் அவ்வளவு வெள்ளை வெங்காயஞ்

சதைத்து விளக்கெண்ணே படி அரையில் போட்டுக்காச்சி வடித்திறக்கி 3-5-7-நாட்காலையில் உச்சிக்கரண்டிவீத முண்டுவர, மூத்திரக்கிரிச்சி, வெள்ளை, குத்தல், கடுத்தல்நீரை தணிந்துவிடும். பத்தியமா யுண்ணவும். எ-று. 791

சூதக வாய்வுக்கு.

அப்பதனிலுப்பாழாக்கறை கரைத்துத்தெளிவை
முப்பொழுதிலும் சூதகத்துள்.

(இ-ள்.) சூதகவாய்வுக்கு:—சோத்துப்பு அரை ஆழாக்கை 1-படி தண்ணீரிற் கரைத்து அதையிறுத்து தெளிவுநீரை முழுக்குநாள் 3-லும் குடித்துவர, வயர்நோய், சூதகவாய்வு தீரும். இவ்வாறே மறுமாதமும் குடித்துவரவும். யாவும் உடனே அகன்றுவிடும். எ-று. 792

சூலை வாய்வுக்கு.

ஆளிவிரை துட்டிடை தூளாய்பதினிற்காச்சி வெல்லம்
கேளிதனை முத்தின மங்கிடு.

(இ-ள்.) சூலைவாய்வுக்கு:—ஆளிவிரை 1-துட்டிடையைக் கல்லறவாய்ந்து அரைப்படி தண்ணீரிற்போட்டுக் குழம்பாய்க்காய்ச்சி இதில் புட்டி வெல்லம் பலம் கால்-சேர்த்துரேகித்து 3-நாள் கொடுத்துண்ணவும். சூலைவாய்வுதீரும். மலசலப் பிரவர்த்தியாம். எ-று. 793

க்ஷயம்-காசத்துக்கு.

அப்பிரகத்தகட்டரிதாரம் முள்ளிசதைத்திடநே
ருப்பெரிய தைலமிழியும்.

(இ-ள்) க்ஷயம்-காசத்துக்கு:—ஒரு டமிலர்வாய்க்கு ஈரத்துணி கட்டி அதில் வெங்காயத்தில் கொஞ்சம் தாளகம்வைத்துச் சதைத்து 2-ம் பிசறி படியவைத்து அதின்மேல் அப்பிரேகத் தகட்டைவைத்து கரியைப்போட்டுக் கொளுத்தி விசிறிக்கொண்டே யிருக்கையில் தைலமிறங்கும். அதில் 1-2 குன்றியளவு தைலம் சக்கரையிலுண்ணவும் இப்படி 3-5-நாள் காலைமாலை யுட்கொள்ள க்ஷயம், காசம், கடிவிஷந் தீரும். மேனி தங்கனிறமாகும் இச்சாபத்தியம் எ-று. 794

### வலி குன்மத்துக்கு.

கலம்கொம்பைக் குன்றியிலைக் கவசித்துக் கனப்புடம்வை
வலிகுன்மமெட்டு மகலும்.

(இ-ள்) வலிகுன்மத்துக்கு:—குன்றியிலையரைத்துக் கலைமான் கொம்புக்கு கவசஞ்செய்து கணபுடம்போடவும் சுன்னமாம். அதை மறுபடியும் முலைப்பால் அல்லது பசும்பாலிலரைத்து பில்லைதட்டி அகவிலிட்டு மேல்மூடி சீலைசெய்து முன்போல புடமிட்டெடுத்து 3-நாள் 6-வேளை 2-குன்றிவீதம் தேனிலுண்ண, நீர்மேகம், ரத்தபித்தம், சாத்தி,வலிகுன்மம், நெஞ்செரிவு, காங்கை, அன்னமந்தம்,உட்காச்சல், நீரெரிப்பு, சுக்கிலரத்தம்தீரும். இதிற் பச்சைக்கற்பூரஞ் சேர்க்க பலவினைகளும் பறக்கும். எ-று. 795

### இரத்தகாசம் இருமலுக்கு.

தோச்ச பசுந்தயிரிற் சுடுசோறுப்பறவெழுநாள்
பாச்சவிரத்த காசம்படும்.

(இ-ள்.) இரத்தகாசம் இருமலுக்கு:—இளந்தோச்சற் பசுந்தயிரில் சுடுகையான சோற்றைப்போட்டு அதில் உப்பில்லாமல் ஏழுநாளுண்டுவரவும். இரத்தகாசம், இருமல், இரைப்பு, வெட்டை, உதிரங்கக்கல் தீரும். பசியும் நன்றுயெடுக்கும். கடும்பத்தியமாக யிருக்கவும். எ-று.

### வெண்காரக் கட்டு.

காரத்தைத் தென்னம்பூ கண்டரைந்துக் கவசித்துந்
நேரத்தில்வைப் புடங்கட்டும்.

(இ-ள்.) வெண்காரக் கட்டாவது:—இளசாகிய தென்னம்பூவுகளை யரைத்து வேண்டியபடி வெண்காரத்திற்குக் கவசஞ்செய்து அதற்கு இரண்டுபங்குபிடிக்கும் குடுவைக்குள் வைத்து மேலோடு மூடி சீலைமண்செய்து குக்கிடப் புடமிடவும், அது உருகிக் கட்டிவிடும். எ-று. 797

### கெந்தகக் கட்டு.

கெந்தி யழவணப்பூவைக் கிண்டியரைத்துக்கவசித்
தந்திபுடமிடக் கட்டிடும்.

(இ-ள்.) கெந்தகக்கட்டாவது :—அழவணப்பூவைப் பரித்து அரைத்து வேண்டியவரையில் கெந்தகத்திற்குக் கவசஞ்செய்து ஓர் ஏனத்தில் வைத்து மேலேனமூடிச் சீலைமண் வலுவாய்ச்செய்து குக்கிடப்புடமிடவும் கெந்தகம் கட்டிவிடும். எ-று. 798

நாகக் கட்டு.

நாகம் பூவரசன்வேர் நன்றரைத்துக் கவசித்து
பாகம்பார் புடமிடக்கட்டும்.

(இ-ள்.) நாகக்கட்டாவது :—பூவரசன்வேர்பட்டை மேற்பரணி போக்கி வேண்டிய நாகத்திற்குக் கவசஞ்செய்து ஓர் ஓட்டில் வைத்து மேலோடுமூடி நன்றாய்ச் சீலைமண் வலுக்கச்செய்து முழுப்புடத்திற் போட அது உருகிக் கட்டாகும். எ-று. 799

துருசு கட்டு.

கண்டரினை நந்திபத்ரி கண்டரைத்துக் கவசித்து
விண்டுபுட மிட்டிடக்கட்டும்.

(இ-ள்.) துருசுகட்டாவது:—நந்தியாவர்த்தயிலையை யரைத்து வேண்டிய துருசுக்குக் கவசஞ்செய்து ஓர் குடுவைக்குள்வைத்து அதற்குமேற்குடுவையைமூடி நன்றாய்ச்சீலைமண் வலுக்கச்செய்து 10-15 வாட்டியிற் புடமிடவும் அதுகட்டிவிடும். எ-று. 800

லிங்கக் கட்டு.

லிங்கநீரவரியினை நின்றரைத்துக்கவசித்துப்
பொங்கநீபுடமிடக் கட்டும்.

(இ-ள்) லிங்கக்கட்டாவது:—ஆற்றலரியிலையையரைத்து வேண்டிய லிங்கத்துக்குக் கவசஞ்செய்து ஓர் அகண்டத்தில்வைத்து அதற்குமேலகண்டப்மூடி நன்றாய்ச்சீலைமண் வலுக்கச்செய்து 12-வாட்டியிற் புடமிட்டெடுக்கவும் உருகிக்கட்டியிருக்கும். எ-று. 801

பாதரசக் கட்டு.

சூதமதுகிலுகிலுப்பைத் தொட்டரைத்துக்சவசித்துப்
போதுபுடமிடவுங் கட்டும்

(இ.ள்) பாதரசக்கட்டாவது:—வட்டக் கிலுகிலுப்பை யிலையை யரைத்து வேண்டிய பாதரசத்தை பக்குவமாய்க் கவசஞ்செய்து ஓர்

சின்ன மொந்தையில் வைத்து மேலோடுமூடிச் சீலைமண்வலுக்கச் செய்து 12-வரட்டியிற் புடமிட்டெடுக்கவும், ரசங்கட்டியிருக்கும். இக் கட்டுகளைப் பல அனுபானங்களி லிழைத்தேற்றவும் அனந்தநோய்கள் தீரும். எ-று. 802

## கல்லுப்புக் கட்டு.

கோணியிற்சிமையகத்திக்குள் ளுப்பைவைத்துபுடம்
தாணிடிற் கட்டிடுந்தான்.

(இ-ள்) கல்லுப்புக்கட்டாவது:—ஓர் கோணிப்பட்டையில் சீமை யகத்தியிலையை யிடித்துவைத்து அதின்மத்தியில் உப்பைக்கொட்டிப் பந்தோபஸ்தாய்ச் சுருட்டிக்கட்டி சாணிபூசி யுலர்த்தி சீலைமண்செய்து முழுபுடமிடவும். கல்லுப்புக்கட்டிடும். தீயதிகரிக்கில் பஸ்மிக்கும். எ-று. 803

## நீர்ப் பேதியாக.

கற்கண்டிணங்கனசமன் கண்டிளநீரில்நிசிவைத்
தறகுண்டிடுங் காயில்.

(இ-ள்.) நீர்ப்பேதியாக:—வெள்ளைக்கற்கண்டும் வெடியுப்பும் சமனாயெடுத்து பொடித்து இளநீரிற்போட்டுக் கலந்து இராத்திரி வைத்து வெடிகாலையிலெழுந்து குடித்திடவும் நீர்ப்பேதி யாகிடும். இப்படி 3-வேளை குடித்துவரவும். வெள்ளைமாறிவிடும். எ-று. 804

## புடமிடாப் பவள பஸ்மம்.

பவளமதைப்பந்நீரிற்பற்ற நாற்சாமம்ரவிவைத்
தவளவதை யெடுபஸ்மமாம்.

(இ-ள்) புடமிடாப்பவள பஸ்மமாவது:—பவளங்களை சுயபந்நீ ரில்போட்டு சூரியபுடமாய் 4-சாமம் ரவியில்வைத்தெடுக்கவும் பஸ்ம மாம். அதை நறுணுக்கி 1-குன்றிடை வெண்ணெய், நெய், தேனிலுண்டு வர தேகம் நன்றாயிருக்கும். இருமல் இரைப்பையுங்கேட்கும். எ-று.

## காதிரைச்சல் மந்தத்துக்கு.

காதிரைச்சல்மந்தங் கண்டிடத்தேள்கொடுக்கிலைச்சார்
எதிரைச்சல்விட்டிடச் செவி.

(இ-ள்) காதிரைச்சல் மந்தத்துக்கு:—தேள்கொடுக்கினிலையைப் பரித்துக் கொண்டுவந்து அதைச்சார்பிழிந்து நோயுள்ளகாதினில் 3-வேளைவிட்டுவரவும். காதிரைச்சல் மந்தமுதல், காதுநோய், காதுகுத்தல், காதில் சீழ்வடிதல், எகுட்சியானது தீரும். எ-று. 806

மாறற் சுரத்திற்கு.

துட்டளவுகூடணையே தொட்டுமுப்பங்குசெய்தொன்
றிட்டளவிற் போஞ்சுரங்கள்.

(இ-ள்) மாறற்சுரத்திற்கு:—கற்பூரம் ஒரு துட்டளவாயுள்ளதை மூன்றுபங்கு செய்து அதில் ஒருபங்கையெடுத்து நுணுக்கி அதைக் கொஞ்சம்சர்க்கரையில்வைத்து அழுத்தி உருண்டையாக்கி உட்கொள்ளவும். இப்படிமற்ற இரண்டுபங்கையுந் தின்னவும். 1-2-3-4 முறை மாறற் சுரங்கள் நின்றுவிடும். எ-று. 807

நிற்காபேதி நிற்க.

புகையூறல்வெற்றிலைக்காம்புடன் சுன்னமூன்றரைத்து
வகையாயீமுறை பேதிக்கே.

(இ-ள்) நிற்காபேதிநிற்க:—ஒட்டரையும், வெற்றிலைக் காம்பும், சுண்ணும்பும் இம்மூன்றும் சமபாகமாய்வைத்து அம்மியி லரைத்து ஒருகழற்சி காயளவு மூன்றுவேளைக்கொடுத்து அதையவர்கள் தின்னுங்கால் பலவிதத்திலும் நிற்காதபேதியானது உடனே நின்றுவிடும். எ-று. 808

வாந்தி பேதிக்கு.

ஐந்துபலம்நெய்யிற் சேங்கொட்டைத் துணித்தொன்றை
முந்தியெரித்தளி யூழிக்கே.

(இ-ள்) வாந்திபேதிக்கு:—ஐந்துபலம் பசுநெய்யில் 1-அல்லது 2-சோரங் கொட்டையைத் துணித்து அதிற்போட்டு ஊறவைத்து அடுப்பிலேற்றிக்காச்சிய பதத்திலிறக்கி வைத்துக்கொண்டு அதில் ஒரு கரண்டிவீதம் 3-வேளைக் கொடுத்துவரவும், வாந்திபேதி நின்று விடும், எ-று. 809

சீதபேதிக்குக் கரு.

ஓலைவாளைச்சமைத்து வுண்ணவுஞ்சீதப்பேதி
மேலைவேளையிற் றீருமிதில்.

(இ-ள்) சீதபேதிக்குக் கருவாவது:—பச்சை ஓலைவாளைமீனைக் காரமட்டாய்ச்சமைத்துத் தின்றுவருகையில், சீதபேதியானதுநின்று விடும். அப்படி நிற்காவிடின் மாதளம்பிஞ்சையறுத்து 2-அல்லது 3-வேளை தின்றுவருகையில் அவசியம் நின்றுவிடும். எ-று. 810

மூலக்கிராணிக்கு கரு.

விடுமூலக்கிராணியற வெள்ளராக்கண்டஞ்சமைத்
திருநாலுதினமேகிடும்.

(இ-ள்) மூலக்கிராணிக்குக் கருவாவது:—பச்சைவெள்ளராமீன் கண்டங்களைக் காரம்மட்டாய்ச்சமைத்து அதையே இரவும் பகலும் விடாமல் தின்றுவருகையில், கிராணி, அதிசாரம், மூலக்கிராணிமுதல் தீரும், இதில்லாவிடின் சுராமீனையும் தின்னநின்றுவிடும் எ-று.

உஷ்ணபேதிக்குக் கரு.

சுரைக்காய் நெற்றிலிசமைத்துண்ணுவிண் பேதியறும்
நிறுக்காய்மூத் தினமுமிடும்.

(இ-ள்.) உஷ்ணபேதிக்குக் கருவாவது:—சுரைக்காயையும் பச்சை நெற்றிலியையும் காரமட்டாய்ச் சமைத்து தின்று வருகையில் உஷ்ண பேதியானது நின்றுவிடும். அப்படிநிற்காதேல், பசுந்தயிரில் கூழமுதைக் கரைத்துண்டுவர நின்றுவிடும். எ-று. 812

காச்சற் கட்டிக்குக் கரு.

காரைபொடிக்குப் பிரட்டிக்கனமிளகு வோரிடையாய்
சூரணம் புன்னையளவிற் சூட்டு.

(இ-ள்.) காச்சற்கட்டிக்குக் கருவாவது:—உலர்ந்த பொட்டுக் காரைப்பொடிக்கு இரண்டிடை உப்பும், ஓரிடை மிளகுஞ்சேர்த்து யாவும் ஒன்றாயிடித்துச் சூரணஞ்செய்து அதில் கால்பலம் காலைமாலை 3-5-நாள் தின்றுவரவும். காச்சற்கட்டி கரைந்துபோய்விடும் எ-று.

கற்றாழை நாற்றமாற.

அண்டைம் விளக்கெண்ணை யக்குளிற்றடநிசி
உண்ணுலு தினத்திலொழியும்.

(இ-ள்.) கற்றாழைநாற்றமாற:—தினசாரி இராத்திரி காலங்களில் விளக்கெண்ணையைக் கற்றாழை நாற்றம்பிடித்தவனது கக்கம் அதா

வது அக்குளில் ஏமாறுது தடவிக்கொண்டு நித்திரைசெய்துவரவும் அக்கற்ருழை நாற்றம் ஒருவாரத்திற்குள் நின்றுவிடும். எ-று. 814

உதிரவாந்தி மாற.

வெண்சுண்ணும்புச்சாக்கை வெண்ணெயி லுதிரவாந்திக்
குண்ணண்ணுடங் குன்றிடும்.

(இ-ள்.) உதிரவாந்திமாற:—வெள்ளைச்சுண்ணும்பு அதாவது சீமை சுண்ணும்பைத் தூள்செய்து 2-3-குன்றியளவெடுத்து வெண்ணெயிற்குழப்பி 3-அல்லது 5-நாள் காலைமாலை உண்டுவரவும். உதிர வாந்தியானது உடனே நின்றுபோய்விடும். எ-று. 815

நவமூல மேகிட.

காராகருணையரைத்து கழற்காய்வீதங் கேழ்வரகின்
மாவதிற்பிரட்டி யுலர்த்தியளி.

(இ-ள்.) நவமூலமேகிட:—காரலாகிய காட்டுக்கருணைக்கிழங்கை யரைத்து கெச்சைக்காய் பரிமாணம் உருட்டி கேழ்வரகின்மாவிற் போட்டுப் பிரட்டி அதை யுலர்த்திதின்னக் கொடுத்துண்ணுகையில் அந்த நவமூலமுதல் தீரும். எ-று. 816

சவுக்காரச் செயநீர்.

சுன்னமதைச் சோப்பதனிற் றெட்டுவைக்கச் செயநீரும்
முன்னமருளைக் கரைக்குமுதல்.

(இ-ள்.) சவுக்காரச் செயநீராவது:—சவுக்காரமென்னும் சுண்ணும்புச் சோப்பினில் கொஞ்சம் வெறுஞ்சுண்ணும்பை ஈரமாய்வைத்திட அது தண்ணீராய்க் கரைந்து ஜெயநீராய்விடும். அதிற்கொஞ்சமெடுத்து மருள்களின்மேல்வைக்க அவைகள் கரைந்துவிடும். அப்புண்களைத் தேங்காயெண்ணெயைத்தடவி யாற்றவும். எ-று. 817

பூநாகச் செயநீர்.

இந்துப்பை பூநாகத்திற்றூவச் செயநீராய்
வந்துப்பயங் கரைக்குமதில்.

(இ-ள்.) பூநாகச்செயநீர்:—பூநாகமென்னும் நாக்குப்பூச்சியை ஓர் ஏனத்திற்போட்டு அதின்மேற் கொஞ்சம் இந்துப்பைத் தூவிட

வும், அது தண்ணீராய்க் கரைந்து ஜெயநீராய்விடும். இதை வேண்டிய படி செய்துகொள்ளவுதவும். எ-று. 818

அயமுருக்குஞ் செயநீர்.

அயச்செம்புருக்குகையிலே நத்ராபூநாகமிட
அயச்செம்பு தண்ணீரதாம்.

(இ-ள்.) அயமுருக்குஞ் செயநீர்:—அயச்செம்பை குகையிலேற்றி எந்நேரம் உருக்கினாலும் அது கொதகொத வென்றிருக்குமே யல்லாது தண்ணீராய்க் கண்ணுடுவது மாத்திரம் கடினம். அதில் ஐந்தாறுநாக்குப்பூச்சிகளை போட்டுருக்க உடனே தண்ணீராய்விடும். எ-று.

மஞ்சா வெள்ளைக்கு.

பிரண்டைச்சார் நல்லெண்ணெயிற்கலந்து மூனுநாண்
அரண்டமஞ்சா வெள்ளையறும்.

(இ-ள்.) மஞ்சாவெள்ளைக்கு:—முத்தின பிரண்டையை வதக்கிச் சார்பிழிந்து அதற்குச் சரியாய் நல்லெண்ணெவிட்டுக் கலந்து அதை 3-நாள் சூரியபுடமாய்வைத்து 3-அல்லது 5-நாள் காலையிற்குடித்து வரவும் மஞ்சாவெள்ளையானது தீரும். எ-று. 820

வெடியுப்புச் செயநீர்.

சீனிச்காரஞ்சார் போணங்கரைக்கன்பாலரைத்து
மேனிராவையேறச் செயநீராம்.

(இ-ள்.) வெடியுப்புச் செயநீராவது:—படிகாரம், வெண்காரம், நவாச்சாரம், கரியுப்பு, வெடியுப்பு இவ்வைந்தும் சமனிடையாய்ச் சேர்த்து வெள்ளெருக்கன் பால்விட்டு 2-சாமமரைத்து பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி சீலைமண் வலுக்கச்செய்து 13-வரட்டியிற் புடமிடவும். சுன்னமாம். அதையெடுத்துப் பனியில் வைக்கவும் செயநீரிறங்கும். அதில் நானுவித சாக்குகளையுங்கட்டும், நவலோகங்களையும் வேதிக்கும். பலநோய்களையுந்தணிக்கும் எ-று.

பாதரசக் கட்டு.

அம்மான்பச்சரிசி குகையதிலுருக்கச் சுத்திரசம்
தம்மாற்கட்டிடும் நன்றாய்த்தான்.

(இ-ள்) பாதரசக்கட்டாவது:—அம்மான் பச்சரிசியிலையை அரைத்த அவ்விழுதை குகை சில்லு இரண்டுஞ்செய்து நன்றாயுலர்த்தி அக்குகையில் சுத்திசெய்த பாதரசத்தைவிட்டு வாய்க்குச்சில்லுமூடிச் சீலமண்செய்து 8-வரட்டியிற் புடமிட்டெடுக்கவும் கட்டாம். எ-று.

நேத்திர பேதி

நாகுசாணிப்பாலிலாமணக்கு பருப்பிழைத்துவிழி
யாகபோடும் நீர்ப்பேதியாம்.

(இ-ள்) நேத்திரபேதி:—ஈனாத எருமை அதாவது நாகுகண்ணதின்சாணத்தைப்பிழிந்து அதில்சித்தாமணக்குப் பருப்பை இழைத்துக் காலையில் இரண்டுகண்களிலும் கலிக்கமாய்த் தீட்டிவிடவும். அதினால் கண்களிலுள்ள நீரெல்லாம் வெளியில்கக்கி நீர்பேதியாம். எ-று.

தாது விர்த்திக்கு.

இந்திரகோபத்தைவெல்லத் திட்டுருண்டையாய்விழுங்கத்
தந்திரமாய்த் தாதுவிர்த்தியாம்.

(இ-ள்) தாதுவிர்த்திக்கு:—இந்திரகோபம் 1-வெல்லத்தில்வைத்துருண்டையாய் விழுங்கிவிடவும். இப்படி வருஷம் 1-க்கு வாரம் ஒவ்வொன்றாய் தப்பாமல் விழுங்கிவரவும். மறுவருஷம்வரையில் இந்திரிய புஷ்டி தாதுவிர்த்தி அதிகரித்திருக்கும். எ-று. 824

விந்து கட்டியிருக.

நீர்முட்டான்கிழங்காப் பாலிற்காச்சியுண்டுவர
பார்கட்டாய் விந்திருகிடும்.

(இ-ள்.) விந்துகட்டியிருக:—தண்ணீர்முட்டான் கிழங்கைச் சதைத்துப் பசும்பாலிற்காச்சி யுண்டுவாவும். இதிற் சர்க்கரை சேர்த்தாலும் சேர்க்கலாம். இதை இவ்வாறு ஒருமண்டலம் உண்டுப்போகித்துவரவும். நெடு நாள்விந்தானது கட்டியிருகியிருக்கும். எ-று. 825

வாய்நீர் ஒழுகலுக்கு.

தான்றிக்காய்சுட்ட சூரணத்திடை சீனியுஞ்சேர்த்துண்
தோன்றிக்கால் நிற்கும்வாய்நீர்.

(இ-ள்) வாய்நீர் ஒழுகலுக்கு:—தான்றிக்காய்களைச் சுட்டுச் சூரணமாய்ச்செய்து அதிற் சினிசர்க்கரையுஞ்சேர்த்து வெறுகடிப் பிரமா

ணம் 1-அல்லது 2-வாரம் காலே மாலே வெந்நீரிலுண்டுவரவும். வாயில் நீர் ஒழுகுதலுடன் பல்வலியுந்தீரும். எ-று. 826

அறிவானததிகரிக்க.

திருநீற்றுப்பத்திரியைச் சென்றுப்பாலிலரைத்துண்
ஒருநூற்றுப்புத்தி யுளதாம்.

(இ-ள்.) அறிவானததிகரிக்க:—திருநீற்றுப் பத்திரிச் சமூலத்தைச் சதைத்து அல்லது துண்டுதுண்டாய் அறிந்து அதைப் பசும்பாலிற்போட்டுக் காச்சி 1-வாரம் அல்லது 2-வாரம் குடித்துவரவும். அறிவானததிகரிக்கவும் விர்த்திசெய்யும். இதில் சர்க்கரைசேர்த்தாலும் சேர்க்கலாம். எ-று. 827

நாட்பட்ட இருமல்தீற.

எண்ணேயிற்பூநாக மெரித்திட்டிட நாட்படுமிருமல்
குண்ணதிற்போலே குறுகியது.

(இ-ள்) நாட்பட்ட இருமல்தீர:—நல்லெண்ணேயில் பூநாக மென்றும் நாக்குப்பூச்சிகளேச் சதைத்து அதிற்போட்டுக் காய்ச்சி பதத்திலிறக்கி வடிகட்டி இறுத்துவைத்து அதில் ஓர்கரண்டிவீதம் 3-5-7 நாள் குடித்துவரவும் நாட்பட்ட இருமல், இரைப்புமுதல் தீரும். எ-று.

கண் அமரத்திற்கு.

விளக்கெண்ணேத்தூதுளேக் கடுக்காய்ச்சிலேயிற்குழப்பி
துளிக்கண்ணிலே றப்பிழி.

(இ-ள்.) கண் அமரத்திற்கு:—விளக்கெண்ணேயும், தூதுவேளேச்சாறும், கடுக்காய்த்தூளும் ஒன்றுய்க்குழப்பி அதைச் சிலேமேலேற்றி அதை அமரமுள்ள இரண்டுகண்களிலேயும் பிழிந்துவரவும். அமரமானது தீர்ந்துவிடும். இப்படி மூன்றுவேளேப்பிழிந்து வரவும். எ-று.

பித்த வெடிப்புக்கு.

மருதனிலேவிழுதாப் பால்விட்டுகரைத்துண்மூணுள்
கருதவது வெடிப்பதுபோங்காண்.

(இ-ள்) பித்தவெடிப்புக்கு:—மருதனிலேயை யரைத்து அவ்விழுதைப் பசும்பாலிற்கலக்கி அதை மூன்றுநாட் காலேயில் குடித்துக்கொண்டுவரவும் பித்தத்தினுல் கால்கைகளில் வெடியுண்டாகி புண்ணுயிருப்பது அகன்றுவிடும். இன்னும் பித்தயெரிச்சல்களும்தீரும் எ-று

வெந்தய லேகியம்.

வெந்தயத்தூள்கற்கண்டு வின்பாகிற்கிண்டித்தேன்
முந்தவிட்டுக் கிளரலேகியம்.

(இ-ள்.) வெந்தய லேகியமாவது:—வெந்தயத்தைத் தூள்பண்ணிவஸ்திரகாயஞ்செய்து வெள்ளைக் கற்கண்டைப்பாகுசெய்து அதிற் கொட்டிக்கிண்டி தேன்விட்டுக்கிளறி இரண்டொருநாள் இருவேளை கழற்சியளவு உண்டுவரவும் பேதி, சீதபேதி, உஷ்ணபேதி, கிராணி யாவுந் தீரும். எ-று. 831

சீரக லேகியம்.

சீரகத்தூள்கற்கண்டதின் பாகிற்கிண்டியேதேன்
வாரதிற் கிளறிடவுமுண்.

(இ-ள்) சீரகலேகியமாவது:—சீரகத்தைப் பொடித்துத்தூளாக் கிவஸ்திரகாயஞ்செய்து வெள்ளைக்கற்கண்டைப் பாகுசெய்து அதிற் கொட்டிக்கிண்டி அதிற்றேன்விட்டுக்கிளறி காலை மாலை 4-5 நாளுண்டு வரவும் அஜீரணம், மந்தம், சாதஞ்செரியாமை, உஷ்ணவாய்வு தீரும். எ-று. 832

ஓம லேகியம்.

ஓமத்தைக்கற்கண்டினுட் பாகாக்கியுந்தேனைத்
தாமத்தில்கிண்டிடவுமுண்.

(இ-ள்.) ஓமலேகியமாவது:—ஓமத்தைப் பொடிசெய்து வஸ்திரகாயம்பண்ணி வெள்ளைக்கற்கண்டைப் பாகாக்கி அதில் ஓமத்தூளைக் கொட்டிக் கிண்டி தேன்விட்டுக்கிளறி வைத்துக்கொண்டு காலை மாலை 3-5-நாள் கெச்சைக்காயளவு உட்கொண்டுவரவும். உஷ்ணபேதி முதல்யாவுந்தீரும். எ-று. 833

தனிலிங்கச் செயநீர்.

லிங்கமது கதலிபழத்திற் புளியங்கொட்டைத்தோல்
அங்கதனுட் பிசரியமைத்திடு.

(இ-ள்,) தனிலிங்கச் செயநீராவது:—சாதிலிங்கத்தைச் சுத்தி செய்து தூள்பண்ணி வாழைப்பழத்தையுரித்து, புளியங்கொட்டைத் தூளையுஞ்சேர்த்து யாவும் ஒன்றாய்ப்பிசரி ஓர் தட்டைப்பீங்கானிற் சாய்ப்பாய் வைத்திருக்க அதில் ஜெயநீரிறங்கும். அதனில் இரண்

டொருதுளி சர்க்கரையில் 3-நாள் 2-வேளை தின்னக்கொடுத்துவர, சுரமுதல் தீரும். எ-று. 834

### தனிப்பூரச் செயநீர்.

பூரமது வாழைப்பழம் புட்டுபுளிவித்துத்தோல்
நேரபொடித் தேறவைத்திடு.

(இ-ள்.) தனிப்பூரச் செயநீராவது:—இரசகற்பூரத்தைச் சுத்தி செய்து தூள்பண்ணியும், புளியன்கொட்டையைப் பொடிபண்ணியும், வாழைப்பழத்தைத் தோலுரித்தும் ஓர் பீங்கானில் இம்மூன்றையும் போட்டு ஒன்றாய்ப் பிசைந்து அப்படியே சாய்த்துவைத்திருக்க செய நீரிறங்கும். அதில் இரண்டொருதுளி சர்க்கரையிலளிக்க வாய்வுமுத லியதுதீரும். எ-று. 835

### தனிவீரச் செயநீர்.

வீரமுடன் வாழைப்பழம் வித்துபுளியன்றோலை
ஏரபொடித் தூறவைத்திடு.

(இ-ள்.) தனிவீரச் செயநீராவது:—சவ்வீரத்தை நன்றாய்ச் சுத்திபண்ணி, புளியங்கொட்டைத்தோலைத் தூள்செய்து வாழைப் பழந் தோலையுரித்து யாவும் ஓரேனத்திற்போட்டுப்பிசைந்து அதைச் சாய்த்துவைத்திருக்கவும் அதில் செயநீரிறங்கும். அதில் 1-துளி சர்க் கரையிற் கொடுக்கவும் சன்னிமுதலிய சகல நோய்களுந்தீரும். தாஸ்தி யளிக்கக்கூடாது. எ-று. 836

### தனிச்சூதக செந்தூரச் செயநீர்.

செந்தூரம் வாழைப்பழத்திற் புளியன்கொட்டைத்தோல்
வந்தூரத் தூளதுவாய்வை.

(இ-ள்) தனிச்சூதகச் செந்தூரச் செயநீராவது:—இரசச் செந் தூரத்தைத் தூள்செய்து வாழைப்பழத்தைத் தோலுரித்து புளியங் கொட்டைத்தோலையும் பொடிபண்ணி யாவையும் ஓர் ஏனத்தில்போட் டுப் பிசைந்து வைத்திருக்கவும், அதில் செயநீரிறங்கும். அதனில் இரண்டொருதுளி சர்க்கரையிலளிக்கவும். பித்தசுர முதலியதுந் தீரும். எ-று. 837

### தனிக்கெந்திச் செயநீர்.

கெந்தியினை வாழைப்பழங்கிட்டி புளிவித்ததின்றோல்
முந்திபொடி தூவியே வைமுன்.

(இ-ள்) தனிக்கெந்திச் செயநீராவது:—நெல்லி கெந்தகத்தைச் சுத்திசெய்து பொடிபண்ணிவாழைப்பழத்தைத் தோலுரித்துபுளியன் கொட்டைத்தோலைப் பொடிசெய்து யாவையும் ஓரேனத்திற்போட்டுப் பிசைந்து அதைச்சாய்த்து வைத்திருக்கவும், செயநீரிறங்கும். அதில் இரண்டொருதுளி சர்க்கரையிலளிக்க புண், பொட்டு, சொரிபடை, தேமல் யாவும் அகலும். எ-று. 838

தனித்தாளச் செயநீர்.

தாளகத்தை வாழைப்பழந்தன்னிற் புளிவித்துத்தோல்
தூள்வற்றைத் தூவிவைத்திடு.

(இ-ள்.) தனித்தாளகச்செயநீராவது:—தாளகத்தை நொச்சிலிச் சாற்றில் இரண்டொருசாமஞ் சுருக்குகொடுத்துப் பொடிபண்ணி, வாழைப்பழத்தை தோலுரித்து புளியன்கொட்டைத்தோலைத் தூள் செய்து யாவும் ஓரேனத்திற்போட்டுப் பிசைந்து சாய்த்துவைத்திருக்கவும், செயநீரிறங்கும். 2-3-துளி சர்க்கரையிலளிக்க, இருமல், இரைப்பு, ஈளை, க்ஷயம், காசமுதல்தீரும், யாவுக்கும் இச்சாபத்தியமே எ-று. 839

தனி அன்னபேதிச் செயநீர்.

அன்னபேதி கதலிப்பழந்தன்னிற் புளிவித்ததின்மேல்
முன்னந்தூளுபட பிசைந்திடு.

(இ-ள்.) தனிஅன்னபேதிச் செயநீராவது:—அன்னபேதி செந்தூரஞ் செய்திருப்பதோடு வாழைப்பழத்தையுந் தோலுரித்து புளியங் கொட்டைத்தோலையும் பொடிபண்ணியாவையும் ஓரேனத்தில்பிசைந்து வைத்திடச் செயநீரிறங்கும். அதில் 4-5-துளி சர்க்கரையிலளிக்க சுரம், பேதிமுதல் சகலமுந்தீரும். எ-று, 840

விரப்புருதிக்கு.

உப்பாமணக்குப்பூ வுள்ளிமஞ்சளரக்கம்பால்
வைப்பாட்டி கும்பிதகித்தெடு.

(இ-ள்.) விரப்புருதிக்கு:—சித்தாமணக்குப்பூவும், மஞ்சள், ஈருள்ளி, உப்பு இவைகளை எருக்கன்பாலிலரைத்து பில்லைதட்டிக்காயவைத்து உமிக்கும்பியில் தூந்தி வெந்தபின்னெடுத்து நொருக்கி வைத்துக்

கொண்டு தேன்நெய்யில் 1-சுண்டைக்காயளவு இருவேளை 3-நாள் கொடுக்க விரப்புருதிதீரும். எ-று. 841

முதுகு நோவிற்கு.

கலங்கொம்பு சுட்டபொடி கண்டாவி னெய்பாலில்
விலங்கும்படிக் கதையளி.

(இ-ள்.) முதுகுநோவிற்கு:—கலைமான்கொம்பு பஸ்மமாகிலுஞ் சரி அல்லது அதைச் சுட்டாகிலுஞ்சரி பொடித்துத் தூள்செய்து அதில் இரண்டொரு குன்றியிடை பசும்பால், நெய், தேன் இவைகளில் காலைமாலை 3-4-நாளுண்டுவரவும். முதுகுநோய், மார்புநோய், கழுத்துநோய், வாய்வு, குத்தல், குடைச்சல், நோதல்முதல் இன்னும் பல நோய்களையுந்தீர்க்கும். எ-று. 842

ஏகமூர்த்தி ரசம்.

தேனிலெலிப் பாஷாணஞ் சென்றொரு சாமமவித்து
சீனியில் வேய்குழைவாய்வைத்துண்.

(இ-ள்) ஏகமூர்த்திரசமாவது:—சுத்திசெய்த எலிப்பாஷாணத்தைத் தேனிற்போட்டு ஒரு ஜாமம்வரையில் வேவித்து ஆறியபின் அதைநுணுக்கி அதில் உளுந்திடை சீனிசர்க்கரையிற் கலந்து மூங்கிற் குழைக்குளேற்றி யதை வாயினில்வைத்து விழுங்கிவிடவும், அதில் வாந்தியாம். வாந்தியதிகப்படின் புளிகுழம்பு குடிக்கவும் நிற்கும். இதில் பேதியாகாது. எ-று. 843

திவிமூர்த்தி ரசம்.

வாளமெலிப்பாஷாணம் வைத்தவிசாமந்தேனில்
மீளசுரம்போ முன்போலுண்.

(இ-ள்.) திவிமூர்த்திரசமாவது:—சுத்திசெய்த எலிபாஷாணத்துடன், சுத்திசெய்த வாளமுஞ்சேர்த்து தேனில்போட்டு ஒருஜாமம் வேவித்து ஆறியபின்னெடுத்து அரைத்து அதில் 2-குன்றியளவுசீனியிற்கலந்து மூங்கிற்குழாயிலேற்றி வாயில்வைத்துண்ணவும். சுரமான தகலும். எ-று. 844

திரிமூர்த்தி ரசம்.

பால்துத்த மயில்லுத்தம் பற்றெலிபாஷாணந்தேன்
மேல்சொன்னவிதமாய்ச் செய்துண்.

(இ-ள்) திரிமூர்த்திரசமாவது:—பால்துத்தம், மயில்துத்தம்,எலிப்பாஷாணம் இவைகளைச்சுத்தி பண்ணிதேனிற்போட்டு ஒருசாமமரைவேவித்து ஆறியபின்னெடுத்து சீனியில் ஒருபயர்வீதம் கலந்து மூங்கிற்குழாயில் ஏற்றி வாயில்வைத்துண்ணவும். சீதசுரமுதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 845

32 ஜெயநீர்ப் படலம் 73.

முற்றிற்று.

## 33. அநுபானப் படலம் 97.

மகாப்பிரசண்ட மாருதம்.

வீரம்பூரம்லிங்கஞ் செந்தூரங் கெந்திபலகையுங்கற்
பூரமேழுமங்கரைத்திடு.

(இ-ள்.) மகாப்பிரசண்ட மாருதமாவது:—இலிங்கம் 10, பூரம் 10, வீரம் 1, இரசசெந்தூரம் 1, கெந்தகம் 1¼, 5-ம்சுத்திசெய்து யாவும் பலன்கணக்காய் கலுவத்தில் 2-ஜாமமரைத்து அதில் பின்னும்பச்சைக்கற்பூரம் ஆலாத்திக் கற்பூரம் வகைக்கு விராகனிடைச் சேர்த்து நன்றாய் அரைத்து அடியில்வரும் அனுபானங்களில் பலநோய்கட் கேற்றவும். எ-று. 846

பிரசண்டமாருதச் செந்தூர அநுபானம்

கைகால் சோர்வுகட்கு அனுபானம்.

கைகால்சோர்வுக்கு மிளகின்றாளிலிருவேளை
வையேழ்நாளது மாறவே.

(இ-ள்.) கைகால்சோர்வுக்கு அனுபானமாவது:—மிளகின்றாளில் 7-நாள் காலை மாலை குன்றியளவா யுண்ணவும். கோழிக்குஞ்சு சூப்புடன் காட்டுப்புறாப் பொரியல் புளிதள்ளி காரம்மட்டாய் கறி சமைத்துண்ணப்போம். நல்லெண்ணெ கடுகாகாது. எ-று. 847

சூலைகட்கு அனுபாம்.

சூலைகட்குவெல்லமல்லதுச் சுக்குத்தூளிலமுன்போல்
மேலைகத்திரி முருங்கையளி.

(இ-ள்.) சூலைகட்கு அனுபானமானது;—பனைவெல்லத்திலாவது அல்லது சுக்குத்தூளிலாவது ஒருகுன்றியளவு 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளையுமுண்ணவும். கத்திரி, முருங்கை, பீர்க் கன்பிஞ்சுகளாய் புளிதள்ளி காரமட்டாய் சமைத்து உண்பிக்கவும். எ-று. 848

சன்னிகட் கநுபானம்.

தேனலதுதிரிகடுகு செய்தூளிலுண்டிடவும்
ஆனமிளகது பத்தியம்.

(இ-ள்.) சன்னிகட்கு அனுபானமாவது:—தேனிலாவது அல்லது சுக்கு, மிளகு, திப்பிலிபொடிசெய்த தூளிலாவது ஒரு குன்றியளவு 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உண்டுவரவும். பத்தியம் மிளகுநீர்சாதம் உண்டுவரவும். எ-று. 849

புறங்கழுத்திசுவுகட் கநுபானம்.

சித்தண்டத்தைலத்திற் சென்றேழ்நாளிருவேளை
உத்தண்டத்தினி லுண்டிடும்.

(இ-ள்) புறங்கழுத்திசுவுக்கு அநுபானமாவது:—சித்தண்டமென்னும் கோழிமுட்டைத்தைலத்தில் 7-நாள் காலைமாலை இருவேளைகளிலும் ஒருகுன்றியிடை யுண்டுவரவும். பத்தியம் முருங்கை, கத்திரி, துவரை, புளிமட்டாய் கறிசமைத்துண்பிக்கவும். எ-று. 850

நாவரட்சி தோஷங்கட் கநுபானம்.

கம்மார்வெற்றிலைச்சாற்றிற் கண்டிருவேளைமூனாள்
இம்மாத்திர முண்டிடும்.

(இ-ள்.) நாவரட்சி தோஷங்கட் கநுபானமாவது:—கம்மார்வெற்றிலைச்சாற்றில் 3-நாள் காலை மாலை இருவேளையிலுமுண்டுவரவும். பத்தியம். மாவிலிங்கைப்பட்டை, முருங்கைப்பட்டை வகைக்குப் பலம்-5 கூட்டி ஒருபடிநீரிற்காச்சி நொய்யரிசிபோட்டு புனற்கஞ்சிகாய்ச்சிவார்க்கவும்,புளிவுப்பில்லாது குடிப்பிக்கவும். எ-று. 851

மார்புவலிக் கநுபானம்.

திரிகடுகுசூரணத்தில் சென்றைந்தல்லதுவேழ்நாள்
பருகவது மாறிடும்பார்.

(இ-ள்) மார்புவலிக்கநுபானமாவது:—திரிகடுகுச் சூரணத்தில் 5-அல்லது 7-நாள் காலை மாலை இருவேளையிலும் பருத்திவிரை யிடித்துவெந்நீரிர்பிசைந்து பாலெடுத்து பசும்பாலில் தேங்காய்ப்பால்சேர்த்துபச்சரிசி கஞ்சிகாய்ச்சி குடிப்பிக்கவும். எ-று. 852

வயர்வலிக் கநுபானம்.

சீரகத்தூளில்மூனாள் தேனிலிழைத்துண்டிடவும்
சோகஞ்சிமிளகு நீர்வார்.

(இ-ள்) வயர்வலிக்கநுபானமாவது:—சீரகத்தூளில் 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் தேனிளிழைத்து உண்டுவரவும். பத்தியம், பொரிசாறு அல்லது மிளகுநீர்சாதம்புளிப்புப்புமட்டாய் சமைத்து உண்பிக்கவும். எ-று. 853

இருமலிற் கநுபானம்.

ஆடாதோடைச்சுரசமல்லது கியாழமன்றி
போடாய்சித்தரத்தை தூளில்.

(இ.ள்) இருமலிற்கநுபானமாவது:—ஆடாதோடைச்சுரசத்திலாவது அல்லது அதைக்கியாழங்காச்சியாவது அன்றியும் சித்தரத்தைத் தூளிலாவது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலுங் கொடுத்துவரவும் முன்போலவே பத்தியஞ் செய்யவும். எ-று. 854

மந்தாரகாசத்துக் கநுபானம்.

சித்தரத்தைப்பேரரத்தைச் செல்லமுரிக்கியாழத்துண்
டித்தரை வெந்நீர்சாதமிடு.

(இ-ள்) மந்தாரகாசத்துக் கநுபானமாவது:—சித்தரத்தை, பேரரத்தை வகைக்குப்பலம் கால் சேர்த்து அமுரி அதாவது சிறுநீர்விட்டுக்கியாழங்காய்ச்சி அதில் 3-நாள் காலைமாலை இருவேளைகளிலு முண்டுவரவும். பத்தியம், வெந்நீர்சாதமாயுண்டுவரவும். எ-று. 855

நெஞ்சுவலிக் கநுபானம்.

மிளகுசுக்குத்தூளில் விண்டுப்பதின்மூன்றேநாள்
இளகவும் பத்தியத்துண்.

(இ-ள்.) நெஞ்சுவலிக் கநுபானமாவது:—மிளகு, சுக்கு, இவ்விரண்டும் பொடிசெய்த சூரணத்தில் ஒருகுன்றியளவு 13-நாள் காலை

மாலை இருவேளைகளிலும் உண்டுவரவும். பத்தியம் கத்திரிப்பிஞ்சு,பீர்க்கன், துவரை, பொரியல் மிளகு நீர்சாதமுண்ணவும். எ-று. 856

பித்தவாய்வுக் கநுபானம்

சோம்பிஞ்சிமுந்திரிப்பழக் கியாழத்துண்மூனாள்
தாம்பந்திசந்தி தனில்.

(இ-ள்.) பித்தவாய்வுக் கநுபானம்:—சோம்பு, இஞ்சி, முந்திரிப் பழம், வகைக்குப்பலம் கால் சேர்த்துக் கியாழம்வைத்து 3-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உண்டுவரவும். பத்தியம் வறுத்தவுப்புச் சுட்டபுளி கரிசமைத்துண்ணவும். எ-று. 857

வாந்திக் கநுபானம்

நெற்பொரி பருத்திபருப்புத் திப்பிலியேலம்
நற்படிக் கியாழமிட்டுண்.

(இ-ள்.) வாந்திக் கநுபானமாவது:—நெற்பொரி, பருத்திப் பருப்பு, திப்பிலி, ஏலம் யாவுஞ்சமனாய்ச்சேர்த்துக் கியாழமிட்டு சர்க்கரை கலந்து 3-நாள் காலைமாலை இருவேளைகளிலும் உண்டுவரவும். இதற்கு இச்சாபத்தியமாக யிருக்கவேண்டும். எ-று. 858

வெள்ளோக்காளத்திற் கனுபானம்.

இஞ்சிசிறுதிப்பிலியேலஞ் சுக்குச்சூரணித்து
மிஞ்சிசருக்கரை யிலுண்மீளும்.

(இ-ள்.) வெள்ளோக்காளத்திற்கநுபானமாவது:—இஞ்சி, சிறு திப்பிலி, ஏலம் வகைக்கு ஐ-ரி $1\frac{1}{4}$-சுக்கு ஐ-ரி $3\frac{3}{4}$ கூட்டிச் சூரணித்து சர்க்கரை ஐ-ரி 5-சேர்த்து 6-பங்காக்கி 3-நாள் அந்திசந்தியுண்டு வரவும். இதற்கு இச்சாபத்தியமாகவே யிருக்கவேண்டும். எ-று. 859

சச்சுவாதத்திற் கனுபானம்.

அர்க்கம்பழுப்புச்சாற் றேலங் கிராம்பிற்செந்தூர
வர்க்கஞ்சண்டையளவேற்றதில்.

(இ-ள்.) சச்சுவாதத்திற் கநுபானமானது:—எருக்கம் பழுப்புச் சார் ஆழாக்கில் ஏலம், கிராம்பு, வகைக்குதோலா 3 - சேர்த்தரைத்து 26-பணவிடை செந்தூரங்கூட்டி சுண்டைவிதந் குளிசித்து 13-நாள் அந்தி சந்தியுண்ணவும். பெரும்புரா, காட்டுப்புரா, உப்பு புளிநீக்கி

சமைத்துண்ணவும், அந்த இறகைவேகவைத்து அச்சலத்தைமேலுக் குவார்க்கவும். எ-று. 860

மூலவியாதிக் கனுபானம்

நல்லவெல்லமிளகு செந்தூரஞ்சேர்த்தரைத்துண்ண
அல்லலில்லைவிலகு மூலம்.

(இ-ள்.) மூலவியாதிக் கநுபானம்:—நல்லவெல்லம் பலம் அரை மிளகு பலம் 10-செந்தூரம் பணவிடை 21-சேர்த்தரைத்து 13-நாள் அந்தி சந்தி யுண்ணவும். காட்டுக்கருணை, கரிக்கருணை, புளியாரைக் கீரை, முள்ளங்கி, சுட்டபுளி, வெள்ளையுப்பு, கூட்டி சமைத் துண்ண வும். ஒருவேளை காட்டுப்புராக்கரி சமைத்துண்ணச் செய்யவும். எ-று,

வாய்வுகட் கனுபானம்.

பரங்கிசக்கைகிராம்புதிப்பிலி பனைவெல்லங்கிருதஞ்செய்துண்
இறங்கப்படும் வாய்வனைத்தும்.

(இ-ள்) வாய்வுகட்கநுபானம்:—பரங்கிச்சக்கை, கிராம்பு, திப்பி லிவகைக்குப்பலம் கால் கூட்டிப் பனைவெல்லம் பலம் 1-சேர்த்து கிரு தஞ்செய்து 3-5-7 நாள் அந்தி சந்தி இருவேளைகளிலு முண்டுவரவும். கடும்பத்தியமாய் வைக்கவும். எ-று. 862

வாந்திபேதிக் கனுபானம்.

ஊழிக்குப்பனைவெல்லத்துட்கொடுக்கவிலகிடுமங்
நாழிக்குள் வாந்திபேதி.

(இ-ள்,) வாந்திபேதிக் கநுபானம்:—ஊழிநோயாகிய வாந்தி பேதிகண்டவர்க்கு பனைவெல்லத்திற்குள் ஒரு பணவிடை செந்தூரம் வைத்து உருண்டையாக்கி அதை அவாள்வாயிற்போட்டுத் தண்ணீர் கொஞ்சம் வார்க்கவும் உடனே அவ்வாந்திபேதியானது நின்றுவிடும். அதுநிற்காவிடில் மறுபடியும் முன்போலக் கொடுக்கவும் நிற்கும் எ-று.

சகலத்திற்கும் அநுபானம்.

பனைவெல்லம் பேயன்வாழைப்பழத்திற் றேனிலிடத்
தனைசெல்லும் நோயகன்று.

(இ-ள்.) சகலத்திற்கும் அநுபானமாவது:—பனைவெல்லம், தேன், பேயன் வாழைப்பழம் ஈதொன்றினில் வைத்தேற்ற குழை

தைமுதல் பெரியவர்க்குரிய பலநோய்களும் தீவிரத்திற்செல்லும். இதில் பச்சைக்கற்பூரம் ஆலாத்திக் கற்பூரம் 2-ம் அப்பப்போது சேர்த்தாலும் நன்மைதான். எ-று. 864

சாதிலிங்கக் குளிகை-கிரீவுமெட்டு.

லிங்கம்லவங்கஞ் சாதிபத்திரிகொள்ளவிநீரி
லங்கரைத்துக் குளித்திடு.

(இ-ள்.) சாதிலிங்கக் குளிகையாவது:—சாதிலிங்கம், லவங்கம், தாளிச்சபத்திரி 3-ம் சமனுய்ச்சேர்த்து கொள்ளுவேவித்த தண்ணீரில் 2-சாமமரைத்து குன்றிமணிபோல் குளிகைகள் திரட்டி நிழலி லுலர்த்தி இதனடியில் குறிக்கும் அநுபான விதிப்படி பலநோய்க் களிக்கவும். எ-று. 865

வெள்ளைக் கநுபானம்.

வேளைவேர்பட்டைதட்டி வெண்பசும்பாலிலரைத்துந்
நாளையே வெள்ளைக்களி.

(இ-ள்.) வெள்ளைக்கநுபானமாவது:—ஒருபிடிவேளைவேரைப் பட்டைதட்டி பசும்பாலிலரைத்து அரைப்பப்டிபாலில் 1-குளிகைவீதமாய் 1-வாரம் காலைமாலை உண்டுவரவும் வெள்ளைநோய்தீரும். பத்தியம் வறுத்தவுப்பு சுட்டபுளி கூட்டவும். எ-று. 866

சுரத்திற் கநுபானம்.

ஏகுமேதேனிபலதிஞ்சிச் சாற்றினிற்சுரம்
போகுமே தானுண்டிட.

(இ-ள்.) சுரத்திற்கநுபானமாவது:—தேனிலாகிலுஞ்சரி, அல்லது இஞ்சிச்சாற்றிலாகிலுஞ்சரி 3-நாள் அல்லது 5-நாள் காலைமாலை இருவேளைகளிலும் மாறுது 1-குளிகை யுட்கொண்டுவரவும் சுரமானதுதீரும். பத்தியம்-வறுத்தவுப்பு, சுட்டபுளி, புகை, மீன் தள்ளிவிடவும். எ-று. 867

விக்கலிற் கநுபானம்.

நெற்பொரிதிப்பிலி லவங்கம் நெல்லிவற்றல் சூரணந்தேன்
சொற்படியுண்டிட விக்கல்சோறும்.

(இ-ள்.) விக்கலிற்கநுபானமாவது:—நெற்பொரி, நெல்லிவற்றல், திப்பலி, லவங்கம், சூரணஞ்செய்து 1-குளிகையைத் தேனிலிழைத்து

அதில் வைத்துண்டிடவும். விக்கலானது விட்டுவிடும். இதற்கு இச்சா பத்தியமாகவே யிருக்கவேண்டும். எ-று. 868

தேகந்தூலிக்க வநுபானம்.

வட்டதுத்திச்சாற்றினிலே மண்டலமோர் குளிகையுண்ண
கெட்டதேகந் தூலிக்குங்கேள்.

(இ-ள்.) தேகந்தூலிக்க வநுபானமாவது:—வட்டதுத்திச் சாற்றில் 1-மண்டலம் ஒவ்வொருமாத்திரை உட்கொண்டுவந்திடவும் இளைத்துள்ள தேகமானது நன்றாய்த்தூலித்து செழிப்புற்றோங்கி வரும். இதற்கு இச்சாபத்தியமாகத்தா னிருக்கவேண்டும். எ-று.

தேகந்தழைக்க வநுபானம்.

ஆவாரஞ்சாற்றினில் மும்மண்டலமுண் பசும்பொன்னூன்
நாவாரப்பத்தியமாய் நாட்டு.

(இ-ள்.) தேகந்தழைக்க வநுபானமாவது:—ஆவாரஞ்சாற்றில் மூன்று மண்டலம் காலைமாலை ஒவ்வோர்க்குளிகையை உட்கொண்டு வரவும். தனது தேகமானது பசும்பொன்னிறமாய் தழைத்தோங்கி வரும். இதற்கு இச்சாபத்தியமாகவேதா னிருக்கவேண்டும். எ-று.

தாபசுரத்திற் கநுபானம்.

சீரகத்தூளினிலே சென்றகலுந்தர்பசுரம்
பாரகத்தே பத்தியத்துண்.

(இ-ள்.) தாபசுரத்திற் கநுபானமாவது:—சீரகத்தைத் தூள் செய்த சூரணத்தில் சும்மாவாகிலும், அல்லது தேனிலிழைத்தாகிலும் 3-நாள் அல்லது 5-நாள் காலைமாலை இருவேளைகளிலும் உட்கொண்டு வரவும். தாபசுரமானது தீரும். இதற்கு இச்சாபத்தியமாக விருக்கவும். எ-று. 871

குளிர்சுரத்திற் கநுபானம்.

இஞ்சிச்சாற்றிற் சன்னியிற் குளிர்சுரமகலும்
மிஞ்சியே வெதிர்க்காதது.

(இ-ள்.) குளிர்சுரத்திற் கநுபானமாவது:—இஞ்சிச்சாற்றில் அல்லது இஞ்சிசுரசத்தில் 3-நாள் அல்லது 5-நாள் காலைமாலை இருவேளைகளிலும் ஒவ்வொருருண்டை உட்கொண்டுவரவும் அதில் சன்னி, குளிர்சுரமானதகலும். இதற்கு இச்சாபத்தியம். எ-று. 872

## விஷக்கடிக் கநுபானம்.

பழச்சாற்றி லோருருண்டை பருகிவிஷக்கடிவாயில்
விழிச்சாற்றிற் றீட்டவிலகும்.

(இ-ள்.) விஷக்கடிக் கநுபாணமாவது:—எலுமிச்சன் பழச்சாற்றில் ஒவ்வொருருண்டை பொடிசெய்து அதை உள்ளுக்கேற்றியபின் விஷக்கடிவாயிலும் அதை இழைத்துப்போட்டுவர அக்கடிவிஷமகலும். தேள்கொட்டுவாயிலும் இதைப்போட விஷமிறங்கிவிடும். எ-று.

## விஷபாகத்திற் கநுபானம்.

திரிகடுகு திரிபலைச்சூர்ணத்திற் கோமயத்தேற்ற
பிரிபடுவத்து விஷப்பாகம்.

(இ-ள்) விஷபாகத்திற் கநுபானமாவது:—சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவ்வாறையும் சூரணஞ் செய்து 1-குளிகையைப் பொடிசெய்து அதிற்கலந்து அதைகோமயத்திற் கலக்கிக் குடித்துவரவும் விஷப்பாகமானவை விலகிடும். கடும் பத்தியம். எ-று. 874

## சூலைகாமாலைக் கனுபானம்.

முன்னதிற்சூலைக்காமாலைப் பாண்டுசோகைமுதல்
அன்னதிற் றீருமருந்த.

(இ-ள்.) சூலை காமாலைக்கநுபானமாவது:—முற்கூறிய அனுபானவிசேஷத்தில் இன்னும் சூலை, காமாலை, பித்தப்பாண்டு, சோகைமுதல்தீரும். பின்னும் நீர்ப்பாண்டு, விஷப்பாண்டு,¡தேகமூதல் அனைத்துந்தீரும். இதற்குப்பத்தியம். கடும்பத்தியம் அல்லது வறுத்தவுப்பு, சுட்டபுளி சேர்க்கவும். எ-று. 875

## சூனியமலக வநுபானம்.

உண்ணுமிழுநீரினிலே பெயித்துண்ணவொருகுளிகை
அண்ணதிலே போஞ்சூனியம்.

(இ-ள்.) சூனியமகல வநுபானமாவது:—உமிழ்நீராகிய எச்சலிலே ஒவ்வோருருண்டையாய் ரேகித்து ஒரு பட்சம் அதாவது 15-நாள் காலை மாலை யுட்கொண்டுவந்திடவும். எவ்வகைசூனியம், பம்பு, ஏவல், வைப்புமுதலியது அகன்றுவிடும். இச்சாபத்தியம். எ-று.

### அண்டவாதத்திற் கநுபானம்.

பூதகரப்பான்பட்டைப் புட்டிடித்துச்சார்பிழிந்து
நீதமுடன் ருனுண்டிடும்.

(இ-ள்.) அண்டவாதத்திற் கநுபானமாவது:—பூதகரப்பான் பட்டையை யுரித்து அதையிடித்துச் சார்பிழிந்து அச்சாற்றில் ஒவ்வோர் குளிகை ஒருவாரம் அல்லது இரண்டுவாரம் காலை மாலை இருவேளைகளிலும் உட்கொண்டுவரவும் அண்டவாதந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 877

### பைத்தியவுந்மந்தத்திற் கநுபானம்.

இஞ்சிச்சார்தேனிலுன் மத்தம்புளியாரைச்சாற்
றஞ்சியே பைத்தியமறும்.

(இ-ள்) பைத்தியம் உந்மத்தத்திற் கநுபானமாவது:—இஞ்சிச் சார்பிழிந்து ஓர்குளிகையைப் பொடித்து தேனிலிழைத்து நாக்கில் நக்கிவிட்டு அச்சாற்றைக் குடித்திடவும் உந்மத்தந்தீரும். புளியாரைச் சாற்றிலுண்ணவும் பைத்தியந்தீரும். இச்சாபத்தியம். எ-று. 878

### தாபசுரம்-வியர்வைக் கநுபானம்.

வேளைச்சார்தாபசுரம் வெல்லத்தில்வியர்வையறும்
நாளைக்கா ருண்ணநலம்.

(இ-ள்) தாபசுரம் வியர்வைக் கநுபானமாவது:—வேளைச்சார் பிழிந்து அதில் ஒவ்வோர்குளிகையுண்டுவரத் தாபசுரந்தீரும். வெல்லத்தில் 3-நாள் அல்லது 5-நாள் காலைமாலை இருவேளைகளிலும் உண்டுவர வியர்வையகலும் இவ்விரண்டிற்கும் அப்படியே இச்சாபத்தியம் எ-று. 879

### வாதசுரம்-மருந்தீட்டிற் கநுபானம்.

நொச்சிலிச்சார்வாதசுரமூள் ளுத்தாமணிச்சாற்றில்
உச்சிதமருந்தீ டகலும்.

(இ-ள்.) வாதசுரம் மருந்தீட்டிற் கநுபானமாவது:—நொச்சிலிச் சாற்றில் ஒவ்வோர்குளிகை யுண்டுவர வாதசுரந்தீரும். உத்தாமணிச் சாற்றில் 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உண்டுவரவும் எவ்விதமருந்தீடுகளுமகலும், இச்சாபத்தியம். எ-று.

### வயர் கடுப்பிற்கநுபானம்.

நெல்லித்தூள்பொடியினில் மேதித்தயிரில்வயர்கடுப்புச்
செல்லப்போம் விரைவினிலே.

(இ-ள்,) வயர்கடுப்பிற்கநுபானமாவது:—நெல்லிக்காயையுலர்த்தி இடித்துத்தூள்செய்து எருமைத்தயிரிற் போட்டுக்குடிப்பி ஒவ்வோ ருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் அதிலுண்டுவரவும் வயர்கடுப்பானது அகன்றுவிடும். இச்சாபத்தியம். எ-று. 881

### கிராணி-பிரமியத்திற் கநுபானம்.

சாதிக்காயிற்கிராணித் தன்மரிப்பால் பிரமியமும்
பேதிக்காமற் புகட்டும்.

(இ-ள்) கிராணி பிரமியத்திற் கநுபானமாவது:—சாதிக்காயைப் பொடிசெய்த தூளிலேற்றவும் கிராணிதீரும் வெள்ளாட்டுப் பாலில் 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உள்ளுக்கேற் றிவரப் பிரமியமுந்தீரும். இரண்டிற்கும் அப்படியே இச்சாபத்தியம். எ-று. 882

### இருமலீளைக் கநுபானம்.

கையான்சாற்றிற் புகட்டக்கந்திருமலீளையறும்
மெய்யாய்ப்போம் வாதையது.

(இ-ள்.) இருமலீளைக்கநுபானமாவது:—கரிசலாங்கண்ணிச் சாற் றில் ஒவ்வோருருண்டை 5-நாள் அல்லது 7-நாள் காலைமாலை இருவே ளைகளிலும் உண்டுவரவும். இருமல், ஈளை, இரைப்புமுதல் தீரும். பத் தியம் பால் நெய்யுடன் நல்லபதார்த்தங்களுண்ணவும். எ-று. 883

### வயர்வலி வாய்வுக் கநுபானம்.

சீரகத்தூள் சர்க்கரையிற்றின்ன வயர்வலிவாய்வுந்
நேரகத்தில் நின்றேகிடும்.

(இ-ள்) வயர்வலிவாய்வுக் கநுபானமாவது:—சீரகத்தைப் பொ டித்துத் தூள்செய்ததில் சர்க்கரைகலந்து அதில் ஒவ்வோருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உட்கொண்டு வரவும். வயர்வலி, வாய்வுமுதல் தீரும். இச்சாபத்தியம். எ-று. 884

இரைப் பிருமலீளைக் கநுபானம்.

வெற்றிலைப்பாக்கிலிரைப்பு மெல்லிருமலீளையறும்
பற்றிலைப்பார் வழிந்தொழியும்.

(இ-ள்) இரைப்பிருமலீளைக் கநுபானமாவது:—வெற்றிலைப்பாக்கு அதாவது தாம்பூலத்தில் ஒவ்வோருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் இருவேளைகளிலும் காலை மாலை உட்கொண்டுவரவும். இரைப்பு, இருமல், ஈளைமுதல்தீரும். இதற்குப் பத்தியமா யிருக்கவும். எ-று.

புறவாதம்-விர்ப்புருதிக் கநுபானம்.

வேளைச்சார்புறவாதம் மேனிச்சார்விர்ப்புருதி
ஆளைக் கார்வதுமகலும்.

(இ-ள்) புறவாதம் விர்ப்புருதிக் கநுபானமாவது:—சார் வேளைச்சார் பிழிந்து அதில் ஏற்ற புறவாதந் தீரும். குப்பைமேனிச் சார் பிழிந்து அதில் 3-நாள் அல்லது 5-நாள் இருவேளைகளிலும் உட்கொண்டு வரவும். விர்ப்புருதி தீரும். இவ்விரண்டிற்கும் இவ்வாறே கொள்க. இச்சாபத்தியம். எ-று 886

கண்டமாலைக் கநுபானம்.

வெண்ணெயிலிழைத்திடப்போம் விண்டிடுங் கண்டமாலைக்
குண்ணெயிலே மேற்பூசிடும்.

(இ-ள்) கண்டமாலைக் கநுபானமாவது:—பசு வெண்ணெயில் ஒவ்வொருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் இருவேளைகளிலும் உட்கொண்டு வரவும் கண்டமாலையானது நீங்கி விடும். இதையே அடிக்கடி கண்டமாலைப் புண்ணின் மேற் போட்டு வரவும் ஆறும். இச்சா பத்தியமாக யிருக்கவும். எ-று. 887

வாய்வு விர்ப்புருதிக் கநுபானம்

வசம்பசமதாகம் வாய்வன்றகலு மேனிச்சார்
நிசம்பருக போம் விர்ப்புருதி.

(இ-ள்) வாய்வு விர்ப்புருதிக் கநுபானமாவது:—வசம்பு, அசமதாகம் 2-ம் பொடித்துத்தூள் செய்ததிலுண்ணவும் வாய்வு தீரும். குப்பைமேனிச் சாற்றில் ஒவ்வொருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை யுண்ணவும், விர்ப்புருதி தீரும். இரண்டிற்கு மிதுவே

இச்சாபத்தியம். எ-று. 888

கரப்பான் கட்டிக் கநுபானம்.

நருவிலிச்சாற்றினிலே நல்க கரப்பான் கட்டி
உருவிலித்தானுடைந் தேகிடும்.

(இ-ள்) கரப்பான் கட்டிக் கநுபானமாவது:—நருவிலி யிலையைத் தண்ணீர் வார்த்திடித்துச் சார் பிழிந்து அச்சாற்றில் ஒவ்வோர் குளிகை 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளையிலும் உட்கொண்டு வர முழங்கால் கரப்பான் கட்டியுடைந் தாறி விடும். இச்சாபத்தியம். எ-று. 889

நஞ்சு மயக்கத்திற் கநுபானம்.

பழச்சாற்றில் நஞ்சுமயக்கம் வீழ்தல்போம் நெய் தேன்
விழச்சாற்றனந்த வினைபோம்.

(இ-ள்.) நஞ்சுமயக்கத்திற் கநுபானமாவது:—எலுமிச்சன் பழச்சாற்றில் ஒவ்வொருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளையிலும் உட்கொண்டுவர நஞ்சு மயக்கம் வீழ்தல் மாறும். அவ்வாறே நெய் அல்லது தேனிலேற்றப் பலநோய்களகலும். இச்சாபத்தியம். எ-று. 890

18. குட்டத்திற் கநுபானம்.

பருகவுஞ் சர்க்கரையிற் பதினெட்டுக்குட்டமும் போம்
தருகவுமோர் மண்டலம்.

(இ-ள்.) 18-குட்டத்திற் கநுபானமாவது:—நாட்டுச் சர்க்கரை அல்லது வெள்ளைச் சர்க்கரையில் ஒரு மண்டலம், காலை மாலை இருவேளைகளிலும் உட்கொண்டு வரவும். குட்டம் 18, பெருவியாதி முதல்தீரும். பத்தியமாயுண்டு பால் நெய் மிகுதியாய்ச் சேர்த்து சுக போஜன முண்ணவும். எ-று. 891

கண்பூவிற் கநுபானம்.

தலைச்சன்பிள்ளைப் பாலிற்றந்திடக் கண்ணொளியின் பூ
அலைச்சலுள்ள தங்கற்றிடும்.

(இ-ள்.) கண்பூவிற் கநுபானமாவது:—தலைச்சன் பிள்ளையைப் பெற்றவளது பாலில் ஒரு வாரம் காலையில் கண்களிற்றீட்டிக் கொண்டு

வரவும். கண்கள் பிரகாசமாய்த் தெரிவதோடு அக்கண்களில் பூ பட்டிருந்த போதிலும் அதுவுங் கூட கரைந்து விடும். இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 892

### முயலகனுக் கநுபானம்.

அரிசிக்கரிக்கி யதிலங்கிடப்போ முயலகனும்
உருசிக்க பத்தியத்துண்.

(இ-ள்.) முயலகனுக் கநுபானமாவது:—அரிசியைக் கருக்கித் தூள் செய்து அதில் ஒவ்வோருருண்டை 5-நாள் அல்லது 7-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உண்ணுகையில் முயலகன் வலியானது நின்று விடும். இதற்கு இச்சாபத்தியமா யிருக்கவும். எ-று. 893

### பரங்கிப் புண்களுக் கநுபானம்.

புளியம்பட்டைச் சாம்பல் புகநீர் தெளிவிறுத்து
அளிமூவாருருண்டை யதில்.

(இ-ள்.) பரங்கிப் புண்களுக் கநுபானமாவது:—புளியம்பட்டைச் சாம்பலில் தண்ணீர் விட்டுக் கரைத்து தெளிவிறுத்து 18-குளிகளை 9-நாள் அந்தி சந்தி இருவேளைகளிலும் உட்கொண்டு வரவும். பரங்கிப் புண்கள் அகன்று விடும். இச்சாபத்தியம் எ-று. 894

### படலகாசத்திற் கநுபானம்.

நாகவல்லி சாற்றிழைத்து நற்படல காசமது
போக கண்ணீற்றீட்டிடுமப்போது.

(இ-ள்.) படலகாசத்திற் கநுபானமாவது:—நாகவல்லி யென்னும் வெற்றிலையில் சார் பிழிந்து அச்சாற்றில் ஒரு குளிகையையுரைத்து அதை இரண்டு கண்களிலுங் தீட்டிக் கொண்டு வரவும் கண் படலகாசமானது அகன்று விடும். இதற்கு பத்தியமில்லை. எ-று. 895

### 13. சன்னிக் கநுபானம்.

காடியல்லதுச் சாராய் கண்டிழைத்துண்டிருங்கால்
வாடிசன்னி மூவாறுறும்.

(இ-ள்.) 13-சன்னிக் கநுபானமாவது:—காடி நீர் அல்லது சாராயத்தில் ஒவ்வொருருண்டை 3-நாள் அல்லது 5-நாள் இருவேளை

யும் உட்கொண்டு வரவும் 13-சன்னிகளுந் தீரும். இதற்குப் பத்திய மாகவே யிருக்க வேண்டியது. எ-று. 896

### பேய் பிசாசகல வநுபானம்.

வேசரியன் மூத்திரத்தில் விண்டரைத் திருகண்ணிற்
பூசவும் பேய் பிசாசு முதற்போம்.

(இ-ள்.) பேய் பிசாசகலவநுபானமாவது:—வேசரி யென்னும் கழுதை மூத்திரத்தில் ஒவ்வொருருண்டை யிழைத்து இரு கண்களி லும் தீட்டிவரவும். பேய் பிசாசு பிரமராக்ஷசு முதல் அகலும். இப்படி 3-நாள் அல்லது 5-நாள் செய்யவும். இதற்குப் பத்தியமில்லை. எ-று. 897

### கைகாலெரிச்சலிற் கநுபானம்.

ஆப்பாலிலொரு குளிகையங்குரைத்து வாசனத்திற்
தாப்பாக தடவிடப் போந்தான்.

(இ-ள்.) கைகாலெரிச்சலிற் கநுபானமாவது:—பசும்பாலில் ஒரு குளிகையை யுரைத்து ஆசனத்தில் தடவி வந்தாலுஞ் சரி, அல்லது கட்டிவந்தாலுஞ் சரி, அவாள் உடம்பு, கை கால்களிலுள்ள எரிச்சல் கள் தீரும். இப்படி 3, 5-நாள் செய்யவும். எ-று. 898

### நடைவலுவிற் கநுபானம்.

உமிழ்நீரிலேந் துருண்டை யுரைத்துள்ளங் காற்பூச
நிமை நேரத்தைந்து கல் செல்வன்.

(இ-ள்.) நடைவலுவிற் கநுபானமாவது:—தனது உமிழ் நீரில் 5-குளிகைகளை யுரைத்து தன்னுள்ளங் காலிற்றடவிடவும். அவன் ஐந்து காதவழி தூரத்தை ஐந்து கல்லாக மதித்து செல்வான். இது கஸ்தூரி மாத்திரையைப் போல பலன் செய்யும். எ-று. 899

---

### கடற்றேங்காய்ச் சூரணம்.

கடற்றேங்காய் வெந்நீர்மேற் கட்டப்பாரையி லிடிக்கப்
பொடி சூர்ணமங்கா மப்போது.

(இ-ள்.) கடற்றேங்காய்ச் சூரணமாவது:—இதில் கடற்றேங்காயென்பது சமுத்திரத் தேங்காயென்றும், யாழ்ப்பாணத்தேங்காயென்றுஞ் சொல்லப்படும். அதைக்கொஞ்சமுடைத்து உரலிற்போட்டுவெந்நீர்தெளித்து கட்டப்பாரையினுல் இடித்துப் பொடியாக்கி வஸ்திர காயஞ்செய்து பலநோய்களுக்கும் தக்கவநுபானங்களிலேற்ற இதனடியிற்குறிக்கப்படும். இதுசும்மாய்ப் புட்டியிலிருந்தால் கொஞ்சநாளில் தைலமாய் உருகிவிடும். இதின்விலை பலம் 4-அணு. எ-று. 900

நளிர்சுரத்திற் கநுபானம்.

லவங்கக்கியாழத்தில் நல்கநளிர்சுரமதுபோம்
லவங்கபத்திரிக்கு மதுவாம்.

(இ-ள்.) நளிர்சுரத்திற்கநுபானமாவது:—லவங்கப்பூ கியாழத்தில் கால் விராகனிடை கரைத்து 3-நாள் அல்லது 5-நாள் இருவேளையிலும் உட்கொண்டுவரவும் நளிர்சுரமானது தீரும். அல்லது லவங்கப்பத்திரிக் கியாழத்திலும் இவ்வாறுண்ணவும் நளிர்சுரந்தீரும். இதற்கு பத்தியமாகவேயிருக்கவேண்டும். எ-று. 901

பித்தசுரம்-தாபசுரத்திற் கநுபானம்.

பழச்சாற்றிற்பித்தசுரம் பசுந்தயிரிற்றாபசுரம்
விழச்சாற்றிற் சள்ளுமிது.

(இ-ள்.) பித்தசுரம் தாபசுரத்திற்கநுபானமாவது:—எலுமிச்சம்பழச்சாற்றில் கால் விராகனிடை சூரணமுண்ணவும் பித்தசுரமானது அகன்றுவிடும். பின்னும் பசுந்தயிரில் இவ்வாறேயுண்ணவும். தாபசுரமானது தீரும். இவ்விரண்டிற்கும் பத்தியம் ஒன்றே. எ-று. 902

வலிகள்-பேதிக் கநுபானம்.

பசுமோரில்வலிகள்போம் பந்நிலாவிரைக்கியாழத்
திசைபேதியது வாகிடும்.

(இ-ள்) வலிகள் பேதிக்கநுபானமாவது:—பசுமோரில் கால் விராகனிடை சூரணம் உட்கொள்ளவும் வலிகளானது அகன்று விடும். பின்னும் நிலாவிரைக்கியாழத்தில் இவ்வாறேயுட்கொள்ளவும் பேதியாகிடும். பேதிமீறில் வசம்பு கியாழந்தான். எ-று. 903

வெள்ளைக் கநுபானம்.

தேங்காய்ப்பால் கழுநீரிற்சென் றரை யாழாக்குண்ணப்
பாங்காய்ப்போம் வெள்ளையது.

(இ-ள்.) வெள்ளைக் கநுபானமாவது:—தேங்காய்ப்பாலாவது அல்லது அரிசியலம்பிய கழுநீரிலாவது அரை ஆழாக்குள்ளதில் சர்க்கரைசேர்த்து அதைக்கலக்கியுண்ணவும். வெள்ளையானதுநின் றுவிடும். இவ்வாறு 3-நாள் அல்லது 5-நாளுண்ணவும் கடும்பத்தியம். எ-று.

விரணங்கட் கநுபானம்.

வெற்றிலையின்சாற்றிலுண்ண வெட்டைவிரணங்களறும்
பற்றிலைமுன்போம் விரணம்பார்.

(இ-ள்.) விரணங்கட் கநுபானமாவது:—வெற்றிலைச்சார்பிழிந்து அதில் சூரணம் கால் விராகனிடைசேர்த்து 3-நாள் அல்லது 5-நாள் காலை மாலை இருவேளைகளிலும் உட்கொண்டுவரவும். விரணங்கள்யாவும் ஆறிவிடும். பத்தியமாயிருக்கவும். எ-று. 905

